# மரபு வேலி

## மல்லிகா மணிவண்ணன்

# அத்தியாயம் 1

**"அறிந்தும் அறியாமலும்**

**தெரிந்தும் தெரியாமலும்**

**செய்த சகல குற்றங்களையும்**

**பொறுத்துக் காத்தருளல் வேண்டும்,**

**சத்தியமாய பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும்**

**வில்லாளி வீரன் வீர மணிகண்டன்**

**காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் அடக்கி ஆளும்**

**ஓம் ஸ்ரீ ஹரிஹர சுதன்**

**ஆனந்த சித்தன்**

**ஐயப்பா சுவாமியேஏஏஏஏஏஏ**" என்ற நாமகரணம் ஒலிக்க...

"சரணம் அய்யப்பா" என்று உரத்த குரலில் சொன்னவன், பின்பு "சுவாமி சரணம் ஐயப்ப சரணம்" என்று சொல்லிக் கொண்டான், அவன் ராஜ ராஜன்.

சபரிமலைக்கு மாலையிட்டு இருந்தான். இன்று இருமுடி கட்டு.

அவர்களின் கிராமத்தில் இருந்து ஒரு வேன் கிளம்ப அதில் அவனும் ஒருவன். அவனின் வீட்டினில் இந்த மாதிரி செல்ல ஒத்துக் கொள்ளவேயில்லை.

இவனும் அய்யனின் தீவிர பக்தன், தனியாய் தான் செல்வான். இந்த முறை இவர்களுடன் பிடிவாதம் பிடித்து கிளம்பி இருக்கிறான். அவனின் நண்பன் ஜகதீஷ் செல்வதால். அவன் தான் இந்த முறை என்னுடன் வா என்று பிடிவாதமாய் அழைக்க, சரி என்று என்று விட்டான்.

இப்படி செல்வதெல்லாம் அவனின் பெரியப்பாவிற்கும் அப்பாவிற்கும் கௌரவ குறைச்சல். அவர்கள் எல்லோருடனும் தள்ளி தாங்கள் பெரிய ஆள் என்பது போல நிற்பர், மற்ற மக்களும் அப்படி தான்.

ஆனால் ராஜ ராஜன், ராஜ ராஜன் தான். எங்கே அவர்களுடன் நிற்க வேண்டும், எங்கே அவர்களுக்கு மேல் ஏற வேண்டும் என்று நன்கு தெரிந்தவன்.

அங்கிருந்த சிவன் கோவிலில் உள்ளிருந்த விநாயகர் முன் பக்கம் ஐயப்ப சுவாமியின் படம் வைத்து பூஜைகள் நடந்து கொண்டிருக்க, இன்னும் இவன் முறை வரவில்லை.

ஏனென்றால் இவனின் வீட்டில் இருந்து இன்னும் யாரும்

வரவில்லை. விடியற்காலை ஐந்து மணி அல்லவா. ஏழு மணிக்கு கிளம்புவது, வந்து விடுவார்கள், அமைதியாய் அமர்ந்திருக்க…

அப்போது பார்த்து மனோகணபதி அவனின் குடும்பத்துடன் வர, அதுவும் கோவிலுக்கு போகும் ஏற்பாட்டுடன் வர, “இவனும் வருகிறானா யாரும் சொல்ல வில்லையே என்னிடம்” என்று சுற்றும் முற்றும் பார்க்க,

குருசாமி வேகமாக ஓடி வந்து “அதுங்க தம்பி ஏதோ வேண்டுதலாம், ஒரு வாரம் முன்ன வந்து மாலை போட்டார்” என்று பயந்து பயந்து சொல்ல,

ஜகதீஷை கண்ணிலேயே காணவில்லை. சதிகாரன் சதி செய்து விட்டான். ஓஹ், இது தான் நம்மை வருந்தி வருந்தி அழைத்ததன் நோக்கமா?. பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சிய சிரிப்பு உதடினில் வந்து ஒட்டிக் கொண்டது.

கூடவே “அய்யகோ, காது ஜவ்வு கிழிந்து விடுமோ” என்ற கவலை வந்து அமர்ந்து கொண்டது.

“எனக்கு சொல்றதுக்கு ஒண்ணுமில்லை, இப்ப பெரியப்பா வருவார், அப்பா வருவார், என்னவோ நீங்க பார்த்துக்கங்க” என்று

அவன் சொல்லி முடித்த நேரம்,

ராஜ ராஜனின் குடும்பம் மொத்தமும் இரண்டு கார்களில் வந்து இறங்கியது. அவனின் பெரியப்பா சுவாமிநாதன், அப்பா தமிழ்செல்வன், பெரியம்மா வாசுகி, அம்மா தில்லை, எல்லோரும் கூட்டுக் குடும்பம்.

பெரிய அண்ணன் கௌரிசங்கர், அண்ணி பார்வதி அவர்களின் மக்கள் ரோஹித், சஹானா, சின்ன அண்ணன் நந்த குமார், அண்ணி சிவசங்கரி, அவர்களின் மக்கள் கவின், காவ்யா.

அக்காள்கள் இருவர் சௌந்தரி, விஜயா. அவர்கள் மட்டும் வந்திருந்தனர். அவர்கள் குடும்பம் வரவில்லை. கௌரி சங்கரும் விஜயாவும் இவனின் உடன் பிறந்தவர்கள், சௌந்தரியும் நந்தகுமாரும் பெரியப்பா மக்கள். எல்லோரையும் விட சௌந்தரி மூத்தவர் அவருக்கு பின் கௌரிசங்கர், நந்த குமார் விஜயா… இவர்களின் கடைக்குட்டி ராஜராஜன்.

அவன் தறிகெட்டு ஓடும் காளையாய் சுற்றினாலும் இவர்கள் அனைவருக்கும் அப்படி ஒரு செல்லம்.

அந்த கிராமத்தில் அவர்களது தான் பெரிய குடும்பம். அவர்கள் வைத்தது தான் சட்டம் அங்கே. இன்னும் கூட இப்படி சில இடங்கள் இருக்க தான் செய்கின்றன. பயம் இருக்கிறதா

என்பதனை விட பெரிய குடும்பம் என்ற மரியாதை அதிகம்.

இவர்களை விடுத்து ராஜ ராஜனின் பார்வை ரகசியமாய் மனோகணபதியின் குடும்பத்தை வட்ட மிட, அங்கே மனோ அவன் மனைவி அவனின் நான்கு வயது மகன் விகாஸ் மட்டுமே!

“அட, நம்ம கிழவியை காணோம், கூட வர்றவளையும் காணோம். அது இருந்தாளாவது நம்ம வீடு சும்மா இருக்கும். இல்லைன்னா டேன்ஸ் ஆடுமே” என்று ராஜராஜன் எண்ணி முடித்த நேரம்.

மனோகணபதியை பார்த்து விட்டார் அவனின் பெரியப்பா.

“சாமி” என்று ஒரு கத்து கத்த அவ்வளவு தான் அந்த இடமே அப்படி ஒரு பரபரப்பாகி விட்டது.

“என்னங்க சாமி?” என்று குருசாமி வந்து நிற்க,

“என்ன நடக்குது இங்க? வேணும்னே எங்களுக்கு ஆட்டம் காமிக்க நினைக்கறீங்களா?” என ஆட

“நான் என்னங்க சாமி செய்யட்டும், ஆத்தா பேச்சை மீற முடியலை, அதுவுமில்லாம அவர் ஜில்லா கலக்டரு வேற” என்றார் பவ்யமாய்.

“ஜில்லா கலக்டருன்னா, பெரிய இவனா? மக்க மனுஷா பாக்க வேண்டாமா?” என எகிற,

“என்னலே இங்க சத்தம்?” என்றபடி வந்தார் நாட்சியம்மாள்.

மனோகணபதி நடப்பதை அமைதியாய் வேடிக்கை பார்த்து இருந்தான். எவ்வளவு பெரிய மனிதராய் வேண்டுமானாலும் அவர் இருக்கட்டும். அவனுக்கு ஏதும் கிடையாது.

அவனை அசைக்க கூடியவன் ராஜராஜன் மட்டுமே. மனோவின் தயக்கம் பயம் கவலை எல்லாம் அவனை கொண்டே.

பெரிய பாட்டியை பார்த்ததும் பிக் கிரேனி ( big grani ) என்றபடி விகாஸ் வேகமாய் வந்து நாட்சியின் கையை பிடித்து கொண்டான்.

எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தாலும் அசால்டாய் நான்கு வயது விகாஸை தூக்கி இடுப்பில் வைத்தவர்…

“போங்க குருசாமி, போய் இருமுடி கட்ட ஏற்பாடு பண்ணுங்க” என அதட்டலிட,

“ராஜா, நீ இவங்களோட போக வேண்டாம். நான் வேற ஏற்பாடு பண்றேன்” என்றார் பெரியப்பா.

அவ்வளவு தான் நாட்சிக்கு பொங்கியதே கோபம் “டேய் சுவாமி, நீ எனக்கு பொறந்தது உண்மைன்னா, இவன் உன் தம்பிக்கு பொறந்தது உண்மைன்னா, போய் நீயே இருமடி கட்ட சொல்லு, இல்லை இதுல எது ஒன்னு இல்லைன்னாலும் கட்ட வேண்டாம்டா” என

சுற்றி நின்றவர்கள் அத்தனை பேரும் வாயடைத்து நிற்க, “ப்ச், இவ எங்க காணோம், இந்த கிழவியை அவ மட்டும் தானே அடக்குவா, இதோடா வாய் என்ன வாயோ? பேச்சை பாரு, அப்படியே இந்த கிழவியை தூக்கி இந்த கோவில் வாசல்ல எறிஞ்சிட்டு வரணும்” என்று ராஜ ராஜனின் மனம் ஜெட் வேகத்தில் பறக்க,

“அமைதி சாமி, அமைதி, இப்போது நீ ஐயனை நினைத்து மலைக்கு செல்லும் சாமி” என்று அவனுக்கு அவனே கட்டுப் படுத்திக் கொண்டான்.

வேகமாய் வந்த வாசுகி “என்னங்க நீங்க? அவங்க பிடிவாதம் தெரியாதா?” என்று கணவனை அடக்க,

“இப்படி சொல்லி, சொல்லி தான், குடும்பத்தை குட்டி சுவாராகிட்டு இருக்கீங்க. சொல்லி வை, அவங்க நினைக்கறது ஒரு நாளும் நடக்காது. அவங்க பொண்ணு குடும்பத்தை நம்மோட ஒட்ட வைக்க முடியாது”

அதற்கு எந்த பதிலும் நாச்சி பேசவில்லை, அமைதியாய் சென்று மனோகணபதியுடன் நின்று கொண்டார். அவன் சற்றும் யாரை பற்றியும் கவலைப் படவில்லை அவனின் கவனம் முழுக்க ஐயனின் பாதத்தில் தான்.

பக்கத்தில் கரிஷ்மா பய பக்தியாய் நின்று கொண்டிருந்தாள். அவனின் மனைவி, வட நாட்டவள், அவர்களது காதல் திருமணம்...

தில்லை தான் தமிழ்செல்வனின் காதை கடித்துக் கொண்டிருந்தார். “இன்னும் உங்கண்ணன் ஒட்ட வைக்க முடியாதுன்னு கத்திட்டு இருக்கட்டும், கல்யாணமே முடிஞ்சு போச்சு”

“அதெல்லாம் கல்யாணமே கிடையாது”

“அதை நீங்க மட்டும் தான் சொல்லணும்”

“யேய், கோவில்ன்னு பார்க்க மாட்டேன், வகுந்துருவேன்” என்று மனைவியை ஏதோ அடியாள் போல மிரட்ட,

“அட போடா” என்ற பார்வையை தில்லை கொடுத்தாலும் வாயை மூடிக் கொண்டார்... அண்ணன் கோடு போட்டால் இவர் ரோடு போடுவார், அண்ணன் கிழித்த கோட்டை தாண்ட மாட்டார்.

“யாரோ என்னவோ கத்திக் கொள்ளுங்கள்” என்ற பாவனையை மனோ காண்பித்து கொண்டிருக்க,

ராஜராஜனும் அதற்கு சற்றும் குறையாதவனாக இருந்தான். இவ்வளவு அலப்பரைகளையும் யாரினதோ என்று பார்த்து இருந்தான்.

மொத்த குடும்பமும் ஏதோ தெய்வத்தை பார்ப்பது போல ஸ்வாமிநாதனை பார்த்து வைக்க,

நாட்சியம்மாள் மனோ கணபதியின் அருகில் நின்று “கரிசுமா” என்று அவளின் பெயரை கொலை செய்து என்ன முறை செய்ய வேண்டும் என்று சொல்ல,

மனோவுக்கு இருமுடி கட்ட அமர்த்தப் பட, அவனின் பையினில் அரிசியும் காசும் போடப் பட,

“எல்லோரும் போட்டுடாங்களா” என்று குருசாமி கேட்ட நேரம் “என் பேத்தி வருவா சாமி” என்று நாட்சி சொல்ல,

அந்த குரலின் விஷயத்திற்கு ராஜராஜனின் குடும்பம் மொத்தமும் வாயிலை பார்க்க,

அங்கே வந்து கொண்டிருந்தால் ராஜராஜனின் கன்னி, அங்கையற்கண்ணி.

கையில் அண்ணனின் ஒரு வயது பெண் குழந்தை ஸ்ருஷ்டி, வேக நடையிட்டு நடந்து வந்தாள்…

மனோகணபதியின் பாதுகாவலர் ஒருவன் அங்கையற்கண்ணியின் பின் நடந்து வராமல், பக்கவாட்டில் உடன் நடந்து வந்தான். மிகவும் விலகி தான்.

அதுவரை யாரோ என்னவோ என்று அமர்ந்து இருந்த ராஜராஜன் நொடியில் மாறினான். யாரின் அருகில் யார் நடந்து வருவது என்று எண்ணம் மனதினில் தோன்ற, என்னவோ அங்கிருந்தோர் பார்வை எல்லாம் அவர்கள் இருவரையும் பார்ப்பது போன்ற தோற்றம் ராஜ ராஜனுக்கு.

அங்கையற்கண்ணி ராஜ ராஜனை கவனமாய் தவிர்த்து அண்ணனை பார்த்து நடையிட்டாள், அவனை கடந்து சென்றும்

விட்டாள். மொத்த வீடும் அவளை பார்த்தது.

அந்த நடை, அந்த உயரம், அந்த தோற்றம், கதையில் வர்ணனையில்வரும் ராஜ குமாரிகள் இப்படி தான் நேரில் இருப்பார்களோ என்று தோன்றும் படி இருப்பாள்…

அங்கையற்கண்ணி தான் கடந்தாள், அந்த பாதுகாவலன் ராஜராஜனை கடக்கும் முன் தலை குப்புற விழுந்திருந்தான்… என்ன நடந்தது என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

யாரோ வேகமாய் வந்து அவனை தூக்கி விட அவன் விழுந்ததில் நெற்றியில் அடிப்பட்டு சிறிது ரத்தம் வந்ததோ?

அங்கையற்கண்ணி அதிர்ச்சியில் அங்கேயே அப்படியே நின்று விட்டாள்.

“சுவாமி சரணம்” என்று ராஜராஜனின் வாய் முனுமுனுக்க, அங்கையற்கண்ணி வேகமாய் திரும்பி பார்த்தவள், அந்த பாதுகாவலனிடம் வர முயற்சிக்க,

“அங்கை” என்று மனோவின் குரல் அவளை தேக்கியது… குரல் அவளை தேக்கினாலும் மனோ கரிஷ்மாவை பார்த்து முறைத்தான். அவளோடு வராமல் உன்னை யார் முதலில் வர சொன்னது என்ற பார்வை அது.

“சாரி” என்றவள் வேகமாக அந்த பாதுகாவலனை நோக்கி சென்றாள்.

“இங்க வா, அண்ணி பார்த்துக்குவாங்க” என்று சொல்ல,

அண்ணன் அமர்ந்திருக்க அவளும் அரிசி போட்டு, ஸ்ருஷ்டியின் குட்டி கை பிடித்து அரிசி போட, அவனின் இருமுடி கட்டும் பணி முடிந்தது.

பாதுகாவலன் அங்கேயே அமர்ந்திருக்க, அதற்கு பக்கம் ராஜராஜனும் இருக்க… அங்கை “உன்னை என்ன செய்தால் தகும்” என்ற பார்வையை அவனிடம் கொடுக்க, ராஜன் அவளை பார்க்கவேயில்லை.

“நீங்க வாங்க” என்று அவன் அழைக்கப் பட,

அடுத்து அமர்ந்த ராஜராஜனின் முகம் ஏகத்திற்கும் இறுகியிருக்க, தில்லை அவனின் அருகில் முதலில் வந்தவர் “இவ்வளவு கோபம் கூடாது ராஜா, அதுவும் மாலை போட்டிருக்க” என்றார்.

பாதுகாவலன் விழுந்ததிற்கு காரணம் ராஜராஜன் என்று அங்கிருந்த அநேகம் பேருக்கு தெரியும்.

ராஜராஜன் பதில் பேசவில்லை. சுவாமினாதனில் ஆரம்பித்து பின் அத்தனை பேரும் அரிசி போட, “இனி அவ்வளவு தானா” என்று குருசாமி குரல் கொடுக்க,

“சாமி” என்று நாட்சியம்மாள் வந்தவர் அரிசி போட, அங்கையற்கண்ணி அண்ணனின் அருகில் நின்றிருக்க,

“அங்கை” என்ற நாட்சியம்மாளின் கணீர் குரல் கேட்க, சுவாமிநாதன் வேக வேகமாய் அந்த இடத்தை விட்டு அகன்று விட, அவரின் பின் குடும்பத்தினர் அத்தனை பேரும் சென்று விட,

ராஜராஜன் அந்த இருமுடிப் பையை மூடப் போவது போல ஒரு செய்கை, அது பாவ்லாவா இல்லை நிஜமாய் மூட எத்தனித்தானா, இது ஒரு விடை அறிய முடியா கேள்வி?

நாட்சியம்மால் உடனே “என் பேத்தி வரணும் சாமி, இருக்க சொல்லுங்க” என்று அதட்டல் போட,

“உன் பேத்தி போடாம, அவன் அந்த இடத்தை விட்டு எழுந்திடுவானா அத்தை என் பையன்” என்று தில்லை மனதிற்குள் கௌண்டர் கொடுத்தவர், தேமே என்று முகத்தை வைத்து

நின்றிருந்தார்.

“பாட்டி என்ன பண்றீங்க நீங்க? அவங்க குடும்பத்து ஆளுங்க, போட்டுடாங்க போதும்” என்று அங்கை அங்கிருந்தே எல்லோர் காதிலும் விழும் வகையிலேயே பதில் கொடுத்தாள்.

“நீ போட்டா தான் முடியும் வா” என்று அந்த பெரிய மனுஷி அதட்ட

“அதான் பாட்டி சொல்றாங்கள்ள வாங்கம்மா” என்று மரியாதையாய் குருசாமி அழைக்க,

“அண்ணி, வாங்க அண்ணி” என்று அத்தனை நேரம் கண்ணில் படாத ஜகதீஷ் வந்து நிற்க,

இன்னும் இரண்டு மூன்று பேர் சொல்ல,

“போம்மா, மனைவி போடாம எப்படி? போம்மா” என்று யாரோ ஒரு பெண்மணி சொல்ல, அருகில் வந்த அங்கை முகம் ராஜராஜனின் முகத்தை விட இறுகி இருந்தது.

அவள் வந்து அரிசி போட, “சுவாமி சரணம்” என்று ராஜராஜனின் இதழ் முணுமுணுத்தது…

மனோவின் கண்கள் ராஜராஜனை சற்று பயமாயும் கவலையாயும் பார்த்தது.

ஆனால் அண்ணனின் பயமோ கவலையோ சிறிதும் தங்கைக்கு இல்லை.

“சுவாமி சரணம்” என்ற வார்த்தையோடு, வணங்கும் கை கூப்பளோடு, அங்கையின் விழிகள் தீட்சண்யமாய் ராஜராஜனை பார்க்க,

அதற்கு சற்றும் குறைவில்லாமல் தீட்சண்யமாய் பார்த்து அவளின் கை கூப்பளுக்கு “சுவாமி சரணம்” என்று சொல்லியபடி சிறு தலையசைப்பை பதிலாய் கொடுத்தான்.

# அத்தியாயம் 2

கோவிலின் பயணம் இனிதே துவங்க, அவர்களுடன் விகாஸும் இருந்தான். அவனுக்கு மாலை போடவில்லை, கீழே பம்பையில் குளித்த பின் அவனுக்கு போட்டுக் கொள்ளலாம் என்று மனோகணபதி அழைத்துக் கொண்டான். ஏனோ தனியாய் நிலையை எதிர்கொள்ள தைரியமில்லை. தங்கையின் வாழ்வு ஏதாவது முடிவு எடுத்தே ஆக வேண்டும். தங்கையினது மட்டுமல்ல, அம்மாவினதும் கூட. நினைத்தாலே நெஞ்சம் அப்படி ஒரு தொய்வை உணர்ந்தது. எப்படி இருந்த அவர்களின் வாழ்வு, எல்லாம் மாறிவிட்டது.

விகாஸிற்கு உடைகள் இல்லை, எதுவும் இல்லை, அவசரமாய் இரண்டு செட் உடைகள் கரிஷ்மா கொண்டு வந்து கொடுக்க, இதோ அப்பாவும் மகனும் பக்கத்தில் பக்கத்தில், இவர்களுக்கு எதிர்புறம் இரண்டு சீட் பின்னில் ராஜராஜனும் ஜகதீஷும் அமர்ந்திருந்தனர்.

ராஜராஜன் ஜன்னல் அருகில் கண்மூடி இருக்க… அப்பாவின் அருகில் இருந்த விகாஸ் எட்டி எட்டி பார்க்க, ஜகதீஷிற்கு பயமாய் போய்விட்டது

“நண்பா” என்றான் ராஜராஜனின் கையை சுரண்டி, பதில் பேசாமல் ராஜராஜன் கண்ணை திறந்து தலையை திருப்பி பார்க்க,

திரும்பி திரும்பி பார்க்கறான்.

“யாரு?” என்று கண்களால் வினவ,

“கலக்டர் சர் பையன்”

“அப்படியா” என்ற பாவனையை கொடுத்து தலையை திருப்பி கண்களை மீண்டும் மூடிக் கொள்ள,

“அய்யனே இந்த பயணத்தை எந்த பிரச்சனையுமில்லாமல் முடித்து தாரும்” என்று ஜகதீஷும் கண்களை மூடி அவசர வேண்டுதலை வைத்து முடிக்க கூட இல்லை,

“ஹாய் அங்கிள்” என்று மழலையாய் ஒரு குரல் கேட்க,

அவசரமாய் கண்களை ஜகதீஷ் திறந்து அவன் முன் இருந்த விகாஸை பார்த்தவன் பின்பு ராஜராஜனை பார்க்க, அவனோ அசையக் கூட இல்லை.

“சொல்லுங்க சாமி” என்று பயபக்தியாய் விகாஸை பார்த்து பேச,

“நான் இங்க உட்காறுரேன், நீங்க வேற இடம் போங்க”

என்றான் தெளிவாய், ஆனால் மழலை மாறாத குரல்.

“நண்பா” என்று மீண்டும் நண்பனை அழைக்க, அவனோ அசையவே இல்லை.

“சுவாமி சரணம்” என்று சொல்லி ஜகதீஷ் எழுந்து முன் சென்று விட,

விகாஸ் அவனின் சீட்டில் அமர முற்பட முடியாமல் “மாமா” என்று கை தொட்டு ராஜராஜனை அழைத்தான்.

அதற்கு மேல் கண்களை மூட முடியாமல் அவன் கண்ணை திறக்க, “என்னை இங்க உட்கார வைங்க” என்றது அந்த வாண்டு,

ஒரு பெருமூச்சை வெளியிட்ட ராஜராஜன் அவனை தூக்கி அமர வைக்க, “தேங்க்ஸ்” என்றவன் நன்றாக சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

பின்பு “பப்பா” என்று ஒரு குரல் கொடுக்க,

“என்ன விகாஸ்” என்று மனோ குரல் கொடுக்க,

“ஐ அம் ஹங்ரி”

டிஃபின் பாக்ஸ் எடுத்து சப்பாத்தி வைத்து கொடுத்தான் பொறுமையாய் ஜகதீஷ், மகனுக்கு வைத்து கொடுத்ததும் மனோ

நிமிர்ந்து பார்க்க,

மனோ பார்த்ததும் விகாஸும் பார்த்து “மாமா, நீங்களும் சாப்பிடறீங்களா” என்று ராஜராஜனின் கை அசைத்து கேட்க, ராஜராஜனின் பொறுமை பறக்க துவங்க, ஒன்றும் பேசாமல் வேகமாய் எழுந்தவன், அந்த இடத்தை விட்டு நகர்ந்து முன் சென்று நின்று கொண்டான்.

எதிரில் இருந்த மனோவை நகரு என்று கூட சொல்லவில்லை, அவனை இடித்துக் கொண்டு நகர்ந்து சென்றான். அதை பார்த்து விகாஸ் என்னவோ ஏதோ வென்று பார்க்க, “இட்ஸ் அ ப்ளே” என்றான் மனோ அவனை சமாளிக்கும் விதமாய்.

மனோவின் பதவிக்கும் அவனுடைய பின் புலத்திற்கும் ராஜராஜன் என்ற ஒருவன் ஒன்றுமே இல்லாதவன். அவன் இடித்த நேரம் அவன் நினைத்திருந்தால் இந்த வேனில் இருந்து தூக்கி கூட வீசி அடித்திருப்பான், அவ்வளவு தேர்ச்சி தற்காப்பு கலைகளில், பின்னே அவன் கலக்டர் என்பது இரண்டாம் பட்சம் அவன் ஒரு ராணுவ வீரனின் மகன், அதுவும் அப்பா மிக உயர்ந்த பதவி கூட, இப்போது மேஜர் ஜெனரல் ஆக இருப்பவர், இன்னும் சில வருடங்களில் ஜெனரலாக கூட பதவி உயர்வு பெறும் நிலையில் இருப்பவர்.

விகாஸ் பார்த்துக் கொண்டே இருப்பதினால் பொறுமை பொறுமை என்று சொல்லிக் கொண்டவன், “ஜஸ்ட் மாமாவும், நானும் ப்ளே பண்றோம்” என்று இன்முகமாக மீண்டும் சொல்லி, அவன் உண்டு முடிக்கும் வரை பொறுமையாய் இருக்க,

வழியில் எதோ கலவரம், வண்டிகள் நிறுத்தப் பட்டு சோதனைகள் மேற்கொள்ளப் பட்டு இருக்க, “மாட்டிக் கிட்டோம்டா, எப்போ இதை சரி பண்ணுவாங்க தெரியலையே” என்று ஆளாளுக்கு சலிக்க, அமைதியாய் இறங்கிய மனோ அவனின் பதவியை சொல்லி, அவர்களின் வாகனத்தை எல்லோருக்கும் முன் சோதனையிட சொல்லி, ஐந்தே நிமிடத்தில் அந்த இடத்தினில் இருந்து, அவர்கள் வாகனம் முன் செல்ல வழி விடப் பட…

“நண்பா உன் மச்சான் பெரிய ஆள் போல” என்று ஜகதீஷ் ராஜராஜனிடம் சொல்ல,

“அதை எதுக்கு நண்பா நீ என்கிட்டே சொல்ற, நீ சொல்லி தெரிஞ்சிக்கற அளவுக்கு நான் இருக்கனா, இல்லை அவன் இருக்கானா” என்று பதில் சொல்ல,

அப்போது வாயை பூட்டிக் கொண்டவன் தான் ஜகதீஸ் வாயே திறக்க வில்லை, மதிய உணவு வேளை வரையிலும்.

மதியம் ஒரு மத்தியதர ஹோட்டல் பார்த்து நிறுத்தப் பட, அப்படி ஒரு யோசனை மனோ கணபதிக்கு, அங்கே உண்ண, அங்கே வேறு ஹோட்டல்களும் இல்லை,

ஜகதீஷ் அவனாகவே வந்து “இங்க நல்லா இருக்கும் சர், நீங்க சாப்பிடலாம், ரொம்ப சுத்தமா கூட பண்ணுவாங்க, நாங்க கோவிலுக்கு போகும்போது இங்க தான் பலவருஷமா சாப்பிடறோம். இங்க எங்க சொந்தக் காரங்க இருக்காங்க, அவங்க கூட சொல்லுவாங்க” என்று சொல்ல,

அதன் பிறகே உள் நுழைந்தான்.

விகாஸ் நேராக ராஜராஜன் அமர்ந்திருக்கும் டேபிள் சென்று அமர்ந்து கொள்ள, ராஜராஜன் எழப் போக, இந்த முறை மனோ அவனிடம் “உட்காருங்க” என்றான் உடனே சிறு வற்புறுத்தலோடு.

ராஜ் ராஜன் அப்போதும் எழுந்து நின்று விட...

“புரிஞ்சிக்கங்க, நம்ம பிரச்சனைகள் நம்மோட குழந்தைக்கு என்ன தெரியும்? பாட்டி எப்பவும் உங்களை பத்தி தான் விகாஸ் கிட்ட ஆஹா ஓஹோன்னு பேசறாங்க, அதனால குழந்தை

உங்களை தேடி தேடி வர்றான். நீங்க ஏன் இப்படி எழுந்து போறீங்க, அவன் ஹர்ட் ஆகறான், போகாதீங்க" என்று பேசினான்.

இவர்கள் பேசியது விகாஸிற்கு கேட்காத மாதிரி மெதுவான குரலில் தான் பேசினான்.

விகாஸும் ராஜராஜனின் முகத்தை ஆர்வமாய் பார்த்து இருக்க, "எங்க கிழவி ஒரு பைத்தியம்" என்று ராஜராஜன் நிற்க,

"ப்ளீஸ் உட்காருங்க, உங்க கிட்ட பேசறதுக்காக மட்டும் தான் இந்த பயணமே, அதுக்காக தான் நான் கோவிலுக்கு மாலையே போட்டேன், நானும் பல முறை முயற்சி பண்ணிட்டேன், நீங்க மாலை போட்டா தான் கொஞ்சம் பொறுமையா இருப்பீங்க சொன்னாங்க" என்று மனோ உடைத்து பேச,

எதையும் காதில் வாங்கமால் ராஜராஜன் நகரப் போக, "பயமோ என்னை பார்த்து உங்களுக்கு" என்று மனோ அவனை சீண்ட,

"எனக்கு உன்னை பார்த்து பயமா?" என்றான் ராஜராஜன் சின்ன கிண்டல் சிரிப்போடு.

இதற்கு மனோ அவனை விட மூன்று வயது பெரியவன்,

அவன் ராஜராஜனை “வாங்க, போங்க” என்று பேச ராஜராஜன் அவனை “வா, போ” என்று பேசினான்.

பதவிக்கும் மரியாதை கொடுக்கவில்லை, வயதிற்கும் மரியாதை கொடுக்கவில்லை, உறவிற்கும் மரியாதை கொடுக்கவில்லை.

மனோவிற்கு அது புரிந்தாலும், கோபம் வந்தாலும், எதையும் காண்பித்து கொள்ளவில்லை.

மனோ சீண்டுகிறான் என்று புரிந்த போதும் அந்த சீண்டலுக்கு எல்லாம் மசிபவன் ராஜராஜன் இல்லை என்ற போதும், அமர்ந்தவன் “நான் தான் உன்னை மதிக்கறது இல்லை, பேச விருப்பமில்லைன்னு சொல்றேன், காமிச்சு கொடுக்கறேன், அப்புறம் நீ ஏன் என்கிட்டே பேசற” என

“எனக்கு உங்க கிட்ட பேச எதுவுமே கிடையாது. எனக்கு நல்ல அப்பா அம்மா இருக்காங்க, நல்ல மனைவி இருக்கா, அழகான அறிவான ரெண்டு குழந்தைங்க இருக்காங்க, பணம் இருக்கு, பதவி இருக்கு, ஆள் பலம் இருக்கு, எல்லாம் இருக்கு” என்று அவன் பேசிக் கொண்டு இருக்கும் போதே இடையிட்ட ராஜராஜன்.

"இப்போ என்ன இதெல்லாம் என்கிட்டே இல்லைன்னு சொல்றியா" என்றான் அலட்சியமாக.

"எனக்கு இதுக்கு தான் உங்களை பார்த்தாலே பயம், உங்ககிட்ட பேச பயம், நான் சொல்றதை நீங்க சரியா புரிஞ்சிக்கணும்னு" என்று நிறுத்தியவன்,

"நீங்களும் இப்படி ஒரு வாழ்க்கை வாழலாம்னு தான் சொல்றேன், நான் பேசறது அம்மாக்காகவும் என் தங்கைக்காகவும்" என்று முடித்தான்.

பொறுமையை தனக்குள் முயன்று கொண்டு வந்த ராஜராஜன், ஒரு பெரு மூச்சை வெளியிட்டான்.

"உன் அம்மாவை பத்தி எனக்கு ஆகவேண்டியது ஒண்ணுமில்லை, உன் தங்கையை பத்தி எனக்கு சொல்றதுக்கு ஒண்ணுமில்லை, சேர்ந்து வாழறது சாத்தியமில்லை, எனக்கு மட்டுமில்லை அவளுக்கும். எங்களுக்குள்ள எங்கயும் பொருத்தம் கிடையாது, அவளை கூட்டிட்டு போங்க, எங்கன்னாலும் நான் கையெழுத்து போடறேன்"

"இதுக்கு ரெண்டு வருஷம் காத்திருக்க வேண்டாமே,

கல்யாணமாகி ரெண்டு வருஷம் ஆச்சு, இதுக்கு பிறகு இப்படி ஒரு முடிவு ஏன் எடுக்கணும், முன்னமே எடுத்திருக்கலாமே" என்றான் மனோ.

"எனக்கு புரியலை என்னை சுத்தி என்ன நடந்ததுன்னே? இப்படி ஒரு கல்யாணம் நடந்தது ஏன்னு கூட தெரியலை, சரி சரியாக்கிகுவோம்னு நினைச்சா, பெரியப்பாக்கு இஷ்டமில்லை, இப்போ வரைக்கும் அவர் பேச்சை வீட்ல யாரும் மீற மாட்டாங்க"

"இந்த கல்யாணம் தாத்தா நடத்தி வெச்சதால பாட்டி இதை சரி பண்ணனும் நினைக்கிறாங்க"

"ஆனா எனக்கு புரிஞ்ச வரை அங்கை பிறந்து வளர்ந்த விதமே வேற, அவ படிப்பும் வேற, எங்களுக்குள்ள சரி வராது"

"ஏன்னா எங்க குடும்பம் இப்படி ஆனதுக்கு காரணம் உங்க அம்மா, இன்னைக்கும் எங்களுக்குன்னு இருக்குற மரியாதை இருக்கு இல்லைன்னு சொல்லலை, ஆனா வசதி ஒன்னுமே இல்லாம போயிட்டோம், எங்களால எங்களை சேர்ந்தவங்க நிறைய பேர் கஷ்டப் பட்டு இருக்காங்க"

"என்ன அப்படி பாழாப் போன காதல். எங்க இத்தனை

பேரோட வாழ்க்கையை மாத்திடிச்சு, அப்படி இருக்கிறவங்க பொண்ணோட நான் எப்படி வாழ முடியும், சாத்தியமில்லை”

“அப்போ எதுக்கு உங்க தாத்தா இந்த கல்யாணத்தை நடத்தி வெச்சார்” என்றவனிடம்,

“பார்த்தியா உன்னோட தாத்தா சொல்ற. அப்போ உனக்கு யாரு அவர், இது தான் வித்தியாசம், இது சரி வராது”

“ஆனா உன் தங்கை ஏன் இங்க இந்த ஊர்ல இருக்கா எனக்கு புரியலை, எங்க கிழவி சொல்றதை கேட்டுட்டு இருந்தா அவளை விட முட்டாள் கிடையாது”

“அவளை கூட்டிட்டு கிளம்பிட்டே இருங்க” என்று இத்தனையும் பேசி முடித்த போது, அவர்கள் உண்டிருந்தனர்.

விகாஸ் மனோவின் மீது உறங்கியிருக்க, அவர்கள் பயணமும் துவங்கி இருக்க, மனோவிடம் இவ்வளவு நேரம் பேசி இருந்தவன், எழுந்து அவனின் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டான்.

“உங்களுக்கு நடந்துதுக்கு எங்கம்மா என்ன பண்ணுவாங்க?” என்று மனோ அவன் எழும்போது ஒரு கேள்வி கேட்க,

அதற்கு பதிலே சொல்லவில்லை ராஜராஜன்.

நடந்தவைக்கும் நடப்பவைக்கும் யாரும் பொறுப்பாக முடியாது எனும் போதும், நடந்தவை இல்லையென்று ஆகி விடாது!

காதல் எந்த மொழியிழும் ராஜராஜனுக்கு பிடிக்காத வார்த்தை!

அவனுக்கு சற்றும் குறையாத காரத்தோடு அங்கையற்கண்ணி அவளின் அம்மா ராஜலக்ஷ்மியோடு பேசிக் கொண்டிருந்தாள் கை பேசியில்… "சும்மா அழாதம்மா, எனக்கு கோபம் வரும்" என்று

அந்த புறம் ராஜலக்ஷ்மியின் கேவல் தான் கேட்டது, "மா, எதுக்கு அழற? அப்பா உன்னோட பேசலைன்னு எந்த நிமிஷமும் ஃபீல் செஞ்சு அழற, அப்படி என்ன அவர் பேசலைன்னா, போடான்னு சொல்லிட்டு விட மாட்டியா?

அப்படி என்ன அப்பா மேல காதல் உனக்கு, அதையும் விட நம்ம மரியாதை நமக்கு முக்கியம் மா. அது கணவர் கிட்டன்னாலும்" என்று அவள் சொல்ல,

"உனக்கு இன்னும் காதல் வரலை அங்கை, அதான் நீ இப்படி பேசற" என்று ராஜலக்ஷ்மி சொல்ல,

"யக், ஐ ஹேட் திஸ் லவ், இப்படி ஒரு விஷயம் எனக்கு

தேவையேயில்லை”

“நீ அப்பாவோட பேசறியா”

“பேசமாட்டேன், கண்டிப்பா பேச மாட்டேன், இந்த கல்யாணம் நடந்ததுக்கு நீ பொருப்பில்லைன்னு தெரிஞ்சும் உன்னை தள்ளி வெச்சு டார்ச்சர் பண்றார், அப்படி என்ன அவருக்கு?”

“நான் இங்க உங்களால தான் இங்க உட்கார்ந்து இருக்கேன்”

“அப்பா கிட்ட பேசுடா, இங்க வந்திடு, அங்க உன்னால இருக்க முடியாது. அங்க வீடும் உனக்கு சரி வராது, அங்க எல்லோரும் என்னை சொல்லி சொல்லியே உன்னை ஒரு வழியாக்கிடுவாங்க”

“ஆக்கட்டுமே மா, அதனால என்ன, நீ காதலிச்ச, நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்ட, ஆனா அதனால இங்க இவங்க மொத்த பேரும் பாதிக்கப் பட்டு இருக்காங்க”

“அவங்க தொழில் எல்லாம் போச்சு, சொத்து எல்லாம் போச்சு, இன்னைக்கு பிள்ளைங்க தலையெடுத்து கொஞ்சம் சுமாரா இருக்காங்க, இதுக்கு காரணம் யாரு, நீங்க தானே! அப்போ உங்களை கொஞ்சுவாங்களா? நீங்க இதை எப்படி

எதிர்பார்க்கறீங்கன்னு புரியலை” என்று அவரை வார்த்தைகளால் விளாசினாள்.

“எங்கம்மா உன்னை அதையும் இதையும் பேசி திசை திருப்பி இருக்காங்க”

“மா, நான் சின்ன பொண்ணு கிடையாது, எனக்கு இருபத்தி நாலு வயசாகுது, நல்லது கெட்டது எனக்கு தெரியும், தெரியலைன்னாலும் கத்துக்குவேன், புரியுதா?”

“நீங்க மிஸ்டர் அன்பழகனை பாருங்க, எனக்கு என்னை பார்த்துக்க தெரியும்” என்று காய,

“உங்கப்பா டா அவர், உன்னை பார்த்து பார்த்து அவ்வளவு அருமை பெருமையா வளர்த்தார்”

“அப்படி தானே உங்கப்பா உங்களை வளர்த்தார், உங்களை கூட்டிட்டு ஊரை விட்டு ஓடிப் போகும் போது அது அவருக்கு தெரியலையா?” என்று பேச,

ராஜலக்ஷ்மியிடம் ஒரு கேவல் வெடிக்க, கைபேசியை கரிஷ்மாவிடம் கொடுத்தவள், அவள் கையிலிருந்த ஸ்ருஷ்டியை

வாங்கி கொண்டு அந்த இடத்தை விட்டு அகல,

வெளிவாயில் திண்ணையில் நாச்சி உட்கார்ந்து இருக்க,

“உங்க பொண்ணு அங்க அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுது, என்ன தான் பொண்ணு வளர்த்து வெச்சிருக்கீங்களோ” என்று பேச,

அங்கையர்கண்ணியை வியந்து தான் பார்த்திருந்தார் நாச்சியம்மாள், என்னவோ அவர் தான் சொல்லிக் கொடுத்து கெடுப்பது போல, அந்த ஊரில் அவளை கட்டாயமாய் இருக்க வைத்திருப்பது போல ஒரு தோற்றம் இருக்கும்.

உண்மையில் அப்படி கிடையாது அங்கையின் இஷ்டம் தான் எல்லாம்!

அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று அவளுக்கே வெளிச்சம். ஆனால் நிச்சயம் ராஜராஜனை அல்ல!

# அத்தியாயம் 3

சபரிமலை பயணம் அதன் பிறகு எந்த பேச்சுக்களும் மனோவிடமோ, ராஜராஜனிடமோ இன்றி சென்றது. அய்யன் தரிசனம் மட்டுமே பிரதானமாய் இருக்க, விகாஸோ விடாது அவ்வப் போது ராஜராஜனிடம் பேச்சுக் கொடுக்க,

அதுவும் மலையேறும் போது மனோவின் தோள் மேல் இருந்தவனை ஒரு இடத்தினில் மனோ கீழே இறக்கி விட்டு இளைப்பாறவும், “என்னை நீங்க தூக்குங்க மாமா” என்று அவன் முன் வந்து தூக்கு என்பது போல கையை நீட்ட,

“சிறுவனிடம் என்னடா உனக்கு வேற்றுமை” என்று மனசாட்சி ஒரு குத்து விட, அவனையும் மீறி தூக்கி கொண்டான் ராஜராஜன்.

பின்பு என்ன மாமன் தோளில் சவாரி தான் அவனிற்கு!

அவர்கள் சிறிது தூரம் நடந்த உடனே “என்கிட்டே அவனை குடுக்கறதுன்னா குடுங்க” என்று மனோ கேட்க,

“ஏன், என்னால தூக்க முடியாது சொல்றியா?” என ராஜராஜன் பேச,

“என்னவோ செய்து கொள்ளடா நீ” என்ற பார்வையோடு

மனோ நகர்ந்து விட்டான்.

ராஜராஜன் குழந்தையோடு சகஜமாய் பேசினான் என்று சொல்ல முடியாது, ஆனால் ஒரு இணக்கம், ஒரு கவனிப்பு, ஒரு கனிவு ஒட்டிக் கொண்டது.

விகாஸ் வாய் ஓயாமல் பேசிக் கொண்டு வந்தான், எதிர்பட்ட எல்லாவற்றையும் என்ன? என்ன? என்று கேட்டான், மலைப்ரதேசம் ஆட்கள் அதிகம் இல்லாத சமயம், இவர்களை போல ஒன்றிரண்டு குழுக்கள் மட்டுமே, ஓரிடத்தில் பெரிய மலைப் பாம்பு ஒன்று அவர்களை கடக்க, எல்லோரும் அப்படியே நின்று விட்டனர்.

அது இரையை ஏதோ உண்டிருக்க, மெதுவாய் கடந்தது.

“மாமா நாம அதை போய் தொடலாமா? அதோட டம்மி ஏன் பெருசா இருக்கு” என்ற கேள்வி வேறு, இப்படியாக ஐயனை தரிசித்ததும் ராஜராஜனின் தோளில் தான்.

மனோ வியந்து தான் பார்த்தான், புது ஆட்கள் யாரிடமும் போகாத விகாஸ், ஒன்றிரண்டு முறை பெரிய பாட்டியால் மாமா என்று காண்பிக்க பட்டவனிடம் எப்படி ஒட்டிக் கொண்டான் என.

ரத்த பந்தங்கள் என்பது இதுதானோ என்று தோன்ற,

மலையில் இருந்து இறங்கும் போது உறங்கிவிட்ட விகாஸை ராஜராஜன் கொடுக்கவில்லை, "அவன் கண் விழிக்கட்டும் கொடுக்கறேன்" என்று விட்டான்.

இப்படியாக ஊர் வந்து சேர்ந்தனர்...

அவரவர் வீட்டிற்கு பிரியும் போது அவனிடம் வந்த விகாஸ் "மாமா நாளைக்கு நாங்க ஊருக்கு போறோம், நீங்க வீட்டுக்கு வாங்க" என்று கூப்பிட,

பதில் பேசாமல் செல்லமாய் அவனின் கன்னம் தட்டி அனுப்பினான்.

மனோவிடம் சென்ற வேகத்திற்கு திரும்ப வந்த விகாஸ் "அத்தையை பார்த்துக்கோங்க, அப்பா சொன்னாங்க" என,

அவனின் உயரத்திற்கு மண்டியிட்டு அமர்ந்த ராஜராஜன் "உங்க அத்தையை யாரும் பார்த்துக்க தேவையில்லை. அவளை அவளே பார்த்துக்குவா, சீக்கிரம் உங்கப்பாவை உங்க அத்தையை கூட்டிட்டு போகச் சொல்லு, எங்க பாட்டி இல்லாம எங்க வீடே நல்லா இல்லை, அவங்களை அனுப்பி விடுங்க" என்று சொல்ல,

இதற்கு என்ன சொல்வது என்பது போல அப்பாவை

பார்த்தான் விகாஸ்.

“வா” என்பது போல விகாஸை பக்கத்தில் அழைத்தவன் எதோ சொல்லி அனுப்ப,

அவனிடம் ஓடி வந்த விகாஸ் “அத்தையை கூட்டிட்டு போக ட்ரை பண்றாங்களாம்” என்று சொன்ன சின்னவனுக்கு பின்பு அப்பா சொன்னது மறந்து போக,

மனோவே ராஜராஜன் அருகில் வந்து “நான் மேக்சிமம் கூட்டிட்டிப் போக முயற்சி பண்றேன், அவ மனசுல என்ன இருக்குன்னு தெரியலை. என்ன பன்றான்னும் தெரியலை, எங்கப்பா அம்மாவை பார்த்து ரெண்டு வருஷமாகுது, நான் தான் வந்துட்டு போறேன், ஒரு வேலை அவ வரலைன்னா, நீங்க பேசி இந்த உறவை முடிச்சி விடுங்க, இங்க இருக்குற வரை அவளை பார்த்துக்கங்க” என்று முடித்தவன் திரும்பி நடந்தான்.

“இவன் என்னடா அவன் தங்கைக்கு சொல்லாம எனக்கு சொல்லிட்டு இருக்கான். நான் அவளை போ போன்னா சொல்ல முடியும். முதல்ல அவ என் கூடவே இல்லை. இந்த ஊர்ல ஒரு இடத்துல இருக்கா, அவளை இந்த ஊரை விட்டு போன்னு சொல்ல முடியுமா?” என்று தோன்ற,

“ஏன் இங்க இருக்கா?” என்ற எப்போதும் போல விடைதெரியாத கேள்வியும் மனதோடு தோன்ற,

“சுவாமி சரணம்” என்று சொல்லிக் கொண்டவன் வீடு நோக்கி நடந்தான்.

கோவிலுக்கு போய்விட்டு வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட அன்று தான் மில்லிற்கு வந்தான். அரிசி மில் அவர்களது. அது மட்டுமே மிஞ்சி இருந்தது. அண்ணன்கள் இருவரும் இவன் கோவில் செல்வதால் அந்த நேரம் பிள்ளைகளின் விடுமுறையும் கூட என்பதால் வந்திருந்தனர்.

அவர்களின் வாசம் சென்னையில், இருவருமே சாப்ட்வேர் எஞ்சினியர்கள், அண்ணிகள் இருவரும் கூட அண்ணனை போன்ற வேலையில் தான் இருந்தனர்.

சொல்லப் போனால் இருவரும் வெளிநாட்டில் இருந்தனர், இப்போது ஒரு வருடம் முன்பு தான் இந்தியாவே வந்திருந்தனர். கிட்ட தட்ட இருவருமே பத்து வருடத்திற்கும் மேல் வெளிநாட்டில் இருந்ததினால் நல்ல சம்பாத்தியம்.

இதோ அவர்கள் தான் இந்த மில்லை புதுப்பித்து இரண்டு வருடம் முன் ராஜராஜனிடம் கொடுத்து இருந்தனர். அவனின் திருமணம் முடிந்த பிறகு அவன் கௌரவமாய் இருக்க வேண்டும்

என்பதற்காக.

ராஜராஜனிற்கு படிப்பில்லை, அண்ணன்களை போல படிக்கவில்லை. பன்னிரெண்டாவது முடியவுமே உழைக்க வந்து விட்டான் வீட்டின் சிரமம் கருதி, ஆம், ஒரு அண்ணன் படித்து அப்போது தான் முடித்திருக்க, இன்னொரு அண்ணன் கடைசி வருடத்தில் இருக்க, ஒரு அக்காவை திருமணம் செய்து கொடுத்த கடன் நீண்டு இருக்க, இன்னொரு அக்கா திருமணதிற்கு நிற்க,

இவர்கள் இத்தனை பேரின் ஜீவனம் இருக்க, இருக்கும் நிலத்தில் நெல் விளைவிக்கிறேன் என்று அப்பாவும் சித்தப்பாவும் இருக்க, தாத்தா படுக்கையில் இருக்க, அப்பாவும் சித்தப்பாவும் யாரிடமும் வேலை செய்து பழக்கமில்லாததால், பின்பு விருப்பமில்லாததால், இருக்கும் சிறிது சொத்துக்களை விற்று பிள்ளைகளை படிக்க வைப்பது என்று சமாளித்து கொண்டிருக்க,

ராஜராஜன் பதினெட்டு வயதில் வீட்டினை கருத்தில் கொண்டு உழைக்க வந்து விட்டான். அவன் வீட்டினை பார்த்துக் கொண்டதால் தான் இரு அண்ணன்களால் படிப்பை முடித்து நல்ல வேளையில் அமர்ந்து இப்போது நன்றாக இருக்க முடிந்தது. அவர்கள் மீது குடும்ப பாரம் இல்லை.

இப்போது நன்றாய் இருக்கவும் குடும்பத்திற்கு செய்கிறார்கள். பழையபடி எல்லா சொத்துக்களையும் வாங்கி விட வேண்டும்

என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

ராஜராஜனுக்கும் அப்படி எண்ணம் எல்லாம் இருந்தது. ஆனால் இப்போது அவனுக்கு என்ன எண்ணம் என்று அவனுக்கு தெரியவில்லை.

மனதினில் எப்போதும் ஒருத்தி இந்த ஊரில் அமர்ந்து வண்டாய் அவன் காதில் சத்தமிட, அவளினது அத்தியாயம் என்ன என்று தெரிந்த பிறகே வேறு அவனால் செய்ய முடியும் என்று விட்டு விட்டான்.

அந்த அத்தியாயம் எழுதப்படுமா இல்லை அழிக்கப் படுமா இதுவே அவன் கவனம் முழுவதும், அதனால் வரும் வேலையைச் செய்தான், புதிதாய் எதுவும் முயற்சிக்கும் எண்ணமில்லை.

ஓரிரண்டு முறை அங்கையர்கண்ணியோடு பேச முயன்றிருகின்றான் அவளின் நோக்கம் என்ன என்று தெரிந்து கொள்வதற்காக.

அவள் பிடி கொடுக்கவில்லை, அந்த பேச முயன்றதே வீட்டினருக்கு தெரியாமல், இதில் அவள் பேசாமல் தவிர்த்து செல்ல, போடி என்ற எண்ணம் தான்.

வீட்டில் பெரியப்பா வேறு அனுதினமும் “அந்த பொண்ணு நம்ம வீட்டுக்குள்ள வரக் கூடாது. எங்கம்மா வேணும்னே அங்க

உட்கார்ந்து அழிச்சாட்டியம் பண்ணுது. எப்படி இருந்த நாம இப்படி ஆனதுக்கு காரணம் அவ தான்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

அவருக்கு எதிராய் அவர்களின் வீட்டினில் வாய் திறப்பவர் யார்? மற்றோர் திருமணம் என்று ஒன்றான பிறகு அது முறிந்து போக வேண்டும் என்று யாரும் நினைக்கவில்லை. ஆனால் அவருக்கு எதிராய் யாரும் பேசவில்லை.

என்ன அப்போதும் அவர்களுமே ராஜலக்ஷ்மியுடன் இணக்கம் காட்டிட விரும்ப மாட்டர், அவளின் பெண் வேண்டுமானால் பெற்றோருடன் உறவை முறித்து இங்கு வந்து கொள்ளட்டும் என்ற எண்ணம் தான்.

இன்னம் அவளை பற்றிய ஒரு விபரமும் யாருக்கு தெரியாது, அதாகப்பட்டது படிப்பு என்ன என்பதாக. இங்கு எதற்கு இருக்கிறாள் தற்போது என்ன செய்கிறாள் இப்படியாக.

அவளோடு இருக்க ஆரம்பித்ததில் இருந்து நாச்சியுடனும் யாரும் பேசுவதில்லை. அவருடன் பேசக் கூடாது என்பது சுவாமிநாதனின் கட்டளை.

கோவிலுக்கு சென்று வந்ததில் இருந்து என்னவோ மனது சஞ்சலமாக இருந்தது. விகாஸ் என்னவோ அப்படி நினைவிற்கு

வந்தான். அவனின் அண்ணன்கள் அவனிடம் மிக நெருக்கம். அவனின் மக்கள் இவனிடம் சித்தப்பா என்று பிரியமாய் பழகினாலும், இப்படி விகாஸ் போல உரிமையும் நெருக்கமும் காண்பித்ததில்லை.

அவனுக்கு தெரியவில்லை விகாஸ் அவனின் அத்தையை போல என்று.

ஆம்! அங்கையர்கண்ணியும் ஆட்களை எளிதில் வசீகரித்துக் விடுவாள். அந்த ஒரு மரபணு விகாஸிடமும் இருந்தது. அங்கை, அவளின் அப்பா மாதிரி, அதாகப்பட்டது அன்பழகன் போல், அதனைக் கொண்டே அன்பழகன் மேல் அப்படி ஒரு காதலில் ராஜலக்ஷ்மி விழுந்து விட, அன்பழகன் பெண் கேட்டான் அவளின் தந்தையிடம். அப்படி ஒரு பிரளயம் வெடித்தது. அன்பழகன் ஒரு பீ எஸ் சி பட்டதாரி அவ்வளவே. அந்த பீ எஸ் சி யும் ராஜராஜன் வீட்டினர் படிக்க வைத்தது.

அவனுக்கு அப்பா, அம்மா கிடையாது. சிறு வயதிலேயயே தவறி விட செல்வந்தரான ராயர் அவனின் அப்பா அவரிடம் வேலை செய்ததால் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தார். காலையில் அவர்கள் வீட்டில் உண்டு பள்ளிக்கு செல்பவன் மதியம் பள்ளியில் சத்துணவு உண்பவன் இரவு இவர்களின் வீட்டினில் உண்டு வீட்டின் ஹாலில் ஒரு ஓரமாய் படுத்துக் கொள்வான்.

பள்ளியில் இருந்து வந்ததிலிருந்து, அவர்கள் சொல்லும் வேலையை செய்வது, கடைக்கு போவது, விடுமுறை நாட்களில் அவர்கள் சொல்லும் வீட்டு மற்றும் தொழில் சார்ந்த வேலையை செய்வது, இப்படி அவனின் நாட்கள் நகர அவனும் வளர, அவனுக்கு ஐந்து வயது இளையவளான ராஜலக்ஷ்மிக்கும் அவன் மேல் காதல் வளர்ந்தது.

அழகான ராஜலக்ஷ்மி இன்னும் அழகான அறிவான அன்பழகன் மேல் காதல் பித்தாக, யாருமற்றவனான அன்பழகனின் மனமும் அவளின் காதலில் அக்கரையில் அவள் பால் சாய, இருவரும் ஒரே இனம் கூட என்பதால், அவனிடம் ராஜலக்ஷ்மியின் வீட்டினர் எதுவும் வேற்றுமை பாராட்டி இராததால் நல்ல வேலையில் அமர்ந்து விட்டால் பெண் கொடுத்து விடுவர் என்று நினைத்து விட்டான்.

உலக ஞானம் அந்த நிலையினில் அவனுக்கு தெரிய வரவில்லை

அன்பழகன் மிகுந்த தைரியசாலி, ராயரிடம் சென்று பெண் கேட்க, உலக ஞானம் அவனுக்கு புரிய வைக்கப் பட்டது.

“யாருமில்லாதவன்னு வீட்ல தங்க இடம் கொடுத்தா, எங்க வீட்டு பொண்ணோட மனசையே நீ கலைப்பியா” என்று அடித்து

விரட்டப் பட்டான்

ஆம்! அடித்து தான் விரட்டப் பட்டான்.

உண்மையின் அவனுக்கு பெண் கேட்கும் வயதே இல்லை, ஆனால் பதினேழு வயது ராஜலக்ஷ்மிக்கு ஒரு வரன் வர வீட்டினரும் அதை முடிக்கும் ஆர்வத்தில் இருந்தனர். சுவாமிநாதனுக்கு திருமணமாகி இருக்க, அடுத்து தமிழ்செல்வனும் திருமணதிற்கு நிற்க, வீட்டில் பெண் பிள்ளையை வைத்துக் கொண்டு அவனுக்கு முடிக்க விருப்பமின்றி சிறு வயது என்றாலும் நல்ல வரன் என்றதால் முடிக்க நினைக்க,

அதனை கொண்டே அன்பழகன் திருமணதிற்கு பேசினான்.

பீ எஸ் சி முடித்திருந்தவன் அரசு தேர்வுகளுக்கு பயிற்சி எடுத்து கொண்டிருந்தான். அதுவரை எப்போதும் போல அவர்களின் வயலில் மில்லில் கடையில் என்று எங்கே வேலை இருந்தாலும் செய்வான்.

பெண் கேட்டதும் ராயர் கூட அவனை மிரட்டி தான் பேசினார்.

ஆனால் சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் அவனை அடித்து விட்டனர் அடித்தது மட்டுமல்லாமல் வீட்டை விட்டு ஊரை விட்டு விரட்ட

எங்கே போவது என்று தெரியாமல் ராணுவத்தில் போய் சேர்ந்தவன், இன்று படிப்படியாய் உயர்ந்து ஜெனரல் பதவியில் இருந்தான்.

அடித்து விரட்டிய சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் இன்னும் ஊரில் பெரிய ஆட்கள் தான். ஆனால் பெயரளவில், பரம்பரையில், சொத்துக்கள் கொண்டு கிடையாது.

அவனை அடித்து விரட்டி விட்டனர் என்று தெரிந்ததும், அவன் எங்கே போனான் என்று தெரியாததால் ஒரு வேளை கொன்றே விட்டனரோ, என்று பயந்து பூச்சி மருந்தை எடுத்து ராஜலக்ஷ்மி குடித்து விட, அவளை காப்பாற்றுவதற்குள் அப்படி ஒரு சிரமம் ஆகிப் போனது.

அந்த திருமண பேச்சு அப்படியே நின்று விட, தமிழ்செல்வனுக்கு திருமணம் செய்து வைத்தனர். மூன்று வருடங்கள் முடிந்த பிறகு மீண்டும் ராஜலக்ஷ்மியின் திருமணம் அவளின் பலத்த மறுப்புக்கு பிறகும் பக்கத்துக்கு ஊரில் இருக்கும் ஊர் பெரிய தனக்காரனின் மகன் ஆத்மனுக்கு பேசி முடித்தனர். அவர்களுக்கு இவர்களை விட செல்வமும் செல்வாக்கும் அதிகம்.

சுவாமிநாதனின் புது நண்பனும் கூட, அப்படி தான் அந்த வரன் அமைந்தது.

வீட்டினருக்கு ராஜலக்ஷ்மி சிறு பெண் அவளின் மனசை அன்பழகன் கெடுத்து விட்டான். திருமணமானால் சரியாகிவிடும். இது தான் அவர்களின் நினைப்பு. ராஜலக்ஷ்மியின் காதலின் தீவிரம் அவர்களுக்கு புரியவில்லை.

இரண்டு ஊருமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது இந்த திருமணதிற்காக, அப்படி காசை வாரி இறைத்து ஒரு வாரம் விருந்து என்று அமர்களப் பட்டுக் கொண்டிருக்க,

திருமணதிற்கு முன் தினம் பெண் காணாமல் போய் விட்டால் என்ன நடக்கும்?

ஊர் கலவரமாகி விட்டது!

ஆம்! அன்பழகன் மூன்று வருடம் ராணுவத்தில் இருந்து அப்போது தான் விடுமுறையில் வந்தவன், திருமண செய்தி கேட்டு அப்படியே அருகிருந்த கோவிலில் அவனின் பயணப் பொதிகையோடு அமர்ந்து விட்டான்.

அவளுக்கு திருமணம் ஆகியிருக்கும் என்று தான் நினைத்தான், ஆகவில்லை என்பது மகிழ்ச்சி என்றால் ஆகப் போவது துரதிர்ஷ்டம்! மனம் தொய்ந்து அமர்ந்திருந்தான்.

தன்னுடைய அத்தனை மறுப்பையும் மீறி இவர்கள் திருமணம் செய்வது அப்படி ஒரு இயலாமையை ராஜலஷ்மிக்கு

கொடுத்திருந்தது.

அவளின் பல வருட காதல் தூக்கி ஏறிய முடியவில்லை. அதுவும் அன்பழகனுக்கு என்ன ஆனது என்று கூடத் தெரியவில்லை, திருமணதிற்கு முதல் நாள் கோவிலுக்கு போகிறேன் வேண்டுதல் என்று சொல்ல, தில்லையை உடன் அனுப்பி வைத்தனர். அப்போது தில்லை கர்ப்பிணியும் கூட,

தில்லை இன்னும் இரு உறவு பெண்கள் என்று புடை சூழ வந்த ராஜலக்ஷ்மி அங்கிருந்த அன்பழகனை கவனிக்கவில்லை.

ஊரை விட்டு சற்று தள்ளி இருந்த கோவில் ஜன நட மாட்டமும் அதிகமில்லை, காரில் டிரைவருடன் வந்தனர், உள்ளே நுழைந்தவள் ஏதோ உந்த அந்த நொடி உயிர் வாழ பிடிக்காமல் அங்கிருந்த கோவில் கிணற்றில் உயிரை மாய்க்க குதித்து விட,

சத்தம் கேட்டு, பெண்களின் கத்தல் கேட்டு ஓடி வந்த அன்பழகன் யாரென்று தெரியாமல் கிணற்றில் குதித்தான் காப்பாற்றுவதற்காக.

குதித்து மேலே தூக்கிய பிறகு தான் அது ராஜலஷ்மி என்று தெரிய, பதறி விட்டான். அவள் குடித்த தண்ணீரை வயிற்றில் இருந்து அமுக்கி எடுத்தவன் அவள் கண்விழிக்கவும், அவள் கண்களின் சேதியை படித்தான்.

“ஒன்று என்னை அழைத்து செல், இல்லை சாக விடு” என்று அது தெளிவாய் சொல்ல, அப்படி போவதில் அவனுக்கு உடன்பாடு இல்லையென்றாலும் அந்த நொடியில் அதனை தவிர வேறு வழி புலப்படாததால்,

யாரும் எதுவும் உணரும் முன்னர், தன்னுடைய பயணப் பொதிகையை தூக்கிக்கொண்டு அங்கிருந்த டிரைவரை ஒரு குத்து விட்டு, என்ன ஏது என்று கிரகிக்கும் முன்னர், ராஜலக்ஷ்மியை கையை பிடித்து இழுத்துச் சென்று காரில் ஏற்றி பறந்திருந்தான்.

இவர்கள் ஓடி வீடி சென்று விவரம் சொல்லி ஆட்களை அழைத்து எங்கே என்று தேட, கார் பக்கத்தில் இருந்த நகரத்தில் ஒரு இடத்தில் அனாதையாய் நிற்க, அவர்கள் இருவரும் ரயில் ஏறியிருந்தனர்.

எதுவுமே செய்ய இயலவில்லை. அவர்கள் எங்கு சென்றார்கள் என்று கூட யாருக்கும் தெரியவில்லை.

மாப்பிள்ளை ஆத்மனின் கோபம் முழுவதும் ராயரின் குடும்பம் மேல் திரும்ப, “எப்படி பெண் காதலித்தது தெரிந்தும் எனக்கு கட்டி வைக்க நினைத்தனர். அதுவும் நண்பன் என்று எனை ஒருவன் இப்படி ஏமாற்றுவானா, அடுத்தவனை காதலிக்கும் பெண்ணை கட்டும் அளவிற்கு நான் இளப்பமா” என்று தோன்ற,

அவனின் கோபம் ராஜலக்ஷ்மியின் மேலும் இருந்தது. "அந்த பெண்ணாவது எனக்கு தகவல் சொல்லியிருக்கலாம், என்னுடன் போனில் பேசியிருக்கலாம், இல்லை யார் மூலமாவது சொல்லியிருக்கலாமே" என்ற கோபம்.

இரு ஊர்களுக்குள் கலவரம் வெடிக்க,

இப்படி எல்லாம் சேர்ந்து ஆத்மன் அவர்களை பழி எடுக்க, அவர்கள் ஒன்றுமில்லாமல் போகும் வரை ஓயவில்லை. அவர்கள் மட்டுமல்ல ஊரும் நிறைய பாதிக்கப் பட்டது. ஆனாலும் ஊர் அவர்களோடு நின்றது, இன்னும் நிற்கின்றது.

# அத்தியாயம் 4

“என்ன மாமா, என்ன விஷயம்?” என்று தன் முன் வந்து நின்ற ராமுவிடம் கேட்க,

“கரண்ட் பிரச்சனை தம்பி, இந்த மாசமாவே இருக்குறதுதான், இப்போ ரொம்ப அதிகமா இருக்கு, இப்போ நமக்கு கொள்முதல் அதிகம், இப்போ இந்த பிரச்சனைனால வேலை தாமதமாகுது”

“நாம தான் ரெண்டு மூணு முறை சொல்லிட்டோம், புகார் எழுதியும் வெச்சிட்டோம், சரி பண்றேன்னு சொன்னவங்க என்ன பண்றாங்க? நான் இன்னைக்கு என்னன்னு பார்க்கறேன்?” என்றான்.

“தம்பி” என்று அவர் இழுக்க,

“என்ன மாமா சொல்லுங்க?”

“அந்த கரண்ட் ஆபிசுல வந்திருக்குற புது ஆஃபிசரு ஆத்மன் ஐயாக்கு வேண்டப்பட்டவர்ன்னு ஒரு சேதி”

“அப்படியா நல்லா தெரியுமா?”

“அதுவும் தெரியலை பேச்சு தான்”

“சரியா தெரிஞ்சு சொல்லுங்க என்னன்னு பார்த்துடலாம், இவ்வளவு நாளா இல்லாம இப்போ என்ன புதுசா?”

ஆம்! இந்த சில வருடங்களாக எந்த தொல்லையும் இல்லை, தற்போது ஏன் என்ற கேள்வி ராஜராஜனின் மனதினில் உதித்தது. ராஜராஜன் தலையெடுத்த பிறகு ஆத்மனால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ராஜராஜன் முரடனாய் இருக்க ஏதாவது செய்ய ஆளை அனுப்பினால் அவர்கள் மோசமாய் தாக்கப்பட்டனர்.

இப்போது வரை ஆத்மனை ராயரின் வீட்டினர் திருப்பி அடிக்கவேயில்லை. ஏன் தடுக்க கூட இல்லை, ஊருக்கு ஒரு பிரச்சனை என்றால் போய் நிற்பர். அதுவே அவர்களுக்கு என்றால் என்னவோ நடக்கட்டும் என்று விட்டு விடுவர். அவர்களின் தப்பிற்கு பிராயச்சித்தமாய் இதனை கடை பிடித்தனர். பிள்ளைகள் அனைவருக்கும் இது முட்டாள் தனமாய் தோன்றும் ஆனால் ராயரும் சுவாமிநாதனும் இதில் ஸ்திரமாய் இருந்தனர்.

ராஜராஜன் தலையெடுத்த பிறகு அவன் தடுக்க ஆரம்பித்தான். அப்போதும் அவனாய் எதுவும் தொல்லை கொடுக்கவில்லை. தாத்தாவிடமும் பெரியப்பாவிடமும்

சொல்லிவிட்டான். நானாய் போகவில்லை ஆனால் வருவதை விடமாட்டேன் என்று.

ஆத்மனும் போதும் என்று நினைத்தாரோ என்னவோ விட்டு விட்டார். இப்போது அவராய் இருந்தால் ஏன் என்ற கேள்வி உதிக்க?

ராமுவிடம் அதற்கு பதில் இருந்தது, “இப்ப சில மாசம் முன்ன உங்க கல்யாணம் உங்க அத்தை பொண்ணோடன்னு அவர் காதுக்கு போயிருக்கு போல” என தயங்கி சொல்ல…

ராஜராஜனின் முகம் தீவிரத்திற்கு மாறியது.

“அது கல்யாணம்னு பெருசா நடக்கலை, உங்களோட சேர்ந்தும் இருக்கலை, அதனால இப்போதான் தெரிஞ்சது போல”

“இவ்வளவு நாளா பெரியப்பா வார்த்தைக்காக விட்டேன், அப்போவும் நாம திருப்பி அடிக்கறோம்னு தெரிஞ்ச பிறகு தான் அவன் விட்டான், இப்போ மட்டும் இது அவனோட வேலையா இருக்கட்டும், திருப்பி எல்லாம் அடிக்க மாட்டேன், நான் புதுசா அடிக்கறேன்” என்று சொன்ன ராஜராஜனின் முகத்தினில் இருந்த ரௌத்திரம்,

“ரௌத்திரம் பழகு” என்று சொல்லத் தூண்டியது.

அவன் அவ்வளவு கோபமாய் பேசிக் கொண்டிருக்கும் போது நாச்சியம்மால் வர, எப்போதும் இருக்கும் துறுதுறுப்பு அவரிடம் இல்லை சோர்வாய் வந்தார்.

“என்ன கிழவி?” என்று அவரிடம் சென்றான்.

பதில் பேசாமல் அவனை பார்த்தார்.

“எதுவோ சரியில்லை?” என்று புரிந்தவன், “வா வந்து உட்காரு” என்று அவரை அழைத்து வந்து அவனின் இருக்கையில் அமர்த்தி, “மாமா, டீ ஒன்னு வாங்கிட்டு வாங்க” என்று அனுப்ப,

இதோ தம்பி என்று அவர் விரைந்தார்.

“என்ன கிழவி பண்ணுது?” என்றான் அக்கறையாய்.

“தெரியலை உடம்புக்கு என்னவோ பண்ணுச்சு, அதான்யா உன்கிட்ட சொல்லலாம்னு வந்தேன்” என்றார்.

“ஏன் உன்கூட உன் பேத்தி இருப்பாளே?”

“சொல்லலையா, சொன்னா பயந்துக்குமோ என்னவோன்னு”

“அதெல்லாம் பயப்படற ஆள் கிடையாது, உன்னை உடனே ஆசுபத்திரிக்கு கூட்டிட்டு போயிருக்கும், நீ வா நாம போகலாம்”

என்றவன் காய்ச்சல் அடிக்கின்றதா என்று தொட்டு பார்க்க, லேசாய் காய்ச்சல் இருந்தது.

“காய்ச்சல் இருக்கு, வேற என்ன பண்ணுது?” என்றான்.

“வயிறு வலிக்குது, வயித்தாலையும் போகுது”

“சாப்பிட்டது சேராம இருக்கும், வா ஒரு குளுக்கோஸ் போட்டா சரியாகிடும்” என்றான்.

அவன் கைபிடித்து எழுப்ப எழுப்ப வே மயங்கி சரியபயந்து விட்டான்.

“டேய் யாருடா இருக்கீங்க?” என்று அவன் கத்திய கத்தலுக்கு அங்கிருந்தவர்கள் ஓடி வர,

“என்ன வண்டி இருக்குடா?” என்று பார்க்க சொல்ல லோடு ஏற்றும் மினி வேன் இருக்க, அவனே நாச்சியம்மாளை தூக்கினான்.

“அண்ணே நாங்க ஒரு கை பிடிக்கறோம்” என்றவர்களிடம்,

“டேய் அசல் ஆளுங்க எல்லாம் தொட விடாதுடா என் கிழவி, அப்புறம் என் குரவலைய கடிச்சிடும், வண்டிய எடுங்கடா” என்று சொல்லி,

விரைவாய் அங்கிருந்த அரசு மருத்துவமனைக்கு சென்றான்.

அங்கே அதுதான்! பெரிய மருத்துவமனைகள் என்ன, சின்ன மருத்துவமனைகள் கூட கிடையாது.

சாயங்கால நேரம் கிளினிக்கிற்கு வருவார்கள் ஒன்றிரண்டு டாக்டர்கள். அரசு மருத்துவமனையிலும் டாக்டர்கள் இல்லை. கேம்ப் சென்றிருந்தனர். அங்கிருந்த நர்ஸ் ட்ரிப்ஸ் போட, அவர் கண்விழிக்க காத்திருந்தவன், வீட்டில் இருக்கும் அம்பாசிடரை எடுத்து வரச் செய்தவன், அதில் அவரை ஏற்றி பக்கத்தில் இருபது கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் நகரத்திற்கு சென்றான்.

பின்பு அங்கே அவரை சேர்க்க, அவர்கள் எல்லாம் டெஸ்டும் எடுத்து உணவு ஒவ்வாமை என்று சொல்லி மீண்டும் க்ளுகோஸ் ஏற்ற,

“என்ன கிழவி, நீயும் உன் பேத்தியும் சமைச்சு சாப்பிடறீங்க, இப்படி இழுத்து வைக்கிற அளவுக்கு” என்று அவன் கேட்க,

“ராஜா அவ கிட்ட சொல்லணும்டா, காலையில உன்னை பார்க்க போறேன் சொல்லி வந்தேன். புள்ள பயந்துக்கும் என்ன இன்னும் காணோம்னு” என்று சொல்ல,

“அதெல்லாம் தகவல் சொல்ல சொல்லிட்டேன்” என்றான்.

அதற்குள் இவனின் வீட்டினில் இருந்து பெரியப்பா, பெரியம்மா, அப்பா, அம்மா வந்தனர்.

வந்தவுடனே பெரியப்பா பொறியத் துவங்கினார், “வயசாச்சுன்னு உங்களுக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்கா, வீட்டுக்கு வந்து மருமகள்களை ஏவி வேலை வாங்கிட்டு சௌகரியமா உட்கார்ந்து இருக்காமா, ஏம்மா அங்க இங்க போய் தங்கி இப்படி பண்றீங்க?” என்று கத்த,

இவனின் அப்பா, “என்னம்மா நீங்க? அப்பா சில வருஷமா படுக்கையில இருந்தார், அவரை கவனிக்கவே முழு நேரமும் இருந்தீங்க, சிரமப்பட்டீங்க. இப்போ ஹாயா இருக்குறதை விட்டு அந்த பொண்ணோட போய் இருக்கீங்க. அங்க வேலைக்கும் ஆள் இல்லை, நீங்களே செய்யறீங்க” என,

“அங்க இங்க, அந்த பொண்ணு” அங்கையர்கன்னியை பற்றி இப்படி பேசியவர்களை தில்லை வெறித்து பார்க்க, பெரியப்பாவை எதுவும் பேச இயலாதவனாக ராஜராஜன் அப்பாவை முறைத்து பார்த்தான்.

"டேய், சமையல் மட்டும் தான் நானு, பாக்கி எல்லாம் என் பேத்தி தாண்டா செய்யறா"

"இந்த வயசுல அது மட்டும் முடியுமா? என்ன நீங்க?" என்று மகன்கள் இருவரும் அவரை அதட்டினர்.

இதெல்லாம் வாசலில் நின்ற அங்கையர்கண்ணி கேட்டிருந்தால், ஆம், தகவல் சொல்லியதும் அவள் அவளின் ஆக்டிவாவில் கிளம்பி வந்திருந்தாள், பஸ்ஸிற்கு நின்றால் நேரமாகும் என்று.

என்னவோ இவர்கள் பேச்சுக்களை எல்லாம் கேட்டது அப்படி ஒரு வருத்தமாய் இருந்தது, அவளுக்கு வேலைகள் பழக்கமே அல்ல. ஆனாலும் இங்கே வந்ததில் இருந்து அவளே தான் செய்வாள். நாச்சி வந்தாலும் "போங்க பாட்டி" என்று விடுவாள்.

சமையல் அவளுக்கு தெரியாது, அதனால் அவர் சமைப்பார். இப்போது அதுவும் சுமாராய் செய்ய கற்றுக் கொண்டு விட்டாள். ஆனால் அவளை சொல்லியும் குற்றமில்லை, நாச்சிக்கு நாக்கிற்கு வக்கனையாய் வேண்டும். அவருக்கு அவளின் சமையல் பிடிப்பதில்லை. இன்னும் மசாலாவை அம்மியில் அரைத்து சமைப்பார். சட்னிக்கு கூட மிக்சி அவருக்கு ஆகாது. சிறிய

ஆட்டுக்கல்லில் அரைப்பார். அவளும் தான் என்ன செய்வாள்?

அவள் வெளியில் நிற்பதை அப்போது தான் ராஜராஜன் பார்க்க, “உள்ள வா” என்றான்.

அப்போது தான் பார்த்த சுவாமிநாதன் அவனை முறைக்க, “அவ பாட்டியை அவ பார்க்க வந்திருக்கா” என்று சொல்ல,

அவர் வெளியில் சென்று நின்று கொள்ள அவள் உள்ளே வந்தாள்.

எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தவள், “என்ன பாட்டி ஆச்சு?” என,

“தெரியலை கண்ணு, உடம்பு ஒரு மாதிரி இருந்தது. அதான் ராஜாவை பார்க்க வந்துட்டேன்”

“ஏன் நீங்க என்கிட்டே சொல்லலை?”

“நீ பயந்துக்குவன்னு சொல்லலை”

“என்ன பாட்டி நீங்க? நல்லா இருக்கும் போது என்கூட இருந்துட்டு, உடம்பு சரியில்லைன்னா ராஜன் கிட்ட போய்டுவீங்களா”

"பேர் சொல்லக் கூடாது சொல்லியிருக்கேன் தானே" என்று நாச்சி அதட்ட,

"மறந்துட்டேன்" என்றாள் மெல்லிய குரலில்.

ஆனால் அதில் வருத்தமோ இல்லை மன்னிப்போ எல்லாம் இல்லை. பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக இருந்தது.

"ராஜன்னா அது நானா? ஓஹ், இது எப்போது இருந்து" என்று தோன்றியது, குரல் மிகவும் இலகுவாய் ஒலித்தது போல இருந்தது.

அப்போது பார்த்து மருத்துவர் வர,

"கொஞ்சம் எல்லோரும் வெளில இருங்க" என்று நர்ஸ் சொல்ல,

எல்லோரும் வெளியேற அங்கை அங்கேயே நிற்க, ராஜராஜன் வெளியேற போகவும் தில்லை தான் "நீ இருடா டாக்டர் என்ன சொல்றாருன்னு கேளு" என்றார். பின்பு அவனும் நின்றான்.

டாக்டர் "சாப்பிட்ட உணவு ஒத்துக்கொள்ளவில்லை, புட் பாய்சனிங் ஆகிவிட்டது" என்றவர், "இன்னும் ஒரு நாள் இருந்து நாளை அழைத்து செல்லுங்கள்" என்று விட்டார்.

தில்லை அவருடன் இருப்பது என்று முடிவாக, “நீ வீட்டுக்கு கிளம்பு கண்ணு” என்ற நாச்சி சோர்வாய் கண் மூட,

என்னவோ இத்தனை மாதங்களாய் தன்னுடன் இருந்த பாட்டி அந்நியமாய் தோன்ற, “ம்ம் சரி” என்று வேறு எதுவும் பேசாமல், கேட்காமல் உடனே கிளம்பிவிட்டாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ராஜராஜனிற்கு என்னெவென்று புரியவில்லை, ஆனால் பாட்டி “போ” என்று சொன்னது பிடிக்கவில்லை என்று தோன்றியது.

அவள் உடனே வெளியேறி விட, “ஏன் பாட்டி போன்னு சொன்ன, அவளே போயிருப்பா தானே”

“நேரமாகுது ராஜா, இருட்டி போச்சுனா போகறது சிரமம் தானே”

“ஏன் அவ பத்திரமா போறதை நான் பார்த்துக்க மாட்டேனா?”

“உன்னை எப்படிய்யா நம்பறது? உன் பெரியப்பன் சொன்னா நீ நின்னுக்கிட்டு, யாரையாவது துணைக்கு அனுப்புவ, அதுல எனக்கு இஷ்டமில்லை” என்று பாட்டி பட்டு பட்டு என்று பேச,

“கிழவி ஆசுபத்திரில படுத்தாலும் என்னமா யோசிக்குது” என்று அவரை முறைத்து பார்த்தான்.

“ராஜா அவளுக்கு தமிழ் படிக்க தெரியாது, பேச மட்டும் தான் செய்வா. ஏதாவது பஸ் மாறி ஏறிடப் போறா பார்த்துக்கோ” என்று கூறி கண்மூடிக் கொண்டார்.

இனி அவன் பார்த்துக் கொள்வான் என்று தெரியும். மனோ நாச்சி இடம் தெளிவாய் உரைத்து சென்றான்.

“தோ பாருங்க பாட்டி, ஒன்னு சேர்ந்து வாழ்ந்தா வாழட்டும். இல்லை என்னவோ பார்த்துக்கலாம். அங்கையை அனுப்பி விடுங்க, எங்க அப்பா அம்மா பண்ணினதுக்கு நாங்க பொறுப்பாக முடியாது, இவ எதுவும் வாய் திறந்து பேச மாட்டேங்கறா? ஏன் இங்க இருக்கான்னு எனக்கு புரியலை. என் தங்கை எனக்கு ரொம்ப முக்கியம். இனியும் இப்படியே விட்டு வைக்க முடியாது. உங்க பேரன் என்னன்னா எனக்கு மரியாதை கூட குடுத்து பேச மாட்டேங்கறான். உங்களுக்காக அம்மாக்காக தான் பொறுத்து போனேன்” என்று நன்றாய் அவருக்கு கொடுத்து விட்டு சென்றிருந்தான்.

அதன் பொருட்டே உடல் நிலை கொஞ்சம் தொந்தரவு

காண்பிக்கவும், அதை சாக்காய் வைத்து அங்கையிடம் காரணம் சொல்லாமல் கூட ராஜராஜனிடம் வந்திருந்தார்.

கணவர் நடத்தி வைத்த திருமணம் நிலைக்க வேண்டும் என்ற பேரவா இருந்த போதும், சில சமயம் தோன்றும், ராஜராஜனை வளர்த்தவர் அல்லவா, இப்போது அங்கையுடன் இருக்கிறார் அல்லவா. இருவரின் குணத்திற்கு இயல்பிற்கும் பழக்க வழக்கத்திற்கும் தோற்றத்திற்கும் ஒத்துப் போவது வெகு சிரமம் என்று. அவனுக்கு தென்னிந்திய சாயல், அவளுக்கு வடஇந்திய சாயல் தான். அப்பா அம்மா தமிழ் என்றாலும் அங்கே பிறந்தது வளர்ந்தாலோ என்னவோ, நிறமும் அதற்கு தக்க இருக்க, உடை பாவனை அப்படி தான் வந்தது.

நடப்பது நடக்கட்டும் ஈசன் செயல் என்று விட்டுவிட்டார்.

இவன் வேகமாய் எங்கே அவள் என்பது போல வெளியே வந்து பார்க்க, அவள் ஆக்டிவாவில் வந்திருப்பது தெரிந்தது. ஆம்! அவள் ஆக்டிவாவை ஸ்டார்ட் செய்ய, அது சற்று மக்கர் செய்தது.

அவள் அதை உதைத்து கொண்டிருக்க, அருகில் சென்றவன், “இருட்டிடுச்சு, இங்க இருந்து இருபது கிலோமீட்டர் மேல போகணும், தனியா வேண்டாம்” என்றான்.

“எனக்கு ஒன்னும் பயமில்லை” என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

“உனக்கு பயமில்லை, உன்னை தனியா அனுப்ப எனக்கு பயம்” என்றான் பளிச்சென்று. உண்மையில் அவர்கள் பேசிக் கொண்ட ஞாபகமே ராஜராஜனிற்கு இல்லை. மனோகணபதியிடம் காட்டும் அலட்சியம் அவனுக்கு அங்கையிடம் வராது. மனைவி என்ற பாசமோ?

அதற்குள் ஸ்கூட்டி ஸ்டார்ட் ஆகிவிட... “எனக்கு பயமில்லை” என்று நிறுத்தி நிதானமாய் சொல்லி விட்டு கிளம்ப,

என்னவோ ராஜராஜனிற்கு மனதிற்கு சரியாய் படவில்லை, “இரு நான் உன் பின்னே, வர்றேன்” என்று அவன் சொல்லச் சொல்ல,

“தேவையில்லை” என்று கிளம்பியிருந்தாள்.

உள்ளே சென்று அம்மாவிடம் சொல்லி அப்பாவை பார்த்துக்கச் கொள்ள சொல்லி, அவரின் பைக் சாவியை பெற்றுக் கொண்டு கிளம்பினான். இவன் தான் பாட்டியை அம்பாசிடரில் அல்லவா அழைத்து வந்திருந்தான்.

பெரியப்பா “எங்கடா இவ்வளவு அவசரமா போற?” என,

“ஒரு வேலை பெரியப்பா” என்று மட்டும் சொல்லி கிளம்பினான்.

அவன் வேகமாய் சென்றாலும் அவன் மனது உரைத்தபடி சற்று சரியில்லாமல் போக, விஷயமும் கை மீறி இருக்க,

அங்கிருந்த போலீசிடம் அவள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருந்தாள்.

“ஜீப்ல ஏறும்மா” என்றவர்களிடம்.

“ஜீப்ல எல்லாம் ஏற முடியாது, நான் என் வண்டில வர்றேன் போங்க” தைரியமாய் உரைத்து நின்றாள். இவன் செய்வதறியாது திகைத்து நின்றான்.

# அத்தியாயம் 5

ஆம்! திகைத்து தான் நின்றான். போலிஸ் அதனுடன் பிரச்சனைகள் எல்லாம் அவன் பார்த்ததில்லை. அவனிற்கும் வந்ததில்லை. அவன் பெரிய ஆள் தான். ஆனால் அவனின் ஊருக்குள் மட்டுமே. அவனின் கிராம எல்லைக்குள் வரும் போலிஸ் ஸ்டேஷனை தெரியும். அங்கிருக்கும் ஆட்களையும் தெரியும். அப்போதும் அங்கே கூட பிரச்சனை என்றால் பெரியப்பா தான் செல்வார். இவனுக்கு பரிட்சயமில்லை.

ராஜராஜனின் முகத்தினில் திகைப்பை பார்க்கவும், “ஒன்னும் பயமில்லை, இவங்களும் நம்மை மாதிரி மனுஷங்க தான். ஆனா பல சமயம் தப்பான ஆளுங்க கிட்ட சலாம் போட்டு, சரியான ஆளுங்க கிட்ட கெத்து காட்டுவாங்க” என்று அவர்களின் முன்னமே சொல்ல,

அது அந்த காவலர்களை சரியாய் பதம் பார்த்தது. அதுவரை எகிறிக் கொண்டிருந்தவர்கள் சற்று நிதானித்தனர்.

அந்த ஊர் முடிந்து, இவர்களின் கிராமம் செல்லும் ஹைவேய்ஸ் ஆரம்பித்து ஒரு இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

பக்கத்தில் ஒரு கார் கண்ணாடி உடைந்து இருக்க, அங்கே இரண்டு பேர் நின்றிருக்க, அதுவரை ராஜராஜனின் கவனம் கூட அதில் செல்லவில்லை. “பார்த்தீங்களா சார் உங்க கிட்டயே எவ்வளவு திமிரா பேசறான்னு” என்று என்று அதில் இருந்த ஒருவன் சொல்ல,

“மரியாதையில்லாம பேசின நான் வாடா போடான்னு பேசுவேன்” என்று அங்கை எகிற, அப்போது தான் அவர்களின் புறம் பார்வையை திருப்பிய ராஜராஜன், யார் என்று பார்த்தான், முகமும் கோபத்தை தத்தெடுத்தது.

அங்கிருந்தது ஆத்மனின் மகன், கூட இன்னும் ஒருவன்!

“என்னமா நீ?” என்று காவலர் இப்போது பேச,

“சர் என்ன விஷயம்?” என்று ராஜராஜன் முன்னே சென்றான்.

“நீங்க யாரு?”

“நான் இவளோட புருஷன்” என்று சொல்ல,

“இந்தம்மா கார் கண்ணாடியை உடைச்சு, கார்ல கல்லை கொண்டு கிறுக்கி இருக்கு, நாங்க பார்த்தோம்” என்றனர்.

“ஏதாவது இவங்க வம்பு பண்ணி இருப்பாங்க” என்று ராஜராஜன் சொல்ல,

“இல்லை, நாங்க ஒன்னும் பண்ணலை” என்று ஆத்மனின் மகன் திலகன் சொல்ல,

“ரோட்ல இத்தனை கார் போகுது, எல்லோர் காரையுமா நிறுத்தி உடைச்சாங்க” என்று ராஜராஜன் திரும்ப பேச,

“நாங்க இவளுக்கு...” என்று ஆரம்பித்த திலகன்,

“என்னடா சொன்ன?” என்ற ராஜராஜனின் கர்ஜனையில்

“இவங்களுக்கு உதவி பண்ண நிறுத்தினோம்” என்று மாற்றினான்.

“நீங்க எல்லோரும் ஸ்டேஷன் வாங்க” என்று அவர்கள் கூப்பிட,

அவர்கள் கண்ணாடி உடைந்த காரில் ஏற, அவள் அவளின் ஆக்டிவாவை மீண்டும் உதைக்க ஆரம்பித்தாள் ஸ்டார்ட் ஆகாததினால்.

அவளின் அருகில் வந்த ராஜராஜன், “இந்த வண்டியை

பூட்டிட்டு என்னோட வா” என்று சொல்லவும்,

“அதெல்லாம் வர முடியாது, நான் என் வண்டில வர்றேன், நீங்க உங்க வண்டில வாங்க”

“ஒன்னு நீ என் வண்டில வா, இல்லை நான் உன் வண்டில வர்றேன்” என்று பிரச்னையை இலகுவாய் கையாண்டான் ராஜராஜன், சொன்ன நேரம் அவளின் ஆக்டிவா ஸ்டார்ட் ஆகிவிட,

அவனின் பைக்கை ஒரு ஓரமாய் நிறுத்தி பூட்டி, அவளிடம் வண்டியை “நான் ஒட்டவா” என்று கேட்க,

அவள் வண்டியில் அமர்ந்து இருந்தவள் அசையாமல் இருக்க, அவன் அதன் பிறகு யோசிக்கவில்லை, பின்னே அமர்ந்தான். புது வித அனுபவம், அவன் நன்றாய் வண்டி ஓட்ட ஆரம்பித்ததில் இருந்து காரோ இரு சக்கர வாகனமோ அவன் இருந்தால் அவன் தான் ஒட்டுவான். அவனுக்கு யார் பின்னும் அமர்ந்த ஞாபகம் இல்லை. இப்போது ஒரு பெண்ணும் பின்புறம் அதுவும் மனைவி என்ற ஒருத்தி, என்ன படாமல் அமர்வது சிரமமாய் இருந்தது. இடித்துக் கொண்டு அமரவும் மனதிற்கு ஒப்பவில்லை. ஒரு மாதிரி

அமர்ந்து பார்க்க,

அப்போதும் அவள் வண்டியை கிளப்பாமல் நின்றாள்.

“இப்போ என்ன?” என்றவனிடம்,

“வழி தெரியாது சொல்லுங்க” என்று முறைப்பாய் கேட்க,

ராஜராஜனிற்கு சிரிப்பு வந்து விட சிரித்து விட்டான். சப்தமானதொரு சிரிப்பு. அதை பார்த்திருந்த திலகனிற்கு அப்படி ஒரு ஆக்ரோஷத்தை கொடுத்தது. உடனே ஆத்மனிற்கு அழைத்து விட்டான்.

பின் ராஜராஜன் வழி சொல்ல, அவளோ மிதமான வேகத்தில் சென்றாள். அவளின் பின்னே திலகனின் கார் வர, அதனின் பின்னே ஹைவே பேட்ரல் வர,

“கொஞ்சம் வேகமா போகலாமே” என்றவனிடம்

“அவனுங்க மெதுவா வரட்டும், என்ன அவசரம்? என்னை ஜீப்ல ஏற சொல்றானுங்க, நான் என்ன கொலையா பண்ணினேன்” என்று திட்டி கொண்டே வந்தாள்.

“என்ன பிரச்சனை?” என்று சொல்ல…

அப்படியே அவள் வண்டியை நிறுத்தி அவனை பார்த்து

திரும்பி “எல்லாம் உங்களால, உங்க வீடுனால” என்று கோபமாய் பேசினாள்.

பிரச்சனையின் நுனியை பிடித்தான், அவளின் அம்மாவை திலகன் பேசியிருக்கக் கூடும் என்று.

அதற்குள் “ஏன் நிறுத்தினீங்க?” என்று அங்கிருந்த காவலர் கத்த,

“வண்டி நின்னுடுச்சு, என்னன்னு பார்க்கறோம்” என்று குரல் கொடுத்த ராஜராஜன், இறங்கு என்று அவளிடம் ஸ்திரமாய் சொல்ல,

முறைத்துக் கொண்டே இறங்கினாள், பின் வண்டியை இயக்கியவன், அவனே ஒட்டுமிடம் அமர்ந்து, “நம்ம சண்டை அப்புறம், ரோட்ல எல்லோருக்கும் காட்சி பொருள் ஆக வேண்டாம், உட்காரு” என்று அதட்ட அமர்ந்து கொண்டாள்.

பின் அவன் போலிஸ் ஸ்டேஷன் நோக்கி வேகமெடுக்க, எல்லோர் வண்டியும் பின் தொடர, ஸ்டேஷன் வாசலில் வண்டியை நிறுத்தவும், அங்கு வாசலில் நின்றிருந்த காவலர், இவனை பார்த்ததும் வேகமாய் அருகில் வந்தவர் “தம்பி என்ன இங்க

வந்திருக்கீங்க? அதுவும் நம்ம பொண்ணோட" என்று பேசினார், அவனின் ஊர்காரர். அவர் அங்கிருப்பதே அவனுக்கு ஞாபகமில்லை.

"ஒரு சின்ன பிரச்சனைண்ணா கார் கண்ணாடியை கோபத்துல உடைச்சிட்டா, அது பிரச்சனை ஆகிடுச்சு"

"அதுக்கு எதுக்கு பொண்ணை கூட்டிட்டு வந்தீங்க"

"இவ உடைச்சதை ஹைவே பேட்ரல் பார்த்துட்டாங்க"

"சரி, நீங்க உள்ள போங்க, நான் சமயம் பார்த்து ஐயா கிட்ட சொல்றேன் நம்ம ஆளுங்கன்னு" என்று அவர் சொல்லும் போதே, வேகமாய் ஆத்மனின் கார் வந்து நின்றது.

அதிலிருந்து ஆத்மன் இறங்க, அதுவரையிலும் கூட அசால்டாய் நின்ற ராஜராஜனிற்கு பயம் வந்தது. ஆம்! பயம் தான் வந்தது. அவனோ இல்லை வீட்டினில் யாரோ வேறு ஆண்மக்கள் இருந்திருந்தால் அவனுக்கு பயமில்லை. ஆனால் அங்கை இருக்கவும் பயம், அவளை எதிலும் சிக்க வைப்பானோ என, எதுவாகினும் பார்த்துக் கொள்ளலாம் என்பது வேறு.

ஆனால் பெண்பிள்ளை எதிலும் பேர் அடிபடுவதில்

அவனுக்கு ஏற்பு இல்லை. அப்படி தான் அவன் வளர்க்கப் பட்டான்.

ஆனால் அங்கையற்கண்ணி அப்படி அல்லவே, அவள் வேறு மாதிரி! பெண்பிள்ளை என்ற வார்த்தையை கொண்டு அடக்கப் பட்டால், அடுத்த நிமிடம் கிளம்பிவிடுவாள், "ஏன் பசங்க தான் செய்யணுமா? நாங்க செய்யக் கூடாதா? ஏன் செய்யக் கூடாது?" என்பதாக. அவளுக்கும் தெரியும் சில விஷயங்கள் தவிர்த்தல் நலம் என்று. அதை செய்ய மாட்டாள் தான், ஆனாலும் விட்டுக் கொடுக்காமல் வேண்டுமென்றே பேசி நிற்பாள்.

"தம்பி ஆத்மன் ஐயா வேற வந்திருக்காரு" என அவனின் ஊர் காவலர் சொல்ல,

"அவர் பையன் வந்த கார் கண்ணாடியை தான் உடைச்சா"

"ப்ச் பிரச்சனை பெருசாகுமே" என்று சொல்ல,

"ஆத்மன்" என்ற பேர் போதுமாக இருந்தது, அங்கையின் கோபத்தை கிளப்ப,

ராஜராஜனிற்கு ஏற்கனவே மனதில் பயம், அது அவளுக்கு

தெரிந்தால் தானே, "இது என்னோட பிரச்சனை, நான் பார்க்கறேன், நீங்க பேசக் கூடாது ராஜன்" என்று கண்டிப்பாய் சொல்ல,

"அட நம்மளே முழிச்சிட்டு நிக்கறோம் என்ன செய்யன்னு? இவ வேற... பெரியப்பா கிட்ட சொல்வோமா? வேண்டாமா?" என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அந்த காவலருக்கு அப்படி எந்த யோசனையும் இல்லை போல, தனியாய் போனவர் சுவாமிநாதனுக்கு அழைத்து சொல்லி விட்டார்.

"அட, சின்ன பையன் மாதிரி உங்கப்பாவை கூட்டிட்டு வந்துட்டியா? இதுவும் நல்லதுக்கு தான். எனக்கு இவரை பார்க்கணும்ன்னு ரொம்ப நாளா ஒரு எண்ணம். இப்படின்னு தெரிஞ்சிருஞ்சா தேடி வந்து உன் கார் கதவை உடைச்சு உங்கப்பாவை முன்னமே பார்த்திருப்பேனே" என்றாள் தீவிரமாக.

ஆத்மன் அதை கேட்டுக் கொண்டிருந்தாலும் எதுவும் பேசவில்லை அவளை பார்வையால் ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்த ஆராய்ச்சி ராஜராஜனிற்கு கொஞ்சமும் பிடித்தமில்லை.

ஆத்மன் அவளை ராஜலக்ஷ்மியின் மகளாய் பார்த்தார்,

ராஜலக்ஷ்மியின் முகம் சத்தியமாய் அவருக்கு நினைவில் இல்லை. இப்போது அங்கையை பார்க்கவும் அவளிடம் ராஜலக்ஷ்மியை தேடினார், இது எனக்கு பெண் பார்த்த முகமா என்பது போல.

ஐயகோ, அப்படி எங்கேயும் இல்லை, அவளின் உயரம், தோற்றம், நிமிர்வு, ம்கூம், அவளின் அம்மா இவ்வளவு அழகாக இருந்ததாக அவருக்கு ஞாபகமில்லை.

அதுவும் அவர்களது சேலை கட்டு, இவளோ ஒரு ஜீன்ஸ் பேன்ட், அதன் மேல் ஒரு ஷார்ட் டாப்ஸ், உயரத் தூக்கி போனி டெயில் போட்டிருந்த, அடர்த்தியான குட்டை முடி, அவள் பேச அதுவும் அவளோடு அசைந்தது.

“ராஜலக்ஷ்மியை திருமணம் செய்திருந்தால் எனக்கு இப்படி ஒரு பெண் பிறந்திருப்பாலோ” என்று தான் அந்த நொடி தோன்றியது. வாழ்க்கையின் முதல் தோல்வி அப்படியும் சொல்லலாம் அது மட்டுமே தோல்வி என்றும் சொல்லலாம் அவருக்கு. அதனால் மனதில் எங்கோ ஒரு இடத்தினில் இன்று வரையில் ராஜலக்ஷ்மி அவரின் மனதில் இருக்கிறாள் என்பது திண்ணம். அது பிடித்தத்தினாலா இல்லை தோல்வியினாலா, அவருக்கே புரியாத ரகசியம்.

இதோ அங்கையை பார்த்ததும் அவருக்கு தோன்றியது,

“எனக்கும் இப்படி ஒரு பெண் இருந்திருப்பாளா?” என்று. இது தோன்ற வேண்டிய அவசியம் என்ன?

கைகட்டி தோரணையாய் அவள் பார்த்து நிற்க, ராஜராஜன் முகம் இறுக அவளின் பின்னே நின்றிருந்தான்.

அவளை பார்க்கும் முன் அப்படி ஒரு கோபம் ஆத்மனிடம் இருந்தது. இப்போது இல்லை ஒரு சுவாரசியம் பிறக்க, “என்னை எதுக்கு நீ பார்க்கணும்?” என்றார்.

“இங்க இப்போ அதை பேச முடியாது” என்று அவள் பதிலளித்த விதத்தில், “இப்போது நீ எதற்கு வந்தாயோ, அதை மட்டும் பேசு” என்ற த்வனி இருந்தது.

மெச்சுதலாய் ஒரு பார்வை பார்த்தவர் இன்ஸ்பெக்டரை நோக்கி நடக்க, “வாங்க ஐயா உட்காருங்க” என்று அவரை பார்த்ததும் மரியாதையாய் சொல்லி,

“என்ன பிரச்சனை?” என்று ஆத்மனை கேட்டு கொண்டே அங்கையை பார்த்தான் அந்த இன்ஸ்பெக்டர்.

ஆத்மன் மகனை திரும்பி பார்க்க, திலகன் வந்தவன் “எங்க கார் கண்ணாடியை உடைச்சு, கதவுல எல்லாம் கல்லுல கிறுக்கி இருக்காங்க” என்று சொல்ல,

அதுவரை ராஜராஜனும் அங்கையும் நின்று தான் இருந்தனர்.

“என்ன கிறுக்கினேன்னு அதையும் சொல்லு” என்று அலட்சியமாய் அங்கை சொல்ல, ராஜராஜனிற்கு பயம் வந்தது, இவள் ஏன் பிரச்சனை தேடுகிறாள் என்பது போல,

உண்மையில் அவள் என்ன கிறுக்கினால் என்று கூட அவனிற்கு தெரியாது.

“சொல்லமாட்டியா பரவாயில்லை, நான் சொல்றேன்” என்றவள் “போடா பொறுக்கின்னு கிறுக்கினேன்” என்று சொல்ல,

சில நொடி நிஷப்தம் அங்கே!

“என்னமா பேசற நீ” என்று இன்ஸ்பெக்டர் அதட்ட,

“ம்ம், தமிழ் பேசறேன்” என்றாள் இன்னும் அலட்சியமாக.

“என்ன திமிரா?”

“அது இருக்கு நிறைய, ஒரு கண்ணாடியை உடைச்சு இப்படி எழுதியிருக்கேன்னா இவங்க என்ன பண்ணினாங்கன்னு கேட்க மாட்டீங்களா? இது தான் உங்க இன்வெஸ்டிகேஷனா” என்றாள் அப்படி ஒரு நிமிர்வோடு,

ஆத்மன் மகனை உடனே திரும்பி ஒரு பார்வை பார்க்க,

“பா சத்தியமாய் தப்பா எதுவும் நடக்கலை, நான் உங்க பையன் பா” என்றான் அவசரமாக.

“என்ன நடந்துச்சு?” என்று ஆத்மன் கேட்க,

“இன்ஸ்பெக்டர் என்னை நிக்க வெச்சு கேள்வி கேட்கலாம், ஏன்னா இது அவங்க இடம். ஆனா அவங்களும் பொது மக்களுக்கு மரியாதை குடுக்கணும். இவர் ஏனோ குடுக்கலை. ஆனா உங்களுக்கு நான் நின்னுக்கிட்டு பதில் சொல்லணும்னு அவசியமில்லை”

“அம்மாடி இவ ஏன் இவ்வளவு பேசறா?” என்று மனதிற்குள் நொந்தே போனான்.

ஆத்மன் இன்ஸ்பெக்டரை ஒரு பார்வை பார்க்க, அங்கே ஒரு

சேர் வர, அங்கை அமரவில்லை.

“உட்காருங்க” என்று ராஜராஜனை அமர சொல்லவும், அதுவரை வேடிக்கை பார்த்தவன், “நீ உட்கார்” என்றான்.

“நான் வேற நீங்க வேற கிடையாது உட்காருங்க” என்று அங்கை சொல்ல, அங்கே தான் பொம்மை ஆனது போல தான் ராஜராஜன் உணர்ந்தான்.

ஆனாலும் அமைதியாய் அமர்ந்தான்.

அவனின் பின் நின்றவள், “உங்க பையன் எங்கம்மாவை தப்பா பேசினாங்க, அதான் கண்ணாடியை உடைச்சேன், போடா பொறுக்கின்னு எழுதினேன்” என்று அவள் சொல்ல,

அங்கே யாருக்கும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. திலகனை ஆத்மன் ஒரு பார்வை பார்க்க, அவன் தலை குனிந்து கொண்டான்.

ராஜராஜனின் முகம் இறுகியது.

அப்போது பார்த்து சுவாமிநாதன் வர, ஆத்மனின் வேறு பரிமாணத்திற்கு மாறினார்.

அதுவரை அமைதியாய் விரோதம் பாராட்டாமல் இருந்தவர், “தப்பா சொல்றான்னு ஏன் சொல்லணும்? நடந்ததை சொல்லியிருப்பான்!” என்று ஆத்மன் சொல்ல,

ராஜராஜன் எழுந்து “உட்காருங்க பெரியப்பா” என்று அவருக்கு இடம் விட, ஆத்மனின் எதிரில் உட்கார விரும்பாமல் “என்னடா?” என்றார் அங்கையை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே,

“என்னோட அம்மாவை இவர் பையன் தப்பா பேசினான், அதனால கார் கண்ணாடியை உடைச்சிட்டேன், போடா பொறுக்கின்னு கிறுக்கிட்டேன்” என்று அசால்டாய் சுவாமிநாதனை பார்த்து சொன்னாள்.

“அம்மாடி இவ ஏன் இப்படி பேசறா?” என்று மீண்டும் நொந்து கொள்ளும் சூழல். மெதுவாக அவளிடம் “நடந்தது ஒரு விரும்பத்தகாத விஷயம், அதை திரும்பத் திரும்ப சொல்லாதே” என்றதும் அப்படி ஒரு கோபம் வந்து விட்டது அங்கைக்கு.

ராஜராஜன் சொல்ல வருவது அவளுக்கு புரியவில்லை.

அம்மாவை தப்பா பேசினான்னு திரும்பத் திரும்ப சொல்லாதே என்பதை அவன் சொல்ல, அங்கைக்கு அவன் நடந்ததை பேசாதே என்பது போலத் தோன்ற, “அப்போ என் அம்மா இவங்க எல்லோருக்கும் ஒன்னுமில்லையா. இவனோட பெரியப்பா வந்தா உடனே மாத்தி பேசுவானா?” என்ற எண்ணம் தான்.

“சர், டி எஸ் பி வர்றார்” என்று வேகமாய் ஒரு காவலர் வந்து சொல்ல,

வேகமாய் ஒரு நடுத்தர வயது இளைஞன் வந்தான். அங்கிருந்தவர் அனைவரும் எழுந்து நிற்க, ஆத்மனும் எழுந்து நிற்க வேண்டி வந்தது. இன்ஸ்பெக்டர் விறைப்பாய் ஒரு சல்யுட் வைக்க, அதனை தலையசைத்து ஏற்றுக் கொண்டான் அவன்.

“உட்காருங்க சர்” என்று அந்த இடமே பரபரப்பாக, அவன் பார்வையை அங்கையிடம் திருப்பினான்.

அவனை பார்த்ததும் ஒரு மென்னகையை சிந்திய அங்கை, அவன் அருகே வந்து நிற்கவும், “ஐ அம் அங்கையற்கண்ணி ராஜராஜன்” என்று சொல்லி கை நீட்ட அதனை பற்றி குலுக்கியவன் “அர்விந்த்” என்றான் பதிலிற்கு.

“அண்ணா நீங்க வருவீங்கன்னு மேசேஜ் பண்ணினான். சாரி, டிஸ்டர்ப் பண்ணிட்டான் போல, ஜஸ்ட் ஃபோன் பண்ணியிருக்கலாமே” என்று அவள் சொல்ல,

“உங்க அண்ணாக்காக மட்டும்னா ஃபோன் பண்ணியிருப்பேன். நான் வந்தது உங்க அப்பாக்காக. உங்கப்பா மாதிரி ஆளுங்க பார்டர்ல நின்னு நாட்டுக்காக அவ்வளவு செய்யறாங்க, இதுல அவங்க பொண்ணை நாங்க பார்த்துக்க மாட்டோமா. ப்ரவுட் டு மீட் அ மேஜர்ஸ் டாட்டர்” என்றான் மரியாதையாக.

கூடவே “நான் அவரோட ரொம்ப பெரிய ஃபேன்” என்றான்.

“உங்களுக்கு அப்பாவை தெரியுமா?” என்றவளின் முகத்தினில் அப்படி ஒரு பெருமை, அப்படி ஒரு மகிழ்ச்சி.

பின்பு உடனே முகம் மாறியவள், “இது ராஜராஜன் மை ஹஸ்பன்ட்” என்று அறிமுகம் செய்ய, இயல்பாகவே கை குலுக்க எல்லாம் அவனிற்கு வரவில்லை “வணக்கம்” என்று கை கூப்பி வணங்க, அர்விந்த் அதையே திரும்ப செய்தான்.

அவளின் மலர்ச்சி பின் முக மாற்றம் எதுவும் ராஜராஜனின் பார்வைக்கு தப்பவில்லை. “இது எங்க பெரிய மாமா” என்றவள் மறந்து ராஜராஜனின் பெரியப்பா என்று அறிமுகப் படுத்தவில்லை. “என்னோட அம்மாவோட அண்ணா” என்று அறிமுகம் செய்தவள் ஆத்மனை ஒரு பார்வை பார்க்க

அதுவே சொல்லாமல் சொன்னது நீயா நானா பார்த்துவிடலாம் என்று.

# அத்தியாயம் 6

ஆத்மன் எந்த ஒரு பிரதிபலிப்பும் காண்பிக்கவில்லை. “போடா பொறுக்கி” என்ற வார்த்தை அவரின் லகுதன்மையை காணாமல் போக செய்திருந்தது.

“என்ன பிரச்சனை?” என்று அர்விந்த் அங்கையை கேட்கவில்லை, திலகனை பார்த்து தான் கேட்டான்.

“இவங்க வண்டி வழில நின்னுட்டு இருந்தது. ஸ்டார்ட் ஆகலை போல, அவங்களுக்கு ஹெல்ப் பண்ண நிறுத்தினோம்”

“யார்ன்னு கேட்டோம், அவங்க இருக்கிற ஊர் சொன்னாங்க. அந்த ஊர் எங்களுக்கு ஆகாது. அப்போ யார் வீடுன்னு கேட்டோம், அவங்க சொன்னாங்க”

“அப்போ யாருன்னு கேட்டோம், அப்போ சொன்னங்க”

“அவங்க பொண்ணான்னு கேட்டோம், பிரச்சனையாகிடிச்சு” என்று சொல்ல

இப்படி நிறுத்தி நிறுத்தி திலகன் பேச அர்விந்திற்கு புரியவில்லை!

“என்ன அவங்க? யாரு பொண்ணு? எனக்கு புரியலை?” என்றான். அங்கை தலையிடவே இல்லை. பார்த்து தான் நின்றாள்.

“அவங்க அம்மா அப்பா பேர் சொன்னாங்க, ஓடிப்போனவ பொண்ணா சொன்னோம்” என்று சொல்லிவிட்டான்.

அங்கையின் முகம் அவ்வளவு கடுமையாய் மாறியது. “அவன் பொறுக்கி மாதிரி பேசறான். அதனால அவன் கண்ணாடியை உடைச்சேன். போடா பொறுக்கின்னு எழுதினேன், என்ன தமிழ் தெரியாது அதனால அதை இங்கிலீஷ்ல எழுதினேன்”

“திரும்ப அந்த வார்த்தையை சொன்னான்னா அவனையே அடிப்பேன்” என்று நிறுத்தி நிதானமாய் சொல்ல,

“ரொம்ப பேசற பொண்ணு நீ” என்றார் ஆத்மன். அவரின் முகத்தினில் அப்படி ஒரு கோபம். “என் மகனை நீ அடிப்பாயா இதை சொல்வதற்கு என்ன தைரியம் உனக்கு” என்று பார்வை

கேட்டதோ?

“எங்கம்மாவை யார் பேசினாலும் அப்படி தான் நான் பேசுவேன்”

“அர்விந்த் என்ன?” என்று புரியாமல் பார்க்க,

“என் அம்மா, அப்பா, காதல் கல்யாணம். காதல் சொன்னப்போ வீட்ல ஒத்துக்கலை. பொண்ணு கேட்ட எங்கப்பாவை அடிச்சு விரட்டிட்டாங்க. அப்போ தான் எங்கப்பா மிலிடரி சேர்ந்தார்”

“எங்கம்மாவோட சம்மதம் இல்லாம இவரோட கல்யாணம் நிச்சயம் பண்ணினாங்க” என்று ஆத்மனை காண்பித்தவள், “கல்யாணம் அப்போ எங்கம்மா மனசை மாத்திக்க முடியாம சூசைட் அட்டம்ப்ட் பண்ணிடாங்க. அப்போ தான் எங்கப்பா மூணு வருஷம் கழிச்சு வந்திருக்கார்”

“எங்கம்மாவை சாக பார்த்ததும் கூட்டிட்டு போயிட்டார், இது தான் நடந்தது. எங்கப்பா தான் கூட்டிட்டி போனார். எங்கம்மா

ஒன்னும் ஓடிப் போகலை. சாக பார்த்ததும் அந்த சமயம் ஒன்னும் ஓடலை. இல்லை சொல்லி கூட்டிட்டு போற தைரியம் இல்லாதவங்க கிடையாது”

“பாகிஸ்தான் பார்டர்ல கூட எங்கப்பா திரும்பி ஓட மாட்டார்டா. எங்கப்பா ஒரு மேஜர் ஜெனரல், அதோட மரியாதை கூட இவங்களுக்கு தெரியுமா தெரியலை. இவங்க எப்போவோ நடந்ததுக்கு இன்னும் ஓடி போனவ சொல்வாங்களா? காதலிக்கறது அவ்வளவு தப்பா என்ன?”

“அதுக்கு இத்தனை வருஷம் கழிச்சு இந்த பெரிய மனுஷன் ஒரு கல்யாணம் பண்ணி, மூணு குழந்தை பெத்த பிறகும், எங்கம்மாவை இவங்க பேசுவாங்களா? இனி என்னோட அம்மாவை இவங்க பேசக் கூடாது. பேசினா விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லை” என்று ஆவேசமாய் பேச,

“என்ன பண்ணுவ பொண்ணு?” என்றார் அலட்சியமாய் ஆத்மன்.

“என்ன வேணா பண்ணுவேன்? எங்கப்பா எங்கண்ணா எல்லாம் நீதி நேர்மை நியாயம், இதுல கொஞ்சமும் பிசக

மாட்டாங்க. இன்னும் எங்க தாத்தா வீடு பத்தி எனக்கு ஒன்னுமே தெரியலை. ஆனா அவங்களுக்கு நீங்க செஞ்சதுக்கு பொறுத்து தான் போயிட்டாங்க. அவங்களும் நல்லவங்க தான் போல"

"ஆனா நான் அப்படி கிடையாது. எதிராளி எப்படியோ அப்படி தான் நான். நீங்க நல்லவங்கன்னா நாங்க ரொம்ப நல்லவங்க, நீங்க கெட்டவங்கன்னா நான் ரொம்ப கெட்டவ தான்"

"ம்ம், செம டைலாக்" என்றார் ஆத்மன் இன்னும் அலட்சியமாய் நீயெல்லாம் ஒரு ஆளா என்பது போல.

"பொண்ணு தானே என்ன செய்ய முடியும் இவளாலன்னு நினைக்க வேண்டாம், உங்க வீட்லயும் பொண்ணுங்க இருக்காங்கன்னு நினைக்கறேன், இது நாள் வரை எப்படியோ எங்கம்மாவை பத்தி ஒரு வார்த்தை இந்த மாதிரி வந்தது, உங்க வீட்டு பொண்ணுங்களை பத்தி உங்க மனைவியை பத்தி போஸ்டர் அடிச்சு ஒட்டுவேன்" என்று பேச,

"என்ன?" என்று ஆத்மன் ஆவேசமாய் முன் வர,

அதே நொடி "தப்பு அங்கை" என்று ராஜராஜன் அவளின்

முன் வந்தான் ஆத்மனை ஒரு பார்வை பார்த்தபடி.

“இவங்க வீடு சொன்னா வலிக்குது. அப்போ எங்கம்மாவை சொல்லலாமா” என்று ராஜராஜனை பார்த்து கேட்கும் போது கண்களில் நீர் வந்து விட்டது.

அதுவரை கையை பிடித்து கூட இராத ராஜராஜன் அவளின் கையை பிடித்து “அவங்க தப்பு பண்ணினா நாமளும் பண்ணனும் இருக்கா என்ன?” என்று ஆறுதலாய் சொல்ல,

இதுவரை ஆத்மனை பேசிக் கொண்டிருந்தவள் “ஓஹ், நீங்கல்லாம் இவ்வளவு நல்லவங்களா இருக்குறதுனால தான் அவங்களுக்கு தைரியம் ஆகிடுச்சு. அப்படி என்ன பொறுத்துப் போகணும்னு”

சுவாமிநாதன் புறம் திரும்பியவள் “உங்க கூட பிறந்த தங்கை தானே, யாராவது ஒரு பொண்ணை பேசினாலே நானெல்லாம் முன்ன போய் நிற்பேன். எப்படி பேசலாம்னு கேட்பேன்? அந்த மாதிரி ஒரு உணர்வெல்லாம் உங்களுக்கு வராதா?” என்று அத்தனை பேர் முன்னும் கேட்டு விட,

கேட்கும் போதே கண்களில் நீரும் வந்து விட, அப்போதும் அது அழுகை கிடையாது, ஒரு அடக்கப் பட்ட ஆவேசம் தான்.

“சர் கிட்ட சொல்லிட்டு கிளம்பு, எதுன்னாலும் பார்த்துக்கலாம்” என்றான் ராஜராஜன்.

அங்கை தன்னை சமன் செய்யவும், “சொல்லிட்டு கிளம்பு” என்றான் மீண்டும். என்னவோ இவ்வளவு பேச்சுக்கள் தேவையில்லை என்பது அவனின் எண்ணம்.

“தேங்க்ஸ் ஃபார் கமிங் அர்விந்த் சர்” என்றாள் மரியாதை நிமித்தம்.

“நீங்க போங்க” என்று அவளிடம் சொன்னவன் “கூட்டிட்டு போங்க” என்று ராஜராஜனிடமும் சொல்ல,

“நான் இருக்கேன் நீ கூட்டிட்டு போ” என்றார் சுவாமிநாதனும் ராஜராஜனிடம் முகம் இருகியவராய். அவர்கள் சென்றதுமே அங்கே பெரிய களேபாரம் ஆகியது.

“என்னடா வீட்டுக்குள்ள புகுந்து இத்தனை வருஷமா இருந்துட்டு, பொண்ணை விட்டு பேச வைக்கறீங்களா. அதுவும்

எங்க வீட்டு பொண்ணை போஸ்டர் அடிச்சு ஒட்டுவாளா. என்ன பண்றேன்னு பாருங்கடா" என்று ஆத்மன் ஆக்ரோஷமாய் பேச

"ஷ்" என்று நடுவில் வந்த அர்விந்த், "அவங்க வீட்டு பொண்ணுங்களை நீங்க பேசலைன்னா ஏன் பிரச்சனை வரப் போகுது" என்றான்.

"என்ன டி எஸ் பீ உங்களுக்கு தெரிஞ்சவங்கன்னு சப்போர்ட் பண்றீங்களா?" என

"தெரிஞ்சவங்க, சப்போர்ட் பண்றாங்கன்னு வந்துடக் கூடாதுன்னு தான் பொறுமையா இருக்கேன், பொண்ணுங்களை மனரீதியா உளைச்சல் கொடுக்கறது கூட பெரிய குற்றம் தான். அதை சொல்லி உங்க பையனை தூக்கி உள்ள வைக்க எனக்கு அஞ்சு நிமிஷம் கூட ஆகாது ஆனா அப்படி செய்யலை சுமுகமா முடிக்க தான் பார்க்கறோம்"

"எனக்கு உங்களை விட பெரிய ஆளுங்களை தெரியும்"

"யாரை வேணா தெரிஞ்சு வெச்சிக்கங்க, இப்படி பேசினா அப்புறம் உங்க பையனை தூக்கி உள்ள வைக்காம விட

மாட்டேன். பார்க்கறீங்களா?” என்று அர்விந்த் ஆவேசமாக பேச.

ஆத்மன் சற்று தணிந்தவர், “பார்த்து இருந்துக்க சொல்லுங்க, இப்போ தான் ஊர் பிரச்சனை இல்லாம இருக்கு, திரும்ப பிரச்சனை ஆக்கணும்னா நாங்க தயார்” என்றார் அவர்.

பின் அர்விந்த் பொறுமையாய் ஆத்மனிடம் “இனி இப்படி நடக்க வேண்டாம்” என்று சமரசம் பேசி அனுப்பி வைத்தவன், மனோ கணபதிக்கு அழைத்து சொன்னான்.

“என்ன பண்ணட்டும்? அவ அங்க இருந்தா இப்படி தான் ஏதாவது பண்ணுவா? இவ்வளவு நாள் அமைதியா இருந்ததே பெருசு. படிச்சிட்டு இருந்தா, அப்போ அப்போ இங்க வந்து போயிட்டு இருந்தா. இதுவரை ஆத்மனை அவங்க பையனை பார்க்க அவளுக்கு சந்தர்ப்பம் அமையலை. எனக்கு அவளை அங்க தனியா விட இஷ்டமில்லை. அவளை அழைச்சிக்கட்டுமா?” என்று அர்விந்திடமே யோசனை கேட்டான்.

இருவரும் நண்பர்கள். பயிற்சி காலத்தில் அவன் ஐ ஏ எஸ், இவன் ஐ பி எஸ், இருந்தாலும் நல்ல தோழமை உண்டு. “எனக்கு

சொல்ல தெரியலை மனோ, இப்போதைக்கு இந்த டிஸ்டிரிக்ட் என் கண்ட்ரோல் தானே இருக்கு பிரச்சனையாகாம பார்த்துக்கலாம்” என்று தைரியம் சொன்னான்.

மனோ தெளிவாய் சொன்னான் “அவனோட சொந்த பிரச்சனையை ஊர் பிரச்சனையாக்கி, இத்தனை வருஷம் வெச்சிருக்கான். என் மாமனுங்களும் மாக்கானுங்க மாதிரி விட்டு வெச்சிருக்கானுங்க. என்ன சொல்ல” என்று அலுத்துக் கொண்டான்.

“எங்க மாப்பிள்ளை எப்படி?” என்று அரவிந்திடம் கேட்க

“எனக்கு ஒன்னும் சொல்ல தெரியலை மனோ” என்றான் அர்விந்த் மீண்டும்.

“அடேய், இதையே நீ சொல்வியா”

“ஒன்னும் பயந்தவன் மாதிரி தெரியலை, ஆனா நம்ம அங்கை மாதிரி ஆவேசமில்லை. அவ ரொம்ப பேசின போது அடக்கி கூட்டிட்டு போயிட்டான்”

“அவன் பேச்சு கேட்டாளா?”

“ம்ம் கேட்டா”

“என்னவோ டா, அவ மனசுல என்ன இருக்குன்னு எனக்கு தெரியவேயில்லை” என்றான் பொறுப்பான அண்ணனாய்.

“இப்போதைக்கு நான் பார்த்துக்கறேன், ஆனா பிரச்சனை முடியும்னு தோணலை” என்று அர்விந்த் சொல்லிவிட,

மனோவிற்கு கவலை வந்து அமர்ந்து கொண்டது. அப்பாவிற்கு அழைத்து விட்டான். இவன் இப்போது தான் சமீபமாய் திருச்சி மாவட்ட கலக்டராய் பணியில் அமர்ந்தான்.

அதற்கு முன் டெல்லியில் இருந்தான் வேறு பதவியில். முன்பே மாற்றிக் கொண்டு வந்திருப்பான். அங்கே அங்கை படித்துக் கொண்டிருந்தாள். அவள் வர போக இருக்க வேண்டுமே என்று அங்கேயே இருந்தான். அவள் படிப்பை முடிக்கவுமே இங்கே மாற்றல் வரும் படி செய்து வந்து விட்டான்.

என்ன அவள் இருப்பது தஞ்சாவூர் மாவட்டம் திருச்சிக்கு பக்கம் தான். அங்கே தான் கேட்டான். அங்கே சமீபமாய் தான் ஒருவருக்கு மாற்றல் கொடுத்திருக்க இவனுக்கு முடியவில்லை. சரி என்று பக்கம் வந்து விட்டான்.

அப்பா டெஹ்ராடூனில் இருக்க, அவருக்கு அழைத்தவன் விஷயம் சொல்லவும், “அவ புருஷன் இருக்கான் பார்த்துக்குவான். இதுல நாம செய்ய ஒண்ணுமில்லை, நான் அங்க இருந்தா வேற, இங்க இருந்து ஒன்னும் செய்ய வேண்டாம்” என்று விட்டார்.

கண்ணுக்குள் பொத்தி வைத்த வளர்த்த தங்கை, மனமே இல்லை. “நான் போய் பார்த்துட்டு வரட்டுமா?” என்றவனிடம்,

“வேண்டாம், அந்த வீட்ல இருக்குறவனும் ஆம்பிள்ளை தாண்டா பார்த்துக்குவான்” என

“பா ஏன் இப்படி பண்றீங்க, அவளை ஏன் தனியா விட்டீங்க?” என்று ஆதங்கமாய் கேட்க,

“எங்கடா தனியா விட்டேன். அவ பாட்டியோட தானே இருக்கா, அவங்க தாண்டா எனக்கு சாப்பாடு போட்டு என்னை பார்த்துக்கிட்டாங்க” என்று விட்டார்.

“அப்போ நீங்க இந்த கல்யாணம் ஒத்துக்கறீங்களா?” என்றான் அதிர்ச்சியாக. அவன் நினைத்திருந்தான் இது தாத்தாவின் ஆசை என்று.

அதற்கு அவர் பதிலே பேசவில்லை. அவனுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை.

“அப்பா, அவ ஒரு இடத்துல இருக்கா, அம்மா இங்க என்கூட இருக்காங்க, நீங்க தனியா இருக்கீங்க, என்னப்பா நடக்குது? ஏன்பா இப்படி? அம்மாவையாவது கூட அழைசிக்கங்க” என்றான்.

அதற்கும் பதில் பேசவில்லை.

அவனுக்கு என்ன தெரியும்? ஏன் யாருக்கு மட்டும் தெரியும்? எல்லோரும் திருமணம் நடக்க காரணம் ராயர் என்று நினைத்துக் கொண்டிருக்க, ஏன் நாச்சியே அப்படி தான் நினைத்திருக்க, இல்லை, இல்லவே இல்லை. அது நடக்க காரணம் அன்பழகன்.

இது அங்கையற்கண்ணிக்கு மட்டுமே தெரிந்த ரகசியம், இல்லையென்றால் அந்த சின்ன கிராமத்தினில் யாரால் அவளை நிறுத்தி வைத்திருக்கக்கூடும்.

யாருக்கும் எதுவும் தெரியாத போது ராஜராஜனுக்கு மட்டும் என்ன தெரியும். அவரின் கட்டாயத்தின் பேரில் தான் அங்கை அங்கே இருக்கிறாள். இந்த திருமணம் எல்லாம் ஒரு விஷயமல்ல, அவளுக்கு இன்னும் அப்படி ஒன்றும் ஒரு அங்கீகாரம் இல்லை இந்த திருமண பந்தத்தில்.

இன்று அங்கையர்கண்ணி ராஜராஜன் என்று சொன்னதற்கு காரணம் கூட அது அவளுக்கு அவளின் அப்பா சொன்னது. இனி நீ அங்கையற்கண்ணி அன்பழகன் கிடையாது, அங்கையற்கண்ணி ராஜராஜன் என்று.

இது எதுவும் தெரியாதவன், ஊரை நோக்கி வண்டியை செலுத்த, அவனின் பின்னே அங்கையர்கண்ணி இருபுறமும் கால்களை போட்டு அமர்ந்திருந்தாள். நன்கு இருட்டி விட்டதால் ராஜராஜனின் வேகத்திற்கு இருட்டை கிழித்துக் கொண்டு தான் அந்த டூ வீலர் சீறி பாய்ந்தது.

# அத்தியாயம் 7

பைபாஸில் அவர்களின் பயணம் முழுவதும் மௌனம் தான். இன்றைய நாள் அவன் நினைத்தும் பார்க்கவில்லை இப்படியாகும் என்று. இன்னும் இந்த நாள் அவனுக்கு நிறைய வைத்திருக்கிறது என்றும் புரியவில்லை.

பைபாஸில் இருந்து அவனின் கிராமம் செல்லும் சாலை திரும்புமிடம் ஒரு பெரிய ஹோட்டல் இருக்க, “சாப்பிட்டு போகலாமா” என்றான்.

“வீட்டில் அவளுக்கு உணவு உண்ண எதுவும் இருக்கிறதா தெரியவில்லை. அவள் தனியாய் இருப்பாளா அதுவும் தெரியவில்லை. அப்படியே அவள் இருக்கிறேன் என்று சொன்னாலும் தனியாக விடுவதில் அவனுக்கு மனதில்லை. வீட்டிற்கு அழைக்க முடியாது பெரியப்பா விரும்ப மாட்டார், அப்போது நான் அங்கே போய் இருக்க வேண்டுமா? வீட்டில் என்றால் நிறைய பேர், அங்கே செல்வது என்றால் நான் மட்டுமே செல்ல வேண்டும்”

“அம்மாவும் இல்லை, அங்கே பாட்டியுடன் மருத்துவமையில்,

முதலில் இவள் அனுமதிப்பாளா தெரியவில்லை”

இப்படி யோசனைகள் ஓடி அது நிற்க, அது வரையிலும் அங்கையிடம் இருந்து பதில் ஒன்றும் வராமல் போக, ஆக்டிவாவை நிறுத்தினான்.

ஒன்றும் பேசாமல் இறங்கினாள். மனதில் அப்படி ஒரு சோர்வு.

“உள்ள போகலாமா?” என்று கேட்க,

“ம்ம்” என்ற தலையசைப்பு,

உள்ளே சென்றவன் அவனுக்கு வேண்டியதை சொல்லி அவளுக்கு சொல்லச் சொல்ல, “பசிக்கலை ஜூஸ் மட்டும் போதும்” என்றாள்.

“நான் உனக்காகத் தான் சாப்பிட வந்தேன்” என்று ராஜராஜன் சொல்லவும்,

“அப்போ சரி வாங்க, எனக்கு எதுவும் வேண்டாம்” என்று அவள் டக்கென்று எழ,

“அங்கை, நான் சொல்ல வர்றது நீ சாப்பிடணும்னு”

"வேண்டாம் ஜூஸ் போதும்" என்று ஸ்திரமான குரலில் சொல்ல, அவனுக்கு வந்த உணவை சில நிமிடங்களில் காலி செய்து அமர்ந்திருக்க, அவளுக்கு ஜூஸ் வந்து விட,

அதை அங்கை மிக மெதுவாக குடிக்க, "ஜூஸ் குடிக்க இவ்வளவு நேரமா" என்பது போல பார்த்தான்.

அவனின் பார்வையை உணர்ந்தவள், "எனக்கு இங்க தொண்டை எல்லாம் அடைக்குது, சாப்பிட முடியலை" என்று சொல்ல, அழுகையை அடக்கி இருப்பது புரிந்தது.

"எதுக்கு இவ்வளவு எமோஷன் ஆகணும்" என்றான்.

"உங்களுக்கு புரியாது! சரி, அதை விடுங்க, உங்கம்மாவை யாராவது திட்டினா, இல்லை, மரியாதை இல்லாம பேசினா, நீங்க சும்மா விடுவீங்களா?" என்றாள்.

"கொன்னுட மாட்டேன்" என்று மனதிற்குள் நினைத்தவன் அதை அவளிடம் சொல்லாமல், "நிச்சயமா விடமாட்டேன்" என்று மட்டும் சொன்னான்.

ராஜலக்ஷ்மி என்று ஒருத்தி அவனுக்கு யாருமே கிடையாது. அவன் பிறப்பதற்கு முன்பே வீட்டை விட்டு போனவர், அவனுக்கு தெரிந்ததெல்லாம் அவரால் தங்களுக்கு பிரச்சனை, வசதிகள் இல்லாமல் போய்விட்டன, இப்படி தான்.

அதனால் அவனுக்கு அப்படி ஒன்றும் கோபம் பொங்கிவிடவில்லை. அதற்காக அவன் முன் ராஜலக்ஷ்மியை பேசினால் கேட்டுக் கொண்டு வருவான் என்று சொல்லி விட முடியாது. ஆனால் அவன் முன் யாரும் பேசியது கிடையாது!

“அவன் சொல்றான் அவ்வளவு அலட்சியமா ஓஹ் நீ அந்த ஓடிப் போனவ பொண்ணான்னு” என்று சொல்லும் போது முகம் சிவந்து கண்களில் நீர் நிற்க,

“என்ன பண்ணனும் அவனை?”

“அவனை அடிச்சு துவம்சம் பண்ணனும்னு ஆசையா இருக்கு. ஆனா அது என்னோட நோக்கம் கிடையாது. அவன் எங்க அம்மாவை அப்படி பேசக் கூடாது”

“அது… அவங்க அப்படி தான் பேசுவாங்க”

“எப்படி பேசுவாங்க? பேசினா தொலைச்சு கட்டுவோம்னு தெரிஞ்சா, ஏன் பேசப் போறாங்க. இல்லை நான் சொன்ன மாதிரி தான் நடக்கும், அவங்க வீட்டு பொண்ணுங்களை போஸ்டர் அடிச்சு ஒட்டுவேன்” என்று அவளின் குரலில் அப்படி ஒரு தீவிரம்.

“அப்படி எதுவும் பண்ணிடாத” என்று உடனே சொன்னவன், “முதல்ல அடிச்சு துவைப்போம், பின்ன வேற யோசிக்கலாம்” என்று எழுந்தான்.

“நிஜம்மாவா சொல்றீங்க”

“நிஜம்மா சொல்றேன் வா” என்று குழந்தைக்கு சொல்வது போலச் சொல்லி அழைத்து சென்றான்.

திரும்ப ஒரு பைக் பயணம், ராஜராஜனின் மனம் முழுவதும் நடந்த நிகழ்வே!

“ஓடிப் போனவ பொண்ணா” என்று கேட்கும் முன் ராஜராஜனின் மனைவி என்று தெரியாமலா இருக்கும், அப்படி தெரிந்தும் கேட்கும் தைரியம் கொடுத்தது எது?

“மீசை வைத்து முறுக்கி, ஊருக்குள் பெரிய சண்டியர் கணக்காய் நான் சுற்ற நான் ஒன்றுமேயில்லை என்று காண்பித்து கொடுத்து விட்டனர்” என்பது தான் அவனின் எண்ணம்.

ஆம்! போலிஸ் ஸ்டேஷன் என்பது அவனுக்கு பயம் கொடுத்தது தானே!

ஆத்மன் அமர்ந்திருக்க தன்னை நிற்க வைத்து தான் பேசினர், தான் யார் என்று கூட தெரியவில்லை. மிகவும் கீழிறக்கமாய் அவமானமாய் உணர்ந்தான்.

“நான் யார் என்பது ஆத்மனுக்கும் திலகனுக்கும் காண்பித்தே ஆக வேண்டும்” என்ற வெறியே அந்த நிமிடம் கிளம்பியது…

எப்படி சந்தர்ப்பத்தை உருவாக்க என்று யோசிக்கும் போதே ஆக்டிவா அவள் இருக்கும் வீட்டை அடைந்திருக்க, இறங்கியவள், “இங்க இருந்து உங்க வீட்டுக்கு நீங்க எப்படி போவீங்க, வண்டி கொண்டு போயிட்டு காலையில கொண்டு வந்து விடறீங்களா?” என்றாள்.

“ஏன் நான் எதுக்குமே லாயக்கில்லைன்னு முடிவு

பண்ணிட்டியா?”

“நீங்க பேசறது புரியலை?”

“என்னோட தான் வர்ற, அப்புறம் எதுக்கு உங்க அண்ணாக்கு ஃபோன் பண்ணின”

“உங்களோட வந்தா என் அண்ணாக்கு ஃபோன் பண்ணக் கூடாதா, உண்மையா நீங்க வரும் முன்ன பண்ணினது தான் அது, ஆனா நீங்க இருந்தாலும் பண்ணியிருப்பேன்”

“வந்து என்ன பண்ணியிருப்பீங்க, உங்க மனைவியாகி ரெண்டு வருஷமாகுது. அப்போ இவனுங்களுக்கு இன்னும் தெரியாமையா இருக்கும், எங்கம்மா விடுங்க, உங்க மனைவின்னு தெரிஞ்சும் பேசாமையா விட்டான் அவன்” என்று ராஜராஜன் நினைத்ததையே அவளும் பேச, ராஜராஜனால் பதில் சொல்லவே முடியவில்லை

எல்லாம் வீட்டின் முன் இருக்கும் வெளி கேட் வாயிலில், இவர்களின் வாக்குவாதத்தை கேட்டு அங்கிருந்த ஒரு நாய்க்கு பொறுக்கவில்லை போல, அது குலைக்க ஆரம்பிக்க, எங்கிருந்தோ இரண்டு நாய்கள் வந்து அதனுடன் சண்டையிட

ஆரம்பிக்க...

அங்கை வீட்டு கேட்டினுள் ஓடி நின்று கொண்டவள், கேட்டையும் மூடிக் கொண்டு “கடிச்சிடப் போகுது, நீங்க வீட்டுக்கு கிளம்புங்க” என்றாள்.

“கேட்டை திற” என்று அவன் அதட்ட, அவள் கேட்டை திறக்கவும் வண்டியை உள்ளே விட்டான்.

வெளியே நாய்கள் சண்டையிட்டு கொண்டிருக்க, “எப்படி நடந்து போவீங்க, நாய் வேற சண்டை போடுது, வண்டியில போயிருக்கலாம்”

அவள் நினைத்தது அவன் வண்டியை விட்டு நடந்து போகப் போகிறான் என்று. கிஞ்சித்தும் அவன் இங்கே தங்கப் போகிறான் என்று நினைக்கவில்லை.

“சில நிமிஷத்துக்கு முன்னே என்ன சொன்ன? உங்க மனைவின்னு தெரிஞ்சும் எப்படி பேசினாங்கன்னு தானே, ஏன்னா நான் உன்னோட இல்லை, அப்போ நீ என் மனைவின்றது யாரோட ஞாபகத்துலையும் இல்லை. அதனால இனிமே இங்க தான் இருக்க போறேன்” என்று வண்டியை நிறுத்தி இறங்கினான்.

திடீரென்று சொல்லவும் “என்ன இங்கேயா? அதெல்லாம் முடியாது! நான் ஒத்துக்க மாட்டேன்!” என்றான் பிடிவாதமான குரலில்.

“உன்னோட பெர்மிஷன் கேட்கலை, நான் இங்க இருக்கக் கூடாதுன்னா உங்கப்பவையோ உங்க அண்ணனையோ வந்து கூட்டிட்டு போக சொல்லு. உன்னை தனியா விட முடியாது” என்று முடித்தவன்.

“வீட்டை திற, ரொம்ப நேரமாச்சு, எனக்கு போகணும்” என்று ஒற்றை விரலை காண்பிக்க,

“ஹேய், அதெல்லாம் வேண்டாம்” என்றாள் பதட்டமாக.

“என்ன வேண்டாம், இதெல்லாம் அடக்க முடியாதும்மா?” என்றவன் “சாவி” என்று கை நீட்டினான்.

பின் தான் வண்டியின் சாவியை பார்க்க அதில் வீட்டின் சாவி இருக்க, திறந்து உள்ளே சென்றான்.

இதை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை அங்கையற்கண்ணி.

“ஹேய், இதோ பாருங்க, கலாட்டா வேண்டாம், எனக்கு யாரோடையும் இருக்க முடியாது, பாட்டி அவங்க வேற, எனக்கு ரொம்ப அசௌகரியமா இருக்கும்”

“இப்போதான் ஸ்டேஷன்ல நான் வேற நீ வேற கிடையாது சொன்ன”

“அது சும்மா வெளி ஆளுங்க முன்ன உங்களுக்கு மரியாதை தேடி கொடுக்கறதுக்காக சொன்னது”

“அப்போ நான் மரியாதையில்லாதவன் சொல்ற”

“ஓஹ், கோஷ், பாப்ரே பாப், என்ன நீங்க அப்படியே பேச்சை மாத்துறீங்க” என்றாள் அதிர்ந்தவளாக.

“நீ சொன்னதை தான் சொன்னேன், நீ எங்கயோ ஃபீல் பண்ணியிருக்க, ஏதோ ஒரு இடத்துல, என்னால எதுவும் முடியாதுன்னு அதான் என்னை உட்கார வெச்சி மரியாதை தேடி கொடுக்க நினைச்சிருக்க” என்றான்.

“இல்லை, இல்லை, அப்படி இல்லை” என்று பதில் சொன்னவளுக்கு, தான் அப்படி தான் நினைத்தோமோ என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அதற்குள் அவன் குளியலறை நோக்கி விரைந்து விட்டான். அது ஒரு ஓட்டு வீடு, ஆனால் சில லட்சங்கள் செலவு செய்து, கேரளா பாணியில் ஓடு போட்டு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, பழமையும் புதுமையும் சேர்ந்து, அதை மாற்றி கொடுத்திருந்தாள் கரிஷ்மா. தன் கணவனின் தங்கை தங்குவதற்காக.

ஆம்! அதிகாரம் மட்டுமல்ல, பணமும் மனோவிற்கு தண்ணீர் பட்ட பாடு தான். அவனது காதல் திருமணம், மனைவி கரிஷ்மா அவளது வீட்டில் ஒற்றை வாரிசு, ஏகத்திற்கும் சொத்துக்கள், தாத்தா ஒரு மத்திய மந்திரி, அப்பா ஒரு கட்டுமான கம்பனி வைத்திருக்க, அவர்கள் செய்யும் சிறிய ப்ராஜக்டின் பட்ஜெட்டே பல கோடிகள். இப்படி பெரிய பின்னணி அவனிற்கு. அவனுக்கு பெண் கொடுக்கும் பொழுது வைத்த ஒரே கண்டிஷன் இன்னும் பத்து பதினைந்து வருடம் உன் வேலையை பார் பின் என் தொழிலை பொறுபெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே.

அவன் கண் ஜாடையில் காரியங்களை செய்வாள் கரிஷ்மா. அப்படி ஒரு புரிதல் இருவரிடமும். தங்கையின் சௌக்கியம்

கணவனுக்கு மிக முக்கியம் என்று கரிஷ்மாவிற்கு தெரியும் அவனுக்காக செய்தாள், அதையும் விட அங்கையர்கண்ணியை அவளுக்கும் பிடிக்கும் அவளிற்காகவும் செய்தாள்.

தான் கலக்டர், தன் தந்தை ஜெனரல் என்று பெருமையாய் சொல்பவன், மறந்தும் தன் மனைவியின் பின் புலத்தை உபயோகப் படுத்தமாட்டான். அது தேவையில்லாத பிரச்சனைகளை கொடுக்கும் என்று புரிந்தவன்.

மொத்தத்தில் புத்திசாலி! ஆனால் சறுக்கியது அப்பாவிடம், அங்கையின் வாழ்க்கையில் நடந்தவை நடப்பவைக்கு ராஜலக்ஷ்மி தான் காரணம் என்று நினைத்திருக்க, அன்பழகன் என்று தெரியாமலே போனது.

இப்போது தான் அப்பா ஏதோ ஒரு வகையில் இதில் இருக்கிறாரோ என்ற சந்தேகம்?

அவன் குளியலறை சென்றதுமே அப்பாவை அழைத்தவள், அவர் எடுப்பதற்காக காத்திருக்க, அவளின் கவனம் எல்லாம் அதில் இருந்தது. அப்பாவிடம் பேசி வருடத்திற்கு மேல் இருக்கும் அவர் மேலிருந்த கோபத்தில் பேசவேயில்லை. அவரின் அழைப்பை எடுக்கவில்லை, அவரின் மெசேஜ் பார்த்தாலும் அதற்கு பதில் கொடுக்க மாட்டாள். இப்போது அப்பாவின் நினைவில் இருக்க, ராஜராஜன் குளியலறையில் இருந்து வெளியே

வந்ததை கவனிக்கவில்லை.

அவர் எடுத்தும் "பா" என அப்படியே ஒரு தேம்பல் வெடித்தது.

"என்னடா அம்மு" என்றார் அவரும் பதறியவராக. மனோ சொன்னது போல எதுவும் பிரச்சனையாகி விட்டதோ ஆத்மனால். ராஜராஜனால், அவனின் வீட்டினரால் அவர்களை சமாளிக்க முடியவில்லையோ? என்று பயந்து விட்டார்.

"ஏன்பா இப்படி பண்ணுனீங்க? என்னால இங்க இருக்கவே முடியலைப்பா, இங்க அம்மாவை ஓடிப் போனவ பேசறாங்க. எனக்கு அது பிடிக்கவேயில்லை. நான் ஊருக்கு வந்துடட்டுமா? இங்க பாட்டிக்கு உடம்பு சரியில்லை, அவங்க ஹாஸ்பிடல்ல, நான் தனியா இருந்துக்குவேன் சொன்னா கேட்காம ராஜன் இங்க வந்துட்டாங்க"

"இங்க தான் இருப்பாங்களாம், எனக்கு பிடிக்கவேயில்லை. எனக்கு அவங்களோட எல்லாம் இருக்க முடியாது. எனக்கு யாரையும் பிடிக்கலை, எனக்கு இந்த கல்யாணம் ஒத்துக்க முடியாது. எனக்கு விடுதலை குடுங்கப்பா" என்று தேம்பி தேம்பி

அழுதாள்.

ராஜராஜன் அப்படியே நொறுங்கி போனவன், வந்த சுவடு தெரியாமல் குளியலறைக்குள் மீண்டும் நுழைந்து கொண்டான்.

அதிலும் அவன் நுழையும் போது கடைசியாக சொன்னது "நீங்க லவ் பண்ணினதுக்கு நான் விக்டிமா, உங்களை வளர்த்தவர்ன்னு நீங்க உங்க நன்றியை என்னை கல்யாணம் பண்ணி கொடுத்து காண்பிச்சிருக்க வேண்டாம் பா, என்னால கொஞ்சமும் முடியலை. இங்க எனக்கு பிடிக்கலை, என்னை ரெண்டு வருஷம் ஜெயில் மாதிரி இருக்க விட்டுட்டீங்க. என்னை கூப்பிட்டுக்குங்கப்பா, ப்ளீஸ் பா. இல்லைன்னா நான் அம்மா கிட்ட எல்லாம் சொல்லிடுவேன். நீங்க தான் என்னை இங்க இருக்க வெச்சிருக்கீங்க சொல்லிடுவேன்" என்று கெஞ்சல், மிரட்டல், அழுகை என்று கலவையாய் அவள் பேச,

அங்கே அன்பழகன் தவறு செய்து விட்டோமோ என்று நொறுங்கி போனார்.

"பா, எனக்கு இங்க பிடிக்கலைப்பா, என்னை கூப்பிட்டுக்குங்கப்பா" என்று அப்படி ஒரு அழுகை.

“அம்மு அழாத ப்ளீஸ், அம்மு உன்கிட்ட கேட்டுட்டு தானே அப்பா எல்லாம் செஞ்சேன், இப்போ இப்படி சொன்னா எப்படி டா?”

“எனக்கு சொல்ல தெரியலை, அப்போ என்னவோ ரொம்ப பெரிய இவ மாதிரி ஓகே சொல்லிட்டேன். இப்போ என்னால முடியலை”

“அப்பாக்கு டைம் குடு யோசிக்கலாம், இப்படி உடனே முடிவெடுக்குற விஷயம் கிடையாது”

“போங்க, போங்க, என்கிட்டே பேசாதீங்க” என்று ஃபோனிலேயே கத்தி ஃபோனை ஆஃப் செய்து, தூர தூக்கி போட்டு விட்டாள்.

அவளோடு தன் வாழ்க்கை சாத்தியமில்லை என்று புரிந்து மனோவிடமே அவளை அழைத்து செல்லுங்களேன் என்று சொன்னவன் தான் ராஜராஜன்.

ஆனால் இங்கே இவள் பிடிக்கவில்லை என்று அப்படி அழ, தாளவே முடியவில்லை. எதிலோ மோசமாய் தோற்று விட்ட

உணர்வு. தெரிந்த விஷயம் தான் என்றாலும். அந்த நொடி ஜீரணிக்கவே முடியவில்லை.

குளியலறையில் இருந்து வந்தவன், வெளி திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

ஒரு கால் மணி நேரம் கழித்து வெளியே வந்தவள் "எனக்கு தூங்கணும்" என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

"தூங்கு" என்றவன் அப்படியே அமர்ந்திருக்க,

அவள் உள்ளே செல்ல "கதவை பூட்டிக்கோ" என்றான்.

"வீட்டுக்கு போறீங்களா, ஓகே" என்று அவளே சொல்லிக் கொண்டவள், இவன் செல்கிறானா இல்லையா எப்படி செல்கிறான் என்று எதையும் பார்க்காமல், ஏன் வெளி கேட்டை பூட்ட கூட நிற்காமல், உள்ளே சென்று கதவை சாத்திக் கொள்ள,

சுற்றி பார்த்தான். அங்கே ஒரு கயிற்றுக் கட்டில் இருக்க, அதை எடுத்து போட்டுக் கொண்டவன், அதில் படுத்துக் கொண்டான்.

எதையும் யோசிக்க கூடப் பிடிக்கவில்லை, நடந்தவை, நடந்து கொண்டிருப்பவை, நடக்க இருப்பவை, எதையும்!

தன்னுடைய தாத்தாவினால் என்று நினைத்து இருந்ததால் தான் இந்த திருமணம், அதன் பிறகு இப்படி பாட்டி இங்கே வந்து இருப்பது என்று அத்தனையையும் மௌனமாக கடந்திருந்தான்.

இப்போது அப்படி இல்லையோ என்று தோன்றும் போது, போலிஸ் ஸ்டேஷனில் தோன்றிய அதே உணர்வு, நான் என்ன பொம்மையா அடுத்தவர் என்னை ஆட்டி வைக்க என்று அப்படி ஒரு ஏமாற்றம், கோபம் பிரவாகமாய் பொங்கியது.

“யோசிக்காதே” என்று மனதை முயன்று கடிவாளமிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

# அத்தியாயம் 8

உண்ணாதது, அழுதது, அவன் உடன் தங்குகிறேன் என்று சொன்னது, எல்லாம் அங்கையற்கண்ணியினுள் ஒரு சோர்வை பதட்டத்தை கொடுத்திருக்க, அப்படியே போய் படுக்கையில் விழுந்தவள் தான் உறங்கிவிட்டாள்.

அப்பாவிடம் பேசிய போது அவளின் கைபேசியை அணைத்து தூக்கி எறிந்திருக்க, மனோ அவளுக்கு அழைக்கக் முயன்ற போது சுவிட்ச் ஆஃப் என்று வந்தது. உடனே ராஜராஜனிற்கு அழைத்தான். அதுவும் சார்ஜ் இல்லாமல் ஆஃப் ஆகியிருந்தது. கொஞ்சமும் யோசிக்கவில்லை, கரிஷ்மாவிடமும் அம்மாவிடமும் ஒரு அவசர வேலை என்று கிளம்பிவிட்டான். இப்படி என்று சொல்லவில்லை பயந்து விடுவார்கள் என்று.

அவன் அழைத்த அதே நேரம் சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் ராஜராஜனிற்கு அழைக்க அவர்களுக்கு சுவிட்ச் ஆஃப் என்று வர, அவர்களுக்கும் இருப்பு கொள்ளவில்லை.

ஏனென்றால் ஆத்மன் ஸ்டேஷனில் இருந்து வெளியே வந்த பிறகும் “போடா பொறுக்கின்றா என் பையனை பார்த்து. அதுவும் அடிப்பாளாமா அந்த பொண்ணு, அதையும் விட போஸ்டர்

அடிச்சு என் வீட்டு பொண்ணுங்களை ஒட்டுவாளாமா? யாருன்னு காட்டுறேண்டா உங்களுக்கு” என்று சொல்லியிருக்க,

சுவாமிநாதனும் பேசியிருந்தார், “இத்தனை வருஷம் அப்பா இருந்தார். அவர் தப்பு நம்ம பக்கம், அந்த பையனுக்கு தீராத அவமானத்தை தேடிக் கொடுத்துட்டோம், நாம எதுவும் எதிர்க்க வேண்டாம்ன்னு சொன்னதால, எனக்கும் உன்னை நண்பன்னு நினைச்சு கொஞ்சம் நாள் பழகினதால தான் பேசாம விட்டுடேன். இனி முடியாது. தேவையில்லாத பிரச்சனை வேண்டாம். இல்லை நான் செஞ்சு தான் ஆவேன்னு நீ சொன்னா பார்த்துக்கலாம்” என்று சொல்லி விட்டார்.

அது இன்னும் ஆத்மனின் கோபத்தை கிளறி விட்டிருந்தது. இது நாள் வரை அமைதியாக இருந்தவர்கள் பேசவும், “பார்த்துக்கலாம்டா” என்று சுவாமிநாதனிடம் சொல்லி தான் கிளம்பியிருந்தார்.

அதுவே ஒரு பயத்தை கொடுத்தது சுவாமிநாதனுக்கு. அங்கை இருந்த வீடும் ஊருக்கு ஆரம்பத்தில் சுற்றியும் தோட்டம் இருக்க தனியாக இருக்கும்.

ராஜராஜனை பற்றி பயம் இல்லை என்றாலும், எதையும்

சமாளிப்பான் என்றாலும், அவருக்கு ஒரு பயம், அந்த நேரத்தில் தமிழ்செல்வனை எழுப்பி அவரை அழைத்துக் கொண்டு பைக்கில் அண்ணனும் தம்பியும் அங்கை இருக்கும் வீட்டை நோக்கி வந்து விட்டனர்.

வந்து பார்த்தவர்களுக்கு ராஜராஜன் வெளியில் கட்டிலில் தனியாக படுத்திருப்பது தெரிந்தது.

இவர்கள் கேட்டை திறந்து உள்ளே வந்தனர். அந்த சத்தத்தில் கூட அவன் அசையவில்லை எனவும் பயந்து அருகில் விரைந்து வந்தார் தமிழ்செல்வன்.

அருகில் வந்ததும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது தெரிய, "தூங்கறாண்ணா" என்றார் ஆசுவாசமாக.

"என்னடா இப்படி ஆள் வந்த சத்தம் கூடத் தெரியாம தூங்கறான், அதுவும் வெளில வேற தூங்கறான்" என்று பேசியபடி அங்கிருந்த திண்ணையில் அமர்ந்தார்.

அண்ணன் அமரவும் தம்பியும் அமர்ந்து கொண்டார்.

கேட் திறக்கும் சத்ததிலேயே அங்கை விழித்துக் கொண்டாள்.

"யாராயிருக்கும்" என்று அவளுக்கு பயம் வந்தது. பின் பேச்சு

குரல் வேறு கேட்கவும், ஜன்னலை மெதுவாய் திறந்து பார்க்க, அங்கே ராஜராஜன் கட்டிலில் உறங்குவது தெரிந்தது. பின்பு நன்றாய் திறந்து பார்க்க அங்கே சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் அமர்ந்திருக்க, மகனுக்கு காவலுக்கு அமர்ந்திருக்கிறார்கள் என்று புரிய,

அவளின் தூக்கம் எல்லாம் பறந்தோடி விட்டது. இப்போது கதவை திறப்பதா வேண்டாமா என்ற யோசனை.

என்ன தான் பேசுகிறார்கள் கேட்போம் என்று நின்று கொண்டாள். ஆனால் அண்ணனும் தம்பியும் பேசவில்லை அமைதியாய் அமர்ந்திருந்தனர்.

சிறிது நேரம் கழித்து "ண்ணா, என்ன பண்ணுவான்னு நினைக்கற" என்று கேட்க,

"ப்ச் தெரியலையேடா, அப்படி ஒரு ஆவேசமா போறான். இத்தனை வருஷம் கழிச்சும் இப்படி பேசறான். சரியான கிறுக்கனா இருப்பான் போல இருக்கு, பார்த்துக்கலாம் விடு" என்று தைரியம் சொல்ல,

இப்போது பேச்சு சத்தம் இப்படி அருகில் கேட்கவும் தூக்கம் கலைய திரும்பி அப்பாவையும் பெரியப்பாவையும் பார்த்தவன்

வேகமாய் எழுந்து “என்னப்பா இங்க? எதுவும் பிரச்சனையா?” என்றான்.

அவன் எழுந்த வேகத்திற்கு பார்த்திருந்த அனைவருமே அசந்து விட்டனர்.

“என்னடா?” என்றனர் இவர்கள் பதறி.

“இங்க இருக்கீங்க”

“உன் ஃபோன் சுவிட்ச் ஆஃப். அந்த ஆத்மன் ரொம்பவும் மிரட்டிடான். அதுதான் எதுவும் உங்களை பண்ணிடுவானோன்னு வந்தோம்”

ஆசுவாசமாய் அமர்ந்தவன், “அப்பா நம்மை அவன் ஒன்னும் பண்ண மாட்டான், அதாவது அடிக்கிறது அந்த மாதிரி. ஆனா நிச்சயம் வேற பண்ணுவான், அதுவும் என்னோட கணிப்பு பல வருஷம் முன்ன தாத்தா நீங்க எல்லாம் அமைதியானதுக்கு காரணமா இருந்ததை தான் திரும்பவும் எடுப்பான்”

“என்ன?” என்று அவர்கள் மிகுந்த கவலை கொள்ள அது முகத்திலும் தெரிய,

அந்த நேரம் சரியாக மனோவின் கார் வந்து விட்டது.

இறங்கியவன் இவர்கள் எல்லோரையும் இங்கே பார்க்கவும் என்னவோ என்று பயந்து விட்டான். வேகமாய் வந்தவன் ராஜராஜனிடம் “எதுவும் பிரச்சனையா, அங்கை எங்கே?” என்று கேட்க,

“தூங்கறா” என்று ராஜராஜன் சொல்லும் நேரம் வீட்டின் கதவு திறக்க, அங்கை வெளியே வந்தாள்.

“இவள் தூங்கவில்லையா?” என்று ராஜராஜன் நினைக்க, “இந்த பொண்ணு முழிச்சிட்டு தான் இருந்தாளா?” என்று சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் நினைக்க,

“ஐ அம் ஃபைன் அண்ணா” என்று அங்கை சொல்ல,

அப்போது தான் மனோவின் முகத்தில் தெளிவு, “அவ ஃபைன் தான், ஆனா இனி சூழ்நிலைகள் அப்படி இருக்குமான்னு தெரியலை” என்று முகம் இறுகியவனாய் ராஜராஜன் சொல்ல,

“ஏன் உங்களுக்கு பயமா?” என்று அங்கை பதில் பேசினாள்.

“எங்களை பார்த்தா உனக்கு பயப்படற மாதிரி தெரியுதா?” என்று அப்படி ஒரு ஆவேசத்தோடு ராஜராஜன் கேட்க,

மனோ தான் வேகமாய் “கோபம் வேண்டாம்” என்றான்.

“என்ன கோபம் வேண்டாம்?” என்றவன், “உங்க தங்கை கேட்கறா, எங்கம்மாவை பேசினா நீங்க கேட்க மாட்டீங்களா வேடிக்கை பார்ப்பீங்களான்னு”

“உண்மையா எங்க முன்னாடி எவனும் பேச மாட்டான். எவனுக்கு பேசற தைரியம் கிடையாது. இதுவரை ஆத்மன் எங்களுக்கு எவ்வளவு தொந்தரவு குடுத்து இருந்தாலும், எங்க முன்ன இல்லை, எங்க காதுக்கு வர்ற மாதிரி பேசினதே கிடையாது. அது தான் நிஜம்!”

“இவளை பார்த்து பேசினாங்கன்னா, யார் தப்பு? எங்க தப்பா? இவ கேட்கறா எங்கம்மாவை விடுங்க உங்க மனைவின்ற பயம் கூட வேண்டாமான்னு”

“இல்லை தெரியாம தான் கேட்கறேன், இவ என்ன எங்களோடவா இருக்கா? எங்க வீட்ல இருந்து என்னோட அக்காங்க ரெண்டு பேரை கல்யாணம் செஞ்சு கொடுத்திருக்கோம், எல்லோருமே பேர் சொல்ற மாதிரி பெரிய ஆளுங்க தான், பெரிய

இடம் தான். உங்கம்மாவோட வாழ்க்கை அவங்களை ஒன்னும் பாதிக்கலையே, இவளை பாதிச்சா அதுக்கு நாங்க பொறுப்பா”

“இன்னும் இவ எங்க நிழல் குள்ள வரவேயில்லை, நாங்களும் கூப்பிடலை, நீங்களும் அனுப்பலை, எல்லாம் வேற, சும்மா பயமா, ஏன் கேட்கமாட்டீங்கன்னு இப்படி எல்லோர் முன்னமும் கேள்வி கேட்கறா? அதுவும் அந்த ஆத்மன் முன்ன கேள்வி கேட்கறா? என்ன தெரியும் இவளுக்கு எங்களை பத்தி?’ என்று கோபமாய் கத்தி பேசினான்.

“சாரி, அம்மாவை பேசிட்டாங்கன்ற கோபத்துல பேசியிருப்பா” என்று மனோ பொறுமையாய் பேச,

“அதாவது ஒரு விஷயம் செஞ்சா, அதோட விளைவுகளை எதிர்கொள்ள தான் வேணும். நான் செய்யற மாதிரி தான் செய்வேன். ஆனா நீ என்னை பேசக் கூடாதுன்னா அது எப்படி, பேச முடியாத அளவுக்கு பயம் வேணுமாம்? நம்ம எல்லாம் என்ன தீவிரவாதியா?”

“ஊர் வாயை எல்லாம் மூட முடியாதுங்க, அவங்க பேசறது நம்மை கொஞ்சமும் பாதிக்காதுன்னு தெரிஞ்சா தான்

நிறுத்துவாங்க, நம்மை அது பாதிக்குதுன்னு தெரிஞ்சா பேசிட்டே தான் இருப்பான்”

“இப்போ உங்கம்மாக்கு என்ன குறைச்சல்? உங்கப்பா நல்ல பதவி, பையன் நீங்களும் அப்படி தான், பொண்ணையும் நல்லா தான் வளர்த்திருக்காங்க, அப்போ யாராவது ஓடிப் போனவ சொன்னா… ஆமாண்டா, அதுக்கென்ன? நீ மூடிட்டு போடான்னு சொல்ல முடியாது, போய் போய் எல்லோர் கிட்டயும் சண்டை போடுவோமா?”

“உலகத்துல நாம தான் புத்திசாலின்னு நினைக்கக் கூடாது” என்று ராஜராஜன் வார்த்தைகளை விளாசித் தள்ள,

இவன் இவ்வளவு பேசுவானா என்று விழிவிரித்து அங்கை பார்த்திருந்தாள். அங்கே போலிஸ் ஸ்டேஷனில் வாயே திறக்கவில்லை என்று பார்த்திருந்தாள்.

“இது எல்லாத்தையும் விட, நமக்கு ஒரு பிரச்சனைன்னா நின்னு அடிக்கலாம், சொல்லிக் கூட அடிக்கலாம், ஆனா நம்மளால அடுத்தவங்களுக்கு பிரச்சனைன்னா நாம அமைதியா தான் போகணும். அதை தான் எங்க வீடு செய்யறாங்க,

செய்வாங்க! அதனால தெரியாம எதுவும் பேச வேண்டாம்”

“இப்போ வரைக்கும் உங்கம்மாக்கும் உங்கப்பாக்கும் என்ன பிரச்சனை? உங்கம்மா அவங்க பிறந்த வீட்டோட சீராடலை, அது மட்டும் தான், ஆனா நாங்க அப்படி கிடையாது!”

“மேல இருந்து அப்படியே கீழ விழுந்துடோம், வசதில ஒன்னுமே இல்லாம போயிட்டோம். என்ன உங்களுக்கு வசதி குறைவுன்னு கேட்கலாம்? ஆனா இப்போ இருக்குற இதெல்லாம் ஒன்னுமே இல்லை அவ்வளவு இருந்தது. பாதிக்கப் பட்டது நாங்க தான்”

“அதனால் சும்மா எங்களை குற்றம் சொல்றதை முதல்ல நீ நிறுத்து” என்று அங்கையை பார்த்து நேரடியாய் சொன்னவன்,

“ஒன்னு உங்க தங்கை வந்து எங்க வீட்ல இருக்கட்டும், இல்லை உங்க ஊருக்கு கூட்டிட்டு போயிடுங்க. இப்படி வாட்ச்மேன் மாதிரி வாசல்ல படுத்து என்னால பார்த்துக்க முடியாது. எங்க கிழவியை நான் இனிமே இங்க விட மாட்டேன், இது ரெண்டுல ஏதோ ஒன்னு தான் நடக்கணும்” என்று முடிவாய்

சொன்னான்.

அவனின் பேச்சுக்களில் சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் வியந்து நின்றனர். பேசுவான் தான், ஆனால் முடிவுகள் அவன் எடுத்தது கிடையாது. பெரியப்பா சொல்வதை அப்படியே கேட்டுக் கொள்வான். இப்போது அவன் முடிவெடுக்கிறான்.

தமிழ்செல்வன் அண்ணனை அவன் செய்வது சரியா என்று பார்க்க, அவர் அவன் முடிவிற்கு கட்டு படுவது போல நின்றார். “ண்ணா, அந்த பொண்ணை நம்ம வீட்டுக்கு கூப்பிடறான்”

“அது சரி தானேடா ஒன்னு வரட்டும், இல்லை போகட்டும். இங்க வெச்சு நாம அதை பாதுகாத்துட்டு இருக்க முடியுமா என்ன? அது வேற ஊர் வம்பை அசால்டா விலைக்கு வாங்குது” என்று அவரும் சொல்ல,

“என்னடா இது?” என்று வியந்து பார்த்தவர், இதுவரை அண்ணன் சொல்படி நடந்தவர், இனி மகன் சொல்படி நடக்க முடிவு செய்து அவனை பார்க்க ஆரம்பித்தார்.

“நான் அங்கை கிட்ட பேசறேன்” என்று மனோ சொல்ல,

“நீ பேசு, பேசாம போ, ஆனா இது ரெண்டு தான் முடிவு.

ஒன்னு எங்க வீட்டுக்கு வரட்டும், இல்லை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போய்டுங்க, இந்த ஊர்லையோ இல்லை அக்கம் பக்கம் ஊர்லையோ தனியா இருக்கக் கூடாது. ஏன் தமிழ்நாட்டுக்குள்ளேயே தனியா இருக்க கூடாது. எங்க எல்லையை தாண்டி நீங்க எப்படியோ இருந்துக்கங்க" என்று இதுதான் முடிவு என்பது போல சொன்னான்.

"என்ன தமிழ்நாட்டிற்குள்ளேயே இருக்கக் கூடாதா? தமிழ் நாடு என்ன இவனின் அப்பன் ஊரா? என் அப்பனின் ஊரும் இதுதானே?" மனதினுள் பொருமியவள்,

"நான் உங்க பேச்சை கேட்கலைன்னா" என்று அங்கை பேச,

மனோ அவளை அதட்டி பேச வாயெடுக்கும் போதே அவனை கைகளால் பேசாதே என்பது போல காண்பித்த ராஜராஜன், "கேட்கணும்னா கேட்டு தான் ஆகணும்" என்று சொல்ல,

"கேட்கலைன்னா" என்று அவள் மீண்டும் பேச,

"கூப்பிடு உங்கப்பாவை, இது தான் அவர் பொண்ணை

வளர்த்து வெச்சிருக்குற லட்சணமான்னு கேட்கறேன். எங்க பொண்ணு தான் எங்க பேச்சை கேட்கலை, உங்களோட வந்துடுச்சு, உங்க பொண்ணு என்ன பண்ண போகுதுன்னு அவரை கேட்கறேன். என் வாழ்க்கை என்ன உங்களுக்கு விளையாட்டா? என்னோட கல்யாணம்னு ஒன்னு நடக்காம இருந்திருந்தா நீ எப்படியோ போன்னு விட்டிருப்பேன், நீயே கேட்கற உன் மனைவின்றது கூட அடுத்தவங்களுக்கு இல்லையான்னு, அப்போ நீ சொல்றதை அடுத்தவன் சொல்லாமையா இருப்பான்"

"உங்களால திரும்ப எங்க வீடு அசிங்கப்படணுமா? என்ன நினைச்சிட்டு இருக்கீங்க நீங்கலாம்?" என்று ராஜராஜன் கோபமாய் அவளின் அருகில் போக,

மனோ இன்னும் வேகமாய் அங்கையின் அருகில் போனவன், "எதுன்னாலும் பேசி முடிவெடுத்துக்கலாம் கோபம் வேண்டாம்" என்றான்.

அவனுக்குமே இதை முடித்து விட்டால் பரவாயில்லை என்று தான் தோன்றியது.

"ம்ம் அப்புறம் இன்னொரு விஷயம்" என்ற ராஜராஜன்,

“உட்காரு” என்று மனோவிடம் சொன்னவன், பெரியப்பா அப்பாவிடமும், “உட்காருங்க” என்று சொல்ல, அவர்களும் அமர்ந்தனர்.

ராஜராஜன் மனோவை ஒருமையில் பேசிக்கொண்டு இருப்பது அப்படி ஒரு கோபத்தை கொடுத்துக் கொண்டிருந்தது அங்கைக்கு.

“எனக்கு பேசி பேசி தொண்டை வறண்டு போச்சு, டீ போடுவியா நீ, போட தெரிஞ்சா எங்களுக்கு கொண்டு வா”

“என்ன நானா?” என்றாள் கடுப்பாக.

“பின்னே இது உன் வீடு, உன்னோட பாதுகாப்புக்கு தான் நாங்க உட்கார்ந்து இருக்கோம். அப்போ நீ தானே செய்யணும்” என்றான்.

அவள் முடியாது என்று நிற்க, “எனக்கு இன்னும் நிறைய உங்கண்ணன் கிட்ட பேசணும், இப்போ நான் யாரையும் தேட முடியாது, நீ பொண்ணு டீ போடணும்னு சொல்லலை, இல்லை என்னோட மனைவியா டீ போடணும்னு சொல்லலை, இங்க இந்த பேச்சுல நீ எதுவுமே செய்ய முடியாது, இப்போதைக்கு இங்க நீ

வெட்டி, இது உன் வீடு கூட, அதுதான் சொல்றேன் போ” என்று அலட்சியமாய் சொல்ல,

அம்மாடி தங்கள் மகனின் இன்னொரு பரிமாணத்தை பார்த்து அவனின் அப்பாவும் பெரியப்பாவும் அசந்து இருக்க,

மனோவிற்கோ எப்படி இவனுடன் வாழ முடியும் அங்கைக்கு. முடியாது! முதலில் இவளை அழைத்துக் கொள்ள வேண்டும், இந்த உறவை முடித்து விட வேண்டும் என்று மனதில் திண்ணமாக்கிக் கொண்டான்.

அவனை விட ராஜராஜன் தான் அதிகம் நினைத்தான், “இவளை யார் இங்க வரச் சொன்னா, என்னை கல்யாணம் பண்ணச் சொன்னா, இப்படி பிடிக்கலை பிடிக்கலைன்னு ஏலம் விட சொன்னா, கிளம்புடி முதல்ல நீ இங்க இருந்து, நீ எவ்வளவு அழகா இருந்தாலும், குணமா இருந்தாலும், மணமா இருந்தாலும், எனக்கு வேண்டாம்!”

“கடவுளே! அப்பா என்னை இங்க இருந்து போறதுக்கு பெர்மிஷன் குடுத்துடணும்” என்று இவர்கள் இருவரையும் விட அங்கை அதிகம் நினைத்தாள்.

# அத்தியாயம் 9

வேறு வழியில்லாமல் அங்கை தேனீர் தயாரிக்க செல்ல,

ராஜராஜன் மனோவை பார்த்து, “ஆத்மன், அவரோட ஊருல இருக்குற ஏரில இருந்து தான் எங்க ஊருக்கு தண்ணி வருது”

இந்த வார்த்தை போதுமே பிரச்சனையின் நுனி புரிய, கலக்டர் அல்லவா? “ம்ம்” என்றவனிடம்,

“எங்க ஊர் பாசனம் அங்கே இருந்து தான். அவரோட கல்யாணம் நின்ன ஆத்திரத்துல தண்ணியே விடலை, பெரிய ஊர் கலவரம் ஆகிடுச்சு, உயிர் சேதமில்லை, ஆனா நிறைய அடிதடி, காயங்கள், சேதங்கள்”

“இந்த அடிதடி என்னவோ ஒரு பதினஞ்சு நாள் நடக்க, ஒரு பக்கம் போலிஸ், ஆர் டி ஓ விசாரணை, பஞ்சாயத்து எல்லாம் போச்சு, ஆனா ஆத்மன் தண்ணி வர விடலை”

“பயிர் எல்லாம் வாட ஆரம்பிக்க, அப்பா தான் இதெல்லாம் வேண்டாம்னு ஆள் விட்டு பேச விட்டார். ஊருக்கு தண்ணி

விட்டுட்டார்” ஆம், இப்போது நிகழ்வுகளை சுவாமிநாதன் சொன்னார். அன்றைய நிகழ்வுகளுக்கே போய் விட்டார்.

“ஆனா எங்களுக்கு தண்ணி வர்ற வழில அவங்க நிலம் இருக்கு, அதுல அவசரமா ஒரு சிவன் கோவிலை கட்ட அடிக்கல் போட்டுட்டார். எங்களால ஒன்னும் பண்ண முடியலை. அதுக்கு ஏதாவது பண்ணினா ஊர் மொத்தமும் தண்ணி இல்லாம கஷ்டப் படும், அதனால் பொறுமையா போயிட்டோம்”

“கோவிலும் வேகமா வளர்ந்துடுச்சு, சிவன் சொத்து குல நாசம்ன்னு எங்கப்பா எந்த எதிர்ப்பும் அதுக்கு பண்ணலை, சொத்து தானே போனாப் போகுது, வேற எந்த கஷ்டமும் நமக்கு வராம இருந்தா சரின்னு விட்டுட்டார்”

“கிட்ட தட்ட ஒரு என்பது ஏக்கரா நெல் வெள்ளாம போச்சு, தோப்பு போச்சு, எல்லாம் போச்சு,தென்னை, மாமரம், வாழை, பருத்தி, மஞ்சள் எல்லாம் எங்க கண் முன்ன பட்டு போச்சு” என்று அவர் சொல்லும் போது குரல் கரகரத்து விட, எதிரில் இருந்த ராஜராஜன் அவரின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

“ஊர்ல பெரிய சொத்து நம்மளது தான், அப்போ ரெண்டு

வழியா வரும் தண்ணி, ஒரு பக்கம் வர்றதுல கொஞ்சம் நிலத்துக்கு மட்டும் தண்ணி வருது, அந்த பக்கம் தான் ஊருல மத்த நிலத்துக்கு போகுது. இன்னொரு பக்கம் வரலை”

“வேற சில தொழில், எல்லாம் முடங்கி போச்சு, இருக்குறதை வெச்சு காலத்தை ஓட்டுறோம், டவுன்ல கொஞ்சம் சொத்து இருந்தது அதை வித்து தான் பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ணினோம்”

“சரி பண்ணியிருக்கலாமோ என்னவோ? ஆனா எங்களால முடியலை” என்று தோல்வியை பகிரங்கமாய் ஒத்துக் கொண்டார்.

அவரை ஆதரவாய் அணைத்துக் கொண்டான். “எங்க ஊர் அப்படியே தான் இருக்கு எங்க கிட்ட, ஆனா மத்த ஊர்ல வெளில தெரிஞ்சவங்க இப்படி எல்லாரும் எங்களை முன்ன பார்த்த மாதிரி பார்க்கலை. காசு இருந்து இல்லாம போறது எவ்வளவு பெரிய கொடுமைன்னு அதை அனுபவிக்கறவங்களுக்கு தான் தெரியும். வசதி வாய்ப்பு குறைஞ்ச உடனே எங்க போனாலும் எங்களை தான் முன்ன நிறுத்தி செஞ்சவங்க எல்லாம் எங்களை ஒதுக்கிட்டாங்க”

“அதெல்லாம் கூட ஒண்ணுமில்லை, காலத்தோட மாற்றம்ன்னு விட்டுடலாம், ஆனா எங்க வீட்ல பணமே மூட்டைல தான் இருக்கும், இப்போ எண்ணி எண்ணி செலவு பண்றோம். நாங்க வளர்ந்ததுல எங்க பசங்க பத்துல ஒரு பங்கு கூட வளரலை, இதோ இவன் அண்ணனுங்க படிக்கணும், அக்காங்க கல்யாணம்னு பதினெட்டு வயசுல இருந்து உழைக்கிறான்”

“ஏதோ பெரியவனுங்க உழைச்சு அவனுங்க தேவை போக எல்லாம் இங்க குடுக்கறானுங்க, இதுல எங்கப்பா வேற உங்க பொண்ணை இவனுக்கு கட்டி வெச்சிட்டார். எதுக்கு கட்டி வெச்சார்ன்னு எங்களுக்கு புரியலை, இப்போ இவன் வாழ்க்கை வேற தொங்குது”

“இப்போ திரும்ப பிரச்சனை, நான் அடிதடில தான் இறங்குவான்னு நினைச்சேன், இல்லை தண்ணில தான் கைவைப்பான்னு ராஜா சொல்றான்” என்று அவர் பெருமூச்சு விட்டவர்,

“இதுல ஊருக்கு பிரச்சனைன்னா, திரும்ப நாங்க தழைஞ்சு தான் போகணும்” என்று அவர் பேச, அங்கே ஆழ்ந்த அமைதி!

“ஏற்கனவே ராஜாக்கு அவன் அண்ணனுங்க ரைஸ் மில் வெச்சு குடுத்து ரெண்டு வருஷமாச்சு அதோட லோனை கூட அவனுங்க தான் கட்டுறானுங்க. அதுல வர்ற வருமானம் தான் எங்க செலவுக்கு. இப்போ அது கொஞ்சம் நல்லா வளர ஆரம்பிக்குது, அதுக்கே கரன்ட்ல பிரச்சனை பண்றான், வேலை தடைபடுது” என்று இத்தனை வருடம் மனதில் இருந்ததை கொட்டினார்.

மனோவிற்கு புரிந்தது, அதில் எங்கேயும் தன் அம்மா இல்லை, அவர்களை திட்ட வில்லை, எதுவும் இல்லை, அப்படியே ஒதுக்கி விட்டனர் என்று புரிந்தது.

அதிலும் தன் அப்பாவும் எங்கேயும் இல்லை என்று புரிந்தது. ஏழு வயதில் அந்த வீட்டினுள் அவர் சென்றார் என்று தெரியும், பின் இருபத்தி ஒன்றோ இரண்டோ அதுவரை அங்கே தான். ஆம்! அவனின் அம்மா ராஜலக்ஷ்மி பிறந்த ஓரிரு வருடத்தில் அந்த வீட்டினுள் சென்றவர்,

எல்லோரையும் விட அவனின் அம்மாவை தூக்கி வைத்திருப்பார் என்று எப்போதோ ஒரு நெகிழ்ந்த தருணத்தில் அவர் சொல்லி கேட்டிருக்கிறான். மற்றபடி இங்கே நடந்த நிகழ்வுகள் எதுவும் அவர்களுக்குத் தெரியாது.

அம்மாவும் பேசியதில்லை, அப்பாவும் பேசியதில்லை, இவனின் யோசனைகள் ஓடும் போதே, “விடுங்க பெரியப்பா, நாம வீட்டுக்கு கிளம்பலாம்” என்று எழுந்து கொண்டவன்,

“இதோ உங்க தங்கையை உங்க கிட்ட ஒப்படைசிட்டோம். என்னவோ பார்த்துக்கங்க. தண்ணி பிரச்சனை திரும்பவும் ஊருக்கு வந்தா நீங்க தான் பார்க்கணும், நாங்க அவன் கிட்ட கீழ போய் பேச முடியாது”

“நீதானே சொன்ன, பதவி, ஆள், பணம் எல்லாம் இருக்குன்னு, பிரச்சனை வந்தா முடிச்சிக்குடு பார்ப்போம். ஊரு பிரச்சனை மட்டும் பார்த்தா போதும் எங்க பிரச்சனை நாங்க பார்த்துக்குவோம்” என்று சொல்லி நடக்க எத்தனிக்க,

“டீ கேட்டீங்க” என்ற அங்கையின் குரல் கேட்டது. சற்று உரத்து ஒலித்ததோ.

எழ முயன்ற சுவாமிநாதனிடமும், தமிழ்செல்வனிடமும் “உட்காருங்க மாமா” என்று சொல்லியபடி டீ யோடு வந்தாள்.

அவளாய் அவர்களிடம் பேசியதே இல்லை. இதற்கு

சுவாமிநாதனிடம் இன்று தான் போலிஸ் ஸ்டேஷனில் வைத்து பேசினாள்.

அப்படி ஒன்றும் அவர்களை மரியாதையாய் கூட பார்க்க மாட்டாள். இதற்கு நாச்சி எப்போதும் அவர்களின் பெருமை தான் பேசுவார், ஒரு நிமிடம் முடிவதற்குள் அவளின் காதினை இயர் போன் ஆக்கிரமித்து கொள்ளும்.

அது அந்த பெரியவருக்கு புரியாது…

அமைதியாய் அந்த இரவு நேரத்தில் டீ கொடுத்தாள். அவள் எட்டி பார்த்து நின்றது சமையலறை ஜன்னல் தான். அதனால் அவள் டீ தயாரித்து கொண்டிருந்தாலும் அவர்கள் பேசியது எல்லாம் காதில் விழுந்தது.

எல்லோருக்கும் கொடுத்து கடைசியாய் தான் ராஜராஜனுக்கு கொடுத்தாள். எடுத்துக் கொண்டவனின் பார்வை அந்த தட்டில் பதிய வேறு டம்ளர் இல்லாததால் அனிச்சையாய் “உனக்கு” என்று கேட்டான்.

“நான் டீ குடிக்க மாட்டேன்”

“நீ சாப்பிடலைன்னு எக்ஸ்ட்ரா ஜூஸ் வாங்கி ஃபிரிட்ஜ்ல வெச்சேன், எடுத்துக்கோ” என்று குடிக்க ஆரம்பிக்க,

அவள் ஃபிரிட்ஜில் இருந்து பால் எடுத்த போதே பார்த்திருந்தால், இருந்த சோர்வில் உடனே குடித்தும் இருந்தாள். "நான் குடிச்சிட்டேன், அதுதான் எனர்ஜெடிக்கா இருக்கேன்" என்று சொல்ல,

"ஓஹ் சரி" என்ற பார்வை பார்த்தவன் வேறு பேசவில்லை.

குடித்ததும் கிளம்பி விட்டனர், கிளம்பும் போது மீண்டும் ராஜராஜன் சொல்லியது "இனி பாட்டி இங்க வரமாட்டாங்க, உங்க தங்கையும் இங்க இருக்கக் கூடாது"

"ஒன்னு எங்க வீட்டுக்கு வரட்டும், இல்லை கூட்டிட்டு போயிடணும். ரெண்டுல ஒன்னு தான்" என்று சொல்லி விட்டே சென்றான்.

வெளியே வரவும் தான் பார்த்தான், அன்று கோவிலில் தன்னிடம் அடிவாங்கிய பாதுகாவலன் நின்றிருந்தான். "இவனே ஒரு சொங்கி பய, இவனை எதுக்கு கூட வெச்சிருக்கான்" என்ற எண்ணம் தான்.

அவர்கள் சென்றதும், அந்த நேரத்தில் அண்ணனும்

தங்கையும் அந்த திண்ணையில் அமர்ந்தனர்.

“என்ன பண்ண போற அங்கை?”

“அப்பாக்கிட்ட தான் இதை கேட்கணும் அண்ணா”

“என்ன அப்பா கிட்டையா?” என்றான்.

“ம்ம்” என்பது போல தலையசைதவள் அமைதியாய் இருக்க,

“என்ன அங்கை நடக்குது?”

“நான் சொல்ல முடியாது அண்ணா, அப்பா தான் சொல்லணும்” என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கரிஷ்மாவிடமிருந்து ஃபோன்.

“எங்க இன்னும் காணோம் உங்களை” என்று ஹிந்தியில் கேட்க, மனோ “வருகிறேன்” என்று சொன்னது தமிழிலில்.

ஆம்! தமிழ் அவளுக்கு சொல்லிக் கொடுத்து கொண்டிருந்தான், இருந்தாலும் அவளுக்கு கொஞ்சம் பதட்டமாகி விட்டாலும் ஹிந்தி தான் வரும்.

“கூல் ஜிங்லி” என்று ஆரம்பித்தவன் சற்று தள்ளி சென்று மனைவியிடம் பேசி வந்தான்.

“ம்ம், கொஞ்சல்ஸ் முடிஞ்சதா ண்ணா”

“முடிஞ்சா, அது கொஞ்சல்ஸ் கிடையாது” என்றவன்,

“அம்மாவை முதல்ல அப்பா கூட அனுப்பு, என்னால அவங்களை பார்க்கவே முடியலை”

“எனக்கு என்ன தெரியும்ண்ணா” என்றாள் பரிதாபமாக.

பின் “அவங்களை விடு, இங்க பாரு அவங்களால இத்தனை வருஷமா இவங்க கஷ்டப் படுறாங்க. அப்பா அம்மா செஞ்சதை சரி பண்ண வேண்டியது நம்ம கடமை. நாம என்ன பண்ண போறோம்” என்றாள்.

“ஒன்னும் செய்யப் போறதில்லை” என்று அவன் எழுந்து நிற்க,

“என்ன? என்ன அண்ணா இப்படி சொல்ற?” என்று அவள் அதிர,

“அதெல்லாம் நம்ம பண்ண வேண்டாம் அங்கை, நாம பண்ணினோம்னா அவுட் ஆஃப் தி வே எதுவும் பண்ண மாட்டோம். போலிஸ் ஸ்டேஷன் கோர்ட் கேஸ்ன்னு நம்ம பசங்க

நம்ம வயசு வரும் வரை அது இழுக்கும். ஆத்மன் ஆல்சோ இஸ் குவைட் பவர்ஃஃபுல்”

“அப்போ என்ன செய்யறோம்”

“நாம ஒன்னுமே செய்ய மாட்டோம், என்னோட ஜிங்லி பார்த்துக்குவா, எதுக்கு இருக்கார் அவர் தாத்தா சென்ட்ரல் மினிஸ்டர், நாம கோடு போட்டா அவர் ரோடு போடுவார் என் ஜிங்லிக்காக. அவரோட செல்ல பேத்தி அவ”

“நீ உன்னோட விஷயம் மட்டும் பேசு, அப்பா கிட்ட இது எதுவும் பேசிக்காத. அப்புறம் இல்லை, இது வேண்டாம், நாம நேர் வழில தான் போகணும்னு சொல்வார். எல்லாம் சரி பண்ணிட்டு சொல்லிக்கலாம்”

“எவன் அடிக்கறான்னு கூட தெரியாம அவனுங்க அடிவாங்குவாங்க, அதுக்கு நான் பொறுப்பு, மூணே நாள் அவனுங்க அலறி சமாதானம் பேச வருவாங்க”

“நீ உன்னோட வாழ்க்கையை என்ன பண்ண போற, அதை

முடிவு பண்ணு, ஒன்னு சேர்ந்து வாழு, இல்லை விலகிடு”

அதற்கு அங்கை எந்த பதிலும் சொல்லவில்லை, “சரி, வீட்டுக்கு போகலாம் கிளம்பு”

“அப்பா பெர்மிஷன் கொடுக்கணும்”

“நான் போகணுமே, இல்லை அம்மாவும் இவளும் என்னவோ ஏதோன்னு பதறுவாங்க, என்னோட செக்யுரிட்டி இருக்கான் அவனை பார்த்துக்க சொல்லவா வெளில இருந்து”

“ஏன்? அண்ணா ஏன்? அவன் கோவில்ல எப்படி அடி வாங்கினான்னு நீ பார்க்கலையா?”

“அப்போ நீ வா”

“நான் வர முடியாது”

“அப்போ நான் எப்படி போக”

“நீ கிளம்புண்ணா”

“ம்ம், முடியாது”

“சரி, அப்பாக்கு ஃபோன் பண்ணு”

“அப்பா என்னை இங்க வரக் கூடாது சொன்னார்”

சிரித்து விட்டவள் “இன்னும் நீ அப்பாக்கு தெரியாம தான் எல்லாம் பண்ற” ஆம்! மனோவின் வீர தீர சாகசம் எல்லாம் அப்பாவின் முன் பெட்டிப் பாம்பாய் அடங்கி விடும்.

“ம்ம், சரிப்பா” என்பதை தவிர அவனின் வாய் மொழியாக வேறு வார்த்தை வராது.

“அப்போ நான் ராஜராஜன்க்கு தான் போன் பண்ணணும்”என்றான் இருந்த கடுப்பில்.

“அது உன் விருப்பம்” என்று அங்கை சொல்ல,

“விளையாட்டுக்கு சொல்லலை அங்கை”

“நானும் விளையாட்டுக்கு சொல்லலை” என்று அவள் கௌண்டர் கொடுத்தாள்.

யோசிக்கவேயில்லை உடனே போன் அடித்தான் ராஜராஜனிற்கு, அமைதியாய் தான் அமர்ந்திருந்தாள்.

அந்த பக்கம் உடனே எடுக்கப் பட, “நான் கூப்பிடறேன், அங்கை என்னோட வர மாட்டேங்கறா. என்னோட செக்யுரிட்டி

இங்க விடறேன்னு சொன்னேன். நீங்க அவனை அடிப்பீங்கன்னு சொல்றா, நான் என்ன பண்ணட்டும்?"

"நான் ஊருக்கு போகணும், நாளைக்கு காலையில ஏழுமணிக்கு நாங்க பிளைட் பிடிக்கணும், டெல்லி போயே ஆகணும்" என்றான். ஆம், அவளின் தாத்தா அடுத்த வாரம் வெளிநாடு செல்கிறார். அதற்குள் காரியங்கள் நடத்திக் கொள்ள வேண்டும்.

"என்னது செக்யுரிட்டியா? என்ன விளையாடறீங்களா. முன்ன இல்லை பின்ன நடக்கணும் செக்யுரிட்டின்னா, இவன் என்னவோ உடமைப் பட்டவன் மாதிரி கூட நடந்து வர்றான். அது தான் அவனோட முகத்தை பஞ்சர் பண்ணினேன்" என்றான் ஆத்திரமாக.

"எனக்கு போகணும் ராஜன், ஆத்மன் எதுவும் பண்ணும் முன்ன நான் பண்ணனும். அவன் என்ன பண்ணனும் கூட யோசிக்க விடக் கூடாது, அதுக்கு நான் லீவ்ல போறேன் ஒரு வாரம், அம்மாவையும் மனைவி குழந்தைங்க எல்லாம் கூட்டிட்டு போறேன், நான் இங்க இருந்தா நான் தான் பண்றனோன்னு சந்தேகம் வரும். அது என் வேலைக்கு நல்லதில்லை"

"இவ வர மாட்டேங்கறா, நீங்க இங்க வருவீங்களோ, இல்லை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போவீங்களோ, இது ரெண்டுல எதுன்னாலும் உங்க சாய்ஸ்" என்று அவனை போலவே சொன்னவன், "இது நம்ம ரெண்டு பேர்குள்ள மட்டும் இருக்கட்டும் யார் கிட்டயும் சொல்ல வேண்டாம்"

"எது?"

"நான் டெல்லி போற விஷயம், உங்க வீட்டுக்கு கூட தெரியவேண்டாம், நான் அங்கை கிட்டக் கூட சொல்லலை. எதோ பண்ண போறேன் சொன்னேன். ஆனா அதுக்காக டெல்லி போறேன்னு தெரியாது"

"டெல்லி போய் என்ன பண்ண முடியும்?"

"போகும் போது தானே யோசிக்கணும்" என்று சொல்ல,

"இவன் என்ன என்னை லூசுன்னு நினைச்சானா?" என்று ராஜராஜனுக்கு தோன்றிய போதும் அவன் கல்கடர் நிச்சயம் புத்திசாலியாய் தான் இருப்பான் என்று புரிந்து அமைதியாகினான்.

"அப்புறம் இதை நான் எதுக்கு சொல்றேன்னா எனக்கு இங்க

ஏதாவது தகவல் வேணும்ங்கும் போது உங்களை தான் கூப்பிடுவேன் அதுக்காக”

“ஏதாவது செய்யும் போது சொல்லிட்டு செய், சரிவருமா இல்லையான்னு பார்க்கணும், உனக்கு இங்க எதுவும் தெரியாது” என்றவனிடம்,

“ம்ம் சரி” என்றான், இன்னும் அவன் மரியாதையில்லாமல் பேசுவது மனோவிற்கு மனதிற்கு ஏதோ செய்த போதும் “போறான் விடு” என்று சமாளித்துக் கொண்டான்.

தனியாய் நின்று தான் பேசினான்.

இவன் வந்ததும் “என்ன அண்ணா?” என்றவளிடம், ராஜன் க்கு சாய்ஸ் கொடுத்தேன் என்றான் நக்கலாக, பேசி முடித்த ஐந்தாம் நிமிடம் ராஜராஜன் அங்கே இருந்தான்.

“நீ கிளம்பு, நான் இங்க பார்த்துக்கறேன், கிழவி வரட்டும் என்னன்னு பேசிக்கலாம்”

மனோவும் நிற்கவில்லை, செய்தே ஆக வேண்டும்

அவனிற்கு, கிளம்பிவிட்டான்!

ராஜராஜன் நேராய் கட்டிலுக்கு சென்றவன் படுத்துக் கொள்ள, இப்போது பேன்ட் சட்டையில் இருந்து வேஷ்டி டீ ஷர்டிற்கு மாறியிருந்தான்.

“உள்ள வந்து படுக்கறீங்களா?” என்றாள்.

“பிடிக்கலை பிடிக்கலைன்னு அவங்கப்பா கிட்ட அந்த கூவு கூவு கூவிட்டு உள்ள எப்படி கூப்பிடறா. நீ ரொம்ப நல்லவன்னு நினைச்சிட்டாளோ” என நினைத்தவனுக்கு சிரிப்பு வந்தது.

அதை வெளிக்காட்டாமல் “இல்லை எனக்கு இங்க தான் சௌகரியம், முடிஞ்சா தலையணை பெட்ஷீட் குடு” என்று சொல்ல,

வேகமாய் போய் அவளும் கொண்டு வர, அதை போட்டவன் படுத்து கொள்ள, இவள் உள்ளே படுத்துக் கொள்ள செல்ல,

“கதவை தாள் போட்டுக்கோ, நான் தேவைன்னா பெல் அடிக்கறேன். முன்னமே அசந்து தூங்கிட்டேன் போல, யாரும் வந்தாலும் எனக்கு தெரியாது”

“அதுக்கு எதுக்கு காவல்” என்று அவள் முனகிக் கொண்டே

செல்ல,

“வேற என்ன? என் தலையெழுத்து!” என்று ராஜராஜன் சத்தமாய் சொல்ல,

“ஒன்னும் பயமில்லை, நல்லா தூங்குங்க, சின்ன சத்தம்னாலும் நான் எழுந்துக்குவேன். நான் பார்த்துக்கறேன் உங்களை” என்று அவளும் சத்தமாய் சொல்ல,

“இவ அடங்கவே மாட்டாடா” என்று தான் ராஜராஜனிற்கு தோன்றியது.

அவ்வளவு அழுகை அழுத அங்கையின் மனம் இப்போது அப்படி இல்லை! தன் அப்பா அம்மாவினால் மிகுந்த சிரமப்பட்டிருக்கிறார்கள் என்று புரிய, அதன் வெளிப்பாடு அமைதியாய் நடக்க முற்பட்டாள்.

# அத்தியாயம் 10

மூன்று நாட்கள் மருத்துவமனையில் இருந்த நாச்சியை சுவாமிநாதன் வீட்டிற்கு அழைத்து வந்தார். மாலை ஆகிவிட்டது.

அவர் வீடு வரவுமே ராஜராஜனிடம் அங்கையை பற்றி தான் கேட்டார். ஏனென்றால் பின்னர் அங்கை மருத்துவமனை கூட வரவில்லை. “நீ வீட்டிற்கு கிளம்பு” என்று பாட்டி சொல்லிவிட்ட கோபம் அவளின் மனதினில் இருக்க, கூடவே என்னவோ இவர்கள் எல்லோரும் அவளால் தான் பாட்டி உடம்பு கெட்டது போல பேசியிருக்க, அந்த வருத்தத்தில் அவள் வரவில்லை.

ராஜராஜனும் அப்போது தான் வீட்டிற்கு வந்தவன், “உன் பேத்தி என் உயிரை எடுக்கறா கிழவி, இங்கயும் வர மாட்டேங்கறா, அவங்க ஊருக்கும் போக மாட்டேங்கறா, தனியா எப்படி விட” என்று இலகுவாய் பேசினான்.

ஆம்! இரண்டு நாட்களாய் மனோ நிறைய விவரங்கள் கேட்க எல்லாவற்றையும் சேகரித்துக் கொடுத்தான். “என்ன செய்யலாம்?” என்று மனோ கேட்டதற்கு, “உன்னால் என்ன செய்ய முடியும்?”

என்று கேட்க, “என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்” என்ற அவனின் பதிலால்,

“இப்படி செய்யலாம்” என்று யோசனைகள் கொடுத்தான். என்னவோ அதுவே அவனுக்கு மலையை புரட்டி விட்ட உணர்வு.

ஆம்! மனோ கேட்ட விதம் கேட்ட விவரங்கள் அவனுக்குள் ஒரு நம்பிக்கையை விதைத்து இருந்தது. இவன் சொன்னது போல மனோ செய்து விட்டானானால் அவர்களின் நிலத்திற்கு நீர் வரும் படி செய்து விடலாம்.

காரியம் பெரிதா வீரியம் பெரிதா என்று வரும் போது காரியம் தானே பெரிது, அதனால் மனோவிடம் பகை விட்டு சகஜமாய் பேச ஆரம்பித்து இருந்தான்

காரியங்கள் கை கூடி வரும் போல தோன்ற இது மனதிற்கு ஒரு உவகையை கொடுத்து இருக்க, அங்கையின் பேச்சுகளையும் மீறி மனது இலகுவாய் உணர நாச்சியிடம் வாயடித்தான். “மூணு நாளா நான் தான் உன் பேத்திக்கு வாட்ச் மேன் வேலை பார்த்தேன்” என்றான்

“என்னது வாட்ச்மேனா” என்று அதிர்ந்தவரிடம்,

“பின்ன உன் பேத்தி வீட்டுக்கு உள்ள, நான் வெளில, அப்போ அதுக்கு பேர் என்ன?”

“என்ன அப்படியா செஞ்சா?” என்ற நாச்சியிடம் கோபம் பொங்கிய போதும் அதனை ராஜராஜனிடம் காண்பிக்கவில்லை. ஆனால் அங்கை கண்ணில் மாட்டும் போது வைத்துக் கொள்கிறேன் அவளை என்று மனதில் கருவிக் கொண்டார்.

“எனக்கு வேலை இருக்கவும், பகல்ல நம்ம ராமு மாமாவை இருக்கச் சொன்னேன், அவர் வாசல்ல உட்கார்ந்து தேவுடு காக்கறார், உன் பேத்தி சாப்பிட கூட பகல்ல எந்திரிக்காம அப்படி தூங்கறா, ராத்திரி ஏதாவது உருட்டி என் தூக்கத்தை கெடுக்குறா”

“இன்னைக்கு ராத்திரி வாட்ச் வுமன் அனுப்பலாம்னு இருக்கேன். அதை பத்தி நீ என்ன நினைக்கற” என்று இலகுவாய் கேட்ட படி அவரின் அருகில் அமர்ந்தான்.

“அது யாருடா எனக்கு தெரியாத வாட்ச் வுமன்”

“எங்கம்மா தான் வேற யாரு, இந்த உலகத்துலயே நான்

என்ன சொன்னாலும் கேட்கற ஒரே ஜீவன் எங்கம்மா தான்”

“ம்ம் அப்போ அவ பெரிய ஏமாளின்னு சொல்லு”

“பார்த்தியா கிழவி என்னையே கலாய்க்கற நீ” என்று சலிப்பவன் போல பேசினான்.

ஆம்! இந்த மூன்று நாட்களும் அவனுக்கு இரவினில் அங்கே தான் ஜாகை, வெளியில் இருந்த கட்டிலில் படுத்துக் கொண்டான். அப்போதும் அவள் “உள்ளே வா” என்று கூப்பிடவில்லை. “நீங்க இங்க படுக்க தேவையில்லை, நான் பார்த்துக்குவேன்” என்று தான் சொன்னாள்.

“என்ன செய்யணும்னு எனக்கு தெரியும், நீ சொல்ல வேண்டிய அவசியமில்லை” என்று முடித்துக் கொண்டான்.

அதனால் இருவர் பார்வைகளும் செயல்களும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு தான் இருக்கும்.

இவன் ரூமில் அமர்ந்திருக்க, அங்கே வெளியே எதோ சலசலப்பு போல இருக்க, “என்ன?” என்று அவன் எழும் போதே

தில்லை வேகமாய் வந்தவர், “ராஜா, அங்கையும் அவ அப்பாவும் வந்திருக்காங்க” என்றார்.

“என்ன?” என்று வியந்தவன் வேகமாய் வெளியில் வந்தான்.

அவர்கள் வெளி வாயிலில் நிற்க சுவாமிநாதன் உள்ளே வீட்டின் வாயிலில், இரண்டிற்கும் இடையில் சற்று தூரம் இருக்கும். அன்பழகன் அவர் வந்த காரில் இருந்து இறங்கி நின்றிருந்தார். அவருடன் பாதுகாவலன் ஒருவன். அங்கையர்கண்ணியும் அங்கே தான் இருந்தாள்.

சுவாமிநாதனுக்கு உள்ளே அழைப்பதா வேண்டாமா என்று தெரியவில்லை. அவருக்காய் அழைக்க மனதில்லை யாராவது உள்ளே கூப்பிடு என்று சொன்னால் அடுத்த நிமிடம் அழைத்து விடுவார். இறங்கி வெளி வாயிலுக்கு செல்ல மனதும் ஒப்பவில்லை. ஏனென்றால் மூன்று நாட்களாய் ராஜராஜன் அவருக்கு மூளைச் சலவை செய்து கொண்டிருந்தான்.

விரோதத்தை வளர்க்க வேண்டாம், முடிக்கச் சொல்லி!

இவன் இங்கே மூளைச் சலவை செய்ய அதை தான் அன்பழகனும் மகளுக்கு செய்து கொண்டிருந்தார், ராஜராஜனோடு சேர்ந்து வாழச் சொல்லி, அதன் விளைவே அவரின் விஜயம்,

இதோ இப்போது மகளை அழைத்துக் கொண்டு இங்கேயும் வந்து விட்டார். இது ராஜலக்ஷ்மிகோ, மனோவிற்கோ தெரியாது.

அவர்கள் வெளி வாயிலில் நின்றது நின்ற படி இருக்க, எங்கே யாரும் சொல்வதாய் காணோம். எல்லோரும் சுவாமிநாதனுக்கு பயந்து தடுமாறி நிற்க, அந்த பயம் எதுவும் ராஜராஜனுக்கு இல்லை. அவனுக்கு மனோ மூலமாய் எல்லாம் நடக்க வேண்டி இருக்க அதனால் அன்பழகனிடம் ஏன் விரோதமோ கோபமோ காண்பிக்க போகிறான்.

அவர்களை பார்த்ததும் வேகமாய் வெளிவாயிலுக்கு நடந்தவன் “உள்ள வாங்க” என்றழைக்க அன்பழகன் மெதுவாய் உள்ளே வந்தார். அந்த வீட்டினை கண்களால் சிறை பிடித்து. அவருக்கு அடைக்கலம் கொடுத்த வீடு, அவர் வாழ்ந்த வீடு, பின் அந்த வீட்டின் பெண் செல்வதையே கொள்ளை கொண்டு போய், தீராத பழி சொல்லுக்கும் ஆளாக்கிய வீடு.

அவர் நினைவுகளோடே நடந்து வர, அதன் பின்னேயே சுவாமிநாதன் “வாங்க” என்றழைக்க பின்னே தமிழ்செல்வன், வாசுகி, தில்லை என்று அனைவரும் வந்து தனி தனியாய் அழைக்க, நாச்சி வந்தவர் “வா அன்பு” என்று அவரும் அழைத்தார்.

அவருக்கு மருமகன் என்று மரியாதை கொடுக்க வரவில்லை, அவரின் பிள்ளை போல தானே வளர்த்தார்.

தயக்கதினோடே வீட்டின் உள்ளே நுழைந்தார் அன்பழகன். பின்னே அங்கையற்கண்ணி வர, எல்லோரின் கண்களும் மீண்டும் வாயிலை பார்த்தது ராஜலக்ஷ்மி வருகிறாரா என்பது போல, "இல்லை அவ வரலை" என்று அதனை உணர்ந்தவர் போல சொல்ல,

"ஏன்" என்றார் நாச்சி,

"நான் இங்க வர்றது அவளுக்கு தெரியாது, சொல்லலை, அவ மனோவோட டெல்லி போயிருக்கா, நான் இங்க வந்துட்டேன், சரி ஒரு விஷயம் நினைச்சிட்டோம். தள்ளி போட வேண்டாம்னு வந்துட்டேன்" என்றார்.

என்ன விஷயம் நினைச்சார், எதை தள்ளி போடா விரும்பலை என்று எல்லோரும் பார்க்க,

"அது மாப்பிள்ளை சொன்னாராமே, ஒன்னு இங்க இருக்கணும் இல்லை ஊருக்கு போயிடணும்னு, அது தான் நான் விட்டுட்டு போகட்டுமா, இல்லை நீங்க வந்து கூட்டிட்டு போறீங்களான்னு

கேட்க வந்தேன்” என்று பளிச்சென்று உரைக்க,

அங்கே அப்படியே ஒரு அமைதி “யார் என்ன பேசுவது?” என்று.

சில நிமிட அமைதிக்கு பின் “எங்க முடிவு ஒண்ணுமில்லை. ராஜராஜன் சொல்றது தான்” என்று சுவாமிநாதன் சொல்லி விட, அன்பழகன் ராஜராஜனை பார்க்க, ராஜராஜன் உடனே அங்கையின் முகம் பார்க்க, யாரோ யாரை பற்றியோ பேசும் பாவனை தான்.

மகளின் இந்த பாவனை உணர்ந்தவராக பேச்சை மாற்றினார். “நீங்க எப்படி இருக்கீங்க ம்மா? உடம்பு பரவாயில்லையா” என்று அன்பழகன் கேட்க,

“அதுக்கென்ன நல்லா இருக்கேன், என் பேரன் பேத்தியோட வாரிசை கையில வாங்காம கண் மூட மாட்டேன்” என சொல்லிக் கொண்டிருக்கும் போதே…

அப்போது வேகமாக ஜகதீஷ் வந்தவன், “நம்ம ஊருக்கு வர்ற கால்வாயை அந்த ஊர்ல அவன் அவன் வேற இடத்துல திருப்பி விடறானுங்கடா. என்னன்னு கேட்டா போங்கடா றானுங்க, நமக்கு

தண்ணி வரத்து குறையுது. எல்லாம் அந்த ஆத்மன் வேலைடா" என்றான்.

வீடே ஜகதீஷை பார்க்க, அவர்கள் எதிர்பார்த்தது தானே.

"நம்ம ஆளுங்க வேற அங்க அங்க கூட்டம் கூட ஆரம்பிச்சிட்டாங்கடா, ம்ம்னு ஒரு வார்த்தை சொன்னா, அடி தடி ஆகிடும் போல"

"நண்பா யாரும் சண்டைக்கு போக வேண்டாம், சரி பண்ணிக்கலாம்னு சொல்லணும்" என்று வேகமாய் ராஜராஜன் என்ன என்று பார்க்க வெளியேற, சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் ஒரு பக்கம் வெளியேறினர்.

அன்பழகன் உடன் செல்ல முற்பட்டவரை, "நீங்க வர வேண்டாம்" என்று ராஜராஜன் வெளியில் இருந்தே கத்தி சென்றான்.

அன்பழகன் என்ன செய்ய என்று தெரியாமல் நின்றவருக்கும், அவர்களுடன் செல்ல வேண்டும் போல இருந்தது.

ஆனால் சென்றால் "உன்னால் தான் என்றோ, இவனால் தான்

என்றோ” பிரச்சனைகள் கிளம்பும் அபாயமும் இருப்பது புரிய, அதனால் தான் ராஜராஜன் தன்னை வரவேண்டாம் என்று சொல்வது புரிந்தது.

மனதை ஏதோ செய்தது!

நாட்டுக்காக ஓடும் தன்னால தன்னுடைய ஊரில் ஓடிச் சென்று என்னவென்று பார்க்க முடியவில்லையே என்ற ஆதங்கம்!

அவர் அமைதியாய் இருக்க, அங்கை அவளின் கை பேசி எடுத்தவள், அண்ணனை அழைத்து நடப்பதை சொல்ல, அவன் உடனே அரவிந்தை அழைத்து விட, இப்படி ஒரு பக்கம் ஓடியது.

அன்பழகன் எதுவும் பரபரப்பு காண்பிக்கவில்லை. கருப்பட்டி காபி அவரின் முன் நீட்டப் பட, நிமிர்ந்து பார்த்தார். தில்லை தான் நீட்டிக் கொண்டிருந்தார்.

“எடுத்துக்கங்க அண்ணா”

“எடு அன்பு, நீ குடி, உனக்கு பிடிக்கும்னு நானே போட்டேன், இது எங்களுக்கு பழக்கம் தான், பேசி முடிச்சிட்டு வருவானுங்க” என நாச்சி பேச,

அவர் அமைதியாய் எடுத்து பருகினாலும் “எல்லாம்

என்னால்” என்ற எண்ணம் ஸ்திரமாய் இருக்க, மகளை தான் பார்த்தார்.

அவரின் முகத்தில் ஒரு பரிதவிப்பை பார்த்தவள், “நான் இங்கேயே இருக்கேன், நீ இவ்வளவு மனசை போட்டு குழப்பாதீங்க” என்றாள்.

மெதுவாய் எழுந்தவர் நாச்சியை பார்த்து “நான் வீட்டை சுத்தி பார்க்கட்டுமா” என்றார்.

“உன் வீடு அன்பு போப்பா” என்று நாச்சி சொல்ல, ஒரு வறண்ட புன்னகையோடு வீட்டை வலம் வர துவங்கினார்.

பின்பு மாடி ஏறினார், அங்கிருந்து இன்னொரு மாடி ஏறினார், அது தான் அங்கே டெரஸ், அதற்கு மேலே தண்ணீர் டேங்க் இருக்க, அதற்கு செல்ல இரும்புபடி இருக்க அதன் மேலே ஏறினார்.

எத்தனை வருடங்கள் ஆனாலும் அந்த வீடு மாறவில்லை. மாற்றும் வசதி அவர்களுக்கு இருக்கவில்லை என்பது வேறு.

அந்த காலத்தில் அந்த வீடு நவீனம், அந்த ஊரில் உயரமான வீடு, வேகமாய் அதன் மீது ஏறி தண்ணீர் டேங்கின் மேல்

நின்றவர், ஊரை பார்வையிட, ஆங்காங்கே புதிதாய் வீடுகள், மாடி வீடுகள் கூட, ஆனால் யாரினதும் இவர்களை போல உயரமானதாய் இல்லை.

ஒரு பக்கம் ஊர் பசுமையாய் இருக்க மறுபக்கம் பொட்டல் காடாய் இருந்தது.

இப்போது பொட்டல் காடாய் இருக்கும் அந்த இடம் அவர் இங்கிருந்த வரை அவ்வளவு பசுமையாய் இருக்கும். அதனோடே தான் வளர்ந்தார். அவருக்கும் ராயருக்கும் இருக்கும் உறவு அலாதியானது.

ஆம்! இருந்த உறவு கிடையாது, இருக்கும் உறவு! இன்றுமே அவரின் அய்யா அவருக்கு மனதளவில் நெருக்கம் தான்.

ஏழு வயதில் அப்பா அம்மா இன்றி நின்ற போது கை பிடித்து இந்த வீட்டினுள் அழைத்து வந்தார். அங்கே வந்த பிறகு உணவு என்ற ஒன்றிற்கு அவன் தவித்ததே கிடையாது. அம்மா அப்பாவுடன் இருந்த போது கூட கஷ்ட ஜீவனம் தான். மதியம் பள்ளியில் உண்டு கொள்ள, காலை, இரவு உணவு அங்கே சூடாக, எல்லோருக்கும் முன் அவனுக்கு வந்து விடும். அதுவும் அவரின் பிள்ளைகள் பொதுவாய் கொறிக்க, அவன் நன்கு உண்பான்.

நாச்சி அவனை சமையலறை ஓரத்தில் உட்கார வைத்து

உணவு கொடுத்து விடுவார். அவன் உண்ணும் அளவு அவருக்கு மட்டுமே தெரியும்.

மற்றபடி அங்கே சொல்லும் வேலைகள் செய்து கொண்டு பெரியவானான். ராயர் விடுமுறை நாட்களில் அவரோடே வைத்துக் கொள்வார் அவரின் வேலைகளுக்கு துணையாக.

இந்த காதல் அது ஏன் அவருக்கு வந்தது என்று இதுவரை தெரியாது. நிச்சயம் ராஜலக்ஷ்மியை பிரித்து அழைத்துக் கொண்டு போகும் எண்ணமெல்லாம் இல்லை. ராயரின் குடும்ப கௌரவம் அவர்களை விட அன்பழகனுக்கு மிக முக்கியம்.

சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் அடித்து விரட்டியிராவிட்டால், அவராய் இது நிறைவேறாது என்று புரிந்து எங்காவது சென்றிருப்பார், நிச்சயம் வேறு நினைத்து இருக்க மாட்டார்.

அவர் அங்கே வந்த போதும் ராஜலக்ஷ்மிக்கு திருமணமாகி இருக்கக் கூடும் என்று நினைத்து, ராயரையும் நாச்சியையும் பார்த்து தான் ராணுவத்தில் சேர்ந்து விட்டதை சொல்லிப் போக தான் ஊருக்கே வந்தார்.

அவர்கள் அடித்து விரட்டியிருந்தாலும் அவரின் பாசம் அந்த வீட்டினோடு குறையவில்லை. நான் செய்ததும் தப்பு தானே என்ற

எண்ணம் கூட.

ஆனால் அங்கே ராஜியை அப்படி பார்த்ததும் அதுவும் அவள் கண் விழித்ததும் “செத்து போய் உங்க கிட்ட வந்துட்டேனா” என்று கேட்டதும், “பைத்தியக்காரி இவள்” என்று தோன்றிய போதும் அந்த நேரம் வேறு செய்ய இயலாமல் அவளை அழைத்துக் கொண்டு சென்று விட்டார்.

சென்று ஒரு வாரத்திலேயே தொலைபேசி மூலமாக ராயரை தொடர்பு கொண்டார். அவரோ இந்த பக்கம் கூட அவர்கள் வந்து விடக் கூடாது என்று விட்டார்.

மகள் மேல் இருந்த பாசத்தில் சொன்னாரோ, இல்லை கோபத்தில் சொன்னாரோ அவருக்கே வெளிச்சம்! அதுவும் அன்பழகனுக்கு ஊரில் இவ்வளவு கலவரம் நடக்கிறது என்று இம்மியளவும் தெரியாது. ஒரு வேளை வந்தால் ஆத்மனை ஏதாவது செய்து விடக் கூடும் என்று கூட வரவிடாமல் இருந்திருக்கலாம்.

சுவாமிநாதன் பிரச்சனைக்கு தீர்வு சொல்லும் பெரிய மனிதர் தான். ஆனால் பிரச்சனைக்குள் இறங்கும் மனிதர் கிடையாது. ஆனால் அன்பழகன் அப்படி கிடையாது இறங்கி அதனுள் புகுந்து வேலை செய்பவன், சொல்லப் போனால் ராயரின் மூளை அவன்.

அதனாலும் கூட ராயர் தன் மகளின் நல்வாழ்வு பொருட்டு ஊருக்கு வரவிடாமல் செய்திருக்கலாம்.

அவ்வப் போது இவரின் ராணுவ சிநேகிதன் ஒருவன் மூலமாக ராயருக்கு தகவல் அனுப்புவார், அவரும் கேட்டுக் கொள்வார், குழந்தைகள் பிறந்தது அவரின் முன்னேற்றம் எல்லாம் தெரியும். யாரிடமும் பகிர்ந்திராத பெருமையும் கூட, ஏன் நாச்சியிடம் கூட சொன்னதில்லை. ஆனால் ஊருக்கு வருவதற்கு அனுமதி கொடுக்கவேயில்லை.

அவருக்கே அவரின் காலம் முடியப் போகிறது என்று தெரிந்ததோ என்னவோ அவராய் அன்பழகனை வரச் சொல்ல, அவரும் மனைவி, மகள், மகன் மருமகளோடு பேரனோடு வந்தார். அப்போது பேத்தி பிறக்கவில்லை. வீட்டில் அனைவரும் முகம் திருப்ப, ராயர் மகளிடம் கூட தனிமையில் பேசவில்லை. அன்பழகனிடம் பேசினார்.

ராயரின் உயிர் இவர்களுக்காக காத்திருந்ததோ என்னவோ?

“என்னை நீங்க மன்னிக்கவே மாட்டீங்களா? என்னை பார்க்க வரச் சொல்ல இவ்வளவு நாளா?” என்று அன்பழகன் கேட்க,

“என் வீட்டு லட்சுமியை நீ கூட்டிட்டு போயிட்ட, நான்

மட்டும்னா மறந்து கூப்பிட்டிருப்பேன். நமக்குள்ள மன்னிப்பு வார்த்தையெல்லாம் தேவையில்லை அன்பு. ஆனா இவங்க எல்லோரும் கஷ்டப்பட்டாங்க, படறாங்க. இதுல உன்னை எப்படி கூப்பிட முடியும்? இவங்களையும் நான் பார்க்கணுமில்லை" என்று பேசினார்.

"நீங்க கூப்பிட்டு இருக்கணும் ஐயா, நான் இருந்திருந்தா எதுக்கு இங்க எல்லோருக்கும் கஷ்டம் வரப் போகுது, அவன் தலையை சீவி நான் உங்க காலுல வெச்சிருக்க மாட்டேன்"

மென்னகை புரிந்தவர் "அதுக்கு தான் உன்னை வரவிடலை. என்ன எல்லோரையும் கரை சேர்த்துட்டோம், பொண்ணுங்களும் பெரிய குடும்பம் வசதிகள்ன்னு நல்லா இருக்காங்க, பசங்களும் நல்ல வேலை நல்ல சம்பாத்தியம் வெளிநாட்டு வாழ்க்கைன்னு இருக்காங்க, இன்னும் ஒருத்தன் இருக்கான், அவனுக்கு தான் நான் எதுவுமே செய்யாம போகப் போறேன், இனி விவசாயம் வாய்ப்பில்லை, அவனுக்கு படிப்புமில்லை, அது தான் கவலையா இருக்கு" என்று மனக் குறையை சொன்னார்.

அவர் மனக்குறையை தான் சொன்னார் நிச்சயம் அங்கையை பெண் கேட்கவில்லை. அவரின் செல்ல பேரன் ராஜராஜன். ஆசை

ஆசையாய் சோழ மன்னனின் பெயரை வைத்தார். அன்பழகன் தான் “என் வீட்டு லக்ஷ்மியை உங்க பேரனுக்கு கல்யாணம் பண்ணி வைங்க ஐயா, உங்க வீடு பழைய படி தழைஞ்சிடும்” என்று சொல்ல,

அவருக்கு அப்போதும் யோசனை தான்!

“இவன் படிக்கலை, நம்ம புள்ள படிச்சிருக்கு, வாழ்க்கை முறையும் வேற, இவங்களுக்குள்ள ஒத்து வருமா?” என்று யோசித்த போது, நிச்சயம் ஒத்து வரும் என்று சொன்னார். இதற்கு ராஜராஜனை அப்போது கவனித்து கூடப் பார்த்திருக்கவில்லை.

ராயர் தான் “உன்னோட ஆசைன்னு தெரிஞ்சா யாரும் ஒத்துக்க மாட்டாங்க, நான் என்னோடதுன்னு சொல்றேன்” என்று சொல்லிவிட

தாத்தாவினது என்று சொன்னால் தன் மகள் ஒத்துக் கொள்ள மாட்டாள் என்று மகளிடம் உண்மை சொல்லி சம்மதம் கேட்டார்.

அந்த நேரத்தில் “சரி” என்று சொன்னவளுக்கு அதன் பிறகு பிடிக்கவேயில்லை.

ராஜராஜன் வீட்டிலும் கடும் எதிர்ப்பு. இங்கே இவர்களின் வீட்டில் ராஜலக்ஷ்மி ஒத்துக் கொள்ளவேயில்லை, மகளை அழைத்துக் கொண்டு ஊருக்கு கிளம்ப முற்பட, அன்பழகனுக்கும் அவருக்கு கடும் வாக்குவாதம். அதனை கொண்டு இந்த இரண்டு வருடமாய் பிரிவு.

ராஜராஜன் என்ற ஒருவன் தன் மகளுக்கு பொருத்தமாய் இருப்பானா என்று அந்த சில மணிநேரங்கள் யோசிக்கவில்லை. அதன்பின்பு இப்போது வரை, இனி யோசித்தாலும் பிரயோஜனமில்லை என்று விட்டுவிட்டார்.

திருமணம் முடிந்த சில மணி நேரங்களில் ராயர் தவறி விட, இப்படியாக தான் அந்த திருமணம் நடந்தது.

இரண்டு நாட்களுக்கு முன் விடியற்காலையிலேயே மனோ அழைத்து ராஜராஜன் சொல்லியதை எல்லாம் சொல்லியிருக்க, மங்கை அப்படி ஒரு அழுகை அழுதிருக்க, என்னவோ ராஜலக்ஷ்மியின் நினைவும் அதிகமிருக்க வந்திருந்தார்.

அவர்கள் கிளம்புவதை மனோ சொல்லவில்லை… அவர் வருவார் என்று அவன் நினைக்கவில்லை.

இப்போது அந்த நிலத்தை தான் பார்த்திருந்தார். இப்படி தண்ணீர் நிறுத்தி அந்த நிலம், அதனால் விவசாயமின்றி வறண்டு

விட்டதை இன்னும் கூட ஜீரணிக்க முடியவில்லை. பார்வையை ஓட்டினார், அங்கிருந்த சிறிய அளவிலான சிவன் கோவில் தெரிந்தது.

எவ்வளவு புத்திசாலி அந்த ஆத்மன் வேறு எதுவாக இருந்தாலும் ராயர் தகர்த்திருப்பார், சிவனை கொண்டு வந்து நடுவில் விட்டு விட்டான். அவர் சிறந்த சிவ பக்தர். அதனால் சிவன் கோவில் இடிப்பதற்கு அவர் எப்படி ஒத்துக் கொள்வார்.

இப்போது தான் அவர் இல்லையே…

மனோ சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்கு சென்றிருக்கிறான் என்றால் ஏதாவது நிச்சயம் செய்வான் என்று தெரியும், பார்ப்போம் என்று நினைத்தவர்,

அங்கிருந்த பசுமையின் புறம் பார்வையை திருப்ப அங்கே ஒரு இடத்தினில் கூட்டமாய் ஆட்கள்,

“நான் என்ன தவறு செய்தேன்? தனி மனித தவறுகள் ஊர் கலவரமாய் மாறியிருக்க, நான் ஏன் நிற்க வேண்டும், நான் ராயரின் வளர்ப்பு” என்று தனக்குள் சொன்னவர் வேகமாய் தண்ணீர் தொட்டியில் இருந்து இறங்கி வீட்டினுள் வந்து,

“அம்மு நான் போய் என்னன்னு பார்த்துட்டு வர்றேன்” என்று

சொல்லிச் செல்ல,

“பா, நீங்க வர வேண்டாம் சொன்னாங்க”

“மேஜர் ஜெனரல் என் அப்பான்னு பெருமையா சொல்வ, நான் இந்த பிரச்னையை தவிர்த்து வீட்ல இருக்கணுமா?” என்று கேட்க,

“போங்கப்பா” என்று விட்டாள் அவள். ஆனாலும் மனது முழுக்க பயம். அடிதடி ஆகிவிடுமோ என்று. அவர் நடக்க கூட அவரின் பாதுகாப்பு வீரன், அவனின் ஆயுதம் இப்போது கையினில் இல்லை.

சின்ன பிஸ்டல் தானே அவனின் உடையுனில் மறைந்திருக்க, அவர் நடக்க சற்று இடைவெளி விட்டு அவன். சிறிது தூர நடை ஆட்கள் கூடி இருக்கும் இடம் வந்து விட,

சுவாமிநாதன் பேசிக் கொண்டிருந்தார். “சரி செஞ்சிடலாம், பிரச்சனை வேண்டாம், நாமளா போக வேண்டாம்” இப்படியாக.

“எத்தனை நாள் விடறது. இவனுங்க நினைச்ச நேரத்துக்கு தண்ணியை நிறுத்துவானுங்களா, நீங்க ஊம்ன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க, அந்த பயலுவள வகுந்துடுறோம்”

“உங்க நிலமே தரிசா கிடைக்கு, எங்க கிட்ட விடுங்கய்யா” என்று சிலர் பேச, அன்பழகனை பார்த்ததும் அங்கே அப்படியே பேச்சு தடைபட்டது.

அது ஊர் எல்லை, கூட ஆண் பெண் என்று பேதமில்லாமல் ஒரு நூறு பேருக்கு மேல் இருப்பர். இவரை பார்த்ததும் அங்கே அப்படி ஒரு அமைதி. புது ஆட்களுக்கு தெரியாது பழைய ஆட்களுக்கு தெரியும் தானே. ஆங்காங்கே ஒரு சலசலப்பு இவர் யார் என்பது பற்றி.

சற்றும் யோசிக்கவில்லை ராஜராஜனின் அருகில் தான் வந்து நின்றார். இதுவரை அவருக்கும் ராஜராஜனுக்கு இடையில் பேச்சுக்கள் இருந்ததா என்று கூட ஞாபகமில்லை. இன்று அவன் வந்து “வாங்க” என்று சொல்லி பேசியது தான் அவரிடம் இணக்கமாய் பேசியது.

அவன் மரியாதையில்லாமல் பேசினால் கூட பொறுத்து தான் போவார். ராயரின் பேரன் கூடவே மகளின் கணவனும் அல்லவா.

அங்கே அப்பா கிளம்பவுமே, “பாட்டி நாமளும் போகலாம், நாமளும் போகலாம்” என்று நாச்சியை நொச்சி அங்கையும் கிளம்பியிருக்க, வாசுகியும் தில்லையும் அசையவில்லை.

சுவாமிநாதனுக்கு அது பிடித்தமில்லை வீட்டு பெண்கள் பொதுவில் வருவது.

ஆனால் அங்கையை போக வேண்டாம் என்று அவர்கள் சொல்லவில்லை. அங்கே போய் எதுவும் பேசிவிடக் கூடாது என்று மட்டும் தில்லை சொன்னார்.

போலிஸ் ஸ்டேஷனில் அவள் பேசிய பேச்சை தான் ராஜராஜன் அம்மாவிடம் சொல்லியிருந்தானே.

இவர்கள் கூடி நிற்பதை பார்த்ததுமே ஆத்மனுக்கு செய்தி சென்று விட, அவரும் ஊர் எல்லைக்கு ஆட்களை திரட்டி வந்தார்.

அவரும் வர... அங்கையும் வர... இருவரும் எதிர் எதிர்,

அங்கே எல்லோரையும் விட முறைத்து நின்றது அவர்கள் இருவருமே!

# அத்தியாயம் 11

அங்கையை பார்த்ததும் அப்படி ஒரு கோபம் துவேஷம் பொங்க, “என்ன பொண்ணு உன் மாமன் வீட்டுல இத்தனை நாள் இவனுங்க வேட்டி கட்டினாங்களா, இல்லை என்ன கட்டினாங்கன்னு கூட தெரியாம இருந்தானுங்க, இப்போ நீ வரவும் வீரம் வந்துடுச்சோ” என்று எகத்தாளமாய் சொல்ல,

அப்படி ஒரு கோபம் இந்த பக்கம் எலோருக்கும் பொங்க, அதையும் விட ராஜராஜன் ஆத்திரத்தின் உச்சிக்கு சென்று அவனின் கட்டுப்பாட்டை முற்றிலும் இழந்து, “என்னடா சொன்ன?” என்று ஆத்மனை நோக்கி பாய,

அதையும் விட மின்னல் வேகத்தில் அவனை பிடித்து இழுத்து அன்பழகன் நிறுத்தினார்.

“விடுங்க, விடுங்க” என்று அவன் திமிர, அவரின் உடன் வந்த பாதுகாவலனிடம் “இவரை பிடி விடாதே” என்று ஹிந்தியில் சொல்லியபடி அவனிடம் கொடுக்க,

ராஜராஜனால் இம்மி கூட அந்த பாதுகாவலனிடம் இருந்து

அசைய முடியவில்லை.

அதற்குள் அருகில் வந்த அங்கை “லீவ் ஹிம்” என்றவள், ராஜராஜனின் கையை பிடித்துக் கொண்டு, “ப்ளீஸ், இது அவர் பிரச்சனை அவர் பார்க்கட்டும்” என்றாள் அவளின் அப்பாவை காண்பித்து.

ஒரே நொடியில் அவளிடமிருந்து ராஜராஜனால் திமிறி விடு பட்டிருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. எல்லோர் பார்வையும் அவர்கள் மீதிருக்க, அவள் உரிமையாய் கை பிடித்திருக்க கையை உதறினால் அது அவளுக்கு ஆத்மன் முன் கீழிறக்கமாய் போகும் என்று அமைதியாய் நின்று கொண்டான்.

ஆத்மனுக்கு அன்பழகனை யாரென்று கூட தெரியவில்லை, “என்னடா அடிக்க வருவீங்களோ? கையை வெச்சிடுவியா நீ? எங்க வை பார்க்கலாம்?” என்று அப்போதும் ராஜராஜனை பார்த்து கத்தியவர்,

“அங்க போலிசை கூட்டிட்டு வந்த, இது யாரு?” என்று அலட்சியமாய் அங்கையை பார்த்து கேட்க,

“ம்ம், இது மிலிட்டரி” என்றாள் நக்கலாய்.

ஆத்மன் சுதாரித்து பார்க்க, “அங்க இங்க பேசவேண்டாம், என் கிட்ட பேசு” என்று முன் சென்று நின்றார் அன்பழகன்.

“பிரச்சனை உனக்கும் எனக்கும் தான், ஆனா உனக்கு என்னை யார்ன்னு கூட தெரியலை, பொண்ணை கூட்டிட்டு போனது நான், இல்லையில்லை சாகக் கிடந்தான்னு தூக்கிட்டு போனேன் அதுதான் நிஜம்”

“அப்படியா அப்போ இத்தனை நாள் நீ எங்க ஒளிஞ்சிட்டு இருந்த” என்று கேட்ட ஆத்மனின் கண்களில் அவ்வளவு குரோதம்.

“உன் கண்ல படலைன்னா ஒளிஞ்சிட்டு இருந்தேன்னு அர்த்தமா, என்னை எங்க அய்யா இங்க வரவேண்டாம்னு சொல்லிட்டார், ஒரு வாரத்துல இருந்து வரக் கேட்டேன், முப்பது வருஷத்துக்கு அப்புறம் தான் என்னை வரவிட்டிருக்கார், நான் என்ன பண்ண?” என்று அன்பழகன் சொல்ல… அங்கிருந்த ராஜராஜனின் வீட்டினர் அனைவருக்குமே இது புதிய செய்தி.

“என்ன இப்போ பெரிய பதவில இருக்கேன்னு பொய்

சொல்றியா”

“எனக்கு என்ன பொய் சொல்லணும்னு அவசியம். கேட்டுபாரு, ராயர் அய்யாவை தெரிஞ்ச உங்க ஊருக்காரன் யார் இருந்தாலும் கேட்டுப் பாருடா, அவரோட பஞ்சாயத்துக்கு எல்லாம் யார் போவான்னு. பதினாறு வயசுல இருந்து அவரோட போறேன், பழைய ஆளுங்க யார் இருந்தாலும் கேட்டுப் பாருடா?” என்று ஆவேசமாய் பேசியவர்,

“அய்யா என்னை வரவே விடலை, வந்திருந்தா தெரிஞ்சிருக்கும் சேதி உனக்கு. இவங்க எல்லாம் பெரிய மனுஷங்கடா, சொந்தப் பிரச்சனையை ஊர் பிரச்சனையாக்கி அவங்களை எதுவும் செய்ய விடாம செஞ்சிட்ட, இதனால் தான் எங்க அய்யா என்னை வர விடலையோ என்னவோன்னு இப்போ தோணுது”

“அவங்களை கேட்கறியே, நீ என்ன கட்டியிருக்க, சொந்த பிரச்சனையை ஊர் பிரச்சனையாக்கி இருக்க, தைரியமிருந்த ஊர் பிரச்சனையை முடிச்சு விட்டுட்டு என்கிட்டே வா நாம பேசிக்கலாம்”

அப்போதும் ஆத்மன் அசையாமல் “உன்னை பார்க்கறது எனக்கு பிரச்சனை கிடையாது, நீயும் உன் பதவியை உபயோகிக்காம வா. ஆனா ஊர் பிரச்சனை முடியாது” என்றார்.

அப்போது அர்விந்த் வந்தான் அவன் ஜீப்பினில் கூட, ஒரு வேன் முழுவதும் ஆட்கள், இறங்கியவன் அன்பழகனை பார்த்ததும் அருகில் வந்து விறைப்பாய் ஒரு சல்யூட் வைக்க… அதனை தலையசைத்து ஏற்றுக் கொண்டார்.

“சர் இங்க ஊர் பிரச்சனைன்னு தகவல் வந்தது”

“எஸ் ஆஃபிசர், நீங்க இன்வெஸ்டிகேட் செஞ்சு, நீங்க ப்ரோசீட் பண்ணிக்காங்க” என்றவர்,

ஆத்மனிடம் திரும்பி “தைரியமிருந்தா ஊர் பிரச்சனையை கிளப்பாம சொந்த பிரச்சனையா நினைச்சு வா, எதுன்னாலும் பார்த்துக்கலாம். நான் ஊருக்கே போனா கூட சொல்லியனுப்புடா, என் பொண்ணு இங்க தான் இருப்பா. அடுத்த நாள் நான் இங்க இருப்பேன்”

“அப்புறம் நீ வேட்டி கட்டின ஆம்பிளையா இருந்தா

தொந்தரவை இவங்களுக்கு குடுக்காம எனக்கு குடு, மீறி கொடுத்த…” என்று சொன்னவரின் பார்வையில் இருந்த ரௌத்திரம், கூடவே ஒரு எட்டு முன்னே வைக்க, ஆத்மன் அவரை அறியாமல் பின்னால் சென்றார்.

“ராயர் ஐயாவோட குடும்பம் உன்கிட்ட இருந்து இனி என் பாதுகாப்புல தான். உன்னை காப்பாத்த தான் ஊருக்குள ஐயா என்னை வர விடலையோ என்னவோ? பார்த்து இருந்துக்கோ” என்று சொன்னவர்,

சுவாமிநாதனிடம் “என்ன பிரச்சனைன்னு சொல்லிட்டு வாங்க” என்று சொன்னவர், ராஜராஜனை பார்த்து “இது என் பிரச்சனை, நான் தான் பார்க்கணும், நீங்க எதுவும் சண்டை போடக் கூடாது” என்று சொல்லி,

நாச்சியை பார்த்தவர் “நாம போலாம்மா” என… நாச்சி செல்ல… கூட அங்கையும் செல்ல, அதுவரை அங்கே அன்பழகன் மற்றும் ஆத்மனின் குரல் மட்டுமே, இப்போது சலசலவென்று இரண்டு பக்கமும் பேச்சு.

இப்படியாக ஒரு பஞ்சாயத்து!

இதோ அங்கை இங்கே இந்த வீட்டிற்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. அவளுக்கு இங்கே இன்னும் பழகவில்லை. பழக்க வழக்கங்கள், சமையல் எல்லாம்.

முக்கியமாய் ஆட்கள் இன்னும் பழகவில்லை. ஏதோ தனி தீவில் இருப்பது போல ஒரு உணர்வு. இதற்கு வீட்டில் ஆட்கள் அதிகம் கூடவும் ஆட்கள் வந்த வண்ணமும் சென்ற வண்ணமும் இருந்தனர்.

அந்த வீட்டின் பெண் மக்கள் இருவர் அதாகப்பட்டது சுவாமிநாதனின் மற்றும் தமிழ்செல்வனின் மகள்கள் வந்து சண்டை போட்டு சென்றனர்.

“நாங்க ஏதாவது செய்யறோம்னு சொன்னா வேண்டாம்னு சொல்லிட்டு, இப்போ அத்தை வீடு செஞ்சா மட்டும் சும்மா இருக்கீங்க, சரி ன்னு சொல்லிட்டீங்க” என்று…

என்ன செய்வார் சுவாமிநாதன், அன்பழகனும் மனோவும் மொத்தமாய் அவர்களை ஆட்டுவித்தனர் என்று தான் சொல்ல வேண்டும்.

அதற்கு முழு காரணமும் ராஜராஜன், செய்யட்டும் என்று விட்டுவிட்டான். எந்த தடையும் சொல்லவில்லை. அவனுக்கு நிச்சயம், ஊருக்குள் பெரிய ஆட்கள் தான். ஆனால் அதனை

தாண்டி ஒன்றும் செய்ய முடியாது. உண்மை புரிந்தவன், பணமோ பதவியோ அவர்களிடம் கிடையாது. பாரம்பரியத்தையும் பெருமையையும் வைத்து எதையும் அசைக்க முடியாது என்பது அவனுக்கு திண்ணம்.

அண்ணன்கள் "எதுக்குடா அவங்க தேவையில்லை" என, "செய்யட்டும் விடுங்கடா" என்று விட்டான். புத்திசாலித்தனமாய் அவனின் தலையில் எதையும் போட்டுக் கொள்ளவில்லை, ஈகோவும் வர விடவில்லை.

அவர்களை செய்யட்டும் என்று விட்டு விட்டான், ஆனால் என்ன செய்யவேண்டும் என்று சொல்ல மட்டும் செய்தான்.

இதோ சிவன் கோவிலை நேற்று தான் இடித்து இருந்தனர். ஆத்மனின் அந்த இடத்தை விலைக்கு கரிஷ்மாவின் அப்பாவின் கட்டுமான கம்பனி வாங்கியிருந்தது. அவர்களுடையது பப்ளிக் லிமிடட் கம்பனி. மிகப் பெரிது. அதனால் தனியாய் யாரையும் குற்றம் சொல்ல முடியாது.

அதை மட்டுமல்ல இவர்களின் நிலத்திற்கு தண்ணீர் வரும் வழியில் இருக்கும் நிலங்கள் அத்தனையும்.

சொல்லப் போனால் ஒன்றிற்கு பத்து மடங்கு பணம் தான். பணம் கொடுக்காமல் மிரட்டியே கையெழுத்தை வாங்கியிருக்க

முடியும், அப்படிப்பட்ட ஆட்கள் தான் நடுவில் நின்றனர். ஏனென்றால் அவர்கள் வடக்கு இவர்கள் தெற்கு.

மனோவின் பெயர் எதிலும் வரக் கூடாது என்பதற்காக நேரடி தலையீடு எதையும் அவர்கள் செய்யவில்லை எல்லாம் ஆட்கள் மூலமே!

“கையெழுத்து போடுடா” என்று சொன்ன போது போடுவதை தவிர வேறு வழியே இல்லை, “இந்தா எடுத்துக்கோ” என்று பணத்தை வீசி எரிந்து விட்டு சென்றனர்.

வீசி எரிந்தால் மட்டும் பணம் அதன் மதிப்பை இழந்து விடுமா என்ன? ஆத்மனின் பெட்டிக்குள் சென்றிருந்தது மனைவி மக்கள் மூலமாக.

“இனி இந்த பகை நீடித்தால் நான் உங்களுடன் வாழ்ந்த இத்தனை கால வாழ்க்கைக்கு அர்த்தமில்லை” என்று மனைவி சொல்லிவிட வேறு வழியின்றி சற்று அடங்க நினைக்க,

அவரை மொத்தமாய் அடக்கினான் மனோ… செய்தது தான் அவன். இடையில் இருந்தது கரிஷ்மாவின் கட்டுமான கம்பனி மட்டுமல்ல, மும்பை மாஃபியா கூட அவர்களுக்கு பயந்து ஆத்மன் அப்படியே அடங்கி விட்டார்.

என்ன செய்ய வேண்டும் என்று சொன்னது ராஜராஜன், எந்த இடமெல்லாம் வாங்க வேண்டும் என்று சொல்ல, அவர்கள் ஊருக்கு நீர் வரும் வழியில் இருக்கும் அத்தனை இடங்களும் வாங்கப் பட்டது. கோடிக்கணக்கான பணம், ஆனால் அது கரிஷ்மாவின் வீட்டினருக்கு ஒன்றுமே இல்லை.

தண்ணீரை கொண்டு தான் அங்கே இவ்வளவு நாளும் அமைதி, இனி அதை எதுவும் செய்ய முடியாது எனும் போது சுவாமினாதனிடமும் தமிழ்செல்வனிடமும் ஒரு நிமிர்வு வந்திருந்தது.

அப்படி ஒன்றும் வசதி வாய்ப்புகள் பெருகிவிடவில்லை அதற்கு தடையாய் இருந்த தடைக் கற்கள் நீக்கப்பட்டன அவ்வளவே! இனி அவர்களின் நிலத்தை செப்பனிட்டு பயிர் செய்யமுடியும், தோப்பு எல்லாம் பராமரிக்க முடியும். ஆனாலும் லாபம் வர வருடமாகும்.

வசதி பெருக சில வருடங்கள் ஆகலாம்! இப்படி அந்த விஷயங்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்த போதும் உறவுக்குள் எதுவும் சரியாகவில்லை.

அங்கையை இங்கே விட்டு அன்பழகன் சென்றிருக்க, மனோ கரிஷ்மா மற்றும் குழந்தைகளுடன் ஒரு முறை வந்து ஒரு அரை மணிநேரம் இருந்து பார்த்துச் சென்றான்.

ராஜலக்ஷ்மி வரவேயில்லை, அழைப்பில்லாமல் மகளை கொண்டு வந்து விட முடிந்தவரால் மனைவியை அழைத்து வர முடியவில்லை. அங்கே வந்தது அன்பழகனின் மகள், ராஜராஜனின் மனைவியாக, ராஜலக்ஷ்மியின் மகள் எங்கேயும் இல்லை.

அங்கையர்கரசி மட்டும் தான் இங்கே, ராஜராஜன் அவனின் அரிசி மில்லில் தங்கி கொள்கிறான். வீட்டில் தங்குவதில்லை.

அவர்களின் ஊர் பிரச்சனை தான் சரியானது உறவுப் பிரச்சனை இல்லவே இல்லை. அங்கையாய் பேசினால் எல்லோரும் பேசினர். ஆனால் அவர்களாய் பேசவில்லை, சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் வாசுகியும்.

தில்லை நன்றாய் பேசினார். உண்மையில் அந்த வீட்டோடு அவளை இழுத்து பிடித்தார். நாச்சி எப்போதும் போல தான்.

வீட்டிற்கு ராஜராஜனின் அண்ணன்களும் அக்காள்களும் வரும் போது சிறிது நேரம் அவர்களுடன் இருப்பவள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்வாள். பின்னே ரூமின் உள் சென்று அடைந்து கொள்வாள்.

புது இடம் ஒன்றில் சிவன் கோவில் கட்ட அடிக்கல் நாட்ட அடுத்த மாதம் நாள் குறித்து இருந்தனர். அடி மண்ணோடு பிரித்தெடுத்த சிவனை புது மண்ணில் பதிக்க எல்லா ஏற்பாடும்

நடந்து கொண்டிருந்தது.

இதோ அன்பழகன் டெஹ்ராடூன் சென்று விட ராஜலக்ஷ்மி இன்னும் மனோவின் வீட்டில். முன்பு அன்பழகன் முறைத்து கொண்டிருக்க, இப்போது ராஜலக்ஷ்மி "என்னுடைய மகளுக்கு நான் யார்? எல்லாம் உங்களின் முடிவா?" என்று நினைத்தவர், அப்பாவின் பேச்சை கேட்டு எல்லாம் செய்து விட்ட அங்கையர்கண்ணியோடு பேசுவதில்லை.

மொத்தத்தில் ஆளுக்கு ஒரு பக்கம் எல்லாம் துருவங்களாய் நின்றனர்.

அடுத்த நாள் ஞாயிறு விடுமுறை என்பதால் விகாஸ், ஸ்ருஷ்டியை, கரிஷ்மா அங்கையிடம் கொண்டு வந்து விட வந்தாள். மனோ அவளிடம் கைபேசியில் பேசியிருந்தான்.

"இன்னும் ரெண்டு பேரும் ஒரு வாரம் இங்கே தான், மேனேஜ் பண்ணிடுவியா அங்கை" என்று கரிஷ்மா கேட்க

"அதெல்லாம் அண்ணி நான் பார்த்துக்கறேன்" என்றாள். குழந்தைகளின் மெடிசின் லிஸ்ட் கொடுத்து, ஏதாவது தொந்தரவு வந்தால் அவசரத்திற்கு என்ன மருந்து, பின்னே எந்த டாக்டரிடம்

அவர்கள் திருச்சியில் காண்பிக்கின்றனர் என்று சொல்லி குழந்தைகள் இருவரையும் முத்தமிட்டு கிளம்பினாள்.

“டேக் கேர் அம்மா, பத்திரமா இருங்க” என்றான் விகாஸ் பெரிய மனிதனாய். அது அவனிடம் ராஜலக்ஷ்மி சொல்லும் வார்த்தை.

“அதெல்லாம் பத்திரமா இருந்துக்குவேன்” என்று மகனிடம் சொல்லி சென்றால் கரிஷ்மா.

வீடே வேடிக்கை பார்த்தது, அதையும் விட அவர்களுக்கு இதெல்லாம் பழக்கமில்லை. பிள்ளைகள் என்பது அவர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கம். அவர்கள் பிறந்து விட்டால் எல்லாம் அவர்களை சுற்றி தான்!

இதோ கரிஷ்மாவை ஆச்சரியமாய் பார்த்தனர். ஆம்! மனோவும் கரிஷ்மாவும் அவர்களின் நண்பர்களுடன் ஒரு வாரம் சுற்றுலா செல்கின்றனர். எங்கே இந்தோனேஷியா பாலி தீவிற்கு,

ராஜலக்ஷ்மியை அங்கே வீட்டில் தனியாய் விட்டிருந்தனர் தகவலை அன்பழகனுக்கு சொல்லியிருக்க, அவர் கிளம்பி வந்து விடுவார். அவர்களுக்குள் ஒரு புறம் எல்லாம் சரியாக, கூடவே இவர்கள் ஊர் சுற்ற என்று.

இங்கே ராஜராஜனுக்கும் அங்கையர்கண்ணிக்கும் திருமணமாகி இரண்டு வருடங்கள், இப்போது இவனின் வீட்டினில் இருக்க, வந்த பிறகும் இன்னும் இருவரும் தனி தனியே தான்!

காலை வந்து குளித்து உணவு உண்டு விட்டு செல்வான். மதிய உணவு அவனுக்கு சென்று விடும், இரவு உணவு வந்து உண்பவன், மீண்டும் ஒரு குளியல் போட்டு உறங்க மில்லிற்கு சென்று விடுவான்.

நாச்சி தான் முனகிக் கொண்டே திரிவார். ஆனால் அவர் பேச்சை அவன் கேட்பதில்லை.

தில்லை சமாதானம் செய்வார், “சின்ன பிள்ளைகளா அத்தை. அவங்க அவங்க வாழ்க்கை அவங்க பார்த்துக்குவாங்க” என்று.

“என்ன அம்மா நீ? கொஞ்சமும் கவலை இல்லையா உனக்கு” என்று நாச்சி குறை படும் போது, “உங்க பேரன் மாதிரி ஒரு பையனும், உங்க பேத்தி மாதிரி ஒரு மருமகளும் இருந்தா, இப்படி தான் அலட்டிக்காம இருக்கணும்” என்று வியாக்கியானம் பேச,

“அத்தை நான் ஸ்ருஷ்டிக்கு இட்லி ஊட்டுறேன், நீங்க இவனுக்கு தோசை சுடுங்க” என்று சொல்ல,

“பாருடா மாமியாருக்கு மருமக வேலை வைக்கிறா” என்று சொல்லியபடி ராஜராஜன் வந்தான்.

“எல்லாம் உன்னால தாண்டா, நீ இங்க இருந்தா எனக்கு ஏன் வேலை வைக்க போறா?”

“சரி விடு நான் தோசை சுடறேன்” என்று அவன் சொன்னது தான்,

“அம்மாடி அம்மா, உங்கப்பா கிட்ட என்னை அடி வாங்க வைக்க ப்ளான் பண்றியா, போடா இங்க இருந்து” என்று சமையல் அறையில் இருந்து துரத்த. இவர்களின் விளையாட்டை பார்த்தவளுக்கு ராஜலக்ஷ்மியின் ஞாபகம். செல்ல அம்மா, செல்ல மகள், எல்லாம் மாறிவிட்டது!

அதற்குள் “மாமா” என்ற படி அவன் மேலேற ஓடி வந்த விகாஸை தூர நிறுத்தியவன், “மாமா குளிச்சிட்டு வர்றேன்” என்று சென்று விட்டான்.

அவன் குளித்து விட்டு வரும் போது, உணவு மேஜை மேல் ஒரு புறம் ஸ்ருஷ்டி அமர்ந்திருக்க, அவளுக்கு உணவு ஊட்டிக்

கொண்டிருந்தாள் அங்கை. பக்கத்தில் இன்னொரு சேரில் விகாஸ் அமர்ந்து உண்டு கொண்டிருந்தான்.

அவர்களது பெரிய உணவு மேஜை, பதினாறு பேர் அமரக் கூடியது, தேக்கு மரத்திலானது, பல வருடங்கள் பழமையானது. ஆனாலும் புதிது போல பளபளக்கும், அப்படி அதனை வைத்திருப்பர் வாசுகியும் தில்லையும்.

ஒரு புறம் இவர்கள் அமர்ந்திருக்க, இன்னொரு புறம் சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் நாச்சியும் அமர்ந்திருக்க, அவர்களுக்கு வாசுகி பரிமாற, தில்லை உள்ளே தோசை வார்த்துக் கொண்டிருந்தார்.

“மாமா கம் சிட்” என்று விகாஸ் சொல்ல, அவனும் விகாஸ் பக்கத்தில் வந்து அமர, அமர்ந்தவுடனே “நான் பிக் க்ரேனி கூட படுத்துக்குவேன்” என்றவன் நாச்சியை பார்த்து கத்தி இதனை சொன்னான்.

கத்தும் அவனை “விக்கி கத்தாத, என் கூட தான் நீ படுக்கணும், பாட்டியை டிஸ்டர்ப் பண்ணக் கூடாது” என்று அங்கை அதட்ட,

“நோ அத்தை, அம்மா சொல்லி விட்டாங்க, நான் உங்களுக்கும் மாமாக்கும் நடுவுல படுக்க கூடாது. உங்க பெட் சின்னது, பேபிக்கு மட்டும் தான் இடமிருக்கும். நான் பாட்டி கூட தான் படுக்கணும்னு சொல்லியிருக்காங்க” என்று சத்தமாய் பேச,

அங்கே அப்படியே ஒரு அமைதி!

இன்னும் அங்கை வீட்டினருக்கு தெரியவே தெரியாது, அவர்கள் சேர்ந்து இருப்பது இல்லை என்று.

அங்கே பெரியவர்களுக்கு உண்மையில் மனம் கனத்து போனது, ஏதேனும் தவறு செய்கிறோமோ? என.

அங்கை விகாஸிடம் “விக்கி எங்க பெட் பெருசு, நான் மாத்தினது அம்மாக்கு தெரியாது. சோ நீ என்கூட தான் படுக்கணும்” என்று சொல்லி விட,

“ம்ம், அப்போ சரி, எனக்கு இந்த டைம் ஹெர்குலிஸ் கதை தான் வேணும்” என்று கேட்டான்.

“சொல்லிடலாம்” என்று பதில் அவனுக்கு சொல்லிக் கொண்டிருந்தாலும், பார்வை முழுக்க ஸ்ருஷ்டியின் மேல், அவள்

உண்டு முடித்ததும் அவளுக்கு வாய் துடைத்து அவளை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

“நீயும் சாப்பிடு அங்கை” என்ற தில்லையிடம்,

“இல்லை அத்தை, எனக்கு பசிக்கலை” என்று சொல்லி உணவு அறைக்கு பக்கவாட்டில் இருக்கும் கதவை திறந்து அங்கிருந்த தோட்டத்திற்கு செல்ல,

“இந்த டைம் அங்க போகாத, ஏதாவது பூச்சி இருக்க போகுது” என்று வாசுகி அதட்டினார்.

ஒன்றும் மறுத்து பேசமால் “சரி” என்று உடனே சொல்லி, “விக்கி நீ சாப்பிட்டு வா, அத்தை ரூம்ல இருக்கேன்” என்று மாடி ஏறி விட்டாள்.

முகத்தில் ஒரு தொய்வு, விகாஸ் இப்போது ராஜராஜனிடம் பேச்சுக் கொடுக்க, அவன் பொறுமையாய் பதில் சொல்லி நிமிர்ந்த போது, உணவு மேஜையே காலியாக இருந்தது. அப்பா, பெரியப்பா, பாட்டி, பெரியம்மா என்று ஒருவரையும் காணோம்.

அவன் விகாஸ் தில்லை மட்டும் இருந்தனர்! விகாஸ் உண்டு

முடிக்க “நீ போ விக்கி, அத்தை கிட்ட போ” என்று தில்லை அனுப்ப அவனும் சென்று விட்டான்.

“பசிக்குதும்மா” என்று ராஜராஜன் சொல்ல அவனுக்கு பரிமாறிக் கண்டே அவரும் உண்டவர், அவன் உண்டு முடித்ததும் “நீ செய்யறது சரியில்லை ராஜா” என்றார்.

“என்னம்மா?” என்றான்.

“நீ இப்படி மில்லுக்கு போய் படுக்கறதுல, எனக்கு உடன் பாடு இல்லை” என்று பேசினார்.

“வேற என்ன செய்வாங்க? அவங்கப்பா கொண்டு வந்து விட்டுட்டு போயிட்டார்ன்னு அவ கட்டாயத்துல இங்க இருக்கா, அவளுக்கு என்னை பிடிக்காது. அப்போ மான ரோஷம் விட்டு நான் அவளோட பேசணுமா?” என்று முறைக்க,

“ஏன்? ஏன் பேசினா என்ன குறைஞ்சிடுவ நீ?” என்றார் கோபமாக.

“அவ தான் உன் வீட்டுக்கு வந்திருக்கா, நீ ஒன்னும் அவ

வீட்டுக்கு போகலை. அப்பா அம்மா எல்லோரையும் விட்டு வந்திருக்கா, நீ பாட்டுக்கு கொஞ்சமும் கண்டுக்காம சுத்தற, நீ இப்படி செய், அப்படி செய்ன்னு நான் எதுவும் சொல்லப் போறது கிடையாது, ஆனா இதை சரி செய்ய வேண்டியது உன்னோட பொறுப்பு"

"மா, அவளுக்கு என்னை பிடிக்கலை"

"இருந்துட்டு போகட்டும், கல்யாணமானவங்க எல்லாம் பிடிச்சு பிடிச்சு வாழ்றாங்கன்னு நினைக்கறியா, ஒரு இருபது சதவிகிதம் பேர் அப்படி இருந்தாலே அதிகம். பாக்கி எல்லாம் ஒரு கட்டாயத்தின் பேர்ல, இல்லை பிள்ளைகளுக்காக, இல்லை சமுதாயத்துக்கு முன்ன தாங்க தாழ்ந்து போயிடக் கூடாதுன்றதுக்காக வாழறாங்க. இன்னும் எவ்வளவோ காரணம் சொல்லலாம்"

"அவங்களை எல்லாம் பிடிச்சு வைக்கறது காதல் இல்லை, ஒரு சகிப்பு தன்மை, இது தான் நிதர்சனம்! ஒழுங்கா சேர்ந்து வாழ்ந்து பிள்ளை குட்டிய பெத்துக்கர வழிய பாரு"

"அவளுக்கு உன்னை பிடிக்கலைன்னா போகுது, உனக்கு

அவளை பிடிக்க வைடா, அப்போ அவ என்ன பண்ணினாலும் உனக்கு தப்பா தோணாது. எனக்கு இதுக்கு மேல சொல்லத் தெரியலை. நம்ம வாழ்க்கை நம்ம கைல, அதை நல்லா ஞாபகம் வெச்சிக்கோ” என்றவர்,

“இனி நீ மில்லுக்கு படுக்க போகக் கூடாது” என்று கட்டளையாய் சொல்ல, அவரை மீறி செல்ல மனம் இடம் கொடுக்காததால், அப்படியே அமர்ந்திருந்தான்.

“இதுல பால் இருக்கு” என்று பெரிய பாத்திரத்தையும் டம்பளர்களையும் கொடுத்து, “குடிச்சிட்டு படுங்க” என்றவர் கூடவே,

“அவளோட நீ படுக்கையில படுப்பியோ, இல்லை கீழ தனியா படுப்பியோ? அது உங்க வரைக்கும், ஆனா இனி உங்க விஷயம் வெளில வரக் கூடாது” என்று சொல்லி போக,

“மா” என்று கத்தினான்.

“என்னடா?” என்று பதிலுக்கு தில்லை அதட்ட,

“அப்போ கூட நான் தான் கீழ படுக்கணுமா? அவ படுக்க கூடாதா? என்று தீவிரமாய் சண்டையிட்டான்.

அவனின் அருகில் வேகமாக வந்தவர், சுற்றும் முற்றும் பார்த்து யாரும் இல்லை என்று தெரிந்த பின்,

“டேய், என் வாயை புடுங்காத, போடா மேல” என்று கத்த,

“தில்லை” என்ற தமிழ்செல்வனின் குரல் உரத்து ஒலிக்க,

“இதோ வர்றேங்க” என்று சொல்லி முகத்தை சாந்தமாய் வைத்துக் கொள்ள,

“மா, எப்படிம்மா இப்படி மாறுற” என்று ராஜராஜன் ஆச்சர்யப் பட்டான்.

“நான் மாறாதது உன் கிட்ட மட்டும் தான். என்னால உன்கிட்ட எதுவும் பேச முடியும், உன் மனைவிக்கும் நீ அப்படி ஒரு சுதந்திரத்தை தான் கொடுக்கணும்” என்று பேச,

கையில் இருந்த டம்பளரில் சிறிது பாலை ஊற்றியவன் “முதல்ல நீ கொஞ்சம் குடி” என்றான்.

அதற்குள் மீண்டும் தில்லை என்ற குரல் கேட்டது.

“டேய், அவருக்கு நான் இன்னும் படுக்கை தட்டி போடலைடா, தூக்கம் வருமா இருக்கும்” என்று போக எத்தனிக்க,

“குடி” என்று அவரை அதட்டியவன்,

“வருவாங்காப்பா” என்று அவன் அதட்டலாய் குரல் கொடுக்க, அதன் பிறகு ஏன் தமிழ்செல்வன் பேசப் போகிறார்.

அம்மா சென்றதும், “எங்கம்மா வேற பால்லாம் என்கிட்டே கிட்ட கொடுத்து, ஏதோ முதல் ராத்திரிக்கு அனுப்பற மாதிரி அனுப்புது, எல்லாம் என் நேரம், இதை எடுத்துட்டு போய் அவ கிட்ட குடுத்தா, என்னை பார்த்து சிரிக்க போறா” என்று நினைத்துக் கொண்டே சென்றான்.

ஆனால் அவள் சிரிக்கவேயில்லை.

# அத்தியாயம் 12

ராஜராஜன் மேலே சென்று பார்த்தபொழுது, அங்கையற்கண்ணி படுக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டிருக்க, முகம் அழுத பாவனையில் இருந்தது.

ராஜராஜனிற்கு பார்க்கவே பாவமாக இருந்தது. அவனின் மனதில் அப்போது உதித்த எண்ணம் இது தான், "என்னை பிடிக்கலை, என்னோட வாழ முடியாதுன்னா, முடியாதுன்னு சொல்லிட்டு போக வேண்டியது தானே. எதுக்கு இப்படி வந்து இங்க உட்கார்ந்து இருக்கணும்"

சில சமயம் அவளோடு வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று மனம் விழைந்திருந்தாலும், இந்த இரண்டு வருடத்தில் ஒரு சலிப்பு வந்திருந்தது. அதுவும் அவனை வீட்டின் வெளியில் படுக்க வைத்தது "ச்சே, இவ எனக்கு வேண்டாம்" என்றே தோன்ற வைத்திருந்தது. அதனால் தான் அன்பழகனிடம் அப்படி சொன்னான். அவர் என்னடா வென்றால் இவளை வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு போய்விட்டார்.

"இவர்களுக்கு நான் பிணையா?" என்ற கோபம் இப்போது

சற்று அதிகமாய் தான் இருந்தது. முன்பு பலமுறை பேச முயற்சித்து இருந்தான், ஆனால் அங்கையற்கண்ணி இடம் கொடுக்கவில்லை.

ஆனால் அவள் வீட்டிற்கு வந்த பிறகு அவன் பேச முயற்சிக்கவில்லை. வேண்டுமென்றால் வரட்டும் என்று நினைத்திருக்க அவள் பேசுவதாய் காணோம்.

இதோ இப்போது அம்மாவின் கட்டாயத்தின் பேரில் வந்து விட்டான். அவள் பேசுகிறாளோ இல்லையோ தான் இன்று பேசிவிட வேண்டும். “என்னோடு வாழ விருப்பமிருந்தால் இரு, இல்லை கிளம்பிக் கொண்டே இரு” என்பது போல.

அவளிடம் பார்வையை நிலைக்க விட்டுக் கொண்டே தான் இந்த யோசனைகள் எல்லாம். ஆனால் அவளின் கவனம் இவனிடம் திரும்பவில்லை. பார்வை எங்கோ வெறித்துக் கொண்டிருந்தது. ஸ்ருஷ்டி அவளின் நெஞ்சத்தில் சுகமாய் மஞ்சம் கொண்டிருந்தாள். குழந்தைக்கு பாதி உறங்கியும் உறங்காத நிலை.

“அம்மா பால் குடுத்து விட்டாங்க” என்று சொல்ல, அவளிடம் ஒரு திடுக்கிடல் இவனை அங்கே எதிர்பார்க்கவில்லை போல.

அதற்குள் அவளின் பக்கத்தில் படுத்திருந்த விகாஸ், “ஷ்”

என்று வாயில் விரல் வைத்தவன், “பாப்பா தூங்கறா, அத்தைக்கு மூட் சரியில்லை” என்று ரகசியம் பேசினான்.

“பாப்பாக்கு பால் குடிக்க வெச்சு, தூங்க வைக்கலாம்” என பதில் ரகசியம் விகாஸ் போலவே பேச, அங்கையை பார்த்தான் விகாஸ்.

“நான் நகர்ந்தா இவ எழுந்திடுவா விக்கி, அப்புறம் அழுவா, மாமாவை இவளோட சிப்பர்ல ஊத்திக் கொடுக்க சொல்லு” என்று சொல்ல,

“எங்க இருக்குன்னு கேளு” என்று இவன் சொல்ல, இப்படியாக விக்கி நடுவில் நிற்க, அவள் சொல்ல சொல்ல இவன் செய்து கொடுத்தான்.

ஸ்ருஷ்டி பால் குடித்ததும் நன்கு உறங்கிவிட, விகாஸிற்கு பால் விட்டு கொடுத்தவன், அங்கைக்கும் எடுத்தவன், அவளிடம் நீட்ட, வாங்கிக் கொண்டவள் குழந்தை நெஞ்சில் இருக்க மெதுவாய் குடிக்க ஆரம்பித்தாள்.

“பாப்பா அசைஞ்சா, மேல சிந்திடும், பால் வேற சூடா இருக்கு” என்று சொல்லியவன் அசைவு கொடுக்காமல்

ஸ்ருஷ்டியை தூக்கினான். குழந்தையை அசையாமல் தூக்கியவனால், விரல் அவள் மீது படாமல் தூக்க முடியவில்லை.

சில நொடி என்றாலும் பட்ட இடம் விவகாரமானது தானே!

அங்கையற்கண்ணி முறைக்க, “சாரி, தெரியாம பட்டுடுச்சு” என்று உடனே மன்னிப்பு கேட்டான்.

அங்கைக்கு ஏற்கனவே மனது சரியில்லை. அதனை அவளுக்கு சொல்லவும் ஆள் கிடையாது. அவளின் கோபத்தை காண்பிக்கவும் ஆள் கிடையாது. இப்போது எல்லாம் சரியாய் ராஜராஜனை நோக்கி திரும்பியது. இந்த ஒரு மாதமாய் திரும்பியும் பார்க்காமல் சென்று விட்டு, இப்போது திடீரென்று ரூமில் வந்து நின்றது அதிர்ச்சியாயும் இருந்தது. “என்னோட ரூம் ஷேர் பண்றதுக்கு, என்னோட பெர்மிஷன் வேண்டாமா? இது இவன் வீடா இருந்தா கூட கேட்க வேண்டாமா?” என்பது தான். அவள் வளர்ந்த, பார்த்த சூழல்கள், அவளை அப்படி தான் யோசிக்க வைத்தன.

ராஜராஜனை நோக்கி வார்த்தையை விட்டாள், “ஏன் தெரிஞ்சு தான் தொட்டு பாரேன்” என்று. அங்கை சொன்ன விதம் “என்னை நீ தொட்டு விடுவாயா?” என்று அறைகூவல் விடுவது போல

தோன்ற,

அது ராஜராஜனை சரியாய் சீண்ட, “ஏன் தொட மாட்டேனா?” என்று அவனும் எகிறினான்.

குழந்தையிடம் அசைவு தெரியவும், அவளை படுக்கையில் படுக்க வைத்து தட்டிக் கொடுத்தவன், அவளுக்கு அணைவாய் அவளை சுற்றி தலையணை வைத்தான். பின் விகாஸிடம் தன் மொபைல் கொடுக்க, அவன் அதில் கேம் விளையாட ஆரம்பிக்க, இப்போது தெளிவாய் திரும்பி அவளை பார்த்து முறைத்தான்.

பின்பு நிதானமாய் “தொட்டு காண்பிக்கட்டுமா?” என்று சொல்ல வேறு செய்தான்.

அங்கையும் சற்றும் அசராமல், “ம்ம், காண்பி” என்று அவளும் வாகாய் சாய்ந்து அமர்ந்து, கைகளை கட்டிக் கொண்டவள், தோரனையை பேச…

“குழந்தைங்க இருக்காங்கன்னு பார்க்கறேன். எனக்கென்னா உன்னை பார்த்து பயமா?” என்றான்.

“பயம் இல்லைன்னா ஒரு மாசம் என்னை பார்த்து எதுக்கு ஓடின”

“என்ன நான் ஓடினேனா? என்ன வாய் நீளுது?” இருந்த கோபத்தில், “அதெல்லாம் உங்கம்மா பண்ற வேலை” என்று வேறு சொல்லிவிட்டான்.

அப்படியே ஒரு ஆங்காரத்தில் எழுந்தவள் “எங்கம்மா பத்தி ஒரு வார்த்தை தப்பா பேசின என்ன பண்ணுவேன்னு கூட எனக்கு தெரியாது” என்று அருகில் வந்து அடிப்பது போல பேசினாள். கூடவே கண்களில் கரகரவென்று நீர் இறங்க, முகமும் சிவந்து விட, வார்த்தைகளும் முடிக்கும் போது தடுமாறி விட,

அவள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டாள் என்று புரிய, “பேசுனா என்ன பண்ணுவ?” என்று கேட்க வந்தவன் அமைதியாய் ஒரு தலையணையை எடுத்து கீழே போட்டு படுத்துக் கொண்டான்.

விகாஸ் எதுவும் கவனிக்காமல் மொபலில் கவனமாய் இருக்க, பேசிவிட்டு இவன் படுத்துக் கொள்வானா? அப்படியே அவனை எட்டி ஒரு உதைவிடும் ஆத்திரம் பொங்கியது அங்கைக்கு.

குழந்தைகள் இல்லாவிட்டால் திரும்ப அவன் அடித்தாலும் பரவாயில்லை என்று ஒரு உதை விட்டிருப்பாள்.

அவனை முறைத்து பார்த்து நின்றாள். “போய் தூங்கு” என்று அமைதியாய் சொல்ல முற்பட்டான்.

“தூங்கறதா, என் வாழ்க்கையே தூங்கிட்டு தான் இருக்கு. என்ன பண்றேன்? எதுக்கு இந்த வீட்ல இருக்கேன்? எதுவுமே எனக்கு தெரியலை?” என்றாள் ஆத்திரமாய்.

அங்கையின் அந்த ஆத்திரம், ராஜராஜன் அமைதியாய் இருக்க நினைத்தாலும், அவனை உசுப்பிவிட, “யார் கூப்பிட்டா உன்னை இங்க? நீயா தானே இங்க வந்த” என்று அவன் சொல்லிவிட…

அதற்கு மேல தாளவே முடியவில்லை, வேகமாய் அங்கிருந்த பால் கனி கதவு திறந்தவள், அதனை வெளிப்புறம் சாத்தி, அங்கே சென்று ஒரு ஓரமாய் அமர்ந்து கொண்டவள், தேம்பி தேம்பி அழ துவங்கினாள். என்ன முயன்றும் சத்தம் அடங்கவேயில்லை. அவளை மீறி தான் சத்தம் வந்தது. நேர் கீழே இருந்த சுவாமிநாதனின் அறையினில் அது நன்கு கேட்க…

வாசுகியும் சுவாமிநாதனும் வெளியே அவள் இருந்த பக்கம் வந்து பார்க்க, அவளின் அழுகை சத்தம் இன்னும் நன்கு கேட்டது.

அவர்கள் என்னவோ ஏதோ வென்று பதறி நாச்சியை எழுப்ப, அவரும் மேலே ஏறி வர, தில்லை அப்போது தான் உறங்க செல்ல இருந்தவர் அவரும் இவர்களோடு வந்தார்.

இவர்களின் அறை கதவு திறந்து தான் இருந்தது.

அங்கே பார்த்தால் ஸ்ருஷ்டி நல்ல உறக்கத்தில் இருக்க, விகாஸ் படுக்கையில் அமர்ந்து கேம் விளையாடிக் கொண்டிருக்க, இவன் தரையில் படுத்திருக்க, முதலில் உள்ளே நுழைந்தார் தில்லை.

இவரை பார்த்ததும் என்னவோ என்று ராஜராஜன் எழுந்து அமர்ந்தான். அவரின் பின் எல்லோரும் வர, அங்கே எந்த சத்தமும் கேட்கவில்லை கதவை வெளிப்புறம் தாளிட்டு இருந்ததால்.

தில்லை சென்று கதவை திறக்க முனைய அது திறக்கவில்லை. அது வெளிப்புறம் தாளிடப் பட்டு இருக்க, அதனை தில்லை தட்ட, “மா, என்ன பண்ற? குழந்தை எழுந்துக்குவா” என்றான் ராஜராஜன். அதுவரையிலும் அங்கை அழுது கொண்டிருப்பாள் என்று அவன் நினைக்கவேயில்லை.

“ராஜா, அவ அழுதிட்டு இருக்கா?” என்று தில்லை சொல்ல,

“ப்ச்” என்று சலித்தவன், “கதவை தட்டாதீங்க” என்று சொல்லி வேகமாய் வெளியேறினான். அதுவே சொன்னது வெளியில் இருந்து பால்கனிக்கு ஏறப் போகிறான் என்று.

“ராஜா வேண்டாம்டா” என்று தில்லை சொன்னது காற்றோடு தான் கேட்டது.

சென்றவன், அணிந்திருந்த வேஷ்டியை கால்களை சுற்றி ஏறுவதற்கு ஏதுவாக கட்டி, வேகமாய் அங்கேயும் இங்கேயுமாய் காலை வைத்து ஏறினான். அவனுக்கு அழுகை சத்தம் நன்கு கேட்டது.

ஏறி பார்க்க அவள் முகத்தை கால்களில் புதைத்து தேம்பி தேம்பி அழுது கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் உள்ளே குதித்து சென்று கதவை திறந்து விட, தில்லை வேகமாக வந்து “அங்கை” என, அதன் பிறகு தான் நிமிர்ந்தாள்.

தில்லையை பார்த்ததும் எழுந்து நிற்க, “என்னமா?” என்றார் வாஞ்சையாய்.

பதில் சொல்லவில்லை, சொல்ல வரவில்லை, ஏதோ ஒன்று தொண்டையை அடைத்தது. “ஒன்றுமில்லை” என்பது போல

தலையசைத்தவள், தண்ணீர் வேண்டும் என்று சைகை செய்ய, அதுவரை அவளை பார்த்திருந்த ராஜராஜன் வேகமாய் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

அதனை குடித்ததும் சற்று ஆசுவாசமானவள், "ஒன்னுமில்லை" என்று இப்போது வாய் திறந்து சொல்ல...

"என்ன ஆச்சு அத்தை?" என்று விகாஸ் அருகில் வந்தான்.

"நத்திங் விக்கி" என்றவள் அவனை தூக்கி கொள்ள, தன் பிஞ்சு கைகளால் அத்தையின் கண்ணீரை துடைத்தான்.

தில்லை ராஜராஜனை "என்ன செய்து வைத்திருக்கிறாய் நீ?" என்ற பார்வையை பார்க்க, எப்போதும் அம்மாவிடம் ஏதாவது பாவனை காண்பிக்கும் அந்த முகம் எதுவும் காண்பிக்கவில்லை.

"உள்ள வா முதல்ல" என்று சொல்ல, உள்ளே வந்து பார்த்தால் வீடே உள்ளே இருந்தது.

"என்ன ஆச்சும்மா?" என்றார் சுவாமிநாதன்.

"ஒன்னுமில்லை மாமா" என்று மெல்லிய குரலில் சொல்ல,

நாச்சி அவளிடம் "என்னடா கண்ணு ஏன் அழற?" என்றவர், "இவன் எதுவும் திட்டினானா?" என்று ராஜராஜனை காண்பித்து

கேட்க வேறு செய்தார்.

யோசிக்கவெல்லாம் இல்லை உடனடியாய் பதில் வந்தது "இல்லை பாட்டி" என்று. அப்போது தான் அனைவரும் சரியாய் மூச்சே விட்டனர். ராஜராஜனால் தான் இந்த அழுகையோ என்று அனைவரும் பயந்து விட்டனர். உண்மையில் அவனால் தான் அழுகை ஆனால் அங்கை காண்பித்து கொள்ளவில்லை.

"ஒன்னுமில்லைன்னா ஏன் அழுதம்மா?" என்று சுவாமிநாதன் அழுத்தமான குரலில் வினவ,

என்ன சொல்வது என்று தெரியாமல் "அம்மா அப்பா ஞாபகம்" என்று முடித்துக் கொண்டாள். அதுவும் கூட தானே! அதன் பின்னே அங்கே பேச்சே இல்லை, அனைவரும் மௌனமாய் சென்று விட... தில்லை ராஜராஜனை பார்த்த பார்வையில் நீ சரியில்லை என்ற பாவனையை கொடுத்தாரோ.

அங்கேயே இருந்த ராஜராஜனிடம் "நீங்க இங்க தான் தூங்க போறீங்களா?" என்று கேட்டாள்.

"ஏன் நான் வெளில போகணுமா. அதுக்கு தான் இந்த அழுகையா" என்று அவன் பதில் கேள்வி கேட்க,

“இங்க படுக்கறீங்களான்னு கேட்டா, ஆமா இல்லைன்னு ரெண்டு பதில்ல ஏதாவது ஒன்னு தான் சொல்லணும்” என்று அதிகாரமாய் அங்கையின் குரல் ஒலித்தது.

“திமிர்டா இவளுக்கு” என்று தோன்றிய போதும் அதனை மீறி அவள் நின்ற தோரணை, அவள் பேசிய தோரணை, அவளின் அழகு முகம், அவனை ஏதோ செய்ய… அவனுள் உதித்து ஒரே வார்த்தை தான் அப்போது!

அடடா ஜாதிக் குதிரை இது!

“இங்க தான் படுக்க போறேன்”

“இவன் கதை கேட்பான், எனக்கு இப்போ சொல்ல முடியாது, இவனை கூட படுக்க வைச்சு சொல்லிக்கங்க. அவன் கீழ படுக்க மாட்டான், இங்க மேல படுத்து அவனுக்கு சொல்லுங்க, கதவை சாத்திடுங்க” என்று சொல்லி,

ஸ்ருஷ்டியை ஓரமாய் படுக்க போட்டு அவள் படுத்து விட்டவள், “விக்கி, எனக்கு பக்கமா படு, மாமா அந்த உனக்கு அந்த பக்கம் படுப்பாங்க” என்று சொல்ல… அசந்து நின்று

விட்டான், “என்னடா நடக்குது?” என்று.

கூடவே இவளுக்கு ஏதாவது மன வியாதி இருக்குமோ? ஒரு ஒரு நேரம், ஒரு ஒரு மாதிரி நடக்கிறா என்றும் தோன்றியது.

“அச்சோ ராஜா, உன் வாழ்க்கை என்ன ஆகுமோ?” என்று அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டவன், “ஒன்னுமே இல்லாததுக்கு சண்டை, பின்ன என்னையும் பேச வெச்சு, இப்போ எல்லோரும் கேட்கற மாதிரி அழுது, இப்போ ஒன்னுமே இல்லாத மாதிரி இங்க படுக்க சொல்றா?”

“கடவுளே! என்னை காப்பாத்துடா” என்று வேண்டிய போதும், கண்கள் படுத்திருந்த அங்கையை பார்த்து நின்றது. விளையாட்டுத்தனங்களை எல்லாம் கைவிட்டு விகாஸிடம் மீண்டும் மொபைல் கொடுத்தவன், அவனின் காதில் ஹெட் போன் மாட்டிவிட்டு,

அவள் படுத்திருந்த பக்கம் வந்து நின்றவன் “எனக்கு உன்னோட பேசணும்” என்றான்.

கண்களை திறந்தவள் “எனக்கு ரொம்ப டையர்ட்டா இருக்கு”

என்றாள்.

“எனக்கு பேசணும்?” என்றான்.

படுத்தபடியே “அப்படியே சொல்லுங்க” என்றாள்.

“இந்த படுக்கையில படுக்க சொல்றது உனக்கு சாதாரண விஷயமா இல்லையான்னு நான் பேச விரும்பலை. ஆனா எனக்கு இது ஒரு வழிப் பாதை புரியுதா?” என்றான்.

அவள் புரியாமல் பார்க்கவும்,

“இதுவரை எப்படியோ? படுக்கையில எல்லாம் ஒன்னா படுத்துட்டு, நீ எப்படியோ போ, நான் எப்படியோ போறேன்னு இருக்க முடியாது. இதுவரையிலும் நம்ம வாழ்க்கை ரிவர்சிபிள் தான். ஆனா இனிமே இர்ரிவர்சிபில், உன்னால பின் வாங்க முடியாது” என்று தீவிரமாய் பேசினான்.

“என்ன இப்போ நான் எப்போ குழந்தை பெத்துக்கலாம்னு உங்க கிட்ட கேட்கணுமா?” என்று அவள் அதையும் விட தீவிரமாய் சொல்ல.

“ஓஹ், அப்படி உன் மேல நான் பாய்ஞ்சிடுவேன்னு நினைச்சு

தான் என்னை வீட்டுக்குள்ள கூட விடமா வெளில படுக்க வைச்சியோ” என்றான் பாவனை பிரிக்க முடியாத குரலில்.

வாயடைத்து போனாள்!

“கல்யாணம் பண்றது உண்மையில குழந்தை பெத்துக்க தான். ஆனா குழந்தை பெத்துக்கறது மட்டும் கல்யாணம் கிடையாது” என்று அலட்சியமாய் சொன்னவன்,

“பலமுறை உன் கிட்ட நம்ம வாழ்க்கையை பத்தி பேச முயற்சி பண்ணிட்டேன். நீ பேச இடம் குடுக்கலை. சொல்லப் போனா எனக்கு உன்கிட்ட இப்போ பேசக் கூட விருப்பமில்லை. நான் ஒன்னும் உன்னை தேடி வரலை, நீங்க தான் வந்தீங்க, கல்யாணம் பண்ணுனீங்க, இப்போ இங்க வந்திருக்க”

“ஆனா இனி நீ போக முடியாது, குழந்தை பெத்துக்க போறோமா இல்லையா தெரியாது? ஆனா இனி நம்ம வாழ்க்கை தனித் தனி கிடையாது” என்று சொல்லியவன், விகாஸிற்கு பக்கத்தில் சென்று படுத்துக் கொண்டான்.

விகாஸ் “ஹெர்குலிஸ் கதை” என்று கேட்க, “குடுடா அந்த

மொபைல அதை பார்த்து தான் சொல்லணும்” என்று அவனிடம் கதை பேச ஆரம்பித்து விட,

மௌனமாய் அவன் சொன்னதை கிரகிக்க முற்பட்டாள் அங்கையற்கண்ணி.

# அத்தியாயம் 13

காலையில் அங்கை கண்விழித்த போது பக்கத்தில் விகாஸ் மட்டுமே! ஸ்ருஷ்டியை காணவில்லை. பக்கென்று ஆகிவிட்டது. சுவரை ஒட்டி கட்டில் என்பதால் குழந்தை கீழே விழ வாய்ப்பில்லை. ஆனால் தவழ்ந்து மறுபக்கமாய் சென்று விழுந்திருப்பாளோ என்று பதறி எழுந்தாள்.

உண்மையில் அவள் அங்கை மீது தவழ்ந்து, பின் விகாஸை தாண்டி, ராஜராஜனை கடக்க முற்படும் போது அவனிடம் பிடிபட்டு இருந்தாள். காலை வேளையில் குழந்தையின் செய்கைகள் உற்சாகமாய் இருக்க,

“ஹேய் பட்டுக்குட்டி” என்று அவளை அணைத்து பிடித்திருந்தான் ராஜராஜன். குழந்தை அவன் மீது டொம்மென்று முகத்தால் முட்ட,

“நீயாவது கொஞ்சு என்னை, எப்போவாவது உங்க அத்தை என்னை கொஞ்ஜி, உன்னை மாதிரி ஒரு பட்டுகுட்டி எனக்கு பெத்துக் கொடுப்பான்னு நம்பிக்கையே இல்லை” என்று அவளோடு கதை பேசியபடி அவளை தூக்கி கொண்டு வெளியே

சென்றிருந்தான்.

அம்மாவிடம் சென்று கொடுத்து. பின் அவன் முகம் கழுவி அவளின் சிப்பர் எடுப்பதற்காக ரூம் வர, அப்போது தான் அங்கை எழுந்து பதறி அமர்ந்து பார்வையை ஓட்டிக் கொண்டிருந்தாள். அதிகாலை ஐந்து மணி. அப்போதே நிலத்தில் நீர் பாய்ச்சுவதற்காக சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் கிளம்பியிருந்தனர்.

வாசுகி குளிக்க சென்றிருக்க, தில்லை சமையல் அறையில், சமையல் வாசுகியும் தில்லையும் மட்டும் தான் செய்வர், கூட்ட, பெருக்க, பாத்திரம் துலக்க, சமையலில் உதவ இப்படி தான் ஆட்கள். அவர்களும் ஏழு மணிக்கு மேல் தான் வருவர். குழந்தைகள் இருப்பதால் தில்லை அவராகவே சமையலறையில் பால் காய்ச்சி கொண்டிருந்தார்.

“குழந்தை அம்மா கிட்ட இருக்கா, சிப்பர் எடுக்க வந்தேன்” என்றான் அவள் அலங்க மலங்க விழித்து அமர்ந்திருப்பதை பார்த்ததும். இன்னும் அவளின் தூக்கம் கலையவில்லை என்றும் புரிந்தது.

“அது சுடு தண்ணில போட்டு பாயில் பண்ணனும்” என்று சிப்பர் ஸ்டெர்லைஸ் செய்வதை பற்றி சொல்ல,

“எங்க வீட்டில எட்டு குழந்தைங்க வரிசையா இப்போ சில வருஷமா பிறந்து வளர்ந்துட்டு இருக்காங்க. அதனால் அம்மாக்கு எல்லாம் தெரியும், பார்த்துக்குவாங்க, ஸ்ருஷ்டியும் அழலை, அழுதா உன்னை எழுப்பறேன், நீ தூங்கு” என்று சொல்லி அவன் சென்று விட...

எழுந்து செல்வதா இல்லை உறங்குவதா என்று பட்டி மன்றம் மனதிற்குள் நடத்தி, உறங்க முடிவெடுத்து உறங்கி விட்டாள். அதன் பின் அவளுக்கு விழிப்பு வந்த போது மணி பத்து.

யாருமில்லை, அவள் மட்டுமே, வெளிச்சம் அதிகம் உள்ளே வராமலிருக்க, திரைச்சீலை இழுத்து விடப் பட்டு ரூம் இருட்டாய் வைக்கப்பட்டு இருக்க, எழுந்து முகம் கழுவி வெளியே வந்து பார்த்தாள்.

ஒரு நைட் பேன்ட் ஷர்ட் தான் அவளின் இரவு உடை, அந்த உடையில் அவள் படியிறங்க, முகத்தில் தண்ணீர் துவட்டப்படாமல் இருக்க, தலையும் தலைவிரி கோலமாய் இருக்க, படியில் இறங்கிக் கொண்டே, ஒரு ரப்பர் பேண்டில் கூந்தலை அடக்கி கொள்ள,

அவளின் இயல்பான செய்கையில் மிளிரும் நளினம் அவளின் அழகு, ராஜராஜனால் பார்வையை திருப்ப முடியவில்லை.

அவளுக்கு பிடிக்கவில்லை, அவள் வேண்டாம் என்று

சொன்னவன் தான், இனி வேண்டாம் என்று அனுப்ப முடியாது என்று முடிவெடுத்து விட்டவன் தான், ஆனால் இதையெல்லாம் மீறி அவளின் அழகு, நளினம் தோரணை என்று அத்தனையும் அவனை கவர்ந்து இழுத்தது உண்மை. இது நாள் வரை அதனை வெளியில் தெரிய விட்டதில்லை. இப்போது பார்வை மாற்றம் தானாய் வந்தது.

ஆம்! நேற்று இரவு அங்கை உறங்கி விட்டாள், ஆனால் ராஜராஜனால் உறங்க முடியவில்லை. அண்ணன்கள் இருவரும் படிக்க போன பிறகே அவன் உறக்கம் தனியாய் தான். இதோ இப்படி அவன் குடும்பமாய் உறங்குவது ஏதோ ஒரு புதிய உணர்வை கொடுத்திருந்தது.

அந்த அறை, ராஜராஜனின் அறை, அந்த படுக்கை ராஜராஜனின் படுக்கை, இந்த ஒரு மாதமாய் அங்கையர்க்கண்ணி அங்கே இருக்க, பல வருடமாய் இருந்த அவனின் அறை இப்போது ஒரே மாதத்தில் அங்கையின் அறையாய் மாறியிருந்தது.

எங்கும் அவளின் பொருட்கள், அந்த அறையில் அவளின் வாசம், எங்கும் அவளின் வாசனையை கிளப்பி விட்டிருந்தது. மிகப் பெரிய அறை, அதனால் இடப் பற்றாக்குறை பொருட்களை வைப்பதற்கு வரவில்லை.

இப்போது கூட தில்லை சொல்லியிராவிட்டால் வந்திருக்க

மாட்டான். வந்து விட்டான் இனி செல்வது என்பது கிடையாது. அதனால் இரவே முடிவெடுத்து விட்டான். அவளோடு எந்த சண்டையும் இருக்க கூடாது, வாக்கு வாதம் செய்யக் கூடாது, விட்டு கொடுத்து சென்று விட வேண்டும். பிடித்தால் சேர்ந்து வாழ்வது என்பது கிடையாது. பிடிக்காவிட்டாலும் சேர்ந்து தான் வாழ வேண்டும். அவளுக்கு என்னை பிடிக்க வைக்க வேண்டும், எனக்கு அவளை பிடித்திருக்கிறது என்று சொல்லிக் கொண்டவனால் உறங்க தான் முடியவில்லை.

இதோ அந்த முடிவை செயல் படுத்த நினைத்து அவளிடம் இணக்கமாய் பேச முற்பட்டான். அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டது, எவ்வளவு நேரம் தன்னால் இதை கடை பிடிக்க முடிகிறது என்று பார்ப்போம் என்று.

இவளை பார்த்ததும் ஓடி வந்த விகாஸ் அவளின் மேலேறி "ஃபீவர் போச்சா அத்தை" என்று அவளை தொட்டு பார்த்தான்...

"ஃபீவரா" என்று அவள் விழிக்க,

"ம்ம், நீ எழலைன்னதும் என்னை நொச்சி எடுத்துட்டான். அதனால நீ ரெஸ்ட் எடுக்கலைன்னா காய்ச்சல் வரும்னு சொன்னேன். அதுதான் இந்த கேள்வி" என்று நீண்ட விளக்கம்

ராஜராஜனால் கொடுக்கப் பட்டது.

வீட்டில் யாரும் இருப்பது போல தெரியவில்லை, வேலை செய்யும் அக்கா மட்டுமே கண்ணில் பட, குழந்தைகள் இருவரையும் ராஜராஜன் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்ருஷ்டி அவனின் கையில் பாந்தமாய் அடங்கி இருந்தவள், இவளை பார்த்ததும் தாவ, ஏற்கனவே விகாஸ் வேறு கையில் இருக்க…

ஸ்ருஷ்டியை அவள் ஒரு கையால் பிடித்ததும் விகாஸை தூக்கி கொண்ட ராஜராஜன், "பாரு உன் மேல கை படாம அவனை தூக்கிட்டேன்" என்று சொல்ல, பதில் எதுவும் பேசவில்லை, எந்த முக பாவனையும் கூட காண்பிக்க வில்லை. ராஜராஜனை ஏதோ செய்தது. "போடி" என்று எப்போதும் போல மனம் சொல்ல விழைய, "அடங்குடா" என்று தன் மனதை அடக்கியவன்,

"சாரி" என்றான். எதற்கு என்பது போல பார்த்தவளிடம், "அத்தை பத்தி பேசினதுக்கு, ஒரு வேகத்துல நீ என்னை அந்த வார்த்தை சொன்னதும் வந்துடுச்சு. இனிமே இப்படி ஆகாது"

என்று ஒப்புக் கொடுத்தான்.

அதற்கும் ஒன்றும் பேசவில்லை. பின் “எங்கே யாரையும் காணோம்” என்று கேட்க, “கோவிலுக்கு போறேன்னு போனாங்க, மொத்த குடும்பமும்” என்றவன்,

“அக்கா காஃபி குடுங்க” என்று ஒரு சத்தம் கொடுத்தவன், “குடிச்சிட்டு நீ குளிச்சிட்டு சாப்பிட்டு முடிச்சா, நான் வெளில கொஞ்சம் நேரம் போயிட்டு வருவேன் வேலையிருக்கு” என்றான்.

“நீங்க போங்க நான் பார்த்துக்கறேன்” என்றவளிடம், “எப்படி பார்ப்ப, ரெண்டு பேரை விட்டுட்டு நீ குளிக்க போக முடியாது. அம்மா இவளுக்கு சத்து மாவு கஞ்சி ஊட்டி விட்டாங்க, கொஞ்சம் நேரம் கழிச்சு அழுதா சாதமும் பருப்பும் செஞ்சிருக்காங்களாம் குடுக்க சொன்னாங்க, மதியம் வந்துடுவாங்களாம், சொல்லச் சொன்னாங்க” என்றவன், பின் விகாஸை கூட்டி கொண்டு முன் புற ஹாலிற்கு சென்று விட, இவள் திரும்பவும் ஸ்ருஷ்டியை அவனிடம் விட்டு குளித்து வேகமாய் வரவும்,

அவளின் உடையை தான் கண்கள் பார்த்தது, அவனுக்கு

அதன் பேர் எல்லாம் தெரியவில்லை. சுரிதார் போல தான், ஆனால் சுரிதார் இல்லை. கீழே பல்லீசோ பேண்ட்டும் மேலே ஒரு ஷார்ட் சல்வார் டாப்சும் அணிந்திருந்தாள்.

நல்ல மஞ்சள் நிறம் மேலே, கீழே பச்சை, மேலே ஒரு பக்கம் தொங்கும் ஷால், ஈரமான கூந்தல் விரித்து விடப் பட்டிருக்க, முகத்தில் பொட்டில்லை.

"குடுங்க, இனி நான் பார்த்துக்கறேன்" என்று சொல்லி அவனிடம் வந்து ஸ்ருஷ்டியை வாங்க,

அருகில் வந்த அவளின் மீது வந்த சோப்பு வாசனையோ, ஷாம்பு வாசனையோ, இல்லை அவளின் வாசனையோ ஏதோ ஒன்று மயக்கியது.

"என்னோட மில்லுக்கு வர்றியா, நீ நம்ம மில் பார்த்திருக்கியா" என்று கேட்டுக் கொண்டே அவன் மேலே ரூம் போக...

ராஜராஜனோடு செல்வோமா வேண்டாமா என்று யோசித்த போதும், ஒரு மாதமாய் வீட்டின் உள் மட்டுமே இருக்க மூச்சு முட்டுவது போல இருக்க, அவன் வந்ததும் "சரி" என்று சொல்ல நினைத்திருக்க, இறங்கி வந்தவன் அவளை நெருங்கி வந்தான்.

அங்கை என்ன என்று பார்த்திருக்க, "முகத்தை காண்பி"

என்று சொன்னான். எதற்கு என்று புரியாத போதும் முகத்தினை திருப்பவில்லை, அவள் வைக்கும் சிறிய பொட்டை அவளின் நெற்றியில் ஒட்டி விட்டான்.

சத்தியமாய் இதனை அங்கை எதிர்பார்க்கவில்லை!

“வெறும் நெத்தியாய் இருக்கிறது பார்க்க நால்லாயில்லை” என்று சொன்னவன், “வர்றியா மில்லுக்கு என்னோட” என்றான் மீண்டும்.

“ம்ம், ஆனா ரெண்டு பேரும் எப்படி சமாளிக்க, இவ கொஞ்சம் நேரத்துல தூக்கத்துக்கு அழுதா”

“பார்த்துக்கலாம், நீ சாப்பிட்டிட்டு அவளுக்கு சாதம் பால் எடுத்துக்கோ”

என்னவோ வெளியில் சென்றால் மனதிற்கு சற்று ஆசுவாசம் கொடுக்குமோ என்று நினைத்தவள் வேகமாய் அவன் சொன்னதை எல்லாம் செய்து “போகலாம்” என்று முன் நின்றாள்.

“இங்க குங்குமம் மிஸ்ஸிங்” என்றான் நெற்றி வகிட்டை காண்பித்து.

“அதுல நான் இதுவரை வெச்சதில்லை”

“இப்போ வெச்சிக்கோ” என்றான்.

உண்மையில் திருமணத்திற்கு முன் நெற்றியில் பொட்டே வைத்தாலும் ஆகிற்று, இல்லையென்றால் இல்லை. அப்படி பெரிய முக்கியத்துவங்கள் சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப் படவில்லை. ஏன் அதிகம் சாஸ்திர சம்ப்ரதாயங்கள் தெரியவும் தெரியாது.

அங்கைக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து அவளின் வாழ்க்கை முழுக்க முழுக்க அவளின் விருப்பம். எந்த கட்டுபாடுகளுமன்றி சுதந்திரமாய் வளர்ந்தவள்.

ஆனால் திருமணம் அவளின் விருப்பப்படி நடக்கவில்லை. வாழ்க்கையின் விந்தை அல்லவா? இரண்டு வருடம் ஆகிவிட்ட போதும் ஒரு உத்வேகத்தில் அவளே சரி என்று சொல்லி நடந்த திருமணம் என்ற போதும், இன்னும் மனம் தத்தளித்து நிலையற்று தத்தி தாவிக் கொண்டிருக்கிறது.

இவனோடு தான் வாழ்க்கை என்றாகி விட்டது தட்டி பேசி என்ன செய்ய போகிறோம் என்று நினைத்தவள், பூஜை அறைக்கு சென்று குங்குமம் எடுத்துக் கொண்டு கண்ணாடியை தேடிப் போக,

“கொடு” என்று அவளின் முன் வந்து நின்றவன் அவனே வைத்து விட...

ராஜராஜனுக்கு சொல்ல முடியாத ஒரு உணர்வு, அங்கை இன்னும் அமைதியாகி விட்டாள்.

பின்பு பைக்கில் விகாஸ் முன் அமர, ஸ்ருஷ்டியை வைத்துக் கொண்டு இருபுறமும் காலிட்டு அங்கை பின் அமர, பைக்கை மிதமான வேகத்தில் செலுத்த ஆரம்பித்தான்.

அரிசி மில் செல்ல, வெளியில் இருந்து பார்த்திருக்கிறாள் ஆனால் உள்ளே வருவது இதுதான் முதல் முறை. வெளியில் இருந்து பார்ப்பதற்கு சின்ன இடமாய் தோன்ற, வாயிலில் இருந்து சற்று உள்ளே வந்து திரும்பினால் தான் மில்லின் இன்னொரு வாயில் தெரிந்தது.

நல்ல பெரிய இடம், “அம்மாடி, இதென்ன இவ்வளவு பெரிய இயந்திரம்” என்று பார்த்திருந்தாள். அவள் பார்த்ததில்லை, பல அடி உயரம், நூறு அடி இருக்குமா என்று மனதிற்குள் நினைத்தபடி இறங்க,

“இந்த பக்கம் போகலாம், அங்க மூட்டை அடுக்கி இருக்கும்,

உமி வேற அங்க அங்க பறக்கும்”

இந்த பக்கம் பார்வையை ஓட்டினால் பெரிய அகலமான பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தனர்.

“இது இன்னொரு பிளான்ட் போடலாம்னு” என்றான். “ஓஹ்” என்று சொன்னாள்.

உள்ளே இருந்த ஒரு ரூமிற்கு அழைத்து சென்றான். நடுவில் இருந்தது, கண்ணாடி கதவுகள். அங்கிருந்த பார்த்தால் வேலை இடம் அத்தனையும் தெரிந்தது.

இவன் விகாஸை வைத்திருக்க, அவள் ஸ்ருஷ்டியை, விகாஸ் இறங்க முற்பட்ட போதும் ராஜராஜன் விடவில்லை. “அப்படியே பாரு விக்கி” என்று விட்டான்.

“இது என்ன? இது என்ன?” என்று ஆர்வமாய் கேட்டுக் கொண்டாள், அதற்குள் ஸ்ருஷ்டி பசிக்கு சிணுங்க, அங்கை சாதத்தை பிசைந்து ஊட்ட ஆரம்பிக்க ராஜராஜன் உதவினான்.

அங்கிருந்து பார்த்தால் வெளியில் நடப்பது எல்லாம் தெரிவது போல, உள்ளே நடப்பதும் தெரியும்.

வேலை செய்பவர்கள் எல்லோரும் அங்கையை பே என்று

தான் பார்த்தனர்.

அப்போது லோடு ஏற்றும் லாரி வர, “நீ பார்த்துக்கோ” என்று சொல்லி விகாஸை தூக்கி கொண்டு வெளியே சென்று மேற் பார்வையிட ஆரம்பித்தான்.

ஆட்கள் எல்லாம் அரிசி மூட்டை தூக்கி வந்து லாரியில் அடுக்க, “நீங்களும் தூக்குவீங்களா மாமா?” என்று விகாஸ் கேட்க, “ராமு மாமா” என்று அழைத்தவன், “இவனை கீழ விடாதீங்க” என்று சொல்லி,

“இப்போ பாரு” என்று அவனிடம் சொல்லி, சட்டையை கழற்றி விகாஸிடமே பிடி என்பது போல கொடுத்தவன், வேஷ்டியை ஏறக் கட்டி அவனும் மூட்டைகளை சுமந்து ஏற்ற ஆரம்பித்தான்.

சில சமயம் பேன்ட் சட்டை என்றாலும், பெரும்பாலும் வேஷ்டி சட்டை தான் அவன். மில்லில் எந்த வேலை என்றாலும் மடித்து கட்டி களமிறங்க அவனுக்கு வசதியான உடை.

அசால்டாய் மூட்டைகளை தூக்கும் அவனின் தோளின் திண்மையை, நெஞ்சுரத்தை பார்த்துக் கொண்டிருந்தாள், விகாஸிற்காக என்று ஆரம்பித்தாலும் மூட்டை ஏற்றி முடிக்கும்

வேலை முடியும் வரை இருந்தான்.

ராஜராஜன் முடிக்கும் வரையுமே பார்த்தும் பாராமல் அவனை தான் பார்த்திருந்தால் அங்கையர்க்கண்ணி. இவனோடு என்னால் இருக்க முடியுமா என்று? இருந்தாக வேண்டுமே என்றும் தோன்ற, எப்போதும் இல்லாத அளவில் மனதில் சஞ்சலம், ஏனென்று அவளாலேயே வகையறுக்க முடியாமல் கண்களில் நீர் நிறைந்தது.

வேலை முடித்து அங்கிருந்த தண்ணீர் பைப்பில் முகம் கை கால் கழுவி சட்டையை மாட்டி ராஜராஜன் வந்த போது, ஸ்ருஷ்டி அங்கையின் தோளில் உறங்கியிருந்தாள்.

“போகலாமா” என்று ராஜராஜன் கேட்க, போகலாம் என்று தலையசைத்து எழுந்த அங்கையிடம் பெரும் மௌனம் சூழ்ந்திருந்தது.

பின்பும் ஒரு பைக் பயணம், “குழந்தை தூங்கறா நல்லா பிடிச்சிக்கோ” என்று ராஜராஜன் சொல்ல, ஒரு கை குழந்தையை இறுக்கிப் பிடிக்க, இன்னொரு கை பிடிமாணத்திற்காக தான் எனினும் ராஜராஜனின் தோளை பிடித்துக் கொண்டது.

# அத்தியாயம் 14

அவர்கள் வீடு வந்த போது, எல்லோரும் வீடு வந்திருந்தனர்.

“எந்த கோவில் பாட்டி போனீங்க” என்று அங்கை கேட்க, வெகு நாட்களுக்கு பிறகு நாச்சியிடம் இயல்பாக ஒரு பேச்சு.

அவர் அதற்கு பதில் சொல்லாமல், “நீங்க எங்க போனீங்க” என்றார்.

“மில்லுக்கு” என்று சொல்லிக் கொண்டே சிறிய மெத்தையை தரையில் விரித்து ஸ்ருஷ்டியை படுக்க வைத்தவள், “விக்கி, பில்லோ எடுத்துட்டு வா” என்று அவனிற்கு வேலை ஏவினாள்.

அவனும் சமத்தாக மேலே இருந்து எடுத்து அப்படியே கீழே வீசினான்.

“ஓய், என்ன பண்ற நீ” என்று அவள் அதட்ட,

அங்கிருந்து அவன் “வீசுரேன் அத்தை, கேட்ச் பிடிங்க” என்றான்.

“அடி வாங்க போற, பாப்பா மேல விழப் போகுது, கீழ வந்து குடுடா” என்று பேசிக் கொண்டிருந்தாள்.

“ம்கூம், நீங்க கேட்ச் பிடிங்க” என்று அவன் இன்னொன்றையும் வீச, “விக்கி” என்று அவள் கத்த, அவளின் குரல் உரத்து ஒலித்தது.

அது விகாஸிற்கு விளையாட்டாய் போய்விட, மீண்டும் ஒன்றை தூக்கி அவன் வீச, “விகாஸ்” என்ற ஒற்றை ராஜராஜனின் அழைப்பிற்கு அப்படியே அடங்கியவன், இன்னொரு தலையணையை சமத்தாய் கீழே கொண்டு வந்து கொடுக்க…

வீடே வேடிக்கை பார்த்தது. பின்னே அங்கையின் குரல் அந்த வீட்டினில் உரத்து ஒலித்தது இந்த ஒரு மாதத்தில் அன்று தான். அவளின் இறுக்கமும் தளர்ந்து அவள் இயல்பாய் இருந்ததும் அன்று தான்.

“குழந்தைங்களை கொண்டு வந்து விட்டு இந்த கரிச்சுமா பொண்ணு நல்ல வேலை செஞ்சிருக்கு” என்று கரிஷ்மாவின் பெயரை கொலை செய்து நாச்சி பேச, அவர்களை விட்டு மீண்டும் ராஜராஜன் கிளம்பி விட்டான்.

“சாப்பிட்டு போடா” என்ற தில்லையின் குரலுக்கு கொஞ்சம் நேரத்துல வர்றேன் என்று சொல்லி விட்டு போய் விட்டான்.

அவர்கள் எங்கே சென்றார்கள் என்று ராஜராஜனுக்கும் அங்கையற்கண்ணிக்கும் தெரியாமலே போயிற்று. அவர்கள் சென்றது ராஜலக்ஷ்மியை வீட்டிற்கு அழைக்க, நேற்று “அம்மா ஞாபகம்” என்று அவள் சொல்லியவுடன், தங்கையாக அழைக்க சென்றார்களோ இல்லையோ தங்கள் வீட்டு மருமகளின் அம்மாவாக அழைக்கக் சென்றார்கள்.

அவர்கள் சென்ற போது ராஜலக்ஷ்மி மட்டுமே வீட்டினில், அன்பழகன் ஊரிலிருந்து வந்திருக்கவில்லை. கலக்டர் பங்களா, ராஜலக்ஷ்மி மட்டும் தனியாக இருந்தார். இவர்களை “உள்ளே விடுவதா? வேண்டாமா?’ என்று சென்ட்ரி கேட்க,

இவர்கள் வந்தது தெரிந்ததும் கேட்டிற்கே வந்து அழைத்து சென்றார். முப்பத்தி இரண்டு வருடத்திற்கும் மேலானா பிரிவு, அப்படி ஒன்றும் பிறந்த வீட்டின் மீது பாசம் பொங்கிவிடவில்லை. இவர்களால் தான் எல்லாம் என்ற கோபம் அடி மனதில் அப்படியே இருந்தது. தன்னுடைய மகளை திருமணம் செய்து கொடுத்த வீட்டினர் என்ற முறையில் தான் அவரின் கவனிப்புமே.

நன்றாய் உபசரித்தார் பேசினார், ஆனால் அதையும் மீறி ஏதோ ஒன்று குறைந்தது. அதாகப்பட்டது தள்ளியே நின்றார்.

இவர்கள் வீட்டிற்கு அழைப்பு விடுக்க, “அவர் ரெண்டு மூணு நாள்ல இங்க வர்றேன்னு சொல்லியிருக்கார். அவர் வந்ததும் வர்றேன்” என்று சொல்லிவிட்டார்.

இவர்கள் சென்றதோ, ராஜலக்ஷ்மி சொன்னதோ, எதுவும் ராஜராஜனிற்கும் அங்கைக்கும் தெரியாது. ராஜலக்ஷ்மியோ அன்பழகனோ சொல்லியிருப்பர் என்று அவர்கள் நினைத்திருக்க, அம்மாவும் மகளும் பேசிக் கொள்வதில்லை. அப்பாவும் ஃபோன் செய்தால் இவள் மூட் இருந்தால் எடுப்பால், இல்லையென்றால் இல்லை என்று இவர்களுக்கு எப்படி தெரியும்?

குழந்தைகள் உடன் இருந்த நாட்களில் அங்கைக்கு நேரம் முழுதாய் அவர்களுடன் சென்று விட, பாலியில் இருந்து போட்டோ அனுப்பிக் கொண்டே இருப்பாள் கரிஷ்மா.

இப்போது ராஜராஜனின் படுக்கை இவர்களுடன் தான். பழகி விட்டது அவனிற்கு. ஒரு பெண்ணுடனான தனிமையோ, இல்லை மனைவியுடனான தனிமையோ, எங்கும் அவனுக்கு தெரியவில்லை. உறங்கும் வரை விகாஸிற்கு கதைகள் சொல்வது, பின் காலையில் எல்லோருக்கும் முன் ஸ்ருஷ்டி அவனை எழுப்பி

விடுவாள்.

அங்கையற்கண்ணி யுடன் தனிமை என்பது இல்லவே இல்லை!

அன்று இரவும் ஸ்ருஷ்டி உறங்கியிருக்க, மனோவுடனும், கரிஷ்மாவுடனும், விடியோ காலில் பேசி முடித்திருந்தனர் அவளும் விகாஸும்.

எப்போதும் ஃபோட்டோ எல்லாம் ராஜராஜன் பார்க்க மாட்டான். “மாமா, அப்பாவும் அம்மாவும் டைவிங் போனாங்க” என்று விகாஸ் சொல்லி அவர்களின் பாலி டைவிங் வீடியோ காண்பிக்க,

“ஆங்” என்று தான் அந்த வீடியோவையும் மற்ற வீடியோக்களையும் பார்த்திருந்தான். ஃபோட்டோ மற்றும் வீடியோவை மாற்றி மாற்றி விகாஸிடம் கொடுத்து ராஜனை பார்க்க சொல்லியது அங்கையே.

ஆனாலும் அதனை எப்படி பார்ப்பது என்று தடுமாறினான். அவர்களுக்கு அது ஒன்றுமில்லை ஆனால் ராஜராஜனிற்கு அப்படி இல்லையே!

கரிஷ்மாவும் மனோவும் பல நேரங்களில் ஒன்று போல

உடை, ஸ்லீவ்லெஸ் டீ ஷர்ட், குட்டி ட்ரவுசர் தான் கரிஷ்மாவின் உடை. “என்னங்கடா இது” என்று நொந்து விட்டான். இதை போய் நான் பார்க்க இவள் எதற்கு கொடுக்கின்றாள் என்பது போல. திரைப்படங்களில் தான் பெண்களை இப்படி பார்த்திருக்கின்றான். நேரில் பெண்களை இப்படி பார்த்தது கிடையாது. அதுவும் கரிஷ்மா அணிந்திருந்தது அங்கே அதிகப் படியான உடை. பின் தெரிந்தவர்கள் எல்லோரும் இன்னும் கவர்ச்சியாய் உடை அணிந்திருக்க, ம்ம் ஒன்றும் சொல்வதிற்கில்லை, இவர்களின் கலாச்சாரம் என்று நினைத்துக் கொண்டான்.

அதுவும் ஒரு இடத்தில், தண்ணீர் இருக்க, அதில் கையில் க்ளாசுடன் மனோவும் கரிஷ்மாவும், “அட என்ன கொடுமைடா சரவணா இது?” என்ற எண்ணம் தான் ராஜராஜனிற்கு. அங்கையின் முகத்தை தான் பார்த்தான். அவள் எல்லாம் இயல்பு போல தான் பார்த்திருந்தாள்.

வாழ்க்கை முறை வித்தியாசம் மலையளவு!

ராஜராஜனின் முகத்தை பார்த்தவள் “என்ன?” என, “என்ன இது தண்ணி அடிக்கறாங்க?” என்று கேட்டே விட்டான்.

“அது ஜஸ்ட் கூல் பீர், அண்ணா கைல இருக்குறது. ரொம்ப கொஞ்சமா குடிப்பாங்க, அண்ணி கைல ரெட் வைன் தான்” என்றாள். இது சகஜம் என்பது போல பேச்சு!

அவர்களை பற்றி எனக்கென்ன என்பது போல தூக்கி தூர வைத்தவன், அவர்களின் வாழ்க்கை முறை எனக்கு அதை விமர்சிக்க உரிமையில்லை, அவனின் தங்கைக்கு புகைப் படத்தை அவன் அனுப்பிவைக்கிறான். அதை அவள் பார்க்கின்றாள். இது அவர்களுக்கான உறவு என்று முடித்துக் கொண்டவனுக்கு இப்போது மனதில் இரண்டு முக்கியமான கேள்விகள்!

விகாஸ் உறங்கி விட்டவுடன் அவனை சரியாய் படுக்கவைத்தவன், நேராய் படுத்துக் கொண்டே அங்கையிடம் “தூங்கிட்டியா” என்றான்.

உறங்க ஆரம்பித்து இருந்தவள் அவனின் குரலில் உடனே விழித்து அவனின் புறம் திரும்பி படுத்து “என்ன?” என்றாள்.

ஆனால் அவன் நேராய் படுத்துக் கொண்டே, “நீயும் இந்த மாதிரி ட்ரெஸ் போடுவியா, நீயும் குடிப்பியா?” என்று கேட்டு விட,

“ஆங்” என்று விழிப்பது இப்போது அவளின் முறையாயிற்று.

என்ன சொல்வது என்று தெரியாமல், “இது ஒரு தப்பான விஷயம் கிடையாது” என்றாள்.

“நான் தப்புன்னு சொல்லலையே, நீயும் அந்த ட்ரெஸ் போடுவியான்னு தானே கேட்டேன்”

“ம்ம், ஊர்ல போடுவேன். ஆனா இங்க வரும் போதே அம்மா இந்த மாதிரி இங்க போடக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க”

“குடிப்பியா?”

“ஒரு தடவை பீர் குடிச்சிருக்கேன், ஒரு மிலிட்டரி மெம்பெர்ஸ் பார்ட்டில தான். அப்போ எனக்கு பதினேழு வயசு, இன்னும் நல்லா ஞாபகமிருக்கு, ஏன்னா அம்மா என்னை முதலும் கடைசியுமா அடிச்சது அப்போதான்!”

“அடி பின்னி எடுத்துட்டாங்க, அப்பா நடுவுல வந்து அப்பாவும் ரெண்டு அடி வாங்கினார். அதுக்கப்புறம் நிறைய பார்ட்டீஸ் போயிருக்கேன். ஆனா தொட தோணவே இல்லை”

“உங்க அண்ணியை திட்ட மாட்டாங்களா?”

“அச்சோ, அம்மாக்கு தெரியாது. மனோ தண்ணி அடிக்கறதே தெரியாது. அப்புறம் அண்ணிது எப்படி தெரியும். ஆனா அப்பாக்கு எல்லாம் தெரியும். அவர் கிட்ட மறைக்க முடியாது, கண்டு பிடிச்சிடுவார். அதனால எதுன்னாலும் நானும் அண்ணாவும் சொல்லிடுவோம்” என்றாள்.

ராஜராஜன் பின்பு எதுவும் பேசாமல் அமைதியாய் இருக்க, “நீங்க ரொம்ப ஓல்ட் ஃபாஷனா” என்று கேட்டவளிடம்,

“இதுவரை தெரிஞ்சிக்கிற அவசியம் வந்ததில்லை” என்றான். இப்படியாக அவர்களுக்குள் சகஜமான பேச்சுக்கள் வந்திருந்தது.

அடுத்த இரண்டு நாளில் மனோவும் கரிஷ்மாவும் பாலியில் இருந்து வருவதாக இருக்க, அன்பழகன் மட்டும் இவர்களின் வீட்டிற்கு வந்திருந்தார்.

“இன்னும் நாங்க பொண்ணுக்கு சீர் செய்யலை, அதற்கான சந்தர்ப்பம் அமையலை. மனோ வந்த பிறகு அடுத்த நாள் கொண்டு வரலாம்னு இருக்கோம். நல்ல நாள் அன்னைக்கு, நீங்க சரின்னு சொன்னா!” என்று நாச்சியிடம் பவ்யமாய் பேசிக்

கொண்டிருந்தார்.

ஸ்ருஷ்டியை மடியில் வைத்துக் கொண்டு அவர் அமர்ந்திருக்க, பக்கத்தில் விகாஸ்!

எதிரில் ஓர் ஓரமாய் தில்லையுடன் அங்கை நின்று கொண்டிருந்தாள். அந்த வீட்டின் பழக்கம், பழக ஆரம்பித்து இருந்தாள். அவளின் பெரிய மாமியாரும் மாமியாரும் நிற்க... அவள் எப்படி அமர்வது. யாரும் சொல்லவில்லை பழக்கங்கள் பழக ஆரம்பித்து இருந்தது.

“எங்களுக்கு ஒண்ணுமில்லை, என் மத்த பேரன்களுக்கு சௌகரியப்படுமான்னு கேட்கறேன். அவனுங்க ரெண்டு பேரும் சென்னையில, அவங்களுக்கு லீவ் கிடைச்சா கொண்டு வாங்க. அவங்க இல்லாம நாங்க விசேஷம் பண்ண முடியாது, அப்படியே ஊர்லயும் கல்யாணம் விருந்து வைக்கலை, வெச்சிடுவோம்”

“அப்படியே உங்க பக்கம் யாராவது இருந்தா கூப்பிட்டுகங்க”

“எங்க பக்கமா?” என்று நிறுத்தியவர், “எங்க பக்கம் யாரும் கிடையாது. மனோ மாமனார் வீடு மட்டும் தான். அவங்களுக்கு இப்படி உடனே வர சௌகர்யப்படுமான்னு எனக்கு தெரியாது. இருந்தாலும் கூப்பிடுவோம். இல்லைன்னா எங்க பக்கம் நான்,

ராஜி, மனோ, கரிஷ்மா, குழந்தைங்க தான்” என்றார்.

“ராஜி ஏன் வரலை?”

“பொண்ணுக்கு சீர் கொண்டு வரும் போது வருவா” என்று முடித்துக் கொண்டார்.

இப்படியாக ஊரையே கூட்டி ஒரு பெரிய விருந்து, மூன்று வேளையும்!

அவர்களின் சொந்த பந்தங்கள் எல்லாம் வந்திருக்க, அங்கே அங்கையற்கண்ணியை பார்த்தவர்கள் கூட குறைவு தான், ராஜலக்ஷ்மியை பார்த்தவர்கள் தான் அநேகம். சொல்லப் போனால் அங்கையற்கண்ணியின் அக்கா போல தான் இருந்தார். வயதான தோற்றம் எங்கேயும் இல்லை.

ஒன்று அன்பழகனுடன் இல்லை மனோவுடன் இருந்தார், இல்லை கரிஷ்மா உடனிருந்தாள். ஆனால் ராஜியின் பார்வை முழுவதும் மகளிடம் தான். ஊரே வியக்கும் அளவிற்கு அன்பழகனும் மனோவும் சீர் வரிசையை இறக்கியிருந்தனர்.

அவர் மகளை மகளை பார்க்க, அவளோ அப்பாவை அம்மாவை என்று யாரையும் கண்டு கொள்ளவில்லை. எது என்றாலும் அவளின் பேச்சு கரிஷ்மாவுடன் மட்டும் தான்

மனோவை கூட தூர தான் நிறுத்தினாள். ஏன் இன்னும் கோபம் எதற்கு கோபம், அவளுக்கே தெரியவில்லை.

ஸ்ருஷ்டி இன்னும் யாரிடமும் செல்லாமல் அத்தையிடம் தொத்திக் கொண்டிருக்க, விகாஸோ இன்னும் அவனின் மாமன் பின்னே!

இங்கு வந்த பிறகு எப்போதும் எல்லோருடனும் அளவாய் பேசும் அங்கை அன்று ராஜராஜனின் அண்ணன்கள் அக்காள்கள் அவர்களின் வீட்டினர்கள் என்று அனைவருடனும் நன்கு பேசினாள்.

எல்லோரும் எடுத்துக் கட்டி ஆளுக்கு ஒரு வேலையாய் செய்து கொண்டிருக்க, சுவாமிநாதன் அன்பழகனை அழைத்து அவர்களின் மற்ற சம்மந்திகளுக்கு அறிமுகம் செய்ய, நாச்சி மகளை கைபிடித்து அழைத்து வந்தவர், “என் பொண்ணு” என்று இன்ன பிற சம்மந்திகளுக்கு அவரும் அறிமுகம் செய்தார்.

இப்படியாக விழா சிறப்பாக முடிய, மகளை தனிமையில் சந்தித்தும் ராஜலக்ஷ்மி கண்கலங்க, “ஷ், இப்ப எதுக்கு அழறம்மா”

“நீ என்கூட பேசவே மாட்டேங்கற” என்றார் தேம்பியபடி.

“ஷ், மா” என்றவள், “எனக்கு உன்னோட நல்லா பேச

முடியாது, நல்லா பேசினா, நீ என்னை கொஞ்ச நான் விட்டா, அடுத்த நிமிஷம் எனக்கு உன்னோட வரத் தோணும். எனக்கு இங்க இருக்கவே முடியலைம்மா புரிஞ்சிக்கோ, ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டு இருந்துட்டு இருக்கேன். அப்பாவோட முட்டாள் தனம் என் வாழ்க்கை மட்டுமில்ல, ராஜனோட வாழ்க்கையும் சேர்த்து கெடுத்து இருக்கார்”

“வேறயாரையாவது அவர் கல்யாணம் பண்ணியிருந்தா சந்தோஷமா இருந்திருப்பார். எங்களுக்குள்ள அந்த சந்தோசம் வருமான்னு கூட தெரியலை, எனக்கு ரொம்ப குற்றவுணர்ச்சியா இருக்கு”

“எனக்கு இதெல்லாம் ரொம்ப டென்ஷனா இருக்கு, அதனால என்னை நான் பார்த்துக்குவேன், நீ அப்பா கூடப் போ, அவரை தனியா விடாத, அவரோட சண்டை போடாத, புரிஞ்சதா?” என்று சொல்லி ஒருவாறு அவரை தேற்றி அனுப்பி வைத்தாள்.

நகைகளும் பணமும் இருந்த பெட்டியை நாச்சியிடம் அன்பழகன் கொடுத்திருக்க, அதனை விருந்தினர் எல்லோரும் சென்ற பிறகு வீட்டினர் மட்டும் இருந்தனர். ராஜராஜனின் அண்ணன்கள் குடும்பமும் அக்காள்கள் குடும்பமும் இருக்க

அதனை நாச்சி காண்பித்து கொண்டிருந்தார்.

அன்பழகன் தனியாய் நகையும் பணமும் கொடுத்திருக்க, மனோகணபதி தனியாய் நகையும் பணமும் கொடுத்திருக்க, கரிஷ்மா அவளின் பங்கிற்கு தனியாய் நகையும் பணமும் கொடுத்திருக்க…

“ம்ம்ம்” ராஜராஜனை பார்த்து அவனின் அண்ணன்கள் அக்காள்களுக்கே “பாருடா, எல்லாம் மாறிப் போச்சு” என்று தான் தோன்றியது.

ஆம்! அவனின் முன்னேற்றதிற்காய் அவர்கள் உதவி இருக்க, இன்று அதெல்லாம் ஒன்றுமில்லை என்று ஆகிவிட்டது அவனுக்கு வந்த நகையும் பணமும்.

“இதென்ன கிழவி, நகை அவங்க பொண்ணுக்கு குடுக்கறாங்க, பணம் எதுக்கு வாங்கின?” என்றவனிடம், “இதென்னடா கூத்தா இருக்கு, உங்க அக்காங்களுக்கு நாங்க கூட தான் குடுத்தோம், உங்க அண்ணிங்களுக்கு நாங்க கூட தான் வாங்கினோம்” என்றார் நாச்சி.

“அதெல்லாம் இவ்வளவு பணமில்லை”

“குடுத்தா வாங்கி போடுவியா? சும்மா அதையும் இதையும் பேசறான்” என்ற நாச்சி, “நாளைக்கு நகையை கொண்டு போய் பேங்க்ல உங்க ரெண்டு பேர் பேர்லயும் லாக்கர் தொறந்து அதுல வெச்சிடு.

பணத்தையும் பேங்க்ல போட்டுடு” என்று சொல்ல,

“என்ன பண்ணனும்னு நான் முடிவு பண்ணிக்கறேன்”

“என்ன பண்ணுவ நீ ராஜா, உன் பொண்டாட்டிக்கிட்ட எல்லாம் உன்னதுன்னு குடுக்க போறியா? போடா கூறு கெட்டவனே, ஒழுங்கா நான் சொல்றதை செய்”

“நீ உன் வேலையை பார் கிழவி, இவ்வளவு பணத்தை பேங்க்ல போட்டா எப்படி வந்ததுன்னு கணக்கு கேட்பாங்க” என்று அவரை அதட்டி விட்டு, “நகை பணத்தை எடுத்து பத்திரமா வெச்சிக்கோ” என்று அங்கையிடம் சொல்லி அவன் மேலே செல்ல,

தில்லையிடம் “அத்தை, இதை என்னால மேல தூக்கிட்டு போக முடியாது, நீங்களே உங்க பிள்ளையை தூக்கிட்டு போக

சொல்லுங்க” என்று அவரின் காதை கடித்தாள்.

“ராஜா இதை உங்க ரூம்க்கு எடுத்துட்டு போ” என்று தில்லை சொல்ல, இறங்கி வந்து தூக்கி சென்றான்.

இரண்டு நடை நடந்து ரூமில் எல்லாம் வைத்தவன், காலையில் இருந்து செய்த வேலைகளால் அக்கடா என்று நீட்டி படுத்துக் கொள்ள, இரவு உணவிற்கு கூட அவன் கீழே இறங்கி வரவில்லை, உறங்கிவிட்டான்.

இரவு உணவிற்கு பின் விருந்து அலைச்சலில் எல்லோரும் விரைவில் படுக்கப் போய்விட, ஊரிலிருந்து வந்த இரு மகள்களும் மருமகள்களும் கூட படுக்கச் சென்று விட, வாசுகியும் தில்லையும் வேலையாட்களை வைத்து எல்லாம் ஒதுங்க செய்து கொண்டிருந்தனர்.

அது வரையிலுமே பட்டுப் புடவையில் இருந்த அங்கை “நான் போய் ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்” என்று மேலே வந்து உடை மாற்றி சென்று அவர்களுடன் நின்று மேற்பார்வை பார்த்திருந்தாள்.

அந்த வகையினில் நாச்சிக்கும் சுவாமிநாதனுக்கும் தமிழ்செல்வனுக்கு மிக திருப்தி, பொறுப்பாய் இருக்கிறாளே என்று.

யாரும் எதுவும் செய்யப் போவதில்லை, ஆனால் எல்லாம் ஒதுங்க செய்யும் வரை, அதனை பார்க்க வேண்டும், அதனைக் கூட மற்ற பிள்ளைகள் வந்தவர்கள் பார்க்காத போது, வீட்டினலாய் எல்லாம் முடியும் வரை அவள் நின்றாள்.

பின் பணம்கொடுக்க வேண்டி இருக்க "ராஜராஜனை எழுப்பும்மா" என்றார் சுவாமிநாதன்.

"எதுக்கு மாமா நல்லா தூங்கறாங்க"

"பணம் குடுக்கணும்மா அவனுக்கு தான் எவ்வளவுன்னு தெரியும்"

மேலே அவனை எழுப்பச் செல்ல, இருந்த களைப்பில் லேசாய் வாய் திறந்து தூங்கும் அவனை எழுப்ப மனதில்லாமல், கீழே வந்து, "என்னை பார்க்க சொன்னாங்க" என்று அவளாய் சொல்லி, பணம் தான் பெட்டி பெட்டியை இருந்ததே, பணத்தை கொடுத்து அவர்களை அனுப்பினாள்.

பின் தில்லையும் அவளும் மட்டுமே, "பசி தாங்கமாட்டான் அவன் அங்கை, எதுக்கும் இந்த இட்லி சாம்பார் கொண்டு

போய்டு, தூக்கத்துக்கு நடுவுல எழுந்தா பசிக்குதுன்னு எழுப்புவான்” என்று சொல்ல,

இப்படியாக வரவு செலவுகள் வீட்டின் பொறுப்பு கணவனின் பொறுப்பு என்று அத்தனையையும் ஒரே நாளில் அவளாகவே எடுத்துக் கொண்டாள்.

மேலே சென்று அவள் படுக்க, அந்த அரவத்தில் விழித்தவன், இவளை பார்த்ததும் “தூங்கற நேரமாகிடிச்சா. பணத்துக்கு நிப்பாங்களே” என்று வேகமாய் எழ,

“ஈசி, நான் குடுத்துட்டேன், காலையில பேசிக்கலாம்” என்று கண்ணை மூட, “பசிக்குது என்று படுக்கையில் இருந்து இறங்கி நின்றான்.

“அத்தை குடுத்து விட்டாங்க இட்லி இருக்கு” என்று விட்டாள். எழுந்து சென்று பரிமாறவெல்லாம் இல்லை. அவனும் எதிர்பார்க்கவில்லை. அங்கேயே அமர்ந்து உண்டவன், பின்பு ஒரு குளியல் போட்டு படுக்கைக்கு வந்து படுத்தான்.

அப்போதுதான் தான் வித்தியாசமே தெரிந்தது, முதல் முறை தனியாய் இருவரும் ஒரே படுக்கையில், இவன் புறம் தான்

திரும்பி படுத்து கண்மூடி இருந்தாள்.

உறங்கி விட்டாளா என்று பார்க்க உறங்கி விட்ட மாதிரியும் இருந்தது, உறங்காத மாதிரியும் இருந்தது.

விழியெடுக்காமல் அவளை பார்த்தான்... எப்போதும் போல வாய் மெதுவாய் முணுமுணுத்து "ஜாதிக் குதிரை" என்று...

அவனின் முணுமுணுப்பில் விழி திறந்தவள் "ஏதாவது சொன்னீங்களா?" என்றாள்.

"இல்லையே" என்றான் அவசரமாய்.

"இல்லை ஏதோ சொன்ன மாதிரி இருந்தது" என்று நிச்சயமாய் அங்கை சொன்னாள்.

"ம்ம், ஜாதி குதிரைன்னு சொன்னேன்" என்றான் "எனக்கென்ன உன்னை பார்த்து பயமா?" என்ற பாவனையில்.

"அப்படின்னா"

"ம்ம், குதிரைல நிறைய விதம். ஜாதி குதிரைன்னா அது ஒரு வகை ன்னு சொல்லுவோம். ரொம்ப ஸ்பெஷல், எல்லோராலையும்

அடக்க முடியாதுன்னு சொல்லலாம் இல்லை எல்லோர்கிட்டயும் அடங்காதுன்னு சொல்லலாம்” என்றான் அவளை ரசனையாய் பார்த்தபடி.

அது அவளை சொன்னான் என்று புரியாதவளாக, “இதை எதுக்கு இப்ப சொன்னீங்க”

“உனக்கு புரியலையா? இல்லை புரியாத மாதிரி நடிக்கிறியா?” என்றான் மெல்லிய ஏமாற்றத்தில்.

அதில் அங்கைக்கைக்கு கோபம் வந்து விட, “என்ன எனக்கு புரியலை? உங்க கிட்ட எனக்கு நடிக்க வேண்டிய அவசியமும் இல்லை” என்று சொல்ல,

“நான் உன்னை சொன்னேன் ஜாதிக்குதிரைன்னு” என்றான் உடைத்து.

அங்கை அவனை முறைத்து பார்த்திருக்க, அந்த பார்வை ராஜராஜனை வசீகரிக்க, “இன்னைக்கு குழந்தைங்க இல்லை. இன்னைக்கு என்னை சண்டைக்கு கூப்பிட மாட்டியா நீ? தைரியமிருந்தா தொட்டுப் பார்ன்னு அன்னைக்கு கையை கட்டி நீ

உட்கார்ந்து என்னை பார்த்து சொன்னப்போ, தொட்டு பார்க்கிறதென்ன எனக்கு உன்னை கடிச்சு சாப்பிடணும் போல இருந்தது" என்று சொல்ல,

அதற்கும் முறைத்து தான் பார்த்திருந்தாள், சண்டை இழுக்கவேயில்லை…

"என்ன எதுவும் பேச மாட்டியா? உனக்கு பயமா?"

"பேசணுமா?" என்று நிறுத்தியவள், "தூங்குங்க" என்று சொல்ல, அது சொன்ன விதம், "அம்மாடி, இதுவும் ஒரு அறைகூவலோ" என்று தான் ராஜராஜனிற்கு தோன்றியது.

இப்போது ராஜராஜனின் பார்வையில் லகுத்தன்மை, ரசனை எல்லாம் மறைந்து ஒரு உஷ்ணம் ஏறியது.

# அத்தியாயம் 15

“என்ன நக்கலா” என்றான் பார்வையின் உஷ்ணம் சற்றும் குறையாமல்.

“ப்ச், இப்போ என்ன பிரச்னை உங்களுக்கு”

“என்ன பிரச்சனைன்னு உனக்கு தெரியாதா?”

“உங்களுக்கு என்ன பிரச்சனைன்னு எனக்கு தெரியலை, ஆனா கல்யாணம்னா என்ன நடக்கும்னு தெரியாத சின்ன பொண்ணு நான் கிடையாது” என்று பட்டென்று சொல்லிவிட…

“அம்மாடி இப்போது இவள் என்ன சொல்ல வருகிறாள்” என்று நிஜமாய் குழம்பிவிட்டான்.

“நீ என்னை வீட்டுக்குள்ள கூட விடலை” என்று சம்மந்தமில்லாமல் சொல்ல,

“நான் உங்களை கூப்பிட்டேன் நீங்க வரலை”

“உண்மையா கூப்பிடறதுக்கும் பேருக்கு கூப்பிடறதுக்கும்

வித்தியாசம் இருக்கு"

"எஸ், பேருக்கு தான் கூப்பிட்டேன். ஏன்னா அப்போ எனக்கு உங்களோட சேர்ந்து வாழற எண்ணம் அதிகமா இல்லை" என்று சொல்லிவிட்டாள்.

"இப்போ" என்றான் உடனே,

"இப்போதைக்கு விட்டு போற எண்ணம் எனக்கில்லை" என்று அதற்கும் பதில் சொல்லி விட்டாள்.

"அப்போ அன்னைக்கு விட்ட சண்டையை இப்போ தொடரலாமா" என்றான் சரசமாக.

"என்ன சண்டை?" என்றாள் புரியாதவளாக.

"கொஞ்சம் லேட் பிக் அப் தான் போல நீ" என்று உதடு பிதுக்கியவன், "ம்ம், என்னை தைரியமிருந்தா தொட்டு பாருன்னு சொன்னியே, அந்த சண்டையை" என்று சொல்லி அங்கையை நேர் பார்வை பார்த்து அவளின் பதிலுக்காய் காத்திருந்தான்.

"ம்ம்" என்று அவள் சொன்ன மாதிரியும் இருந்தது, சொல்லாத மாதிரியும் இருந்தது.

"சண்டை போடலாமா?" என்றான் மீண்டும்.

"ம்ம்" என்று சற்று சத்தமாய் சொல்லி விட,

அம்மாடி! அங்கே நிஜமாய் ஒரு சண்டை தான். எப்போது எப்படி அவளை இழுத்து மேலே போட்டுக் கொண்டான் என்று தெரியவேயில்லை.

"அம்மா" என்று பயத்தில் ஒரு சிறு அலறல் அங்கையிடம், அவனின் மேலே இருந்தாள். வெகு அருகில் அவளின் முகம், இறுக்கி அணைத்து பிடித்திருந்தான். எதிர்பார்க்கவேயில்லை.

"என்ன அவ்வளவு தான் உன் தைரியமா பயந்துட்டியா?" என்றான் சிரிப்போடு.

"ஒன்னும் பயமில்லை" என்று சொன்ன அவளின் குரலில் சற்று பயம் இருக்க தான் செய்தது.

"அப்படியா பயமில்லையா?" என்று சொல்லிக் கொண்டே அவளை ஒரு புரட்டு புரட்டி இவன் மேலே, அவள் கீழே என்று

கொண்டு வந்திருக்க, அவனின் வேகத்தில் தலை சுற்றிப் போனது!

“பயமாயிருக்குன்னு ஒத்துக்கோ” என்றவனின் முகம் சிரிப்பை விட்டு இதமான புன்னகைக்கு மாறியிருந்தது.

“இல்லை எனக்கு பயமாயில்லை” என்றாள் அப்போதும் கெத்தை விடாமல், வெளியில் மட்டும்மல்ல அவளுக்குள்ளும் சொல்லிக் கொண்டாள். “இது தான் உன் வாழ்க்கை இவனோடு தான் உன் வாழ்க்கை, இது ஒரு வழி பாதை, நடந்து தான் ஆக வேண்டும் பின் வாங்க முடியாது”

ராஜராஜனோ இவளின் மனநிலை புரியாமல் “சரி, உனக்கு பயமில்லைன்னு நீ சொல்றதை நான் ஒத்துக்க மாட்டேன்” என்று கேலி போல பேசியவன், “அன்னைக்கு விட்ட சண்டையை மட்டும் இப்போ போடறேன், முடிஞ்சா பயமில்லைன்னு எனக்கு காண்பி” என்று சொல்ல

“பார்த்துடலாம்” என்ற பார்வை அவள் பார்க்க,

பின்னே உண்மையில் அங்கே யார் அடங்கினர், யார் அடக்கினர் என்று தெரியவேயில்லை.

அங்கைக்கு எப்படியோ ராஜராஜன் இப்படி ஒரு இரவை அந்த இரவு ஆரம்பிக்கும் வரையிலும் கூட நினைத்து பார்த்ததில்லை.

“தேங்க்ஸ் அங்கை, தேங்க்யு வெரி மச். நிஜமாவே நான் இதை எதிர்பார்க்கலை” என்று அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு அவளின் முகம் பார்த்து சொன்ன போது, அவனின் பார்வையை சில நொடிகள் சந்தித்தவள் அவனுக்கு பதில் சொல்லாமல் அவனின் நெஞ்சினில் முகம் புதைத்து கொண்டாள்.

அவளுக்கு ஒரு விஷயம் போதுமானதாக இருந்தது, அது ராஜராஜனின் அருகாமை அவளுக்கு ஒவ்வாமையை கொடுக்க வில்லை என்பது தான். வாழ என்று வீட்டிற்கு வந்து விட்டால், அவனின் அருகாமையை தன்னால் சகிக்க முடியாவிட்டால் எல்லாம் தப்பாகி விடுமே என்பது அப்படி ஒரு பயத்தை அவளுக்கு கொடுத்துக் கொண்டிருக்க அப்படி இல்லை என்பதே அவளுக்கு போதுமானதாக இருந்தது.

வாழ்க்கை தெளிந்த நீரோட்டமாய் செல்ல துவங்கியது… அங்கை அவனின் வீட்டோடு பொருந்தி போக ராஜராஜன் உற்சாகமாய் வேலைகளை பார்க்க துவங்கினான்.

மில்லிற்கும் அங்கை உடன் வரத் துவங்க, ராஜராஜன்

பெரியப்பாவோடும் அப்பாவோடும் வயல் வேலைகளையும் பார்க்க துவங்கினான்.

தொட்டதெல்லாம் அவர்களுக்கு துலங்கிற்று என்று தான் சொல்ல வேண்டும், சிவன் கோவிலும் ஒரு பக்கம் வளர்ந்தது…

இரண்டே மாதத்தில் அங்கை கருவுற… ராஜராஜனை கையில் பிடிக்க முடியவில்லை. மீண்டும் அங்கையிடம் “தேங்க்ஸ், தேங்க்ஸ், நான் இவ்வவளவு சீக்கிரம் எதிர்பார்க்கலை” என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்த, பதிலுக்கு எப்போதும் போல ஒரு அணைப்பு.

மசக்கை அவளை படுத்தி எடுத்தது. அதுவும் சாப்பிட்ட அத்தனையும் அடுத்த நிமிடம் வெளியில் வந்து விடும். அப்படி ஒரு சிரமம் ஆறு மாதம் வரையிலுமே இருந்தது. அவளுக்கு என்ன பிடிக்குமோ அது தான் சமையலே வீட்டினில். தில்லை அப்படி பார்த்துக் கொண்டார்.

ராஜராஜனிற்கு நிறைய நிறைய வேலைகள், அவன் அங்கையோடு செலவளிக்கும் நேரம் இரவு மட்டுமே. அதில் ஒன்று அவளின் உடல் உபாதைகள் இல்லை கூடல்கள் இப்படி தான் ஓடியது.

உடளவு தேடல்களுக்கு இருவருக்குமே பஞ்சமில்லை.

அதுவும் ராஜராஜனாய் ஆரம்பித்தால் தான். மனதளவில் தேடல்கள் தெரியவைக்கும் அளவு நேரமில்லை. “நான் இப்படி, நான் அப்படி, எனக்கு இது பிடிக்கும், இது பிடிக்காது, நீங்கள் ஏன் லேட், இல்லை ஏன் சீக்கிரம் போக வேண்டும்” என்று அங்கை எதுவுமே சொன்னதுவுமில்லை, கேட்டதுவுமில்லை. அதனால் ராஜராஜனிற்கு அவளை பற்றி எதுவும் தெரியாது.

ஆனால் ராஜராஜனை பற்றி அங்கைக்கு எல்லாம் தெரியும். தில்லை தான் அவனின் அகராதியாய் அவளுடன் இருக்கின்றாரே. அவனை பற்றி எல்லாம் சொல்லுவார். அவனின் குழந்தை பருவத்தில் ஆரம்பித்தால் அன்று காலையில் நடந்தது வரை சொல்லுவார். காலை மதியம் இரவு என சொல்லிச் சொல்லி அங்கைக்கு எல்லாம் ராஜராஜனை பற்றி மனப் பாடம் என்று தான் சொல்ல வேண்டும்.

அங்கையற்கண்ணி பிள்ளை உண்டானதில் இருந்து அடிக்கடி ராஜலக்ஷ்மி வந்து பார்த்து போக தொடங்கியிருந்தார். மாதம் இருமுறையாவது வந்து விடுவார்.

ஏழாம் மாதத்தில் வளை பூட்ட முடிவு செய்து நாள் குறித்தனர்… நன்றாய் உடல் எடை ஏறிவிட, கை கால் வீக்கமும் இருக்க, இன்னுமே அவ்வப் போது வாமிட் வர, சற்று பீ பீ யும்

இருக்க என்று அங்கையற்கண்ணி சில பல தொந்தரவுகளுடன் இருந்தாள்.

“வளைகாப்பு முடிஞ்சு நாங்க கூட்டிட்டு போறோம். அங்கே மிலிடரி ஹாஸ்பிடல் இருக்கு, ரொம்ப நல்லா பார்ப்பாங்க, அதுவும் இவரோட பொண்ணுன்னா இன்னும் ஸ்பெஷல் கேர் இருக்கும். இவளுமே சிரமப்படரா அனுப்புங்கம்மா” என்று நாச்சியிடம் கேட்க…

“நான் வரலை” என்று அங்கை உடனே சொல்ல,

“இன்னுமா இந்த கல்யாணத்துனால உனக்கு எங்க மேல கோபம்” என்று ராஜலக்ஷ்மி கேட்க, அதற்கு எதுவும் பதில் சொல்ல இயலவில்லை. இப்போது எது சொன்னாலும் அது சரி கிடையாது அல்லவா, அங்கை அமைதியாகிவிட, “நீ வர்றியான்னு நான் கேட்கலை, நீ வர்ற” என்று முடித்து விட்டார் ராஜலக்ஷ்மி.

அந்த வீட்டின் பெரிய மனுஷி நாச்சியிடம் கேட்டு முடிவெடுத்து விட்டனர். ராஜராஜனிடம் கேட்கவேயில்லை, அவனிடம் சொல்ல மட்டுமே செய்யப் பட்டது!

இன்னும் சேர்ந்து வாழ ஆரம்பித்த பிறகும் அன்பழகனும் ராஜலக்ஷ்மியும் இருக்கும் வாசஸ்தலமான டெஹ்ராடூனிற்கு செல்லவேயில்லை, அவர்கள் பல முறை அழைத்தும்.

இதோ வளை பூட்டி அவளை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டனர். “சீக்கிரம் நீங்களும் வாங்க, எல்லோரையும் கூட்டிட்டு வாங்க” என்ற அழைப்பை ராஜராஜனை பார்த்து வைத்து.

“நான் போகலை, என்னால உங்களை விட்டுட்டு இருக்க முடியாது, நீங்களும் வாங்க, எப்போ வருவீங்க” இப்படி பலதும் ராஜராஜன் அங்கையிடம் எதிர்பார்த்தானோ என்னவோ?

அவளானாள் “நான் போயிட்டு வர்றேன்” என்ற வார்த்தையோடு கிளம்பிவிட்டாள். சிறிது நேர தனிமை கூட கிடைக்கவில்லை. ஒரு வாரம் முன்னமே ராஜலக்ஷ்மி வந்திருக்க, அன்றிருந்தே அவள் அம்மாவோடு தான் படுத்துக் கொண்டாள். இப்போது போய் வருகிறேன் என்று சென்றும் விட்டாள்.

என்னுடைய வாழ்க்கையே திருமணம் என்ற கடமைக்கோ? காதல், பிடித்தம், இது எதுவும் அவளிற்கு என் மேல் இல்லையோ? என்று தோன்ற ஆரம்பித்தது.

உண்மையில் அங்கைக்கு அந்த நிமிடம் அப்படி எதுவும் தோன்றவில்லை. ஊருக்கு சென்று ஒரு நான்கைந்து நாட்கள் வரையிலும் கூட எதுவும் பெரிதாய் தோன்றவில்லை.

அம்மா அப்பாவின் கொஞ்சல், சீராடல், பழைய நட்புக்களை பார்ப்பது, வெயிலில் காய்ந்து வந்திருந்தவளுக்கு இந்த குளிர் பிரதேசம் அப்படி ஒரு இதத்தை கொடுத்தது.

என்னவோ வீடு வந்து சேர்ந்து விட்ட உணர்வு!

வந்து சேர்ந்ததும், வந்து சேர்ந்து விட்டேன் என்று சொல்லியவள் தான், பின்பு இரண்டு நாட்கள் தூக்கத்திலயே போனது. அதன் பின் ஒரு நாளுக்கு ஒரு முறை ராஜராஜனிற்கு அவள் அழைத்த போதோ, இல்லை அவன் அழைத்த இவளுக்கு அழைத்த போதோ, “நல்லா இருக்கேன், சாப்பிட்டேன், தூங்கினேன், நீங்க எப்படி இருக்கீங்க, சாப்பிட்டிங்களா, தூங்கினிங்களா” இப்படி தான் பேச்சு! அதற்கு மேல் அவளுக்கு என்ன பேச என்று தெரியவில்லை.

ராஜராஜனின் மனதை கவலை அரிக்க துவங்கியது. திருமணம் செய்து வைத்து விட்டார்கள் என்று கடமைக்கு வாழ்ந்தாளா, நெஞ்சம் காந்திப் போனது.

உண்மையில் அவனால் அங்கையை பார்க்காமல் இருக்க

முடியவில்லை. என்ன செய்கிறாளோ? எப்படி இருக்கிறாளோ? உடல் நிலை எப்படி இருக்கிறதோ? இப்படி பலதும் மனதை வருத்தின, அவளை பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஆழியின் அலையாய் மனதை சுழற்றி அடித்தது.

அவள் சென்று ஒரு மாதம் ஆகிவிட, "என்னடா ராஜா, அவ பேசியே ரெண்டு நாள் ஆச்சு, எட்டாம் மாசம் ஆரம்பிச்சிடுச்சு, அவளை ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு" என்று தில்லை சொல்ல,

"ஏன் நீங்க சொல்ல மாட்டீங்களா? உங்க மருமக இல்லையா?" என்று எரிந்து விழுந்தான்.

"என்னடா சொன்னேன் நான், இந்த காயு காயுற என்கிட்டே" என்று தில்லை சொல்ல,

"ப்ச், போம்மா" என்று சலித்து வேலையை பார்க்க கிளம்பிவிட்டான். வாழ்க்கையே அவ்வளவு சலிப்பை கொடுத்தது.

"நீ ஃபோன் பண்ணு, நாம பேசலாம்" என்றார் நாச்சி.

தில்லை அழைக்கவும் "சொல்லுங்க அத்தை" என்ற

அங்கையின் குரல் உற்சாகமாய் கேட்க,

“எங்க அங்கை ஃபோன் பண்ணலை, உன் உடம்பு எப்படி இருக்கு?” என்று இரண்டு வார்த்தை பேசி நாச்சியிடம் கொடுக்க,

“என்ன கண்ணு? எப்படி இருக்க?” என்று பேசி ஜாக்கிரதைகள் சொல்லி, “உன் புருஷனோட பேசறியா” என்றார்.

“பேசறேனே பாட்டி தினமும்” என்று சொன்னது கூட உற்சாகமாய் தான் இருக்க, “சரி, இவனுக்கு வேறு எதுவோ பிரச்சனை போல” என்று நாச்சியும் விட்டு விட்டார்.

தமிழ்நாட்டிற்குள் ஏதாவது ஊர் என்றால் சென்றிருப்பான். அவர்களும் அழைக்கிறார்கள் வாருங்கள் என்று, ஆனால் எப்படி வரவேண்டும் என்று சொன்னதில்லை. இன்னும் அட்ரெஸ் கூட தெரியாது.

அவனாய் சென்று நிற்கலாம் என்றாலும் இவர்களிடம் சொல்லி கேட்டு, மனது என்னவோ செய்தது! எப்போதும் போல “போடி” என்று விடமுடியவில்லை.

இதற்கு கட்டில் யுத்தங்கள் பல புரிந்திருந்தாலும், அதனை

தவிர அன்னியோன்யம் என்று சொல்வதற்கு வேறு நினைவுகள் இல்லை. அம்மா தான் அவனின் உணவின் பொறுப்பு. அப்படி எதையும் அங்கை செய்து கொடுத்ததில்லை, பரிமாறியதும் இல்லை. பெரிய குடும்பம் இருவரும் சேர்ந்து அமர்ந்து உண்டது கிடையாது. அவனின் உடைகள் வேலையாள் துவைத்து வரும் போதும் அம்மா தான் மடிப்பார்.

ஒரு ரகசிய புன்னகை, சிறு தொடுகை, இதழ் முத்தம் என்று எதுவும் அவனின் ஞாபகத்தில் இல்லை. ஏனென்றால் அப்படி எதுவும் நடக்கவே இல்லை.

சரி, சிரித்து பேசி இப்படியான தருணங்களும் இல்லை! சரி, எங்காவது வெளியில் தனியாய் சென்றார்களா? அதுவும் இல்லை! இரண்டே மாதத்தில் கருவுற்றிட அதில் உடல் உபாதை படுத்த, எங்கேயும் விருந்திற்கு கூட செல்லவில்லை.

அக்காள்களின் வீடு மட்டும் சென்று வந்தான்! அண்ணன்கள் வீடு கூட செல்லவில்லை! கடமையோ? காதலோ? அவளை பார்த்தே ஆக வேண்டும் என்ற வெறி கிளம்ப, “ஒரு பார்சல் அனுப்பணும், உன்னோட அட்ரெஸ் கிடைக்குமா?” என்று கேட்டு, சென்னை சென்று அங்கிருந்து டெஹ்ராடூனிற்கு ஃபிளைட் பிடித்து மாலை ஐந்து மணிக்கு சென்று சேர்ந்தான்.

ஃபிளைட் பயணமே அவனுக்கு புதிது, அவனுக்கு ஆங்கில வழி கல்வியே, ஆங்கிலம் நன்றாய் புரிந்தாலும், பேச வந்தாலும், பள்ளி முடித்து கிட்டத்தட்ட பத்து வருடங்கள் அதனை பேசியிறாததால், சற்று உடைந்து தான் பேச வரும். ஹிந்தியும் தெரியாது.

கையில் ஒரு ஷோல்டர் பேக் மட்டும், டேக்சி எடுத்து, அட்ரெஸ் கொடுத்து வந்தால், அங்கே அவர்களுக்கு கொடுக்கப் பட்டிருந்த ஆஃபிசர் பங்களா பூட்டியிருக்க, இவன் எங்கே அவர்கள் என்று முன்னிருந்த காவலாளியிடம் கேட்க, அவன் வெளியே போயிருக்கிறார்கள், எப்போது வருவார்கள் என்று தெரியாது என்று சொல்ல…

இவன் யார் என்று சொல்லியிருந்தால் உள்ளே விட்டிருப்பான், அங்கே வராண்டாவில் சேர் எல்லாம் இருந்தது, அமர்ந்தும் இருந்திருக்கலாம். இவனுக்கு ஏனோ தானாய் சென்று சொல்ல பிடிக்கவில்லை.

அங்கைக்கு கைபேசியில் அழைத்தான், அவள் வெகு நேரம் எடுக்கவில்லை, விடாமல் அழைக்கவும் எடுத்தவள், இவன் பேசும் முன்னயே “இங்க நாங்க வெளில வந்திருக்கோம், பூஜைக்கு, இங்க சத்தமா இருக்கு, நானே கூப்பிடறேன்” என்று சொல்லி வைத்து

விட்டாள்.

இதற்கு அவர்கள் சென்றிருந்தது, ஒரு இரண்டு தெரு தள்ளி தான். அவனுக்கு எப்படி தெரியும்.

“இந்த பேக் இங்க இருக்கட்டுமா?” என்று கேட்க, “நோ, நோ” என்று விட்டான் காவலாளி.

“யார்?” என்று தெரியாமல் ஒரு ராணுவ அதிகாரியின் வீட்டில் எதனையும் வாங்க மாட்டார்கள் அல்லவா?

அவன் இந்த பகுதியில் நுழையும் போதே அவனை முற்றிலும் சோதனையிட்டு யார் அவன், யார் வீட்டிற்கு வந்திருக்கிறான் என்று கேட்டு, அவனின் ஐடி எல்லாம் சரி பார்த்து தான் உள்ளே விட்டனர்.

எப்போது வருவார்கள் என்று தெரியாமல், பக்கத்தில் சிறிது தூரம் நடந்து, ஒரு காஃபி ஷாப் வந்தான். அரை மணி நேரம் கழித்து சென்று பார்த்தான், வரவில்லை. திரும்ப வந்தான் காஃபி அருந்தினான், திரும்ப சென்றான், இப்படி இரண்டு மணி நேரங்கள் கழிய,

மீண்டும் இவன் வந்த போது உள்ளே ஒரு ஜீப் நுழைய, அதில் ராஜலக்ஷ்மியும் அன்பழகனும் மட்டுமே!

அங்கையற்கண்ணியை காணவில்லை, அதனால் பேசாமல் நின்று விட்டான்.

மீண்டும் அவளுக்கு அழைக்கலாமா என்று யோசித்து, வேறு வழியில்லாமல் அழைக்க, அழைக்கும் போதே பார்த்து விட்டான், அந்த சாலையின் ஆரம்பத்தில் யாரோ ஒருவனோடு பேசி மெதுவாய் நடந்து வந்து கொண்டிருந்தாள். வயிறு இன்னும் நன்றாய் பெரிதாகி இருந்தது. ஊரில் சுரிதார் அல்லது புடவை மட்டுமே அணிவாள்… இங்கு நீளமாய் கவுன் போல ஏதோ அணிந்திருந்தாள். அதற்கு மேலே ஸ்வெட்டர், தலைக்கு கேப், கைகளுக்கு க்ளௌஸ் என குளிருக்கு மிகுந்த பாதுக்காப்பாய் நடந்து வந்தாள். அந்த சாலையில் இருந்த விளக்கொக்ளியில் பார்ப்பதற்கு எதோ வெள்ளைக்கார துரைசானியை போல இருந்தாள்.

கூட வந்தவன் ஏதோ சொல்ல, அப்படி ஒரு சிரிப்பு அவளிற்கு. அந்த ஏகாந்த வேலையில் வேறு ஜனநடமாட்டம் அங்கே இல்லாததால் அந்த சிரிப்பு சத்தம் நன்கு கேட்டது. இப்படி கூட சிரிப்பால் என்பதே ராஜராஜனிற்கு அன்று தான் தெரியும். ஆசையாய் ரசனையாய் அவளை பார்த்திருந்தான்.

அவள் சிரிப்பதற்கும் அவளின் கை பேசி ஒலிப்பதற்கும் சரியாய் இருக்க எடுத்தவள், “நான் இன்னும் வீட்டுக்கு போகலை,

போனதும் பேசறேன்" என்று சொல்லி மீண்டும் வைத்து விட,

ராஜராஜனிற்கு அங்கையை பார்த்ததும் தோன்றிய உற்சாகம் அப்படியே வடிந்தது. அப்படியே கைபேசியை தூக்கி தரையில் போட்டு உடைக்கும் ஆவேசம் கிளம்பியது. பின்னே கிட்ட தட்ட இரண்டு மணி நேரத்திற்கும் மேலாய் சுற்றுகிறான். பயந்து பயந்து நடக்கிறான், யாரேனும் எதுவும் "யாரடா நீ?" என்று கேட்டு சந்தேகத்திற்கு இடமானவன் என்று நினைத்து விட்டால். அதுவே மிலிட்டரி ஏரியா.

வீட்டின் எதிர்புறம் நின்றிருந்தான். அதுவும் அங்கையின் சத்தமான இந்த சந்தோஷ சிரிப்பு அவனை என்னவோ செய்தது. "என்னுடன் இப்படி சிரித்ததே இல்லையே. என்னுடனான வாழ்க்கை இப்படி சிரிப்பையும் சந்தோஷத்தையும் கொடுக்கவில்லையா" மனதளவில் பெரிதாக அடி வாங்கினான்.

அவள் வீடு வந்து உள்ளே செல்ல முயல, ஜீப் நேரே உள்ளே சென்று விட்டதால், ஒருவன் வந்து விசாரித்ததை காவலாளி சொல்ல இயலவில்லை.

இப்போது அங்கை நடந்து வரவும், "மேம்சாப், இங்க ஒருத்தர்

உங்களை தேடி வந்தார்" என்றான் ஹிந்தியில்.

"முஜே யா பப்பாகோ" என்று அவள் கேட்க,

"ஆப்கோ" என்றான் தெளிவாய்.

"நம்ம ஃபிரண்ட்ஸ் யாராவதா இருக்கும்" என்று உடன் வந்தவன் சொன்னான். அவன் அவளின் பள்ளி தோழன், வேறு ஒரு அதிகாரியின் மகன், இப்போது அவர்களின் வீட்டின் பூஜைக்கு தான் சென்றிருந்தனர்.

அங்கேயே உணவு உண்டிருக்க, உண்டதும் "நான் நடக்கிறேன்" என்று அவள் சொல்லியிருக்க, நான் உடன் வருகிறேன் என்று கிளம்பியிருந்தான்.

"ஃபிரண்ட்ஸ் வந்தா எனக்கு ஃபோன் பண்ணுவாங்க" என்று ஹிந்தியில் பதில் சொன்னவளுக்கு, சட்டென்று மனம் பதைக்க, சுற்றிலும் அவசரமாய் பார்வையை ஓட விட்டுக் கொண்டே அவளின் கைபேசி எடுத்து ராஜராஜனையும் அழைத்து விட்டாள். அவனின் கைபேசி ஒலி மெல்லியதாய் கேட்க, இன்னும் நன்றாய் பார்க்க, எதிரில் ஒரு மரத்தினடியில் இவளை பார்த்தபடி

ராஜராஜன் நின்றிருந்தான்.

“ஓஹ் கோஷ்” என்று ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

இவன் சற்று இருட்டான இடத்தினில் இருக்க, அவள் வெளிச்சத்தில் நன்றாய் பார்வையில் படும் தூரத்தில் இருந்தாள். தேவதையாய் நின்றிருந்தவளை சிறிது நேரம் ஆசை தீரப் பார்த்தவன், பின் அப்படியே அவளிற்கு எதிர்புறம் நடக்க ஆரம்பிக்க,

உணர்விற்கு வந்தவள் “ராஜன்” என்று அழைக்க, நின்றவன், “உன்னை பார்க்கணும்னு தோணிச்சு, வந்தேன், பார்த்துட்டேன், கிளம்பறேன்” என்று சொல்லி நடக்க…

“ராஜன்” என்று கத்தினாள்.

அவளின் கத்தலுக்கு காவலாளியும், “எங்கே இவளை காணோம்” என்று பார்க்க கேட்டிற்கு வந்த அன்பழகனும் விரைந்து வர,

“பா, போறாங்கப்பா, கூப்பிடுங்க” என்று கண்கலங்கி நின்றாள். பின்னே அவள் எதிர்பார்க்கவேயில்லை அவன் வருவான் என்று.

வெகு நேரம் முன்பே வந்திருக்க வேண்டும் என்று புத்திக்கு உரைக்க, அவனை காக்க வைத்து விட்ட குற்றவுணர்ச்சியில் கண்கள் கலங்கி விட்டது.

வேகமாய் சென்ற அன்பழகன் “எங்க போறீங்க” என்று ராஜராஜனின் பேகை உரிமையாய் தோள்களில் இருந்து கழற்றி “வாங்க” என்று அழைத்து வந்தார்.

அவர் அப்படி அழைத்து செல்லும் போது முறுக்கி கொண்டு போக ராஜராஜனின் மனம் ஒப்பவில்லை, அதையும் விட கண்களில் நீரோடு நிற்கும் மனைவியை எங்கனம் விட்டு செல்வான்.

ராஜராஜன் அருகில் வந்ததும், “இவன் என் ஃபிரண்ட், அது தான் பேசிட்டு வந்தேன், வேற ஒண்ணுமில்லை” என்று சொல்ல,

ராஜராஜனிற்கு கோபம் பொங்கிவிட்டது, “இதையேன் என்னைப் பார்த்து சொல்ற, நான் உன்னை சந்தேகப்படுவேன்னு சொல்றியா” என்று கேட்டு விட,

“இல்லை, அது இல்லை” என்று அவள் தடுமாற, அவளின்

எண்ணம் அதுதான் என்று புரிந்தது.

பின்னே அங்கையை பார்த்ததும், அவன் எதுவும் பேசாமல், அவள் அருகில் கூட வராமல் நடந்தால், அவளும் தான் என்னவென்று நினைப்பாள்.

“இல்லை, அது…” என்று மீண்டும் சொல்லி, என்ன சொல்லவென்று தெரியாமல் அவனின் கைகளுக்குள் கையை விட்டு “இப்படி என்கிட்டே கோபமா பேசாதீங்க” என்று கண்களில் நீரோடு சொல்ல,

ராஜராஜனும் தான் என்ன செய்வான், “இல்லை பேசலை” என்றதும் அவனின் தோளில் தலையை ஆதூரமாய் சாய்த்துக் கொள்ள, வேகமாய் வந்த காவலாளி அன்பழகனின் கையில் இருந்த பையை வாங்கி,

“யே கோன் ஹை சர்ஜி” என வினவ,

“மேம்சாப் கே சாப்” என்று சொல்லி அன்பழகன் முன்னே நடக்க,

எல்லாம் தமிழில் நடந்ததால் சத்தியமாய் உடன் வந்த நண்பனுக்கு எதுவும் புரியவில்லை.

அன்பழகனின் பதிலில் “ஹாய் பாய்ஜான்” என்று உற்சாகமாய் கை குலுக்க கையை நீட்ட, ராஜராஜனின் கையை அங்கை விட்டால் தானே கை குலுக்க முடியும்.

“கைவிடு அங்கை” என்றான்.

“அதெல்லாம் ஒன்னும் விட மாட்டேன்” என்று தமிழில் சொல்லியபடி நண்பனின் கையை தட்டி விட,

“ஏன் நீ கை எடுக்கற கேப்ல யார் வந்து பாய்ஜானை பிக் அப் பண்ணிக்குவா” என்று ஆங்கிலத்தில் அவளை கிண்டல் செய்தபடி பெரும் குரலில் சிரிக்க, “நீ போடா” என்று அவள் அவனை தமிழில் திட்டிய போதும், ராஜராஜனின் கைகளை விடாமல் தான் நடந்தாள்.

அப்படி ராஜராஜனை தேடினாளா தெரியாது? ஆனால் அவனின் சிறு முக திருப்பல் கூட தாங்க முடியவில்லை என்பது உண்மை! என்ன சொல்வானோ என்ற பயத்தோடே தான் நடந்தாள். “நீ என்ன நினைச்சா எனக்கென்ன” என்ற அலட்சியம் எல்லாம் எங்கே சென்றது என்று தெரியவில்லை.

# அத்தியாயம் 16

ராஜலக்ஷ்மி ராஜராஜன் வருவதை பார்த்ததும் “வாங்க, எப்போ வந்தீங்க? கூட யார் வந்திருக்கா?” என்று கேள்விகளை அடுக்க,

மகளோ சலுகையாய் அவனின் தோள் சாய்ந்திருந்தாள். அதனை அன்பழகனோ இல்லை ராஜலக்ஷ்மியோ இல்லை அங்கையின் தோழனோ இல்லை அங்கிருந்த காவலாளியோ கண்டு கொண்டதாக தெரியவேயில்லை

“என்னடா இது?” என்று ராஜராஜனுக்கு தான் சங்கடமாக இருந்தது. அங்கே ஊரில் யார் முன்னும் பக்கம் பக்கம் உட்கார கூட முடியாது. அப்படி அருகில் உட்காருவது என்பது டூ வீலரில் போகும் போது தான். இப்படி கை பிடித்து தோள் சாய்ந்து… எல்லோர் முன்னும் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை.

ராஜராஜன் மெதுவாய் நகர நினைக்க, அங்கையின் பிடி இறுகியது. “என்ன?” என்ற பாவனையை கண்களில் தேக்கி அவனை பார்க்க, “எல்லோரும் பார்க்கறாங்க, கை விடு, நகர்ந்து நில்லு” என்று மெல்லிய குரலில் ரகசியம் பேசினான்.

அங்கை இன்னும் அவனை ஒட்டி நின்று கொண்டாள். “அங்கை என்ன இது கலாட்டா?” என்றவனை அவள் கண்டு கொள்ளவே இல்லை. அவனை விடுத்து அம்மாவை பார்த்து, “மா, பேசிட்டே நிப்பீங்களா? ஆரத்தி எல்லாம் எடுக்க மாட்டீங்களா? இப்போ தான் உங்க மாப்பிள்ளை முதல் முதல்ல உங்க வீட்டுக்கு வர்றார்” என்று எடுத்து கொடுத்தாள். ஆம்! ஊர் பழக்கம் அவளுக்கு இதையெல்லாம் கற்று கொடுத்திருந்தது.

அன்பழகன் அதுதானே உனக்கு தெரியாதா என்ற முறைப்பு பார்வையை ராஜலக்ஷ்மியிடம் கொடுக்க, “எனக்கு இவரை பார்த்ததும் ஒன்னும் ஓடலை, இதோ போறேன்” என்று உள்ளே சென்று ஆரத்தி கலக்கி வந்து இருவருக்கும் எடுத்து உள்ளே அழைத்து சென்றார்.

ராஜராஜனை “வாங்க, போங்க, அவர், இவர்” என்றே பேசினார். மாப்பிள்ளை தான், அண்ணன் மகன் என்ற உரிமையான பேச்சு வரவில்லை. உள்ளே நுழைந்ததுமே அவன் சென்று சோஃபாவில் அமர, “வாங்க ஃபிரெஷ் ஆகிட்டு வருவீங்களாம்” என்று அவளின் அறைக்கு அழைத்து சென்றாள்.

அவனும் உள்ளே சென்று முகம் கை கால் கழுவி வர, அவனை பார்த்ததும் “இந்த ட்ரெஸ்ல எல்லோரும் நான் நல்லா இருக்கேன் சொன்னாங்க, அப்போ நீங்க இங்க இல்லைன்னு நினைச்சேன், வந்துட்டீங்க” என்று சொல்ல, இன்னும் ராஜராஜன் நல்ல மனநிலைக்கு வரவில்லை.

“நீ நினைக்கறது எல்லாம் எனக்கு எப்படி தெரியும், சொன்னா தானே தெரியும்” என்றான் ஒட்டாத குரலில்.

“ஏன் இப்படி பேசறீங்க?”

“ப்ச், விடு” என்றவன் ரூமின் வெளியே போக முயல,

அவனை பிடித்து நிறுத்தியவள் “ஏன் இப்படி பேசறீங்க?” என்று வெகு அருகில் நின்று மீண்டும் கேட்டாள்.

“எனக்கு தெரியலை” என்று முடித்துக் கொண்டான். நிஜாமாயும் அவனுக்கு தெரியவில்லை,

“எனக்கு நீங்க பதில் சொல்லணும்?” என்று பிடிவாதமாய் நிற்க, அவனும் சொல்ல முடியாது என்று பிடிவாதமாய் நின்றான்.

வெகு அருகில் நின்றவள், அவன் மேல் வயிறு இடிக்காமல் ஒரு புறமாய் சாய்ந்து நின்றாள். அதில் “நீ என்னை அணைக்க வேண்டும்” என்ற உடல் மொழி இருந்ததோ.

இதமாய் அவளை இடையோடு அணைத்தான், அவளின் மேடிட்ட வயிற்றில் உள்ளங்கை இருக்குமாறு. ஆம்! குழந்தையின் அசைவை உணர ஆசைப்படுவான் என்று தான் அவள் சாய்ந்து நிற்க அவனும் இடையோடு சுற்றி கை போட்டுக் கொண்டான்.

ஒருவரின் தேவை அடுத்தவருக்கு வார்த்தைகள் இல்லாமேலேயே உணரப்பட்டது பகிரப்பட்டது இயல்பாய். இது தான் கெமிஸ்ட்ரி என்பதோ? இந்த கெமிஸ்ட்ரி அவர்கள் இருவரிடமும் உன்னதம் தான்.

“சாரி! ரொம்ப நேரம் வெயிட் பண்ண வெச்சிட்டேனா, அங்க நிஜமா ரொம்ப சத்தம். நீங்க நேத்து பேசும் போது வர்றதை ஏன் என்கிட்டே சொல்லலை” என்றவளிடம் பதில் எதுவும் பேசவில்லை.

“அவன் என் ஃபிரண்ட், அவன் முன்னாடி என்ன பேச? அவனை அனுப்பிட்டு பேசலாம்னு தான் வீட்டுக்கு வந்துட்டு

பேசறேன் சொன்னேன்” என்று அவளின் செய்கைகள் அத்தனைக்கும் விளக்கம் சொன்னாள்.

“ஏன்? நீ உன் ஃபிரண்டோட பேசி நடந்தா, நான் சந்தேகப்படுவேன்னு நினைச்சு என்னை பார்த்தவுடனே அப்படி சொன்னியா” என்றான் ஆதங்கமாக.

“பின்ன, என்னை பார்த்துட்டு நீங்க அப்படியே போனா நான் என்ன நினைப்பேன்?”

அவ்வளவு தான் உனக்கு என் மேல நம்பிக்கையா?”

“நம்பிக்கை எல்லாம் பேச்சு கிடையாது, அப்போ அந்த சமயம் அப்படி போனா என்ன தோணும், அதை சந்தேகம்னு சொல்லலை, ஒரு பொசசிவ் நெஸ்ன்னு தோணினது” என்று சொல்லவும் சற்று சமாதானமானவன் பதில் சொன்னான்.

“ம்ம், உன்னோட சிரிப்பை பார்த்துட்டு தான் போகணும்னு நினைச்சேன். நீ என்கூட அப்படி சிரிச்சதா எனக்கு ஞாபகமில்லை. ஏன் நீ அப்படி சிரிச்சு பார்ததாவே எனக்கு ஞாபகமில்லை. அந்த ஒரு கோபம், அதுல நீ என்னை வான்னு கூப்பிடாம, நானா

வந்தது, ரெண்டு மணி நேரம் சுத்தினது, இப்படி சிலதும் என்னை ஊருக்கே போக சொன்னது” என்று உள்ளத்தை உடைத்து சொல்லிவிட்டான்.

அணைப்பில் இருந்த படியே தலை உயர்த்தி அவனை சில நொடிகள் ஊன்றி பார்த்து நின்றாள். அவனின் முகத்தில் இருந்த பாவனை ஏதோ செய்ய, “ப்ச், ஊர்ல இப்படி சிரிக்க முடியுமா? அவ்வளவு தான் உங்க கிழவி பேசமாட்டாங்களா, எப்போவும் நீங்க வீட்ல இருக்குற சமயம் மாமாவும் பெரிய மாமாவும் வீட்ல இருப்பாங்க. ரூம்ல கூட சிரிக்க முடியாது. ஒரு நாள் நைட் நான் அழுததுக்கே வீடு மொத்தமும் ரூம்க்கு படைஎடுத்தாங்க, அப்போ சிரிச்சா மட்டும் சத்தம் கேட்காதா? எப்படி சிரிப்பேன்?”

“அப்போ உனக்கு சிரிப்பு வந்தது, ஆனா நீ சிரிக்கலை” என்று சொன்னவனின் குரல், “நீ சொன்னதை நான் நம்பமாட்டேன்” என்று சொல்ல

“என்னது எங்கம்மா சொன்னா நீ நம்ப மாட்டியா தகப்பா?” என்று அவனின் மகனோ மகளோ அவனின் கைகளில் ஒரு உதை விட…

"அசையறா" என்று கிசுகிசுப்பாய் அவனின் குரல் கேட்க, "ம்ம்" என்றவளின் குரலும் கிசுகிசுப்பாய் ஒலிக்க,

சில அனுபவிக்கும் நிமிடங்கள்!

"நமக்கு ரூம்குள்ள வந்தாலே கட்டிப் பிடிக்க, கட்டிப் புரளன்னு நேரம் ஓடிப் போச்சு, இதுல நாம எங்க பேசி சிரிக்க" என்ற சொல்லியவளின் குரலில் நடந்ததை உரைக்கும் பாவனை மட்டுமே, கொஞ்சல் எல்லாம் இல்லை.

பின் மெதுவாய் விலகியவள் "கோபம் போச்சா?" என்று அவனின் முகம் பார்த்து கேட்க...

"போகாது" என்றான் இலகுவாகவே.

"ம்ம், சரி, போக வேண்டாம்" என்று அவனை போலவே சொன்னவள், "இப்போ வெளில போகலாம்' என்றாள்.

"போகலாம் போகலாம்" என்று சொன்னவன், "நான் யோசிச்சு யோசிச்சு பார்த்தேன், ஆனா ஞாபகமே வரலை" என்றான் சம்மந்தமேயில்லாமல்.

“என்னது?” என்று அவள் ஏதோ பெரிய விஷயம் போல என்று நினைத்துக் கேட்க,

“நாம கிஸ் பண்ணிக்கிட்டதை”

இந்த பதிலில் அங்கையின் முகம் செல்லச் சிரிப்பில் மலர்ந்து “என்னது நாம பண்ணலையா?” என்று கொஞ்சலாய் முறைக்க செய்தாள்.

“நின்னுகிட்டு பண்ணவேயில்லை” என்று அவன் அலட்டாமல் சொன்ன விதத்தில்,

“அப்போ படுத்திக்கிட்டு பண்ணினது” என்று அவனை போலவே கேட்க,

“அதெல்லாம் கணக்குல வராது” என்றான் இன்னும் அசால்டாய்.

“அப்போ கண்டிப்பா ஞாபகத்துல வராது, ஏன்னா நாம பண்ணவேயில்லை, அது எனக்கு நல்லா தெரியும்” என்று திரும்பவும் அவனை போலவே சொன்ன விதத்தில் சத்தமாய் சிரித்து விட்டான்.

இப்படிப்பட்ட பேச்சுக்களே அவர்களிடம் முதல் முறை.

“சரி, வரலாறை மாத்துவோம்” என்று அவன் சிரிப்பினூடே சொல்ல,

“ம்ம்” என்று எப்போதும் போல மெல்லிய முனகல் பதிலாய் கொடுத்தாலும், ஒப்புதலாய் கண் மூடி முகம் தூக்கி நின்றாள்.

முகத்தின் அருகில் அவன் வருவது உணர்ந்ததும் கண் திறந்தவள், “என்னை பார்த்துட்டு உடனே ஊருக்கு கிளம்பினவங்களுக்கு எல்லாம் கிஸ் பண்ண பெர்மிஷன் கிடையாது” என்று விலகி நிற்க,

“என்ன இது மோசம்”

“அப்படித்தான் வாங்க” என அறைக்கு வெளியே அழைத்து செல்ல முயல,

“இதெல்லாம் ஆகாது” என்றவன், அவளை இடையோடு அணைத்து, “உன் பேச்சை மீற மாட்டேன். நீ எனக்கு பெர்மிஷன் கொடுக்க வேண்டாம். நான் உனக்கு குடுக்கலை, நீ எனக்கு குடு”

என்று நின்றான்.

“ஆங், இதெல்லாம் இன்னும் மோசம்”

“மோசமோ, மோசமில்லையோ, எனக்கு இப்போ கிஸ் வேணும்” என்று பிடிவாதமான முகத்தோடு நிற்க,

“சரி, பெர்மிஷன் கொடுக்கறேன், நீங்களே குடுத்துக்கங்க” என்று பெரிய மனதாய் சொல்பவள் போலச் சொல்ல,

மேலும் அங்கே பேச்சுக்களே இல்லை… உடல் சிலிர்த்த நிமிடங்கள். போதும் என்ற எண்ணம் இருவருக்குமே இல்லை.

இப்படியாக ஒரு வழியாக வெளியே வந்து, டைனிங் ஹாலில் அம்மாவும் அப்பாவும் இருப்பது புரிந்து அங்கே சென்றாள்.

அங்கே ஊர்வன, பறப்பன, மிதப்பன, நடப்பன என்று வரிசை கட்டி நின்றது.

“பா என்ன இது?” என்று அவள் கொடுத்த சத்தத்தில் ராஜராஜனும் அவள் பின்னே வந்து விட்டான்.

“அவருக்கு என்ன பிடிக்கும்னு எங்களுக்கு தெரியலை, அதனால எல்லாம் ஆர்டர் சொல்லிட்டேன். இப்ப வீட்ல சமைச்சா

லேட் ஆகும்னு”

“பா, நாங்க உள்ள போய் ஒரு பதினஞ்சு நிமிஷம் கூட இருக்காது அதுக்குள்ள இவ்வளவா?”

அன்பழகனும் ராஜலக்ஷ்மியும் ஒன்றும் சொல்லாமல் போனாலும், “நாம உள்ள போய் நாற்பத்தி அஞ்சு நிமிஷம் ஆச்சு, மானத்தை வாங்காத நீ” என்றான் அவளுக்கு மட்டும் கேட்குமாறு.

“அப்படியா?” என்று அவனை பார்த்து அசடு வழிய, ராஜராஜனின் முகத்தில் எந்த பாவனையும் இல்லை.

“அப்பாடா, இவன் செம டா” என்று பார்த்திருக்க,

ராஜராஜனுக்கோ உணவு மேஜையில் பரப்பி இருந்ததை பார்த்து கவலையாகிப் போனது. வேறொன்றுமில்லை இவ்வளவு சாப்பிட்டால் அவ்வளவு தான், அவனுக்கு உண்ட களைப்பு பின்னே தூக்கம் தான் வரும், முத்தம் மட்டும் அவனுக்கு போதாதே, பசிக்காவிட்டாலாவது பரவாயில்லை, அவனுக்கு நல்ல பசியும் கூட. கண்டிப்பாய் அவனால் குறைவாய் உண்ண முடியாது.

கவலையாய் உணவை பார்த்திருந்தான். அவனின்

பார்வையை பார்த்த ராஜலக்ஷ்மி, “இதெல்லாம் பிடிக்காதா உங்களுக்கு? அப்போ வேற என்ன பிடிக்கும் சொல்லுங்க?” என்று சொன்னார்.

“அச்சோ, அத்தை வேண்டாம், என்னால இவ்வளவு சாப்பிட முடியாது” என்று சொல்ல…

“அதெல்லாம் சாப்பிடலாம்” என்று அவனுக்கு சேரை அன்பழகன் நகர்த்தி போட, “உட்காருங்க” என்று ராஜலக்ஷ்மி சொல்ல,

திரும்பி அங்கையை பார்த்தான்.

அந்த பார்வையில் என்ன உணர்ந்தாளோ, “மா, நான் பரிமாறுரேன்” என்று விட்டாள். பின்னே புது இடம் என்று அவன் குறைவாய் உண்டு விட்டால், அந்த கவலை அங்கைக்கு.

அவள் வீட்டினில் ராஜராஜனுக்கு பரிமாறியது கிடையாது. உண்மையில் அவளுக்கு அதற்கான தனிமை கிட்டியதில்லை. ஆனால் அவன் உண்ணும் அளவு அவளுக்கு தெரியும்.

அவன் அமரவும் “இந்த ஷர்ட் புதுசா? நான் உங்ககிட்ட பார்த்ததேயில்லை” என்றாள் இலகுவான குரலிலேயே.

“என் ஷர்ட்லாம் உனக்கு தெரியுமா?” என்றான் ஆச்சரியமாக.

“ஷர்ட்லாம் தெரியாது, ஆனா நீங்க போடறது எனக்கு தெரியும்” என்று முறைப்பாய் சொல்ல,

“ஈசி” என்றவன் “நீ இதெல்லாம் கவனிப்பேன்னு நான் நினைக்கலை” என்றவனிடம்,

“நான் இதெல்லாம் கவனிச்சு பார்த்ததை நீங்க கவனிச்சு பார்க்கலைன்னு சொல்லுங்க” என்று அவனிடமே அவனின் குற்றச்சாட்டை திருப்ப,

“அம்மாடி, எனக்கு உன்னை பத்தி ஒன்னுமே தெரியலை நிஜம்மா” என்று ஒப்புக் கொடுத்தான்.

“புத்து” என்றாள் சலுகையாய்.

“அப்படின்னா”

“ம்ம்ம், முட்டாள்ன்னு சொன்னேன்”

“ம்ம், முட்டாள் தான் போல” என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான். பின்னே அவன் அங்கையிடம் நினைத்ததைவிட அங்கைக்கு அவனிடம் குறைகள் அதிகம் இருக்கும் போலவே.

“கடைக்கு போய் உங்களுக்கு மட்டும் எடுத்தீங்களா? எனக்கு என்ன வாங்குனீங்க?” என்று சரியாய் அவள் கேட்க,

“நிஜமாகவே தான் முட்டாள் தான்” என்று முடிவெடுத்துக் கொண்டான், பின்னே அவன் எதுவும் வாங்கிவரவில்லை. அதையும் விட அவளுக்கு எதுவும் வாங்கிக் கொடுத்ததாக ஞாபகமேயில்லை.

ஒரு நாணயத்திற்கு இரு பக்கம் உண்டு தானே!

“நான் கடைக்கு போகலை, அக்கா எங்க மூணு பேருக்கும் அவ பொறந்த நாளைக்கு எடுத்துட்டு வந்தா”

“ஓஹ், தினமும் பேசறேன் நீங்க என்கிட்டே இதை சொல்லவேயில்லை”

“அம்மாடி, இதுக்கு நாங்க பேசிக்காமலேயே இருந்திருக்கலாம் போலவே” என்று நொந்து விட்டான்.

“பதில் சொல்லிட்டே இருந்தா, எனக்கு சரியா சாப்பிட முடியலை” என்று அவன் சொனது தான் தாமதம் அவளின் வாய் சிப் போட்டது போல மூடி கொண்டது.

இருந்த பசிக்கு நிஜமாய் ஒரு கட்டு கட்டி விட்டான். உண்டு பின் அவன் முன் ஹாலிற்கு வர, அவனோடு வந்தவள் “மா எனக்கு பசிக்குது” என்று செல்லம் கொஞ்ச,

“அதுல இருக்குற ஃபிரைட் ஐட்டம்ஸ் எதுவும் கொடுக்க மாட்டேன்” என்று அவர் சொல்ல

“அப்போ எனக்கு பசிக்கலை” என்றாள் உடனே. ஆனாலும் ராஜலக்ஷ்மி எழுந்து சென்று அவளுக்கு ப்ளேட்டில் எதோ வைத்து கொடுத்து அவள் உண்ட பிறகே விட்டார். அவர்களை அமைதியாய் வேடிக்கை பார்த்திருந்தான்.

“வீட்ல எல்லோரும் எப்படி இருக்காங்க? நாச்சி அம்மா

எப்படி இருக்காங்க? ஏன் கூட்டிட்டு வரலை யாரையும்?” என்று அன்பழகன் கேட்க,

“நானே திடீர்ன்னு தான் கிளம்பினேன், அதனால அவங்களை நானே கூப்பிடலை, கூப்பிட்டிருந்தா அம்மாவும் பாட்டியும் வந்திருப்பாங்க, இவ பிரசவ சமயத்துல எப்படியும் வரணும்னு நினைப்பாங்க, அதான் இப்போ நானே கேட்கலை!” என்று நிஜமாய் அவன் நினைத்திருந்த காரணத்தை கூறினான்.

“தொழில் எப்படி போகுது” என்று மீண்டும் அன்பழகன் ஆரம்பிக்க,

“நாளைக்கு கூட பேசலாமே ஊர்ல இருந்து வந்தது. டயர்டா இருப்பாங்க விடுங்க” என்று ராஜலக்ஷ்மி சொல்ல, விட்டால் போதும் என்று எழுந்து விட்டான் ராஜராஜன்.

அவன் ஊரிலிருந்து வந்த மனநிலைக்கும் இப்போதைய மனநிலைக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம்! நிச்சயமாக சத்தியமாக அவனே எதிர் பார்த்திருக்கவில்லை.

மனதின் பாரம் எல்லாம் வடிந்து, என்னவோ அவனின் உடல் பாரத்தை சுமக்க முடியாமல் நடந்தவன், இப்போது மனதளவிலும்

உடலளவிலும் பறந்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

அதோடே சென்று ஒரு வெந்நீர் குளியல் போட்டு வெளியே வந்தவன், ட்ராக் பேன்ட் டீ ஷர்ட் அணிந்து படுக்க ஆயத்தமானான். இதழ்கள் அவனுக்கு பிடித்த வரிகளை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

**“அடடா ஜாதிக் குதிரை இது**

**என்னை தான் தேடித் திரிகிறது”**

சற்று சத்தமாகவே பாடல் வந்தது அவளை ரசித்து பார்த்தபடியே.

எப்போதும் வீட்டில் வேஷ்டி தான் இலகுவான உடை, இப்படி ஒரு உடை அணிந்து பார்த்ததில்லை. இன்று உடை அணியும் அவனையே அங்கை பார்த்திருக்க…

“நான் ட்ரெஸ் மாத்தும் போது ஏன் பார்க்கற? எனக்கு வெக்கமா இருக்காது” என அவன் பேச…

“உங்களுக்கு வெக்கம் நம்பிட்டேன்” என்று ராகம் இழுத்தவள், “என்ன பாட்டு பாடுறீங்க, எனக்கு அந்த பாட்டு தெரியலை?” என்றாள்.

"சுமாரா தான் பாடுவேன்"

"பரவாயில்லை எவ்வளவு மோசமா இருந்தாலும், நான் காதை மூட மாட்டேன்" என்று அவள் சொல்லிய பாவனையில் சிரிப்பு பொங்கியது அவனுக்கு.

அவளின் அருகில் வந்தவன் பாடினான், அவளை பார்த்தபடியே

**"அடடா ஜாதிக்குதிரை இது**

**என்னைத்தான் தேடி திரிகிறது...**

**கழுத்தின் மேலே நிலாக்கள் கண்டேன்**

**கழுத்தின் கீழே புறாக்கள் கொண்டேன்...**

**ஒரு கண்ணில் பார்த்தாலே**

**ஒரு வாரம் எழ மாட்டேன்...**

**இரு கண்ணில் பார்த்தாலோ**

**என்ன ஆகும் சொல்ல மாட்டேன்...**

**இந்த ரோட்டுத்தாமரை என்ன விலையோ**

**இவள் கண்ணில் மிதப்பது என்ன கலையோ...**

**சிரிக்கும் போது சிலிர்த்துக் கொண்டேன்**

**இவள் சிந்திய சிரிப்பினை மடியில் ஏந்திக்கொண்டேன்...**

என்று நிறுத்தி விட்டான்.

பாடும் போதே அதன் அர்த்தங்கள் சொல்லும் ரசனையான பார்வை,

“கண்ட்ரோல் கேர்ள், இவன் முன்னாடி வெக்கப் படாதே” என்று அங்கை மனதிற்குள் சொல்லிச் சொல்லி பார்வை மாறாமல் கெத்தாய் அவனை பார்த்திருந்தாள்.

அவன் பாடி முடித்ததும் அதன் தாக்கம் சிறிதும் தன்னிடம் இல்லை என்பது போல காண்பித்து, “நாட் பேட், என்ன பாட்டு?” என்றவளிடம் பாட்டினை யூ ட்யுபில் போட்டு காட்டினான்.

அதில் “ரோமியோ ஆட்டம் போட்டா சுற்றும் பூமி சுற்றாதே” என்று ஒலிக்க, அவளை அதை சற்று நேரம் பார்க்க விட்டு,

“நீ நம்புவியா மாட்டியான்னு எனக்குத் தெரியலை, ஆனா உண்மையா என் மனைவியா இருந்தாலும் ஒரு பொண்ணை பார்த்து இப்படி பாடுவேன்னு நினைச்சதில்லை. கொஞ்சம் ரொம்ப திமிரா தான் சுத்துவேன். ஆனா உன்கிட்ட டோட்டல் ஃபிளாட்

தான், என்னை விட என்கிட்டே நீ திமிர் காண்பிக்கும் போது எனக்கு கோபம் வர்றதில்லை அதை ரசிக்க தான் தோணுது" என்று மனதை திறந்தான்.

"இன்னைக்கு என்னடா ஆச்சு இவனுக்கு, பாடறான், ஓவரா பேசறான்" என்று பார்த்திருந்தாள்.

"இதெல்லாம் அப்புறம், நாம வெக்கத்தை பத்தி பேசிட்டு இருந்தோம். அது உனக்கு வருமா? வராதன்னு? உனக்கு வரும்!" என்று விட்ட இடத்தில் சரியா துவங்கினான்.

"இவனுக்கு என்னவோ ஆச்சுடா, இவன் இவ்வளவு பேசவே மாட்டானே" என்று நினைத்துக் கொண்டே "வெட்கம் வராது" என்ற திமிர் பார்வை பார்த்தாள்.

"சரி, நீ நம்பலையா, இப்போ நீ ட்ரெஸ் மாத்து, கண்டிப்பா உனக்கு வெக்கம் வரும்" என்று பேச...

"ஆங்" என்று அவனின் பதிலில் விழித்தவள், பின்பு சிரிப்பு வந்து விட சிரித்துக் கொண்டே "தோடா, என்கிட்டயேவா" என்ற

பார்வை பார்த்து, “எனக்கு வராது” என்றாள் ஸ்திரமாய்.

“வருதா இல்லையான்னு பார்ப்போம், நீ முதல்ல மாத்து!” என்று இழுக்க…

“வராது” என்றாள் மீண்டும். வெட்கத்திற்கு இப்படி ஒரு சண்டையா என்று வெட்கமே வெட்கமாய் பார்த்தது இருவரையும்.

“வராம நானும் விடறதா இல்லை” என்று விடாமல் அவனும் சீண்ட,

“நான் மாத்தினா தானே இந்த சவால், என்னால மாத்த முடியாது, வேணும்னா நீங்க எனக்கு மாத்தி விடுங்க, எனக்கு வருதா இல்லையான்னு பார்க்கறேன். ஒரு வேளை உங்களுக்கு வெட்கம் திரும்ப வருமோ என்னவோ” என்று அவனை வம்பிழுத்து கெத்தாய் சொல்ல…

“அடிங்க” என்று சிரித்தவன், “பார்த்துடலாமா யாருக்கு வருதுன்னு” என்று அவளின் அருகில் வர… வாழ்க்கையின் சில இனிமையான நிகழ்வுகள், “எனக்கு எதுவுமே ஞாபகத்தில்

இல்லையே” என்று அவன் நினைத்த நிகழ்வுகள்.

“எங்க உன் கேப்” என்றான் அருகில் வந்தவன்,

“தொ இங்க” என்று அவள் காண்பிக்க,

“போட்டுக்கோ, ஒரு ஸ்னேப் எடுத்துக்கறேன்” என்றவனிடம், “நீங்க என்னை எடுக்கற முதல் ஸ்னேப்” என்றாள்.

“ஓஹ் ஆமாமில்லை” என்றவன், “துரைசாணியம்மா மாதிரி இருக்க, அதாவது இங்கிலிஷ் மாகாராணி மாதிரி இருக்க” என்று ராஜராஜன் ரசித்து சொல்லிய போது, இத்தனை நேரம் கட்டுப்படுத்தி இருந்தது தகர்ந்து விட, என்ன முயன்றும் அவளின் கன்னங்கள் அப்படி ஒரு சிகப்பை காண்பித்தது, கண்கள் வெட்கத்தை.

“ஹ, ஹ, நான் ட்ரெஸ் மாத்திவிடாமயே உனக்கு வெட்கம் வந்துடுச்சு” என்று பெரும் குரலில் சிரித்தவனிடம்,

அவனை செல்லமாய் முறைத்து “நீங்களும் வாங்க” என்று அவள் அழைக்க, இத்தனை மாத காலத்தில் முதல் முறை

இருவரும் ஒரு செல்பி.

ஒரே நாளிலேயே வாழ்க்கை வாழ்ந்து பார்த்துவிடும் எண்ணம் தான். உடலளவில் வாழ்ந்து பார்த்ததில் குறையே இல்லை இருவருக்குமே, மனதளவில் இருவருக்குமே சற்று குறை இருக்க, அதையெல்லாம் களையும் எண்ணம் பார்த்த இந்த நாளிலேயே, இருவரிடமுமே!

என்னவோ சொல்ல முடியாத ஒரு நிறைவு ராஜராஜனிடம், அவளிடம் வாயடித்தது போல உடையை அவன் தான் மாற்ற, அப்படி ஒன்றும் பிகுவெல்லாம் இல்லை அங்கையற்கண்ணியிடம், மிருதுவான பருத்தி இரவு உடைக்கு மாற்றி விட்டவன்,

அவள் படுத்ததும் அருகில் படுத்தான். அவளை பின்புறமாய் அணைத்து படுத்துக் கொண்டான்.

அவர்களின் எதிரில் பெரிய கண்ணாடி இருக்க, நேரில் முகம் பார்க்க முடியாது, அணைத்து பிடித்து இருந்தவர்களுக்கு கண்ணாடியில் முகம் தெரிய அதனை பாத்தவாறு பேச ஆரம்பித்தனர்.

“நீ என்னை வான்னு கூப்பிடலை, எப்போ வருவீங்கன்னு கேட்கலை, உன்னை பார்க்காம என்னவோ என் வாழ்க்கைல குறைஞ்சது, எனக்கு எதுவுமே செய்ய பிடிக்கலை” என்றான்.

“இப்போ” என்றவளிடம் பதில் சொல்லாது,

“உனக்கும் அப்படி தான் இருக்கா?”

“தெரியலை” என்றாள் உண்மையாய், “ஆனா உங்களை மிஸ் பண்ணினேன் இங்க வந்த பிறகு, ரொம்ப இல்லை கொஞ்சமா” என்று உதடு சுருக்கி அவள் பேசிய விதத்தில், முத்தமிட ஆசை வந்து அவளின் காது மடலை லேசாய் ஒற்றி எடுத்தான், “எப்படி மிஸ் பண்ணின?” என்ற கேள்வியோடு.

“அதெல்லாம் தெரியலை ஆனா பண்ணினேன்” என்றாள் கறாரான குரலில்.

அவனுக்கு சிரிப்பு வர அடக்கியவன் “அப்போ ஏன் வர சொல்லலை?”

“அது எப்போவும் சொல்ல மாட்டேன் இல்லையா, அதனால இப்போவும் வரலை போல”

புரியாமல் அவளை கண்ணாடியில் பார்த்தவனிடம், அவளுமே

அங்கே பார்த்தே பதில் சொன்னாள். “நான் மிலிட்டரி அப்பாவோட பொண்ணு, உங்களுக்கு ஞாபகமே இல்லையா? சின்ன பொண்ணுல இருந்தே அப்பா எப்போ போனாலும் சிரிச்சு தான் டாட்டா கொடுப்பேன். நடுவுல ஃபோன் வந்தாலும் உங்களை பார்க்கணும் போல இருக்கு எல்லாம் சொல்ல மாட்டேன். அது எனக்கு அப்படியே தான் இருக்குது போல, இப்போ நீங்க கேட்கவும் தான் எனக்கே தோணுது”

“உனக்கு என்னை பிடிச்சிருக்கா?” என்றான், என்ன முயன்றும் சற்று பயத்தோடே குரல் வந்தது. முன்பானால் உனக்கு என்னை பிடிச்சா என்ன பிடிக்காவிட்டால் என்ன என்ற அலட்சியம் இருக்கும். இப்போது அது கிஞ்சித்தும் இல்லை.

அதற்கு பதில் சொல்லாமல் “உங்களுக்கு?” என்றாள்.

“ரொம்ப, ரொம்ப” என்றான் இறுக்கி அணைத்தபடி, முகத்தையும் கண்ணாடியில் காண்பிக்காமல் அவளின் கூந்தலில் புதைத்து கொண்டு, “எனக்கு பிடிக்கும்னா அது வேற” என்றான்.

“என்ன வேற?” என்றாள் புரியாமல்.

“நிஜம்மா நீ வேற லெவல் தான், ஒரு வேளை கட்டாயத்தின் பேர்ல இந்த கல்யாணம் நடக்காம இருந்திருந்தா, நான் உன்னை மாதிரி ஒருத்தியை கனவுல கூட நினைக்க முடியாது” என்றான்.

கண்ணாடியில் முகம் பார்க்க முடியாமல், “என்ன காம்ப்ளெக்ஸ்ஸா?” என்றாள்.

“சே சே ரியாலிட்டி, நீ ரொம்ப ரொம்ப அழகா இருக்க, நிறைய படிச்சிருக்க, வசதியா இருக்க, அப்பாவும் அண்ணாவும் பெரிய போஸ்ட்ல இருக்காங்க, அப்போ என்னை மாதிரி ஒருத்தனுக்கு எப்படி கல்யாணம் பண்ணி குடுப்பாங்க. நீயும் என்னை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்ண நினைக்க மாட்ட இல்லையா? உங்க அப்பா மாதிரி அண்ணா மாதிரி நினைச்சிருக்கலாம் இந்த வாழ்க்கை வேற தானே” என்றான்.

“அதுவும் நான் படிக்கலை, பார்க்க நல்லா தான் இருக்கேன், குறை சொல்ல முடியாது, ஆனா சூப்பர் ஹேண்ட்சம் எல்லாம் இல்லை, முக்கியமா மேல்தட்டு ஸ்டைல் எல்லாம் வராது, என் அண்ணனுங்க, என் அக்காங்க இவங்களுக்கும் எனக்குமே வித்தியாசம் இருக்கும், காலேஜ் போயிருந்தா கொஞ்சம்

பழகியிருப்பேனோ என்னவோ?”

“ஸ்கூல் முடிச்சு அப்படியே வேலை, அந்த பழக்க வழக்கம் தான் வரும். அப்போ உனக்கு என்னை பிடிக்க செய்யாது தானே?” என்றான். இது எதையுமே அவளின் முகம் பார்த்து பேசவில்லை, அவளின் மீது முகத்தை புதைத்துக் கொண்டே தான் பேசினான்.

எனக்கு இதற்கு பதில் வேண்டும் என்ற பிடிவாதம் அவனின் உடல் மொழியில் இருந்ததோ, அதை அவளும் உணர்ந்தாளோ?

“என்கிட்டே இதுக்கெல்லாம் பதில் கிடையாது. ரெண்டு வருஷத்துக்கு பிறகும் உங்க கூட சேர்ந்து வாழப் பிடிக்கலை தான். அப்பாவோட கம்பல்ஷன்க்கு தான் வந்தேன், ஆனா கல்யாணம் அப்பாவோட கம்பல்ஷன்ல நடக்கலை, அவர் கேட்ட உடனே எனக்கு ஓகே சொல்ல தோணிச்சு, அதுக்கப்புறம் ஓகே சொல்லியிருக்க வேண்டாமோ தோணிச்சு, இப்படி எல்லாம் தோணிச்சு தான் ஆனா…” என்று நிறுத்தியவள்,

“என் முகம் பாருங்க” என்று சொல்ல, நிமிர்ந்து கண்ணாடியில் தெரியும் அவளின் முகம் பார்க்க…

“ஆனா… இப்போ இந்த மாதிரி எல்லாம் என்னால யார் கூடவும் நினைச்சு கூட பார்க்க முடியாது”

“எந்த மாதிரி?” என்றான் புரியாமல்.

“இந்த மாதிரி, கட்டி பிடிச்சிக்கிட்டு முத்தம் குடுத்துகிட்டு இப்படி, இந்த மாதிரியான ஒரு இன்டிமேட்டா என்னால யார் கூடவும் நினைக்கக் கூட முடியாது. எனக்கு நீங்க மட்டும் தான்னா இதுக்கு பேர் என்ன?”

“அந்த பேர் என்னவோ நீங்க வெச்சிக்கங்க, அண்ட் இப்போ ஐ அம் ஹேப்பி தான். எனக்கு எந்த குறையும் இல்லை”

“சில சமயம் நினைச்சிருக்கேன், எப்படி என் ஃபிரண்ட்ஸ் கிட்ட எல்லாம் உங்களை சொல்வேன், காண்பிப்பேன், அறிமுகப் படுத்துவேன்னு”

“ஆனா இன்னைக்கு எனக்கு கொஞ்சமும் தயக்கம் வரலை. நீங்க திரும்பி போனவுடனே ஒடி உங்க பின்ன வர தான் தோணினது. ஆனா முடியாது இல்லையா? அப்புறம் தான்

கத்தினேன்?”

“அப்புறம் நீங்க பக்கத்துல வந்த பிறகு, நீங்க இப்படி யாரோடயோ நடந்து வர்றதுக்கு திட்டுவீங்களோ தோணி, பயமா போச்சு. அப்புறம் அழுகை வந்துச்சு”

“இதுக்கு பேர்ல்லாம் என்னன்னு எனக்கு தெரியாது, எனக்கு இப்படி எல்லாம் தோணும்னு எனக்கே இன்னைக்கு தான் தெரியும்” என்று நீளமாய் பேசினாள்.

இதமாய் இருந்த அணைப்பை இறுக்கிக் கொண்டான்.

“ஊர்ல எல்லாம் என்னை பிடிச்சிருக்கான்னு கேட்காம, பிடிச்சு தான் ஆகணும்ன்ற ஆட்டிடியுட் காமிச்சிட்டு, இங்க வந்து பிடிச்சிருக்கான்னு என்ன கேள்வி” என்று முறைத்தவளிடம்,

“தெரியலை, நீ என்னோட சந்தோஷமா இல்லையோ? என்னோட கடமையா இருக்கியோன்னு டவுட்?”

“டவுட் கேட்கற வாயை கடிச்சா தான் என்ன? எவ்வளவு கொழுப்பு உங்களுக்கு? மடையன்டா நீ”

“எனக்கும் கொஞ்சிப் பேச வராது, உனக்கும் கொஞ்சிப் பேச வராது, நாம இப்படி தான் இருப்போம்” என்று பேசியவள் தூக்கத்திற்கு கண்களை சொருகி மீண்டும் விழிக்க…

“இது என்ன எக்சாம்க்கு படிக்கற மாதிரி முழிச்சிருக்க நீ?”

“தெரியுதில்லை, நீங்க டவுட் கேட்டா இப்படி தான், எனக்கு தூங்கணும்” என்று சொன்னவள், பேசாமல் அமைதியான அப்படியே ஒரே நிமிடத்தில் உறங்கி விட்டாள்.

ஆனால் அவனிற்கு உறக்கமே வரவில்லை. இத்தனை மாதங்கள் வராத ஒரு உணர்வு. என்னவோ பலகாலம் அவளோடு வாழ்ந்து விட்ட ஒரு உணர்வு! மனதிற்கு அப்படி ஒரு நிறைவு!

# அத்தியாயம் 17

ஆடாமல் அசையாமல் அவனால் அப்படியே படுத்திருக்க முடியவில்லை, அசைந்தால் அங்கை எழுந்து விடுவாளோ என்று மெதுவாய் அவளை விட்டு நகர்ந்து வசதியாய் படுக்க வைத்து, கதவை திறந்து வெளியே வந்தான்.

அங்கே குளிர் பலமாய் தான் இருந்தது. ரூமின் உள் ஹீட்டர் இருந்ததினால் தெரியவில்லை. விளக்குகள் அணைந்து இருக்க, குளிருக்கு இதமாய் கைகளை கட்டிக் கொண்டு சுற்றி பார்த்தான்.

வாயில் கதவு திறந்து இருக்க, “ஓஹ்! அது தான் காற்று உள்ளே வருவதினால் குளிர் பலமாய் இருக்கிறது போல” என்று நினைத்தவனாக, வெளியே சென்று பார்க்க, அங்கே படியில் கால் நீட்டி அமர்ந்து அன்பழகன் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்.

ஆள் வரும் அரவம் கேட்டு சுவாதீனமாக சிகரெட் புகைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தவர், அங்கே ராஜராஜனை பார்த்தும் வேகமாய் அதனை அணைத்து தூக்கி எறிந்து விட்டார்.

“பரவாயில்லை” என்று அவன் சொல்லும்முன்னமே

“சாரி, நான் ராஜி வர்றான்னு இருந்தேன்” என்று வேகமாய்

எழ போக,

“அதெல்லாம் ஒண்ணுமில்லை” என்றவன் “எழாதீங்க உட்காருங்க” என்றவன் அவரின் அருகில் அமர்ந்தான்.

அங்கே ரம்மியமாய் இருந்தது, இரவின் மெல்லிய பனி படர்ந்து அந்த அமைதியும் குளிரும் நன்றாக இருந்தது.

“நீங்க ஸ்மோக் பண்ணுவீங்களா” என்ற அன்பழகனின் கேள்விக்கு, “இல்லை பண்ணமாட்டேன்”

“ட்ரிங்க்ஸ்”

“அதுவும் இல்லை” என்றான்.

“குட்” என்றவர், “நான் இங்க வந்து கொஞ்சம் இதெல்லாம் பழகிட்டேன். ராஜி கூட இல்லாதப்போ அதிகமாகிடுச்சு. இப்போ அம்மு கன்சீவா இருக்கிறதனால ராஜி என்னை எதையும் தொடக் கூட விட மாட்டா”

“என்னவோ இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. அதுதான் அவ தூங்கின பிறகு அவளுக்கு தெரியாம வெளில

வந்து உட்கார்ந்துட்டேன்” என்று அவர் சொல்ல… அப்போது தான் அதையே கவனித்தான், அவருக்கு பக்க வாட்டில் பாட்டில் க்ளாஸ் என்று எல்லாம்.

“சரி, நான் உள்ளே போறேன்” என்று அவன் எழ முற்பட, “அட, இருங்க” என்று அவனின் கை பிடித்தவர்,

“உங்களுக்கு தெரியாது, நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்” என்றவரின் குரல் கரகரத்து இருக்க, கண்களில் மெல்லிய நீர் படலமும் கூட.

“என்ன ஆச்சு?” என்றான் அவரின் கையை தட்டிக் கொடுத்து.

“நான் சொன்னா நீங்க தப்பா எடுக்க மாட்டீங்களே?” என்றார்.

“மாட்டேன், சொல்லுங்க”

“நீங்க தப்பா எடுக்க மாட்டீங்கன்னு எனக்கு தோணுது, அதுதான் சொல்றேன்” என்றவர், “கொஞ்சம் குடிச்சிக்கட்டுமா?” என்று கேட்க,

அவர் கேட்ட விதத்தில் சிரிப்பு வர சிரிக்க ஆரம்பித்தவனிடம் “ராஜி எழுந்துக்குவா, உஷ்” என்று என்று அவனை அடக்க, ராஜராஜன் சிரிப்பை அடக்கினான்.

“உங்க கல்யாணம் நடந்த நாள்ல இருந்து ஒரு நாள் கூட நான் நிம்மதியா தூங்கினது இல்லை, அம்மு உங்க கூட கல்யாணத்துக்கு சரின்னு சொல்லிட்டு, அப்புறம் கல்யாணம் நடந்த பிறகு பிடிக்கலைன்னு நிக்கறா, மனோவும் ராஜியும் என்னோட சண்டை போடறாங்க, நான் தப்பு பண்ணிட்டனோ என் பொண்ணு வாழ்க்கை என்னாகுமோன்னு அவ்வளவு ஒரு கஷ்டம் வருத்தம் எல்லாம்”

“ராயர் இல்லைன்னா இன்னைக்கு நான் இல்லை. அவருக்காக நான் என்ன வேணா செய்வேன். அவர் முன்ன நடந்தது இந்த கல்யாணம். உண்மையா அவர் சொல்லலை இதை நான் தான் சொன்னேன் என

இது ராஜராஜனின் அனுமானத்தில் இருந்தாலும் அவர் வாயால் நிச்சயமாய் கேட்கும் போது புதிய செய்தியே! ஆச்சரியமான உண்மை என்ன பார்த்து எனக்கு பெண் கொடுத்தார். ராயர் பேரன் என்றாலும் இதனை எப்படி செய்ய

முடியும்?

“எப்படி பெண் கொடுக்கறேன்னு சொன்னீங்க?”

“உங்களை பார்த்தேன் குடுக்கலாம்னு தோணிச்சு குடுத்துட்டேன் அவ்வளவு தான், அந்த நிமிஷம் ராயர் அய்யா உங்களை பத்தி உங்க வாழ்க்கை என்ன ஆகுமோன்னு கவலையா பேசின போது குடுத்துட்டேன்”

“இது தோத்துப் போகக் கூடாது. என் பொண்ணுக்கும் உங்களை பிடிக்கணும். நீங்களும் அதுக்குறிய மதிப்போட இருக்கணும், இப்படி என்ன என்னவோ சஞ்சலம் இந்த ரெண்டு வருஷமா?”

“எல்லாம் சரியாகிட்டாலும், அவளுக்கு உங்களை பிடிச்சிருக்கணுமேன்னு எப்பவும் எனக்கு கவலை தான். ஒரு அப்பாவா இது ரொம்ப பெரிய கவலை?”

“இதுல ராஜி வேற என்னோட ரெண்டு வருஷம் இல்லை, மனோவோட போயிட்டா, வெளில கெத்தா சுத்திட்டு இருந்தாலும் உள்ள தவிச்சு போயிட்டேன்”

“இன்னைக்கு... இன்னைக்கு எனக்கே தெரிஞ்சது என் பொண்ணுக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்குன்னு” என்று சொல்லி சிரித்தவர், “அது தான் எனக்கு ரொம்ப சந்தோஷம். யாருக்காகவும் கொஞ்சமும் அலட்ட மாட்டா, இன்னைக்கு நீங்க திரும்ப நடந்த போது அவ கண்ல தெரிஞ்ச தவிப்பு, நீங்க பக்கம் வந்ததும் தெரிஞ்ச நிம்மதி, இப்போ கொஞ்சம் நேரம் முன்ன பார்த்த சந்தோசம்...” என்று சொல்லி நிறுத்தினார்.

“உங்களுக்கு மட்டுமா? எனக்கும் இன்னைக்கு தானே தெரியும் உங்க பொண்ணுக்கு என்னை பிடிக்கும்னு. கொஞ்சமும் மதிக்க கூட மாட்டாளே என்னை, சேர்ந்து வாழ வரும் வரை. அவக்கிட்ட பேச எத்தனை முறை முயற்சி பண்ணினேன். முடியாதுன்னு தெரிஞ்சு தானே போடின்னு விட்டேன்” என்று நினைத்துக் கொண்டான்.

வேகமாய் இரண்டு க்ளாஸ் முழுவதும் உள்ளே இறக்கினார். “அச்சோ, என்ன இது?” என்று அவன் தடுத்தான்.

“இன்னும் ஒன்னே ஒன்னு” என்று சொல்லி, ஒரு முழு பாட்டிலையும் காலி செய்தார்.

“உங்களுக்கு தெரியுமா? தெரியாது! எப்படி தெரியும்? சரி நான் சொல்றேன்!” என

“யப்பா, இந்த குடிமகன்கள் அலப்பறை, தாங்க முடியவில்லையே” என்று மனதிற்குள் நொந்து கொண்டான்.

“ராஜி என் வாழ்க்கைல வந்த தேவதை! அந்த தேவதை எனக்கு இன்னொரு தேவதையை கொடுத்தா, அவளுக்கு நான் நியாயம் செய்யலையோன்னு பயந்து பயந்து இருந்தேன். இப்போ எனக்கு அப்படி தோணலை. அவ சந்தோஷமா இருக்கா, நானும். ஹ, ஹ, இப்போ ஐ அம் எ ஹேப்பி மேன்” என்று கத்தினார்.

“அச்சோ, கத்தாதீங்க” என்று அவன் சொல்லியும் கேட்கவில்லை.

ஆனால் ராஜலக்ஷ்மிக்கு கேட்டு விட்டதே! அவர் எழுந்து வெளியே வந்தவர், அன்பழகனோடு ராஜராஜனையும் பார்த்து அதிர்ந்து நிற்க,

அவரை பார்த்து அன்பழகன் அசடு வழிய, ராஜலக்ஷ்மியின் கண்கள் ராஜராஜனை ஆராய, “நான் குடிக்க மாட்டேன்” என்று

அவனாய் சொல்ல

அவரின் முகத்தில் ஒரு நிம்மதி.

“இன்னைக்கு நாள், நான், ரொம்ப சந்தோஷமா இருக்கேன்” என்று அன்பழகன் உளற…

“நீங்க முதல்ல வந்து தூங்குங்க, இந்த குளிர் உங்களுக்கு பழக்கம், இவருக்கு இல்லை” என்று ராஜி சொல்ல,

“நீங்க ஏன் அத்தை என்னை அவர் இவர் பேசறீங்க” என்றான் ராஜராஜன்.

“என்ன கேட்கிறான் இவன்?” என்று ராஜலக்ஷ்மி புரியாமல் பார்த்து, பின் கிரகித்து, அவனை பார்க்க,

“உங்க அண்ணன் பையன் தானே, வா போன்னு கூப்பிடுங்க, பேர் சொல்லி கூப்பிடுங்க, எனக்கு அவர் இவர் பேசினா என்னவோ மாதிரி இருக்கு. என்னால உங்க கிட்ட சகஜமா பேச முடியலை” என்று அவன் சொல்லி விட, அங்கை அவனோடு வாழ வந்த நாளாய் ராஜராஜன் நினைத்திருந்தது தான், ஆனால் சொல்லியதில்லை, தள்ளியே நிற்பான். இன்று சொல்லி விட்டான்.

ராஜலக்ஷ்மிக்கு விரிந்த சிரிப்பு, கூடவே கண்களில் நீர், அவரால் அதற்கு பதில் சொல்லக் கூட முடியவில்லை.

“எழுந்திருங்க” என்று கணவனை கை பிடித்து தூக்க, “ராஜி நான் ரொம்ப ஹேப்பி” என்று திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டே நடத்தவர், “விடு ராஜி” என்று சொல்லி திரும்ப ராஜராஜனிடம் வந்தவர்,

“நான் உங்களை ஒரு முறை கட்டி பிடிச்சிக்கிறேன் என்று அவனை அணைத்துக் கொண்டு “தேங்க்ஸ்” என்றார் மீண்டும்.

அவர் விட்டதும் “எதுக்கு?” என,

“ம்ம், என் பொண்ணுக்கு உங்களை பிடிச்சதுக்கு, என் பொண்ணுக்கு பிடிக்கிற மாதிரி நீங்க இருந்ததுக்கு” என்று சொல்லிச் செல்ல,

“என்ன சொல்ல வருகிறார் இவர்” என்று புரிந்தும் புரியாத போதும் மனது நிறைவாய் உணர்ந்தது. கூடவே “கல்யாணம் பண்ணி கட்டாயமா அவளை என்கிட்டே நீங்க தள்ளி விட்டதனால

மட்டும் தான் அவளுக்கு என்னை பிடிச்சது" என்ற ரகசியத்தை புறம் தள்ளினான்.

அன்பழகனை சென்று படுக்கையில் விட்ட ராஜலக்ஷ்மி வெளியே வர, அப்போதும் ராஜராஜன் இயற்கையை ரசித்தபடி நின்றிருந்தான்.

"ரொம்ப குளிருது, உங்களுக்கு ஒத்துக்காம போயிடப் போகுது. உள்ள வாங்க" என்று சொல்ல, அவரை முறைத்து பார்த்தான்.

பின்பு "உனக்கு ஒத்துக்காம போயிடப் போகுது" என்று சொல்ல,

"ம்ம் அது" என்றவன், "எனக்கு அப்படி ஒன்னும் குளிர் தெரியலை அத்தை" என்று சொல்லி உள்ளே நடக்க,

"உங்க பிரச்சனைக்கு கஷ்டத்துக்கு நாங்க தான் காரணம்னு நீயும் நினைக்கறியா?" என்றார்.

நடந்தவன் திரும்பிப் பார்க்க... வராண்டாவில் இருந்த

இருக்கையை காண்பித்தார் “உட்கார முடியுமா?” என்பது போல,

அவன் அமர அவரும் அமர்ந்தவர், “எனக்கு இதை யார்கிட்டயும் சொல்லணும்னு இல்லை, சொல்லவும் மாட்டேன். ஆனா நீங்க…” என்றவர் ராஜராஜனின் பார்வையில் “நீ” என்று மாற்றி, “நீ அங்கையை கல்யாணம் பண்ணி இருக்க, நீ அங்கையை எங்களோட பொண்ணா பார்க்கும் போது, சரியா பார்க்காம போனான்றதுக்காக தான் இதை சொல்றேன்” என்றவர்,

“எனக்கு எங்க அப்பா அம்மாவை தெரிஞ்ச நாளா, இவரையும் தெரியும். அவங்க எல்லாம் என்னை பார்த்துக்கிட்டதை விட இவர் என்னை பார்த்துக்கிட்டது தான் அதிகம், ஒரு வயசுக்கு மேல எனக்கு அவர் மேல இருக்குற பிடித்தம் மாறி போச்சு, ஏன் போச்சு எனக்குத் தெரியாது, அது தப்பான்னும் எனக்கு தெரியாது”

இத்தனை வருஷம் எங்களோடவே இருந்தவரை என்னோட அண்ணனுங்க அடிச்சு துரத்துவாங்கன்னு நான் எதிர் பார்க்கவேயில்லை. எனக்கு அப்பா கிட்ட பயம், இவர் தான் வேணும்னு சொல்ல முடியலை?”

“நீ தான் வேணும்னு என்னால இவர் கிட்ட சொல்ல முடிஞ்ச அளவுக்கு என் வீட்ல இருக்குற யார் கிட்டயும் சொல்ல முடியலை, அம்மா கிட்ட கூட சொல்ல முடியலை. காதல்ன்ற வார்த்தை அம்மாக்கெல்லாம் ரொம்ப தப்பு. அதனால் என்னால் சொல்ல முடியலை”

“அப்போ சாகவும் மனசு வரலை, உயிரோட இருந்தா நிச்சயம் வருவார்ன்னு நம்பிக்கை. அப்போதான் நான் எவ்வளவு வேண்டாம்னு சொல்லியும் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டாங்க”

“என்னோட தற்கொலை முயற்சியப்போ சரியா இவர் வந்திட்டார், இது கண்டிப்பா தெய்வ சங்கல்ப்பம் தான், இல்லை இவர் ஏன் அன்னைக்கு வரணும். அதுவும் நான் தற்கொலைக்கு முயற்சி செஞ்ச போது இவர் ஏன் காப்பாத்தணும்?”

“ஆனா வேற யார் காப்பாத்தியிருந்தாலும் திரும்ப திரும்ப செத்து போகற வரை ஏதாவது சாக முயற்சி செஞ்சிட்டே தான் இருந்திருப்பேன், கண்டிப்பா அவனை கல்யாணம் செஞ்சிருக்க மாட்டேன்”

“இவருக்கு என் மேல கோபம் கூட, நான் இவ்வளவு தீவிரமா இல்லைன்னா கண்டிப்பா அவரோட காதல் சொல்லியிருக்க மாட்டார். ராயர் குடும்பத்துக்கு விசுவாசமா இருக்க முடியாம துரோகின்னு பேர் வாங்கிட்டோமேன்னு என்னைக்கும் அவருக்கு வருத்தம் தான்”

“ஆனா எனக்கு வேற வழியில்லை, ஒரு வேளை அப்பாவே இந்த கல்யாணம் செஞ்சி வெச்சிருந்தார்னா இந்த குற்ற உணர்ச்சி அவருக்கு இல்லாம இருந்திருக்கும்”

“துரோகியாகிட்டோம்ன்றது அவரால சில சமயம் கடந்து வரவே முடியாது. அப்போல்லாம் என்கிட்டே பேச மாட்டார். பல முறை வார் ஃபிரன்ட் இல்லை பார்டர் போய்டுவார். மாசக் கணக்கா வர மாட்டார். உங்கப்பா கிட்ட உங்கம்மா கிட்ட பேசுன்னு சொல்வார். ஆனா நான் பேசமாட்டேன். எனக்கு என் அப்பா அம்மா மேல பாசமில்லைன்னு கிடையாது, ஆனா அதை விட இவர் மேல வெச்ச காதல் அதிகம்”

“இன்னும் கூட எங்கப்பாம்மா மேல எனக்கு கோபம் தான். எங்களை ஏன் இப்படி ஊரை விட்டு வர்ற நிலைமைக்கு கொண்டு

வந்தாங்கன்ற கோபம். அவங்க அந்த கல்யாணம் பேசமா இருந்திருந்தா, இவர் ஊருக்கு வந்திருந்தாலும் அப்பா அம்மாவை மீறி நான் இவரோட போயிருக்க மாட்டேன். இவரும் அவங்களை மீறி என்னை கூட்டிட்டு வந்திருக்க மாட்டார்"

"என்னை ஓட வெச்சதும் அவங்க தான், அவரை துரோகியாக்கினதும் அவங்க தான். எத்தனை வருஷமாகிட்டாலும், நாங்க இப்போ நல்லா இருந்தாலும், எங்கயோ ஒரு மூலையில என்னோட மனசுலயும் அவரோட மனசுலையும் இருக்குற இந்த கசடு போகாது" என்று நிறுத்தி விட்டார்.

அங்கே ஒரு பெரிய மௌனம். ராஜராஜனுக்கு அவர் சொல்வதில் இருந்த உண்மையை ஒத்துக் கொள்ள தான் வேண்டி இருந்தது. ஆனாலும் காண்பித்து கொள்ளவில்லை.

"எது எப்படின்னாலும் ஒரு விஷயம் ரொம்ப தெளிவா இருக்கேன், உங்க கஷ்டத்துக்கு நாங்க காரணம் கிடையாது. நீங்களா என்னை அனுப்பி விட்டீங்க, இல்லையே, அந்த ஆத்மன் தொல்லை குடுத்தா அவனை எதிர்த்து நீங்க நின்னிருக்கனும். அதை விட்டு உங்க தோல்விக்கெல்லாம் எங்களை காரணம் சொல்லக் கூடாது" என்று நிறுத்தியவர்,

“என் பொண்ணை ஒன்னும் சொல்ல மாட்டீங்க தானே” என்றார்.

“உங்க பொண்ணை சொல்வேனா இல்லையா தெரியாது. என் மனைவியை நிச்சயம் சொல்ல மாட்டேன். அப்புறம் உங்களையும் சொல்ல மாட்டேன், ஏன்னா சொல்ல உங்க பொண்ணு விட மாட்டா” என்றான்.

சில அமைதியான நிமிடங்கள். ராஜராஜன், “நீங்கள் செய்தது சரி, தவறு, என்பது போல எதுவும் சொல்லவில்லை”

“நீங்க போய் தூங்குங்க அத்தை, நடந்ததை யாரும் மாத்த முடியாது. நடக்கறது நல்லதாவே நடக்கும், போங்க” என்று சொல்லும் போது இவனை காணாமல் அங்கை எழுந்து வந்து விட்டாள்.

இவர்கள் அமர்ந்திருப்பதை பார்த்ததும் “என்ன?” என்று கவலையாய் பயந்து கேட்டு வர,

“என்ன?” என்றான் ராஜராஜன் இலகுவாகவே.

“அம்மா ஏன் இங்க உட்கார்ந்து இருக்காங்க? என்ன சொன்னீங்க நீங்க அவங்களை?” என்று முறைப்பாய் கேட்க,

“நானும் எங்க அத்தையும் பேசிட்டு இருந்தோம் உனக்கென்னா”

“ஆங், இது எப்போ இருந்து?”

“ம்ம், நீ தூங்குன கேப்புல”

“என்ன பேசுனீங்க” என்றாள் அப்போதும் முகம் தெளியாதவளாக.

“அத்தை மாமாவோட லவ் ஸ்டோரி”

“ஆ, பொய், என்கிட்டயே சொன்னதில்லை, உங்க கிட்ட எப்படி சொல்வாங்க?”

“வாயால தான்” என்றான் இன்னும் அசால்டாய்.

ராஜலக்ஷ்மிக்கு சிரிப்பு வந்து விட, “நான் போய் தூங்கறேன்”

என்று இருவருக்கும் தனிமை கொடுத்து விலகினார்.

சிரித்து செல்லும் அம்மாவையே பார்த்தவள் “என்ன பேசுனீங்க?” என்றாள் சொல்லியேயாக வேண்டும் என்ற த்வனியில்.

“நிஜம்மா அவங்க காதல் கதை தான். அவங்க எல்லாம் பைத்தியக்காரங்க, காதல் தீவிரவாதிங்க, நமக்கு அதெல்லாம் வேண்டாம். நாம நாமளா இருப்போம்” என்று அவன் சொல்லியது ராஜலக்ஷ்மியின் காதில் நன்கு விழுந்தது. சிரிப்போடே அவர் படுக்க சென்றார்.

“எங்கம்மாவும் நீங்களும் நல்லா பேசிக்கிட்டீங்களா?” என்ற அங்கையின் கேள்விக்கு பேசிக்கிட்டோம்” என்று ராஜராஜன் சொல்ல,

“நிஜம்மா, நிஜம்மா” என்று திரும்ப திரும்ப அவள் நம்பாமல் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

“நிஜம்மா” என்ற பதில் அவன் திரும்ப சொல்லவில்லை. ஆனால் கண்கள் அதனை பிரதிபலிக்க, அமர்ந்திருந்த அவனின்

பக்கத்தில் அமர்ந்து தோள் சாய, அங்கையை தோளோடு அணைத்துக் கொண்டான்.

“எங்கம்மா அவங்க காதல் கதை சொன்னதேயில்லை, நீங்க சொல்லுங்க”

“அது எதுக்கு நமக்கு, அதெல்லாம் நம்மளால முடியாது. அவங்கல்லாம் காதல் பண்ணட்டும், நாம குடும்பம் நடத்துவோம்” என்றான் அவளை பார்த்து கண்ணடித்து…

“அப்படின்னா?” என்றவளிடம்,

“அதை நீ தில்லை தமிழ்செல்வன் கிட்ட தான் கேட்கணும்”

“அது யாரு” என்று புரியாமல் முழிக்க,

“அடிங்க எங்கம்மாவை தெரியலையா?”

“ஹி, ஹி, பேர் சட்டுன்னு ஞாபகம் வரலை” என்று அசடு வழிய,

“ஊருக்கு போய் எங்கம்மா கிட்ட போட்டுக் கொடுக்கறேன்”

“அதுக்கு எதுக்கு ஊருக்கு போகணும், ஃபோன் பண்ணுங்க”

“நாளைக்கு காலையில பண்ணலாம், இப்போ வேற பண்ணலாம்” என்றான்.

“என்ன?” என்றவளிடம்,

“எப்போவும் படுத்துக்கிட்டு பண்ணுவோம், இன்னைக்கு நின்னுக்கிட்டு பண்ணிட்டோம், உட்கார்ந்துட்டு இப்போ பண்ணுவோம்” என,

அங்கையற்கண்ணிக்கு முதலில் புரியாமல், பிறகு புரிந்து, சத்தமாக வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தவள், “ஒரு முத்தத்துக்கு இந்த பில்ட் அப் பா” என,

அவளின் சிரிப்பை பார்த்து ராஜராஜன், “சரி, வேற எதுக்கு பில்ட் அப் குடுக்கட்டும்?” என்று கேட்டுக் கொண்டே அவளோடு சிரித்தான். எதற்கென்று தெரியாத ஒரு சிரிப்பு, இருவரின் மன சந்தோஷத்தை மட்டுமே கொண்ட சிரிப்பு.

இருவரின் சிரிப்பு சத்தமும் உள்ளே கேட்க, அப்போது தான்

உறங்க ஆரம்பித்த அன்பழகன் அருகில் படுத்த ராஜலக்ஷ்மியை அணைத்துக் கொண்டார்.

அங்கையற்கண்ணியின் திருமணத்திற்கு பிறகான அன்பழகனின் அணைப்பு, ராஜலக்ஷ்மி உறக்கத்திற்காக விழி மூடிய போதும் கண்களில் நீர் கசிந்தது.

யார் சொன்னது காதல் எளிதானது என்று, காதல் மிக மிக கடினமானது.

காதலுக்காக காதலிடமே பல சமயம் போராட வேண்டி வரும்!

ஆனாலும் காதல் தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கும்!

அது தான் காதல்!

நமகெல்லாம் அது புரிய வேண்டாம்ங்க, நாம குடும்பம் நடத்துவோம்! பிடிச்சாலும் சரி! பிடிக்காவிட்டாலும் சரி!

பிடித்ததை, பிடிக்கறது பெரிய விஷயமா? பிடிக்காததையும் பிடிக்க வைக்கணும்!

இது கூட ஒரு வகையான காதல்!

முன்னது ராஜலக்ஷ்மி அன்பழகனின் காதல் என்றால் பின்னது அங்கையற்கண்ணி ராஜராஜனது!

# அத்தியாயம் 18

சரியாய் பதினெட்டு மாதங்களுக்கு பிறகு,

அன்று தான் புதிதாய் கட்டியிருந்த சிவன் கோவில் கும்பாபிஷேகம், ராஜலக்ஷ்மியும் அன்பழகனும் தான் பரிவட்டம் கட்ட இருந்தனர்.

கும்பாபிஷேகம் முடிந்து உச்சி கால பூஜை ஆரம்பிக்க இருக்க,

வீட்டில் இருந்து அவளின் ஆக்டிவாவில் அங்கை கிளம்ப, அவளிற்கு பின் ரதி பூர்ணிமா, ஆம்! அது தான் அவளின் செல்ல மகளின் பெயர். ஒன்றரை வயதை நெருங்கும் தத்தி தத்தி தளிர் நடையிடும் தத்தை, இருப்பக்கமும் காலிட்டு அமர்ந்திருக்க, அவளை அணைவாய் பிடித்தபடி விகாஸ், இப்போது ஆறு வயதை தொட்டிருந்தான்.

அவனுக்கு பின் ஸ்ருஷ்டி அண்ணனை பிடித்தபடி அவள் மூண்டு வயதை தொட இருந்தாள். அவளுக்கு பின்னே ராஜராஜன், இவர்களை பிடித்த படி…

ஒரே ஆக்டிவாவில் ரயில் வண்டியாய் இத்தனை பேர். கோவில் முன் சென்று நிறுத்த ஊரே வேடிக்கை பார்த்தது.

இவர்களை பார்த்ததும் கோவிலின் வாயிலில் நின்றிருந்த மனோ வேகமாய் வர, முதலில் ராஜராஜன் இறங்க, அவளிற்கு பின் இருந்த ஸ்ருஷ்டியை இறக்கி கீழே விட்டான்.

அவள் சமத்தாய் அப்பாவின் அருகில் நிற்க, அவளுக்கு பின்னே விகாஸ் இறங்கினான். அவனுக்கு முன் இருந்த ரதியை மனோ தூக்கிக் கொள்ள, அங்கை வண்டியை விட்டு இறங்க, மனோவின் கண்ணசைவில் வேகமாய் ஒருவர் வந்து அதனை சற்று தள்ளி நிறுத்த வாங்கி சென்றார்.

அங்கையின் கை வண்டியில் இருந்து விலகியது தான் தெரியும், “அத்தை தூக்கு” என்று ஸ்ருஷ்டி அருகில் வந்து நின்றாள்.

“நடக்கணும் பேபி” என்று மனோ கண்டிப்பான குரலில் சொல்ல,

“அத்தை, அப்பா என்னை திட்டுறாங்க” என்று அங்கையிடம் அவள் சொல்ல,

“நீ வாடா செல்லம், அப்பாவை அவங்க அப்பாக்கிட்ட நாம மாட்டி விடலாம்” என்று அவளை தூக்கி கொண்டாள்.

விகாஸ் சென்று ராஜராஜனின் அடிபடாத கையினை பிடித்துக்

கொண்டான்.

ஆம்! ராஜராஜனுக்கு கையில் ஒரு சின்ன அடி, அது வீக்கம் கண்டிருக்க, அதற்கு பேண்டேஜ் சுற்றி இருந்தனர்.

அங்கை முன் நடக்க இடைவெளி விட்டு ராஜராஜன். மனோ அவளின் மருமகளை கொஞ்சியபடி அவர்களின் பின்னே, இவர்கள் மூவரும் நடந்து வருவதற்காக ஊரே காத்திருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

சுவாமிநாதனுக்கு பொறுமை பறந்து கொண்டிருக்க, தமிழ்செல்வன் ராஜராஜனிடம் “சீக்கிரம் வர மாட்டியாடா?” என்றார் அதிகாரமாக.

நொடியும் யோசிக்காமல் திரும்பி வாயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

“டேய், நீ சும்மா இருக்க மாட்ட” என்று சுவாமிநாதன் அவரை அதட்டியபடி “ராஜா” என்று குரல், நின்றவன் திரும்பி “நீங்க பாருங்க பெரியப்பா” என்று வேகமாய் வெளியே நடந்தான்.

“என்னடா நீங்க?” என்று அங்கிருந்த நாச்சி தான் கடிந்தார், “ரெண்டு நாளா எத்தனை வேலை அவனுக்கு, பூஜை முடிஞ்சதும்

வீட்டுக்கு போனவன் அசந்து தூங்கிட்டான், அதுக்கு என்னடா ஒரே சவுண்டு, அவன் ஒருத்தன் தான் ஓடி ஓடி வேலை பார்க்கறான்"

"ஊர்ல இருந்து வந்தவனுங்க சும்மா நிக்கறானுங்க. ஏன் நாளைக்கு அவனுங்களுக்கு சொத்துல பங்கு குடுக்க மாட்டீங்களா?" என்று எப்போதும் போல பட்டவர்த்தனமாய் பேச,

அங்கே கௌரி சங்கரும் நந்த குமாரும் "என்ன பாட்டி?" என்ற படி வந்தனர்.

"மூணு வேளையும் அன்னதானம் நடக்குது. என்ன தேவைன்னு பாருங்கடா? சும்மா வெள்ளையும் சொள்ளையுமா சுத்தினா ஆச்சா?"

சௌந்தரியும் விஜயாவும் அவர்களின் குடும்பத்தோடு இருக்க, "பொண்ணுங்களுக்கு என்ன தேவைன்னு பாருங்க" என்று அந்த பேரன்களின் மனைவிமார்களை ஏவினார்.

ஆம்! இரண்டு நாட்களாக மூச்சு விடக் கூட முடியாத அளவிற்கு ராஜராஜனுக்கு வேலை. எல்லாம் சிறப்பாய் நடக்க வேண்டும் என்று ஒன்றொன்றும் பார்த்து பார்த்து அவனின்

மேற்பார்வையில் செய்ய வேலைகள் அதிகமாகி விட்டன.

மூன்று வேளையும் அன்னதானம், மூன்று நாட்களுக்கு ராயர் குடும்பத்தின் செலவே!

கோவிலை கட்டியது மனோவின் மனைவி கரிஷ்மாவின் கட்டுமான கம்பனி என்றதால் அதாகப் பட்டது செலவு அவர்களினது என்றதால், மனோவிற்கும் கரிஷ்மாவிற்கும் தான் பட்டம் கட்ட வேண்டும் என்று ராஜராஜன் சொல்லி விட்டான்.

மிக அதிகமான சலசலப்பு தான். “அதெப்படி தங்களது ஊரில் அவர்களுக்கு கட்ட முடியும்?” என்று.

“ஏன் அன்பழகன் எந்த ஊர்?” என்று அவர்களின் வாயை அடைத்து விட்டான்.

இது முடிவான உடனே மனோவிற்கு அழைத்து, “இப்படி தான் சொல்வார்கள், உனக்கு என்ன செய்ய பிரியமோ அதனை செய்” என்றும் விட்டான்.

சொன்னதை கற்பூரமாய் பற்றிக் கொண்ட மனோவும் “என் அப்பா அம்மா இருக்க, எப்போதும் எதிலும் முதல் மரியாதை

அவர்களுக்கு தான்” என்று சொல்லி விட,

இப்போது இன்னும் அதிகமான சலசலப்பு தான் குடும்பத்தில்!

அதெப்படி சுவாமிநாதன் இருக்க அவருக்கு தான் கொடுக்க வேண்டும் என்று மற்ற மக்கள் அனைவரும் பேச, அதிலும் தமிழ்செல்வன் என் அண்ணனுக்கு தான் என்று எகிறிக் குதித்து பேசினார்.

நாச்சி எதிலும் தலையிடவில்லை, அங்கை “எதுக்கு எங்கப்பா அம்மா? இது இல்லைன்னா என்ன? ஏன் இப்படி பண்றீங்க?” என்று தனிமையில் அவனிடம் சண்டையிட்டாள்.

ராஜராஜன் கேட்கவில்லை என்ற போது, “ஒன்னும் தேவையில்லைன்னு நான் பேசப் போறேன், நீ கூட தான் எங்கம்மாவை ஓடிப் போனவ சொன்ன, இப்போ என்ன நல்லவன் மாதிரி பேசற?” என்று வார்த்தையை விட,

“தொலைச்சிடுவேன், நீ வாயை மூடிட்டு இரு. நான் நல்லவன்னு யாருக்கும் ப்ரூவ் பண்ண வேண்டிய அவசியமில்லை, முக்கியமா உனக்கு என்னைக்கும் பண்ண மாட்டேன் போடி, ஏதாவது எனக்கு தெரியாம என்னை மீறி பேசினேன்னு தெரிஞ்சது

என்ன பண்ணுவேன்னு கூட தெரியாது" என்று அவளை பேசக் கூடாது என்று தடை செய்து விட்டிருக்க,

அங்கைக்கும் அவனிற்கும் முட்டிக் கொண்டு நின்றது. இத்தனை சலசலப்பு அவளுக்கு பிடித்தமில்லை. "என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் என்ன? போங்கடா நீங்கல்லாம். அவங்க மரியாதைக்கு உரியவங்க தான். புதுசா யாரும் மரியாதை குடுக்க வேண்டிய அவசியமில்லை" என்று நினைப்பு.

ஆனால் அங்கையும் சரி, ராஜராஜனும் சரி, இந்த சலசலப்புகள் எதுவும் மனோவிற்கோ, ராஜலக்ஷ்மிக்கோ, அன்பழகனிற்கோ தெரிய விடவில்லை.

தெரிந்தால் அவர்கள் இதன் பொருட்டு இந்த கும்பாபிஷேகம் முடியும் வரை ஊர் பக்கம் எட்டிக் கூட பார்க்க மாட்டர் என்பது திண்ணம்.

அன்பழகனிடம் பழகிய வரை ராஜராஜனுக்கு தோன்றியது இது தான். ராயர் மீது எவ்வளவு பற்றோ அதற்கு சற்றும் குறையாமல் ஊரின் மீதும் பற்று என்று சொல்லலாம். அங்கையை இங்கே கொடுத்திருப்பதால் ஊரோடு அவருக்கு இனி தொடர்பு தான்.

ஆனாலும் இந்த ஒரு மரியாதை அவருக்கு கிடைக்க வேண்டும் என்று விரும்பினான். உண்மையில் அவர்களின் பிரச்சனைகள் தீர்ந்து, கோவில் வந்தது அங்கே மனோவினால் தானே. அதனைக் கொண்டே ராஜராஜன் இதனை செய்தான்.

இவன் இப்படி செய்து விட்டதால் மற்ற மக்கள் வேலையை இழுத்துப் போட்டு செய்யவில்லை. அதனால் ராஜராஜன் தான் எல்லாம் பார்க்கும் படி ஆகிற்று. ஊர் மக்கள் எல்லாம் உடன் செய்தனர்.

அண்ணன்களிடம் செய்யுங்கள் என்று சொன்னால் செய்திருப்பர். அவனை மீறவோ அலட்சியம் செய்யவோ மாட்டர். ஆனால் அவன் சொல்லவில்லை. “போங்கடா” என்று விட்டு விட்டான்.

சுவாமிநாதனுக்கு பரிவட்டம் கட்டவில்லை என்ற கோபம் தமிழ் செல்வனுக்கு. அதனால் அந்த கோபத்தை ராஜராஜனிடம் காண்பிக்க… அவன் திரும்பி நடக்க… இப்படியாக ஒரு சின்ன களேபாரம்.

கௌரி சங்கரும் நந்த குமாரும் வேகமாய் சென்று அவனை பிடித்து இழுத்து வந்தனர், “வாடா” என்பது போல…

முகத்தை தூக்கி கொண்டு தான் வந்தான்.

ராஜலக்ஷ்மி இதனை பார்த்தவர் அருகில் வந்த அங்கையிடம் “ராஜனுக்கு கோபம் போல” என்றார்.

“இருந்துட்டு போகுது, அதுக்கென்ன?” என்றாள் அலட்சியமாய்.

“சமாதானம் பண்ணு அம்மு, இங்க வந்து நிக்க வை”

“அதெல்லாம் ஒன்னும் தேவையில்லை. உன்னை மாதிரி உன் புருஷன் பின்னயே சுத்திட்டு இருப்பேன்னு நினைச்சியா? அதெல்லாம் சமாதானம் ஆனா ஆகறார், ஆகாட்டி போறார். நீ சாமி கும்பிடு” என்று வார்த்தைகளால் கடிக்க,

“உனக்கு எதுக்கு கோபம்?” என்றார் புரியாமல்.

“எதுக்கோ மா, என் வாயை பிடுங்காத” என்றாள் அவ்வளவு கோபமாய்.

அவர் பின் பேசவில்லை.

அப்போது கரிஷ்மாவின் அப்பா, சில சொந்தங்களோடு வர, அங்கே அவர்களுக்கு ராஜ மரியாதை தான், அவர்களால் தான் எல்லாமே. அவர்களோடு தான் கரிஷ்மா வந்தாள், வந்தவள் ஸ்ருஷ்டியை தேட, அவளோ அத்தையை விட்டு வரவில்லை.

அதனால் அங்கை தான் அவளை தூக்கிக் கொண்டு அவர்களின் புறம் வரும் படி ஆகிற்று.

தாத்தாவை பார்த்ததும் விகாஸ் அருகில் வந்தான்.

மனோ இவர்களை பார்த்ததும் அவனின் கையில் இருந்த ரதி பூர்ணிமாவை தில்லையிடம் கொடுத்திருக்க, அவரோ பேரனை பார்த்ததும் அவனை கொஞ்சியவர், நேராக சென்றது அன்பழகனிடம் தான்.

அவரின் அருகில் சென்றதும் அப்படி ஒரு பவ்யமான உடல் மொழி. மரியாதையாய் அவரிடம் சில வார்த்தைகள் பேசி பின்னர் தள்ளி வந்து பேரனிடம் ஏதோ கேட்டார்.

பின்னே விகாஸ் தானே அவரின் வாரிசு, கரிஷ்மா ஒரே பெண் அவர்களுக்கு.

அவனும் வேகமாய் சென்று தில்லையிடம் இருந்த ரதி பூர்ணிமாவை இறக்கி விடச் சொல்லி, அவளின் கை பிடித்து பொறுமையாய் மெதுவாய் தாத்தாவிடம் அழைத்து வந்தான்.

இதற்கு ஸ்ருஷ்டியை இன்னும் அங்கையை விட்டு அகலவில்லை.

அவரும் ஆசையாய் ரதியை கையினில் தூக்க சில நொடி இருந்தவள், பின் வேகமாய் இறங்க, கரிஷ்மா அவளை கையில்

தூக்க, அவளிடம் இருந்தும் இறங்கி விகாஸ் கையினை பிடித்து நின்று கொண்டது அந்த பட்டுக் குட்டி.

“என்ன விக்கி உங்க தாத்தா கிட்ட ரதியை காமிச்சு சொல்ற?” என்று அங்கை கேட்க,

“ம்ம், என் பொண்டாட்டி சொன்னேன்” என்று சொல்ல,

அப்படியே அதிர்ந்து விட்டால் அங்கை.

பின் “என்ன விக்கி இது?” என்று அதட்டி, “இப்படி சொல்லக் கூடாது” என்று மிரட்டினாள்.

அவன் ரதியின் கை பிடித்து அழைத்து சென்று ராஜராஜனிடம் நின்று கொண்டான்.

“டேய், அவர் தான் சொல்லிக் கொடுத்தாரா உனக்கு?” என்று கோபமாய் கேட்க,

ராஜராஜனிற்கு அப்படி ஒரு கோபம் பொங்கி விட “நீ ரொம்ப பேசற அங்கை” என்று சொல்லி விட்டான்.

அங்கே எல்லோர் முன்னும் இருவரும் சண்டை கோழிகளாய் முறைத்து சிலிர்த்து நின்றனர்.

"என்ன இப்போ அதனால பேட்டி?" என்று ஹிந்தியில் கரிஷ்மாவின் தந்தை சொல்லி, "எனக்கு ஒரு பையன் இருந்தா உன்னையே என் மருமகளாக்கி இருப்பேன், எனக்கு இல்லை, இப்போ உன் பொண்ணை என் பேரனுக்கு சொல்றோம்" என்று சொல்ல,

அப்படி ஒரு கோபம் ராஜராஜனுக்கு பொங்கி விட்டது.

"அது அப்புறம் பார்க்கலாம் மாமா" என்று சொன்னவள், "உனக்கு யார் சொல்லிக் கொடுத்தா?" என்று அதிலேயே நின்றாள்.

விகாசோ மனோவின் மகன் என்று நிருபித்தான், "யார் சொல்லிக் கொடுத்தா என்ன? இதுல என்ன தப்பு" என்றான்.

"நீ சின்ன பையன், இப்படி எல்லாம் பேசக் கூடாது" என்று அங்கையற்கண்ணி பொறுமையாய் விளக்கம் கூற,

"ஏன் பேசக் கூடாது?" என்றான் பிடிவாதமாய். எல்லாம் மௌனமாய் தான் ராஜராஜன் பார்த்திருந்தான். இன்னும் விகாஸ் அவனின் அருகில் தான், ஆனால் ராஜராஜன் கையில் கட்டு இருந்த போதும் மகளை தூக்கிக் கொண்டான்.

“அது பெரியவங்க ஆனா உங்களுக்கு பிடிக்குமோ இல்லையோ. அதனால் இப்போ இருந்தே இப்படி பேசக் கூடாது” என்று விளக்கம் கொடுத்தாள்.

அதற்குள் பூஜைக்குரிய நேரமாகி விட, எல்லோரும் பூஜைக்கு நிற்க, அங்கை ரதி பூர்ணிமாவை அனிச்சையாய் அவனின் கையினில் கட்டு இருப்பதினால் உடனே வாங்கிக் கொண்டு பூஜையில் நிற்க, ராஜராஜன் அவளின் பக்கம் கூட திரும்பவில்லை.

ஊர் மக்களின் முன் அன்பழகனுக்கும் ராஜலக்ஷ்மிக்கு பரிவட்டம் கட்டி முதல் மரியாதை கொடுக்கப் பட, என்னவோ இத்தனை வருடங்கள் இருந்த சில சஞ்சலங்கள் இருவர் மனதிலுமே மட்டு பட்டது.

ராஜலக்ஷ்மியின் மனதில் ஒரு புது நிம்மதியும் உவகையும் பொங்க, அந்த வயதிலும் அவரை பேரழகியாய் காண்பித்தது. அப்படி ஒரு தேஜஸ் அவரிடம்.

முதல்ல இவளுக்கு சுத்தி போடணும் என்று நினைத்தார் நாச்சி, அவரின் கண் முழுவதும் மகள் மேல் தான், அருமை பெருமையாய் வளர்த்த மகள் எல்லாம் சரியில்லாமல் போக, திரும்ப பார்த்த பிறகு அப்படி ஒன்றும் ஒட்டுதல் இல்லை கோபமே இருந்தது, ராஜலக்ஷ்மியும் தள்ளியே நிற்பார். நாச்சி

“அன்பு” என்று மருமகனிடம் உரிமையாய் பேசுவதை போல கூட ராஜலக்ஷ்மியிடம் பேச மாட்டார்.

ஈசன் அந்த திரையை விலக்கினாரோ என்னவோ?

அங்கையிடம் ராஜலக்ஷ்மி ஏதோ கேட்க, அவள் இன்னும் கோபத்தை தான் காண்பித்தாள். அவருக்கு ஏன் கோபம் என்று புரியவேயில்லை.

பின்னே அங்கிருப்பவர்கள் அவளுக்கு மட்டும் உறவுகள் கிடையாது, ராஜலக்ஷ்மிக்கும் தானே. ஆனாலும் இந்த மரியாதைக்கு அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பது கோபத்தை கொடுத்திருக்க அதனை அம்மாவிடமே காண்பித்தாள். ஆனாலும் தன் கணவன் பிடிவாதமாய் இதனை நடத்திக் காண்பித்து விட்டான் என்பது கர்வமாய் உணரச் செய்தது.

ராஜராஜனை பார்வையால் தேட அவன் தென் படவேயில்லை. மனது சஞ்சலமாக உணர துவங்கியது. அத்தனை பேரை வைத்துக் கொண்டு கணவன் எங்கே என்று பின் செல்லவும் முடியவில்லை. வீட்டின் மருமகளாய் அங்கே தான் நின்றாள்.

இப்படியாக பூஜைகள் எல்லாம் சிறப்பாய் முடிந்து இவர்கள் எல்லோரும் கூட கோவிலில் உண்டு விட்டு தான் வீடு திரும்பினர்.

அப்போதும் ராஜராஜன் வரவில்லை. அன்னதானம் பார்க்க என்று கோவிலில் இருந்து கொண்டான்.

வீடு வந்ததில் இருந்து விக்கியை தாஜா செய்து, யார் அவனுக்கு சொல்லிக் கொடுத்தார் என்று தெரிந்து கொள்ள அவனின் பின் அங்கை சுற்றிக் கொண்டிருந்தாள். கூடவே இப்படி இனிமேல் சொல்லக் கூடாது என்றும்.

விக்கியின் ஒரே கேள்வி "ஏன் சொல்லக் கூடாது?". அத்தை எத்தனை முறை சொன்னாலும் அத்தனை முறையும் அவன் பதில் இதுவாகத் தான் இருந்தது.

அன்பழகனே "விடு அம்மு, அவனை ஏன் டார்ச்சர் பண்ற, கல்யாணம் எல்லாம் கடவுள் போடற முடிச்சு. நடக்கறது தான் நடக்கும். அவன் சாதாரணமா சொன்ன ஒரு விஷயத்தை, ஏன் சொன்ன, சொல்லாத, இப்படி நீ அழுத்திச் சொன்னா, அவன் திரும்ப திரும்ப அதை தான் சொல்வான்" என்றார்.

அதிலிருந்த உண்மை புரிந்தவளாக அமைதியாகி விட்டாள்.

வீடு முழுவதும் உறவுகள், ராஜலக்ஷ்மி இன்னும் எல்லோருடனும் சற்று தள்ளி தான் நின்றார்.

ஆனால் அன்பழகனோ மனோவோ கரிஷ்மாவோ அப்படி

கிடையாது, எல்லோருடனும் நன்றாய் பழக, அவர்களுமே நன்றாய் பழகினர். பின்னே உயர் பதவி, வசதி வாய்ப்பு இருந்தும் அவர்கள் நன்றாய் பழக, அதனைக் கொண்டே மற்றவர்களும்.

“பாபி” என்ற அங்கையின் அழைப்பையே எல்லோரும் பின் பற்றினர். அந்த வீட்டின் ஆண்மக்கள், பெண்மக்கள், மருமகள், மருமகன்கள் என்று எல்லோரும் நன்றாய் அவர்களிடம் பேசிக் கொண்டனர்.

ராஜலக்ஷ்மி யார் பேசினாலும் பேசினார், அவராய் பேசுவதில்லை.

அதை அங்கிருந்த எல்லோருமே உணர்ந்தாலும் யாரும் பெரிதாய் எடுக்கவில்லை. அவர் நன்றாய் உரிமையாய் ஒருவரிடம் பேசினார் அந்த வீட்டினில் என்றால் அது ராஜராஜனிடம் மட்டுமே.

“எங்கே ராஜனை இன்னும் காணோம்?” என்று அவர் கேட்ட பிறகே எல்லோரும் கவனித்தனர். அங்கைக்கு முன்பே அவன் வராதது புரிந்தது. கைபேசியில் அழைத்துப் பார்த்தாள். அவன் எடுக்கவில்லை.

தில்லை அழைத்ததும் எடுத்தவன் “என்ன உன் புருஷன் ஓவரா பேசறார் எல்லார் முன்னையும். எப்படியோ போங்கன்னு

விடாம எல்லாம் எடுத்து கட்டி செய்யறேன் தானே அந்த ஏத்தம் தான் அவருக்கு” என்று அவரை வாங்க,

சத்தமில்லாமல் ஃபோனை அணைத்து விட்டார்.

வேறு என்ன செய்வார் எல்லோர் முன்னும் அவர்களின் சண்டை தெரியக் கூடாதே!

அவரின் முகம் பார்த்தே அருகில் வந்த அங்கை, “என்னவாம் அவருக்கு?” எனக் கேட்க,

“விடு அங்கை, எல்லோரும் போற வரைக்கும் வாயே திறக்கக் கூடாது, அவன் எது பேசினாலும் பதில் பேசாதே” என்று அவர் சொல்ல,

“இப்படி தான் அத்தை நீங்க அவரை ஏத்தி விடறீங்க, அவர் பேசினா தானே பதில் பேச. அவர் பேசவே மாட்டாரே, அவரை மலை இறக்கவே என்ன பாடு படணுமோ?” என்று சலித்தபடி நடந்தாள்.

“அவனுக்கு ரொம்ப வேலை அங்கை”

“அவரை யாரு இழுத்து விட்டுக்க சொன்னா? என்கிட்டே

பேசவேயில்லை, இப்போ வந்து திட்டுவார்” என்ற அங்கையின் குரலில் கலக்கம். ஆம்! சில சமயம் ராஜராஜனுக்கு கோபம் வந்தால் சாமான்யத்தில் இறங்காது. தனியாய் இருக்கும் போது அவள் அடித்தால் கூட வாங்கிக் கொள்வான், அவளின் காலை கூடப் பிடிப்பான் ஆனால் எல்லோர் முன்னும் ஒரு சொல் தாங்க மாட்டான்.

விகாஸ் அப்படி சொன்ன பதட்டத்தில் கூடவே ராஜனிடம் போய் நின்றதில் அவனிடம் கேட்டு விட்டாள், அந்த நிமிட சறுக்கல். அவனின் கோபத்தில் அவள் மனம் படும் பாடு அவளுக்கு தானே தெரியும்!

அதை யார் முன்பும் காண்பிக்காமல் முகத்தை சிரித்த மாதிரி வைத்துக் கொண்டு வேலைகள் செய்வது இன்னும் கொடுமை. ராஜராஜன் முகம் பார்த்து கோபம் காண்பித்து இருந்தால் கூட சமாதானம் ஆகியிருப்பாள். எப்போதும் அவனின் பாராமுகம் அவளை ஏதோ செய்யும். இப்போதும் ஏதோ செய்தது.

“உன்னாலேயே அவனை சமாளிக்க முடியலைன்னா நான் என்ன பண்ண?” என்று தில்லையும் பேச, இப்படியாக இவர்கள் பேசிக் கொண்டாலும் வந்திருந்த விருந்தினர்களை கவனிப்பதில் நேரம் ஓடியது.

வாசுகியும் தில்லையும் அங்கையுமே ஓரியாடுவதை பார்த்த நாச்சி, மற்ற மருமகள்களையும் மகள்களையும் பிடி பிடித்தார்.

“என்னங்கடா இங்க ரெஸ்ட் எடுக்க வர்றாங்களா? வீட்டு ஆளுங்களா வந்து வேலையைப் பார்க்க சொல்லு, அவங்க அப்பமூடு வந்தாலும் இங்க இருக்குறவங்க வேலையை பார்ப்பாங்களா? என்று சத்தமிட,

எல்லோரும் அதன் பிறகே ஆளுக்கு ஒரு வேலையாய் செய்ய, “காலையில இருந்து செய்யறீங்க. நீங்க மூணு பேரும் போய் உட்காருங்க” என்றார் இவர்கள் மூவரிடமும்.

இப்படியாக அவர்களுக்கு ஒய்வு கொடுத்து, “சீக்கிரம் வேலை முடிங்க, அங்க பாட்டு கச்சேரி ஆரம்பமாகிடும், நாம போகணும், எட்டு மணிக்கு அங்க இருக்கணும், இப்போவே ஏழு மணி” என்றார்.

“நான் கோவிலுக்கு போய் அவரை பார்த்துட்டு வர்றேன்” என்று ரதி பூர்ணிமாவை தில்லையிடம் விட்டு கிளம்பிவிட்டாள்.

“நானும் வர்றேன்” என்ற மனோவிடம் “வேண்டாம் ண்ணா”

என,

“அப்போ டூ வீலர் போகாத, கார்ல போ” என அவன் பேசியது காற்றினுடன் தான், அவள் தான் விரைந்திருந்தாளே.

வேகமாய் கோவில் சென்று பார்க்க, ஒரு புறம் இரவுக்கான உணவு பந்தி நடந்து கொண்டிருக்க, மறு புறம் பாட்டு கச்சேரிக்காக மேடையில் எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு “மைக் டெஸ்டிங்” என்று சரி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அங்கையின் கண்கள் ராஜனை தேட, யாரோ அவனிடம் வந்து சொன்னார் “அண்ணி, உங்களை தேடுறாங்க” என்று.

“நான் பார்த்துக்கறேன்” என்று வந்து அவன் அங்கையை பார்த்த நேரம், மனோ அழைத்தான். “அங்கை உங்களை பார்க்க வந்தா பார்த்துட்டீங்களா”

“ம்ம், பார்த்துட்டேன்” என்றவன் “தனியா எதுக்கு அனுப்புனீங்க?” என்று அவனை கடிக்க,

“நான் கேட்கறதுக்குள்ள அவ பறந்துட்டா, நீங்க வீட்டுக்கு வராம எதுக்கு அவளை அலைய விடறீங்க” என்று மனோவும்

கடிக்க,

“ஏன்? ஏன் பேச மாட்டீங்க நீங்க? என்ன சொன்னாலும் கேட்கற கரிஷ்மா அண்ணி மாதிரியா அங்கை? இல்லைல்ல, அப்போ இப்படி தான்” என்று இவனும் எகிற,

அதற்குள் இவனை பார்த்திருந்தவள் அருகில் வர, “நாம அப்புறம் சண்டை போடலாம்” என்று வைத்தான்.

அது அங்கைக்கு நன்கு கேட்க “யார் கூட சண்டை போடப் போறீங்க, அதுக்கு தான் நான் இருக்கேனே” என்றாள்.

அதற்கு பதில் சொல்லாமல் ராஜராஜன் அவளை கோபமாய் பார்த்து நின்றான்.

“என்ன?”

“எதுக்கு தனியா வந்த? இது என்ன சிட்டியா எங்கயும் ஆளுங்க இருப்பாங்கன்னு சொல்றதுக்கு. வழில ஆளே இருக்க மாட்டாங்க. அதுவும் நீ சீக்கிரம் வரணும்னு குறுக்கு வழில வந்திருப்ப, உனக்கு உலகத்திலேயே நீதான் புத்திசாலின்னு நினைப்பு” என்று வார்த்தைகளை கடித்து துப்பினான்.

காலையில் தப்பாய் பேசியது ஒரு குற்றவுணர்சியை கொடுத்திருக்க, இப்போது திட்டவும் செய்ய கண்களில் மழுக்கென்று நீர் இறங்கியது.

“சாரி” என்று நின்றாள்.

“ப்ச், அழாத, கண்ணை துடை. யாராவது பார்க்க போறாங்க” என்றவன் அப்போதும் அருகில் வந்தான் இல்லை. யாரும் அவர்களை பார்ப்பார்கள் என்று அத்தனை விழிப்பாய் இருப்பான். யாரும் இருக்கும் போது பக்கத்தில் சாமான்யமாய் வர மாட்டான்.

அங்கை கண்ணை துடைக்கவும், “நீ இப்படி பேசுவன்னு நான் எதிர்ப்பார்க்கலை” என்றான்.

தலை குனிந்து தான் நின்றாள். “உன் சம்மதம் இல்லாம உன் கல்யாணம் நடந்த மாதிரி, உன் பொண்ணு கல்யாணமும் நடந்துடுமோன்னு பயம் இல்லையா?” என்றான்.

அதை கேட்டு அமைதியாய் தான் நின்றாள். அவளுக்கே அந்த நேரம் அப்படி தான் மனதினில் தோன்றியது.

“இன்னும் என்னோட உன் கல்யாணம் எங்கயோ உனக்கு

உதைச்சிட்டே இருக்கு” என்று சொல்ல,

அதுவரை கண்ணீர் வந்த கண்களில் இப்போது ஆவேசம் பொங்கியது, வேகமாய் திரும்பி நடந்தாள்.

“நில்லு அங்கை” என்று அவன் சொல்லவும்,

“வேண்டாம், இப்போ நம்ம பேச வேண்டாம். பேசினா பிரச்சனை பெருசாகும், எஸ், உன்னை கல்யாணம் பண்ணினது எனக்கு உதைச்சிட்டே இருக்கு, அப்படியே நீ வெச்சிக்கோ” என்றவள் அவளின் டூ வீலர் அருகில் சென்று விட,

ஜகதீஷ் அங்கே தான் சற்று தூரத்தில் ஏதோ வேலையாய் இருக்க, “அங்கை வீடு போற வரைக்கும் கூடப் போங்கடா” என்று விட்டான்.

அவர்கள் அவள் செல்ல, பின்னோடு சென்றனர்.

அப்போதும் அவன் செல்லவில்லை! அங்கையின் மனம் ஏகத்திற்கும் அடி வாங்கியது.

# அத்தியாயம் 19

வீட்டினர் எல்லோரும் பாட்டு கச்சேரியிற்கு வந்திருக்க, மனோவும் அன்பழகனும் இருப்பதால் போலிஸ் பந்தோபஸ்தும் இருக்க, இல்லாத நபர்கள் என்று பார்த்தால், அங்கையும் ரதி பூர்ணிமாவும் ஸ்ருஷ்டியும் விகாஸும்.

பிரபல பாடகர் மற்றும் அவர் குழு வந்திருக்க, அவர்களின் ஊர் ஆட்கள் மட்டும்மல்ல சுற்று வட்டாரத்தில் இருந்து வேறு ஊர் ஆட்களும் வந்திருக்க கச்சேரி கலை கட்டியது.

கச்சேரி ஆரம்பித்து இரண்டு பாட்டுக்கள் முடிந்திருக்க, தில்லை ராஜராஜனை அழைத்தவர், “அங்கை மட்டும் தான் குழந்தைங்களோட வீட்ல இருக்கா, தனியா இருக்கா, நீ போறதும் போகாததும் உன் விருப்பம்” என்றார் சற்று கோபத்தை முகத்தில் காண்பித்து.

இரண்டு புறமாய் பிரிந்து அமர்ந்திருக்க, ஒரு புறத்தில் மனோவும் கரிஷ்மாவும் அன்பழகனும் ராஜலக்ஷ்மியும் நாச்சியும் அமர்ந்திருக்க, மறுபுறம் சுவாமிநாதனும் தமிழ் செல்வனும் தங்களின் மனைவி மகன் மகள் குடும்பத்துடன் அமர்ந்திருக்க, அங்கே இருந்த தில்லை தான் பேசினார்.

“ம்மா” என்று பல்லை கடித்தான்.

“டேய், சும்மா ஓவரா பண்ணாத போடா. அழகா, அறிவா, படிச்ச, சொத்தோட ஒரு பொண்ணு உன் பின்ன சுத்தது இல்லையா அந்த திமிர்டா உனக்கு”

அசையாமல் சில நொடி நின்றவன் “இது, இது தான் எல்லோரும் நினைக்கறீங்க இல்லையா. அப்போ ஏதோ பெரிய வாழ்க்கை அதிர்ஷ்டமா எனக்கு கிடைச்சிருக்கு. நான் அதுக்குறிய மதிப்போட இல்லை. அதனால் தான் இத்தனை நாளா நான் சொல்ற அத்தனையும் கேட்ட என் குடும்பத்துல இருக்குறவங்க, இப்போ என் பொண்டாட்டி வந்ததும் அந்த மிதப்புல ஆடுறேன்னு சொல்லி நீங்க ஆடுறீங்க அப்படிதானே” என்று மெல்லிய குரலில் என்றாலும் தெளிவாய் வார்த்தையை கடித்து துப்பினான்.

வீடு மொத்தமும் மெல்லியதாய் அதிர்ந்தது.

“டேய் ராஜா, நான் அந்த அர்த்ததுல சொல்லலை, எப்பவும் போல கிண்டல் பண்ணினேன்”

“நீ கிண்டல் பண்ணினியோ. என்ன பண்ணுனியோ எனக்கு

தெரியாது. எல்லோருக்கும் அந்த எண்ணம் தான், எனக்கு தெரியும். இதனால உங்க யாருக்கும் ஒன்னுமில்லை. எனக்கும் அவளுக்கும் தான் எப்பவும் முட்டிக்குது. எல்லோரும் நிம்மதியா தானே இருக்கீங்க, எங்க உயிரை மட்டும் ஏன் எடுக்கறீங்க. அங்கையோட சேர்ந்து வாழறதுக்கு முன்ன உங்களுக்கெல்லாம் என் மேல இருந்த நம்பிக்கை இப்போ இல்லை”

“இருந்திருந்தா இந்த முதல் மரியாதைக்கு நான் சொன்னப்போ மறு வார்த்தை யாரும் பேசியிருக்க மாட்டீங்க, எதிர்ப்பு காட்டியிருக்க மாட்டீங்க. மனுஷனா பொறந்தா நன்றி வேணும்”

“அது என் மாமனார் குடும்பம் கிடையாது, இப்போ நம்ம பிரச்சனையை தீர்த்த குடும்பம் அது மட்டும் தான் எனக்கு” என்றவனின் குரலில் அப்படி ஒரு கோபம் கூடவே வருத்தமுமிருந்தது.

“டேய் ராஜா, அப்படி இல்லடா” என்று பதறி தில்லை சொல்ல காதில் வாங்கவில்லை. வெளியிடம், ஆர்கெஸ்ட்ரா சத்தத்தில் வெளி ஆட்களுக்கு கேட்க வாய்ப்பில்லை எனினும் இதற்கு மேல் அவனுக்கு பேச விருப்பமில்லை.

பெரியப்பாவிடம் சென்றவன் “எனக்கு முடியலை பெரியப்பா, நான் வீட்டுக்கு போய் தூங்கணும், நீங்க இங்க பார்த்துக்கங்க, நான் இருக்கேன்னு விட்டுடாதீங்க, பார்த்துக்கோங்க” என்று சொல்லி வீடு செல்ல

இவன் பேசி நடப்பதை பார்த்த ராஜலக்ஷ்மி அன்பழகனிடம் “எங்க போறான்னு கேளுங்க?” என்றார். அங்கையும் குழந்தைகளும் வீட்டில் இருக்க இவருக்கு வர மனதே இல்லை. அங்கை தான் “போம்மா” என்று துரத்தி இருந்தாள்.

அன்பழகன் எழுந்து வந்து “எங்க போறீங்க?” என்று கேட்க,

“வீட்டுக்கு மாமா” என்று அவன் சொல்ல, அதை ராஜியிடம் அவர் சொல்ல,

“அங்கை முகமே சரியில்லை” என்றார் தாயாய்.

“அதான் வீட்டுக்கு போறாரில்லை பார்த்துக்குவார் விடு” என்றார். அவரும் உணர்ந்தே இருந்தார். வெளியில் காண்பித்து கொள்ளாவிட்டாலும் ராஜலக்ஷ்மியும் அன்பழகனும் உணர்ந்தே இருந்தனர். அங்கைக்கு நிறைய வேலைகள் என்று. ஒரு பக்கம்

ரதி பூர்ணிமா பின் சுத்துவது, பின் வீட்டு மேற்பார்வை, பின் தொழில்கள் என்று நிறைய வேலை.

ஆம்! தொழில்கள் தான். ராஜராஜன் படிக்கவில்லை. ஆனால் அங்கை படித்து இருக்கிறாளே. முன்பு அவனிடம் பணமும் கிடையாது, படிப்பும் கிடையாது. இப்போது பணமும் அங்கை மூலம், படிப்பும் அவளிடம். நிறைய நிறைய இழுத்து போட்டுக் கொண்டான். வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் முன்னிற்கு வர வேண்டும் என்ற வெறி.

ரதி பூர்ணிமா பிறந்து அங்கைக்கு ஐந்து மாத ஒய்வு அவ்வளவே, பின் ராஜராஜன் புதிதாய் எல்லாம் செய்ய, அவள் முழுவதும் துணை நின்றாள்.

அவளின் படிப்பான எம் பீ ஏ, முழுதாய் உபயோகமானது என்றும் சொல்லலாம், முழுதாய் உபயோகப் படுத்தினான் என்றும் சொல்லலாம்.

அவனின் அரிசி மில்லை முன்பே விரிவு படுத்தி இருந்தான் தான். இப்போது ராயர் பிராண்ட் அரிசி தமிழகமெங்கும் மொத்த வியாபாரத்திலும், சில்லறை வியாபாரத்திலும். அதனால் வேலைகள் இருவருக்குமே நெட்டி முறித்தன. இன்னும் ஸ்திரமாகாத நிலையில் வேலையாட்களை நம்பி விட மனதில்லை.

எல்லாம் அவன் மேற்பார்வையில். அவனின் வேகத்திற்கு அங்கை ஈடுகொடுக்க, வேறு ஆட்களை கொடுக்கல் வாங்கல்கள் கொள்முதலுக்கு அவன் உபயோகிக்கவில்லை. எல்லாம் இருவருமே!

ராயரின் பெயர் மட்டுமே அரிசி மில்லிற்கு, அதனை அங்கயற்கண்ணியின் பெயரில் பதிந்து விட்டான். ஆம்! அண்ணன்கள் வாங்கிய லோனை அவளின் பணம் கொண்டு அடைத்தவன், அதனை அவளின் பெயருக்கு மாற்றி விட்டான்.

பின்னே அவளது பணம் தானே. வீட்டினர் எல்லோரிடமும் சொல்லியே செய்தான். அது அப்போது சிறிய அளவில் மட்டுமே செயல்பட்டு வந்ததால் யாரும் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

அவளின் பெயருக்கு மாற்றிய பிறகே அது விஸ்வரூபமெடுத்தது. இப்படி ஒரு வளர்ச்சியை வீட்டினர் எதிர்பார்த்து இருக்கவில்லை.

வீட்டில் இருக்கும் நகையை பேங்கில் வைக்கலாம் என்று அவன் சொல்ல, அங்கையும் சரி என்று சொல்ல, அவனோ லாக்கரில் வைக்காது அடமானத்தில் வைத்து, பின் லோன் வாங்கி என இப்படியாக பெரிய ஷாப்பிங் மால் ஒன்றையும், ஒரு பெரிய காலி இடம் ஒன்றையும் வாங்கி விட்டான். அதுவும் அங்கை

பெயரிலேயே. எல்லாம் அவளது பணம் என்பதால் அவளின் பெயரில் மட்டும் தான் வாங்கினான்.

அதனால் வீட்டினருக்கு தெரிந்தாலும் ஆட்சேபிக்க முடியவில்லை எப்படி தனியாய் சொத்து வாங்கலாம் என்பது போல.

அந்த காலி இடத்தினில் ஒரு நிதி நிறுவனத்தின் ஆட்டோ மாலிற்கு வாடகை விட, ம்ம்ம், லோன் கட்ட வேண்டியது நிறைய தான். ஆனால் சில வருடங்களுக்கு மட்டுமே. அந்த மால் மற்றும் இந்த ஆட்டோ மாலின் வாடகையே கிட்ட தட்ட ஆறு லட்சம்.

ராஜராஜனின் மூளையோ இல்லை அவர்களின் உழைப்போ இல்லை நேரமோ ஏதோ ஒன்று தொட்டது துலங்கியது.

ஆனால் ராஜராஜனின் அங்கையின் வாழ்க்கை முறை மாறவில்லை. எதிலும் ஆடம்பரமோ டாம்பிகமோ இல்லை. எப்போதும் போல தான், புதிதாய் எதுவுமில்லை.

இன்னமும் அவன் பைக் தான், அவள் ஆக்டிவா தான், வீட்டில் ராயர் உபயோகித்த அம்பாசிடர் தான்.

இவன் செய்யும் வேலைகள் சொத்துக்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் வருமானங்கள தெரியாது. கூட்டு குடும்பம் என்பதால் எல்லா விஷயத்தையும் எல்லோரிடமும் சொல்லிட

முடியாது. பணம் மட்டும் யாருக்கும் தெரியாது, யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை.

முன்பு அவனின் உழைப்பு பொதுவாய் இருக்க, இப்பொழுது அவனுடையதாய் மாற்றிக் கொண்டான். ஆம்! இந்த வருமானங்கள் எல்லாம் அவனது.

நிலத்தில் வரும் வருமானம் மட்டுமே பொது. ஆனால் அந்த பொதுவில் இருப்பது பேங்கில் தூங்கியது, சுவாமிநாதன் பெயரிலும் தமிழ் செல்வன் பெயரிலும். ஆம்! அவர்கள் இருவருக்கும் கொடுத்து விடுவான்.

வீட்டு செலவு, பெண் மக்களுக்கு சீர் செய்யும் செலவு என்று எல்லாம் அவன் தோள் மீதே, யாரும் இதை அவனிடம் சொல்லவில்லை.

ராஜராஜனாய் வரையறுத்துக் கொண்டான். எல்லாம் எல்லோருக்கும் லாபமாகிப் போனது. அப்போதும் இவனின் லாபம் மற்ற மக்களின் கண்களை பறிக்கத் தான் செய்தது. சற்று பொறாமையும் கூட “பார்றா இவனுக்கு வந்த வாழ்வை” என்பது போல. ஆனால் கெட்டவர்களோ இல்லை அவன் கெட்டுப் போக நினைப்பவர்களோ கிடையாது.

முன்பு எல்லோரையும் விட கீழ் இருந்தான். இப்போது “வேற

லெவல்" அல்லவா. அது உறுத்தியது. சில சமயங்களில் அதை உணர்ந்தாலும் ராஜராஜன் கண்டு கொள்ளவில்லை...

அங்கைக்கு அது புரிந்து கொள்ளும் அளவு திறமை கிடையாது. உறவுகளுடன் வளர்ந்திராதவள் அல்லவா. அவளுக்கு எல்லாம் நேராய் பார்க்க தான் தெரியும். இந்த உறவுகளுக்குள் நடக்கும் அரசியல் அவளுக்கு புரியவில்லை, பிடிபடவுமில்லை.

ராஜராஜனும் கற்று கொடுக்கவில்லை. அவள் அவளாய் இருக்க விட்டு விட்டான்.

அங்கை மீது பெருமை கர்வம் எல்லாம் உண்டு! ஆம்! ஒரு வார்த்தை கூட இந்த வீடு வந்த நாளாக "நாம மட்டும் ஏன் செலவு செய்யறோம்? ஏன் வேற யாரும் செய்யறதில்லை?" என்று கேட்டதில்லை. அவ்வளவு பணம் வீட்டிற்கு என்று பொதுவாய் அவன் செலவு செய்யும் போதும் கேட்கவே மாட்டாள்.

இதோ விஜயா அக்காவின் பெண் பூபெய்திய போது, பத்து பவுன் செய்தான். நாச்சி கூட "எதுக்குடா இவ்வளவு, நாமளே இப்போ தான் கால் ஊனறோம்" என்று.

"இருக்கட்டும் கிழவி, இது ராயர் வீட்டு சீர். எப்போ இருந்து

நீ இப்படி மாறிட்ட" என்று அவரை கிண்டல் செய்தே விட்டான். அது மட்டுமல்லாது மற்ற சீர், விருந்து என்று கிட்ட தட்ட லட்சத்திற்கும் மேல் பணம் செலவான போது, எல்லா உடன் பிறப்புக்களும் வந்த போதும், எதுவும் பணம் வேண்டுமா என்று யாரும் வாய் திறந்து கேட்கவில்லை.

இதற்கு நிலத்தில் வரும் பணம் அப்பாக்களுக்கு செல்கிறது என்று புரிந்த போதும் இவனிடம் கேட்கவில்லை.

இருக்கிறது செய்கிறான் என்று நினைத்தார்களா? இல்லை செய்யட்டுமே என்று நினைத்தார்களா? அவர்களுக்கே வெளிச்சம்!

ராஜராஜனுக்கு பணம் ஒரு பொருட்டே அல்ல, பதினெட்டு வயதில் அண்ணன்களுக்காக, அக்காள்களின் திருமணதிற்காக உழைக்க வந்தவனுக்கு இதெல்லாம் என்ன? ஒன்றுமேயில்லை.

அவனுக்கு அவர்கள் கூட நின்றாலே போதுமானது தான்.

எதையும் கண்டு கொள்ள மாட்டான். ஆனால் இந்த முதல் மரியாதை விஷயத்தில் அவர்கள் கூட நிற்காதது சலசலப்பு எல்லாம் அவனுக்கு சற்று கடுப்பை கிளப்பி இருந்தது.

கூடவே மனதில் ஒரு நெருடல் கூட, ராஜலக்ஷ்மிக்கு அந்த வீட்டில் இருந்து ஒரு பருக்கை கூட சீராய் செல்லவில்லை. சில சமயம் தோன்றும் ராஜலக்ஷ்மியின் ஒதுக்கம் இந்த வீட்டோடு

அதனால் தானோ என்று.

பணம் இங்கே முக்கியமல்ல, சீர் அது வேறல்லாவா? அது அவருக்கு கொடுக்கும் ஒரு அங்கீகாரம் அல்லவா மகளாய்.

என்ன தான் இவர்களுக்கு பணக் கஷ்டம் இருந்த போதும் சௌந்தரிக்கும் விஜயாவிற்கும் வீட்டில் இருந்து செய்யும் சீர் இம்மியும் குறையாது.

இதெல்லாம் மனோவிற்கும் அங்கைக்கும் புரியாது இருக்கலாம், ஆனால் ராஜலக்ஷ்மிக்கு அன்பழகனுக்கும் எப்படி தெரியாமல் இருக்கும்.

ராயர் இருந்தால் பேச்சே வேறு… நாச்சி என்ன செய்வார். தானாய் கிடைத்தால் தானே மகளுக்கு மரியாதை, விட்டு விட்டார். இது அவரின் மனதின் ரகசியம்.

அதனால் கூட மகளிடம் அவரால் கொஞ்ச முடியவில்லை.

எது எப்படியோ ராஜராஜனை போலவே அங்கைக்கும் பணம் ஒரு பொருட்டே அல்ல! அந்த வகையில் இருவரும் ஒருமித்த தம்பதிகள்!

அங்கைக்கு உழைப்பின் கம்பீரம் வந்திருந்தாலும், உடல் இளைத்து சற்று கறுத்து தேஜஸ் குன்றி தான் இருந்தாள்.

இங்கே வீடு வந்தால் நால்வரும் அவர்களின் ரூமில்.

மெதுவாக எட்டி பார்க்க, முதன் முதலில் அந்த அறையில் அங்கையை எப்படி பார்த்தானோ அந்த தோற்றத்தில் அங்கை.

விகாஸூம் ஸ்ருஷ்டியும் உறங்கியிருக்க, ரதி பூர்ணிமா அம்மாவின் நெஞ்சினில் துயில் கொண்டிருக்க, அங்கை படுக்கையில் சாய்ந்து அமர்ந்து கண் மூடி இருந்தாள். ஓய்ந்த தோற்றம்.

மனதை பிசைந்தது, அவனும் தான் என்ன செய்வான். இவளை யார் எல்லோர் முன்னும் வார்த்தையாட சொன்னது, அவனுக்கு அளவில்லா கோபம் தான்.

இருந்தாலும் முகம் தேடும் அவளிடம் செல்ல பரிதவிப்பு தான். ஆனாலும் செல்ல முடியவில்லை. இயல்பாகவே ராஜராஜன் கோபக்காரன், ஒரு சொல் பொறுக்க மாட்டான் என்று தெரியும் எல்லோருக்கும் தெரியும். அதனாலயே அவனிடம் பேசும் போது ஜாக்கிரதையாய் பேசுவர்.

இப்போது இவள் பேசுவது கண்டுகொள்ளாமல் விட்டால், “பாருடா பணம் இருக்குற பொண்டாட்டி வந்தா ராஜராஜன் கூட பேச்சு வாங்கிட்டு வெட்கமில்லாமல் திரும்ப போய் பேசுகிறான்” என்பது போல வருகிறது.

இரண்டு முறை அந்த பேச்சும் காதில் விழுந்தும் விட்டது.

அடுத்தவரும் மனைவியும் ஒன்றா? அவளும் அவனுமே வேறே கிடையாதே! அந்த மடையர்களுக்கு யார் சொல்வது என்று அவனுக்கு புரிந்தாலும் அந்த பேச்சு அவனுக்கு பிடித்தமில்லை.

அங்கையிடமும் பல முறை சொல்லியாகிவிட்டது, யாராவது இருந்தால் பார்த்து பேசு என்று, அவளும் கேட்பதில்லை, அது அவளின் இயல்பு!

ராஜராஜனும் சரி அங்கையற்கண்ணியும் சரி இரண்டு பேருமே ஆளுமையான ஆட்கள், அதனால் முட்டிக் கொள்கிறது.

இவன் உள்ளே வருவதை பார்த்தும் கண் திறந்து பார்த்தவள் பின் கண் மூடி கொண்டாள்.

சத்தமில்லாமல் உள்ளே வந்தவன், உள்ளே சென்று ஒரு அவசர குளியல் போட்டு வந்தான்.

பின்பு ஒரு வேஷ்டியை கட்டி கொண்டு வந்தவன், மகளை அலங்காமல் அவளின் மீதிருந்து தூக்கினான்.

அன்று ஜாக்கிரதையாய் தூக்கினாலும் உடலில் தெரியாமல் கை பட்டு விட்டது. இப்போது அப்படி எந்த ஜாக்கிரதைகளும் இல்லை. அவளின் மேனியில் அழுத்தமாய் கை உரச மகளை தூக்கியவன், அருகில் படுக்க வைத்து விட்டு, காலை நீட்டி

அமர்ந்திருந்த மனைவியின் மடியில் தலை வைத்து கொண்டான்.

சிறிது நேரத்தில் முகம் திருப்பி அவளின் மடியில் சற்று மேலேறி வயிற்றில் முகத்தை புதைத்துக் கொண்டு அவளின் இடுப்பை சுற்றி கையை போட்டுக் கொண்டான்.

இருவரிடமும் எந்த பேச்சுமில்லை!

அங்கை அவனின் அணைப்பை தள்ளவில்லை, அதே சமயம் பதிலுக்கு அணைக்கவுமில்லை. உடலிலும் தளர்வில்லை. ராஜராஜனிற்கு அவளின் உடல் மொழி புரியாதா என்ன? இந்த இறுக்கம் அவனுக்கு பிடித்தமில்லை.

அங்கையை இன்னும் இறுக கட்டிக் கொண்டான்.

ராஜராஜனின் முரட்டுதனங்கள் அங்கையின் மனதிற்கு எப்படியோ, உடலிற்கு அத்துப்படி! ஆனால் எல்லாம் அவள் அனுமதித்தால் மட்டுமே, இந்த முறை அவளுக்கு அனுமதிக்க மனதில்லை!

# அத்தியாயம் 20

அங்கை இளகமாட்டேன் என்பது போல அப்படியே அசையாமல் அமர்ந்திருக்க, இடுப்பை சுற்றாத கையால் அவளின் ஒரு கையை எடுத்து அவனின் தலையில் வைத்துக் கொண்டான்.

அதில் தலைக்கு குளித்து துவட்டாததில் ஈரம் இருக்க, ஒன்றும் பேசாமல் அவள் அணிந்திருந்த காட்டன் புடவையின் தலைப்பை கொண்டு ஈரத்தை துவட்ட ஆரம்பித்தாள்.

விட்டேனா என்று அவளின் வயிற்றில் புடவையின் மேல் முகத்தை பதித்து இருந்தவன், அவள் முந்தானையால் தலையை துவட்ட கிடைத்த இடைவெளியில் புடவையை வாகாய் விலக்கி இதுவரை ஆடை மறைத்திருந்த இடத்தினில் முகத்தை புதைத்துக் கொண்டு இடையை சுற்றி இறுக கையை படர விட்டு இறுக்கி கொண்டான்.

இது தான் இடத்தை கொடுத்தால் மடத்தை பிடிப்பதோ.

பின் அந்த இடங்களில் அவனின் இதழ்கள் ஜாலங்கள் செய்ய மொத்தமாய் அவளின் உடல் இளகி விட்டது அவளையும் மீறி.

“ப்ச், ப்ளீஸ் வேண்டாம்” என்று அவள் குரல் ஒலிக்க, ராஜராஜன் இந்த மறுப்பை எதிர்பார்க்கவில்லை. அவள் இதுவரை

மறுத்ததாய் ஞாபகமே இல்லை.

முகத்தை பக்கவாட்டில் திருப்பி வைத்து கொண்டான். அப்போதும் அவளை விட்டு விலகினான் இல்லை.

“சாரி, ரொம்ப டார்ச்சர் பண்றேனா” என்றான் கம்மிய குரலில்.

அவளிடம் பதிலே இல்லை!

சட்டென்று ஒரு சோர்வு அவனை ஆட்கொள்ள, மெதுவாக “உடம்பெல்லாம் வலிக்குது” என்றான் சிறுபிள்ளையாய்.

அத்தனை வேலைகள் அவனிற்கு, வலிக்காமல் எப்படி இருக்கும், தலையை துவட்டி முடித்தவள், மெதுவாய் அவனை விலக்கி விட்டு எழுந்து கொண்டாள்.

அவளின் மடியில் முகம் புதைத்து இருந்தவன் இப்போது மெத்தையில் புதைத்துக் கொண்டான்.

“நீங்க விரதம் இருக்கீங்க, என் பக்கத்துல வரக் கூடாது, இந்த கோவில் கும்பாபிஷேக வேலை ஆரம்பிச்சதுல இருந்து இருக்கீங்க, இன்னும் நாற்பத்தி எட்டு நாள் இருக்கே மண்டல பூஜை முடிய”

அப்போது தான் அது தன் ஞாபகத்தில் இல்லாதது புரிய,

“மறந்துட்டேன், ப்ச்” என்று சலித்தவன், “முடிச்சிக்கலாம்” என்றவனின் மனதில் அப்படி ஒரு சோர்வு. மறந்து போனது, சற்றும் ஞாபகமில்லை, அங்கை மட்டுமே அவனின் நினைவினில்.

இறைவனிடம் மனதில் மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

பின் குழந்தைங்கள் மூவரையும் பாதுகாப்பாய் படுக்க வைத்தவள், முன் கேட்டில் இருக்கும் காவலாளிக்கு அழைத்து இரண்டு வார்த்தைகள் பேசினாள். அவன் விழித்து இருக்கிறானா இல்லையா என்று சரி பார்த்து, பின் ரூம் கதவை தாளிட்டு விளக்கை அணைத்து வந்தவள்,

முகத்தை மெத்தையில் புதைத்து படுத்திருக்கும் அவனின் மீது அப்படியே தன் முழு உடல் பாரத்தையும் கொடுத்து அவன் மேல் படுத்துக் கொண்டாள்.

முகத்தை படுக்கையில் வைத்து இருந்தவன், ஒரு பக்கமாய் முகத்தை திருப்பி வாகாய் படுத்துக் கொண்டு “தேங்க்ஸ் டி” என்றான். அங்கையின் அருகாமை வெகுவாய் தேவையாய் இருந்தது.

அங்கை அவனின் வெற்று முதுகில் முகத்தை ஒரு பக்கமாய் திருப்பி வைத்து அவனை அணைத்துக் கொண்டு உறங்க ஆரம்பித்தாள்.

இருவருமே ஐந்தே நிமிடத்தில் உறங்கி விட்டனர்.

காலையில் அங்கை விழித்ததே உடலின் மேல் ஏதோ பாரமாய் அழுந்தவும் தான்.

அவர்கள் எப்படி உறங்கினார்களோ அப்படியே இருந்தனர். அதாகப்பட்டது ராஜராஜன் கீழே அங்கை அவனின் மேலே.

இப்போது என்ன என்று பார்க்க, அவள் மேலே அவளின் கண்மணி ரதி பூர்ணிமா, அவள் எழுந்து அங்கையை தேடி அவளின் மேல் ஏறி படுத்திருந்தாள்.

“பட்டு மேல இருந்து எழுந்துரு” என்று அங்கை பேச,

குழந்தை தான் உறங்கி இருந்தாளே, அம்மாவை இருபுறமும் அணைத்து கொண்டு நல்ல உறக்கம் இவள் திரும்பினால் அவள் கீழே விழுவாள். அதற்கு கூட ரிஸ்க் எடுக்கலாம்.

ஆனால் அணைத்து பிடித்து இருக்க, குழந்தை தனியாய் விழாமல் இவள் பேலன்ஸ் தப்பி குழந்தை மேல் விழுந்து விட்டால், அம்மாடி யோசிக்க கூட முடியவில்லை. அப்படியே நகர்ந்து ராஜராஜன் மேல் இருந்து இறங்கலாம் என்று யோசித்தாலும் பயமாய் இருந்தது.

வேறு வழியில்லாமல் “விக்கி” என்று விகாஸ் எழும்புவதற்கு

குரல் கொடுக்க, அதில் ராஜராஜன் தான் விழித்தான்.

“அசையாதீங்க” என்று அவசரமாய் அங்கை சொல்ல,

“ஏன் அங்கை” என்றான்.

“பட்டு குட்டி என் மேல தூங்கறா”

“அச்சோ, அப்போ திரும்ப முடியாதே”

இப்படியே பதினைந்து நிமிடம் போக, நேரம் ஐந்து மணி தான் என்ன செய்வதென்று இருவருக்கும் தெரியவில்லை.

அன்பழகனும் ராஜியும் அங்கை முன்பிருந்த வீட்டிற்கு சென்றிருப்பர். குழந்தைகள் இங்கிருப்பதால் கரிஷ்மாவும் மனோவும் இங்கே தங்குவதாக தான் ஏற்பாடு.

“மனோக்கு கூப்பிடட்டுமா?” என்றவளிடம்,

“எப்படி வருவார்? கதவை நீதானே தாள்பால் போட்ட”

“ம்ம், ஆனா பால்கனி கதவு சும்மா தான் சாத்தியிருக்கேன், ஏறிடுவான்”

“நாம இப்படி படுத்திருக்கோம்” என்றான் சங்கடமாக ராஜராஜன்.

தங்களின் உடையை ஒரு முறை அவசரமாய் ஆராய்ந்தாள். ராஜராஜன் மேல் உடை இல்லாமல் இடுப்பில் வேஷ்டியோடு உறங்கி இருக்க, அவன் மேல் அங்கை புடவையில், அவள் கோவிலில் இருந்து வந்தது மாற்றவில்லை.

மற்றபடி உடை எங்கும் பெரிதாய் விலகி எல்லாம் இல்லை. என்ன கணவன் மேல் படுத்திருந்தாள். அது சற்று கூச்சம் தான். ஆனால் வேறு வழி இல்லையே விக்கி அசையக் கூட இல்லை.

இன்னும் ரதி எழுவதற்கு காத்திருக்கலாம் என்று நினைத்தால், ஸ்ருஷ்டி கட்டிலை ரவுண்ட் அடிக்க ஆரம்பித்து இருந்தாள். தலையணை தடுப்புகள் எல்லாம் பறந்திருந்தன. அவள் கீழே விழும் அபாயமும் இருக்கின்றது.

மகளை அசைக்க நினைக்க, ரதி அம்மாவை இறுக்கமாய் கட்டி உறங்கியிருந்தாள். இதற்கு மேல் முடியாது என்று மனோவை கைபேசியில் அழைத்தாள். பரவாயில்லை அது பக்கத்தில் இருந்தது.

“என்ன அம்மு இந்த டைம்ல” என்றவனின் குரலில் தூக்கம் மிச்சமிருக்க,

“அண்ணியை எழுப்பாம வா, கீழே சைட்ல போனா எங்க ரூம் பால்கனி ஏறலாம். ஏறி உள்ள வா. யாருக்கும் தெரியாம

சத்தம் பண்ணாம வா” என்றாள் படபடவென்று.

அவன் என்னவோ என்று பதறி எழுந்து “எதற்கு?” என்றான்.

“ப்ச், வாடா அண்ணா” அவனும் அவள் சொன்னபடி செய்து உள்ளே வர,

அவன் கண்டது, கவிதையாய் ஒரு காட்சி, ராஜராஜன் கீழே, அவன் மேலே அங்கை, அவன் மேலே ரதி பூர்ணிமா. ஐந்து மணிக்கும் விழிக்கும் ஸ்ருஷ்டி, அவள் ஒரு புறம் ராஜராஜனின் பாதி அங்கையில் பாதி என்று சைடில் மேல் ஏறி படுத்திருக்க,

சிரிப்பு வந்து விட சிரித்து விட்டவன், அவர்களின் போஸை ஒரு ஸ்னாப் எடுத்து, பின் மெதுவாய் ஸ்ருஷ்டியை தள்ளி படுக்க வைத்து, ரதியை உறக்கம் கலையாமல் தூக்கிக் கொண்டு, அவளை கொஞ்சும் சாக்கில் திரும்பி நின்று கொண்டாள்.

எழுந்து தன்னை சரி படுத்திக் கொண்டவள், வேகமாய் வந்து அண்ணனின் கை பேசியை பிடிங்க,

“அம்மு டெலிட் பண்ணாத”

“டேய் அண்ணா, அவர் குதிப்பார்டா அவருக்கு இதெல்லாம் இஷ்டமில்லை” என்று ராஜராஜனுக்கு பயந்து சொல்ல,

"என் மருமக இருக்கா, மக இருக்கா அதுல, கூட சைட்ல டம்மி போஸ் தான் நீங்க" என்று மனோ வார்த்தையாட,

அதற்குள் ராஜராஜன் எழுந்து தன் வெற்றுடம்பின் மீது ஒரு துண்டை போர்த்திக் கொண்டவன், மனோவின் "மருமக" என்ற அழைப்பில்,

'அப்போ விகாஸ்க்கு நீங்க தான் கத்துக் குடுத்தீங்களா?" என்றான்.

ரதியை படுக்கையில் அவளை வசதியாய் படுக்க வைத்து நிமிர்ந்த மனோ, ஆமாம் என்றும் சொல்லவில்லை, இல்லை என்றும் சொல்லவில்லை. "ஏன் அதுல என்ன தப்பு?" என்று விகாஸை போல கேட்டான்.

ராஜராஜன் அவனை பார்த்தபடி நிற்க, "நான் சொல்லிக் கொடுக்கலை, ஆனா இதுல தப்பா எனக்கு தெரியலை" என்றான் அழுத்தமாக.

"நானும் இது தப்புன்னு சொல்லலை. ஆனா உங்க தங்கைக்கு இது தப்பு போல, என்கிட்டே கோபமா கேட்டா நீங்க தான்

சொல்லிக் குடுத்தீங்களான்னு. என்னை தப்பு சொல்லியிருக்கா? அதனால் எனக்கு தெரியணும்!”

மனோ மௌனமாகி விட,

“அப்போ தோணினது கேட்டேன், அதை விட மாட்டீங்களா? அதுவும் விக்கி உங்க பக்கத்துல வந்து நின்னதால கேட்டேன். ஏன் அப்படி செஞ்சான்னு நேத்து நைட் கேட்டேன். நான் உங்களுக்கு மட்டும் தான் பயப் படுவேன்னு வந்து நின்னானாம்” என்று சொல்ல,

“நீ என்னை பார்த்து பயப்படுவ, இது செம காமடி. இதை விடமாட்டேன் என் மேல நம்பிக்கை இல்லாம கேட்டது, அதையும் விட உன்னை மாதிரி உன் பொண்ணுக்கும் விருப்பமில்லாம உறவுன்றதால் கல்யாணம் வந்திடுமோன்னு பயம்”

“நான் உங்கப்பா மாதிரி கிடையாது. என் பொண்ணு சம்மதமில்லாம பண்ண மாட்டேன்” என்றான் அவளை தீர்க்கமாய் பார்த்தபடி.

மனோ எதிலும் தலையிடவில்லை. பார்த்து மட்டுமே நின்றான்.

"என் அப்பாவும் என் சம்மதத்தோட தான் பண்ணினார்" என்றாள் ரோஷமாக.

"எனக்கு தெரிஞ்சு நம்ம வாழ்க்கையோட பிரதிபலிப்பு தான் உன் பதட்டம்" என்றவன் அமைதியாய் கதவை திறந்து வெளியேறி விட்டான்.

"லைஃப்ப காம்ப்ளிகேட் பண்ணிகாத அம்மு" என்ற மனோ, அவனும் வெளியேறி ராஜராஜனை அடைந்தவன், "அது கரிஷ்மா சொல்லிக் கொடுத்தா" என்றான்.

"நேத்து இவ விக்கியை மிரட்டினதுமே அவ பயந்துட்டா தப்போன்னு. அதனால தான் எல்லோர் முன்னும் சொல்லலை. என்கிட்டே சொல்லிட்டா, நான் ஒன்னும் தப்பு இல்லைன்னு சொல்லிட்டேன். இதை பத்தி அங்கை கிட்ட இப்போ பேச வேண்டாம். அப்புறம் சொல்லிக்கறேன் சொல்லிட்டேன்"

"அவளுக்கு அங்கையை ரொம்ப பிடிக்கும். எங்கம்மாவையும் பிடிக்கும். அப்போ ரதி ஒன்னு அங்கை மாதிரி இருப்பா இல்லை எங்கம்மா மாதிரி இருப்பான்னு அந்த பட்டுக் குட்டியை

இப்போவே அப்படி சொல்லிட்டா” என்றவனின் முகத்தில் அவ்வளவு கனிவு.

“ஓஹ்” என்றவன், அதற்கு மேல் கேட்டுக் கொள்ளவில்லை, மனோவும் சொல்லிக் கொள்ளவில்லை.

படியில் இருவரும் இறங்க, தில்லை அப்போது தான் எழுந்திருந்தார்.

“அத்தை காஃபி” என்று உரிமையாய் தில்லையை கேட்டான்.

“இதோ கொஞ்சம் நேரம் டிகாஷன் இறக்குறேன்” என்று அவர் சொல்ல,

“பரவாயில்லை அத்தை, இன்ஸ்டன்ட் போடுங்க” என்றான்,

“சரி மனோ” என அவர் சொல்ல,

“எனக்கு ரொம்ப டென்ஷன் ஆனா காபி குடிப்பேன், இப்போ எனக்கு உங்க ரெண்டு பேரை நினைச்சு ரொம்ப டென்ஷனா இருக்கு” என்றான் ராஜராஜனிடம்.

“இதெல்லாம் ஒன்னுமில்லை, சில சமயம் அவ இப்படி பண்ணுவா, சில சமயம் நான் இப்படி பண்ணுவேன். ஆனா பல

சமயம் நாங்க சரியா போயிடுவோம்” என்றான் இலகுவாய்.

எதுவும் பேசாமல் தலையை மட்டும் ஆட்டிக் கொண்ட மனோ, “காலையில நாங்க எட்டு மணிக்கு கிளம்பறோம். எனக்கு ஒன்பதரைக்கு ஆஃபிஸ் போக சரியா இருக்கும், அப்பாவும் மதியம் மேல ஊருக்கு கிளம்பறார்” என்றான்.

“சரி” என்பது போல தலையசைத்துக் கொண்டான் ராஜராஜன்.

எட்டு மணிக்கு மனோவும் கரிஷ்மாவும் பிள்ளைகளோடு கிளம்ப, அவர்களுக்கு காலை உணவு தயாராவதை மேற்பார்வை பார்க்க, பின் அவர்களுக்கு பரிமாற, ஸ்ருஷ்டியை சமாதானம் செய்ய என்று அங்கைக்கு நேரம் சரியாய் இருந்தது.

பின்னே ஸ்ருஷ்டி அத்தையை பார்த்து விட்டால் சாமான்யத்தில் ஊருக்கு செல்ல ஒத்துக் கொள்ள மாட்டாள். ஏன் அழாமல் சென்றதே இல்லை எனலாம்.

அங்கைக்கும் ராஜராஜனுக்கும் தனிமை கிடைக்க வில்லை. அதனால் அவர்களுக்கு மேலே பேசும் வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் இருவரும் இயல்புக்கு வரவில்லை.

இன்னும் அங்கையினது கோபம் எல்லோர் முன்னும் அவன் மீது நெருஞ்சி முள்ளாய் தான் தைத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் கிளம்பிய பின், ரதி பூர்ணிமாவிற்கு பசிக்கும் என்பதால் அவளை டைனிங் டேபிளில் அமர வைத்து அங்கை சேரில் அமர்ந்து இட்லி ஊட்டிக் கொண்டிருந்தாள்.

ராஜராஜன் குளித்து கோவிலை ஒரு பார்வை பார்த்து வரக் கிளம்பினான். “நான் கோவிலுக்கு போயிட்டு வர்றேன்” என்று சொல்லி தான் சென்றான்.

அப்போது சௌந்தரியும் விஜயாவும் வர, இருவரும் ஒரே போல புடவை கட்டி இருந்தனர். நேற்று ஒரே மாதிரி கனமான பட்டுப் புடவை, இன்று மெல்லிய கரை வைத்த பட்டுப் புடவை.

அவர்களும் கோவிலுக்கு கிளம்பிக் கொண்டிருந்தனர். சாமியை வணங்கி வந்த பிறகு அவர்களும் காலையில் ஊருக்கு கிளம்புவதாய் ஏற்பாடு. பின்னேயே அவர்களின் குடும்பமும் வர, அவர்களின் உடையிலும் கூட ஒற்றுமை.

தில்லையிடம் “மா பாரு, இந்த கலர் வேண்டாம்னு சொன்ன, எவ்வளவு நல்லா இருக்கு, அன்னைக்கு கடையில நீயும் பெரியம்மாவும் ஒத்துக்கவே இல்லை” என்றாள் சௌந்தரி.

மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டே இங்கே ஒரு பார்வை அங்கை வைத்திருக்க,

"ஏண்டி, கோவில் கும்பாபிஷேகத்துக்கு பொண்ணுங்களுக்கு எடுத்துக் கொடுக்கறோம். அது முறை! அப்போ பச்சை, மஞ்சள், சிகப்புன்னு மங்கள கரமா எடுக்க வேண்டாமா? இது இங்கிலீஷ் கலர்! அழகா இருந்தாலும் காரணத்துக்கு பொருத்தமா இருக்கணும்ல?"

"மா, நாங்க என்ன ட்ராஃபிக் சிக்னல் காமிக்க போறோமா?" என்று சௌந்தரி கிண்டல் செய்ய,

அங்கே இருந்த மற்ற இரு மருமகள்களும் "எங்களுக்கும் எடுத்திருக்கலாம்ல அத்தை" என்றனர்.

"அதான் அவங்க அவங்களுக்கு பிடிச்சதா எடுக்க சொல்லிட்டோமே? பணமும் குடுத்துட்டோமே?" என்றார்.

அங்கைக்கு இது புது செய்தி, என்ன நடந்தது என்று ஞாபக அடுக்கினில் ஓட்டி பார்த்தாள். ராஜராஜன் "உடை போய் எடுத்து வந்து விடு, இங்கே நிறைய வேலைகள். கும்பாபிஷேகதிற்கு புதுசு தான் கட்ட வேண்டும்" என்று சொன்னது ஞாபகத்தில் வந்தது.

அங்கை தான் சொல்லி விட்டாள் "ஏற்கனவே உங்களுக்கு

நிறைய அலைச்சல். இப்போ இதுக்கு எங்கே நேரம். நான் தனியா எல்லாம் போகலை. புதுசு இருக்கு போதும்” என்று விட்டாள்.

அவளிடம் ஒரு சாஃப்ட் சில்க் புடவையும் இருக்க விட்டு விட்டாள்.

“எங்கே இவளுக்கு பத்தாயிரம் எனக்கு பத்தாயிரம் குடுத்தீங்க, எங்க வீட்ல நாலு பேர், இவங்க வீட்ல நாலு பேர், எப்படி பத்தும்” என்று பெரிய மருமகள் வியாக்கியானம் பேச,

சௌந்தரி விட்டேனா என்று “என்ன அண்ணி விஷேஷமே உங்களோடது. அப்போ அப்பா அம்மா உங்களுக்கு பணம் குடுப்பாங்களா. நீங்க தான் அவங்களுக்கு குடுக்கணும். நீங்க சம்பாதிக்கறீங்க, நாங்க வீட்ல இருக்குறோம், அப்போ நீங்க தானே குடுக்கணும்” என்றாள்.

பெரிய மருமகள் பதில் பேச எத்தனிக்க, அங்கே நாச்சி வந்து விட, வேறு யாரும் பேச வாய்ப்பில்லாது போனது.

அவ்வளவு தான் இந்த பேச்சுக்கள் கேட்டால் தொலைத்து விடுவார்.

அங்கைக்கு மனதிற்கு என்னவோ செய்தது. அவளின்

மனதிற்குள் ஓடிக் கொண்டு இருந்தது இது தான். பொண்ணுங்களுக்கு கோவில் கும்பாபிஷேகத்துக்கு எடுத்துக் கொடுக்கிறோம். அது முறை என்பது மட்டுமே!

“அப்போ எங்க அம்மா யாரு?” என்று கேள்வி பூதமாய் அவளின் கண்முன் நின்றது. பல மாதங்களுக்கு பிறகு மனதிற்கு சுணக்கம். எதுவுமே அந்த வீட்டினில் அந்த நொடி பிடிக்காமல் போனது. ஏனென்று சொல்ல முடியாது ஒரு கோபம். அவளின் அம்மாவிற்கு அப்பாவிற்கு எல்லாம் உடை எடுத்துக் கொடுக்கவில்லை. இது நடக்கவே காரணம் கரிஷ்மா. இவர்கள் எல்லாம் அவளின் பக்கத்தில் கூட அந்தஸ்தில் நிற்க முடியாது என்பது வேறு. ஆனால் மனது வேண்டாமா?

இதற்கு ராஜலக்ஷ்மியுன் அன்பழகனும் தான் பரிவட்டம் கட்டுவது என்பது முடிவான உடனே நாச்சியிடம் தான் அன்பழகன் பேசினார். “நாங்கள் என்ன என்ன செய்ய வேண்டும்” என்று.

கோவிலுக்கு செய்ய வேண்டிய முறைகள் மட்டுமே சொல்லப்பட்டன. அவருக்குமே மனதில் மகளுக்கும் மருமகனுக்கும் பேத்திக்கும் புது துணிகள் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க, பெரிய குடும்பம் அவர்களது,

தன மகளுக்கு மட்டும் என்று சாதாரணமாய் செய்வது வேறு. ஒரு விஷேசம் என்றால் எல்லோருக்கும் தானே முறை செய்ய வேண்டும், அவர்களுக்கு மட்டும் செய்ய முடியாதே.

ராஜியிடம் சொல்ல செய்தார். ஆனால் ராஜி ஒப்புக் கொள்ளவில்லை. "நமக்கு இன்னும் எதுவும் செய்யாதவங்களுக்கு நாம மட்டும் செய்யணும்னு என்ன வேண்டாம்" என்று விட்டார்

"இது ஒரு விஷயமா?" என்று ராஜியிடம் பேசிய போதும், "துணிமணி ஒரு விஷயமில்லை. இது அவங்க நமக்கு குடுக்குற மரியாதை. அவங்களுக்கு மனசில்லாத போது, நாம செய்யணும்னு அவசியமில்லை"

"ராஜராஜன் இதை ஒரு பெரிய விஷயமா எடுத்துக்க மாட்டான். அங்கைக்கு இன்னும் இதெல்லாம் புரியாது" என்று முடித்து விட்டார்.

அவரை மீறி அன்பழகனால் எதுவும் செய்ய முடியவில்லை. இதோ கும்பாபிஷேகமும் சிறப்பாய் முடிந்து விட்டது.

இதெல்லாம் அங்கைக்கு தெரியாத போதும், இன்று தில்லை சௌந்தரியின் பேச்சு மனதை என்னவோ செய்து விட்டது.

“பத்தாயிரம் பணமா எனக்கு யாரும் கொடுக்கவில்லையே?” என்ற எண்ணம்.

எப்படி கொடுப்பர்? அவர்களுக்கு பணம் கொடுக்க அம்மாக்களிடம் பணம் கொடுத்ததே ராஜராஜன் தானே!

இவளிடம் சொல்லிவிட்டான் தான், எப்படி சொன்னான் என்றால், “எல்லோருக்கும் துணி எடுக்க பணம் கொடுத்துட்டேன், நாம எப்போ போகலாம். எனக்கு நேரம் இருக்குமா தெரியலை? நீ போயிட்டு வா!” என்று.

அதற்கு அங்கை கொடுத்த பதில் தான் “நமக்கு புதுசு இருக்கு, அப்புறம் பார்த்துக்கலாம்” என்று.

அங்கைக்கு அவர்கள் தான் மற்றவர்களுக்கு பணம் கொடுத்தனர் என்பதே புரியவில்லை.

மனதை ஏதோ செய்ய அங்கே எதுவும் பிடிக்காமல் போக, அங்கை அன்பழகனுக்கு அழைத்து “பா இன்னைக்கு ஊருக்கு போறீங்க தானே, நானும் வர்றேன்” என்றாள்.

“அம்மு நாப்பத்தி எட்டு நாள் மண்டல பூஜை இருக்கு

ஏதாவது சொல்லுவாங்க”

“மத்த பசங்க எல்லாம் ஊருக்கு போகாம இங்கேயேவா இருக்க போறாங்க, எனக்கு மட்டும் ரூல்ஸ்ஸா? பாட்டி கிட்ட பேசறீங்க, என்னை கூட்டிட்டு போறீங்க” என்று விட்டாள்.

மகளின் இந்த பேச்சு கவலையை கொடுத்தாலும், அப்படி ஒன்றும் பெரிய பிரச்சனைகள் வராது, இருவருமே பக்குவமானவர்கள் என்று புரிந்தவர்,

“சரி, இப்போ ஊருக்கு கிளம்ப சொல்லிக்க வருவேன். வரும் போது கேட்டுப் பார்க்கறேன்” என்றார் அரை மனதாக.

“சரின்னு சொன்னா உங்க கூட வருவேன், இல்லை தனியா வருவேன்” என்று விட்டாள் முடிவாக.

என்னவோ இங்கே மூச்சு முட்டுவது போல தோற்றம், ஊருக்கு சென்று வரலாம் என்ற எண்ணம்.

இப்போது மனமும் சற்று வருத்தத்தில் இருக்க, இங்கே இருந்தால் ராஜராஜனுடன் சண்டை வலுக்கும், அதையும் விட வீட்டில் இருக்கும் மற்ற உறவுகளுடன் வார்த்தை வளர்ந்து விடுமோ என்ற எண்ணம் தோன்ற, பேசாமல் ஊருக்கு சென்று

வருவோம் நினைத்தாள்.

ராஜலக்ஷ்மி சொல்லிக் கொள்ள வரவில்லை. மகளை பார்க்க வேண்டும் என்ற ஆவல் மனது நிறைய இருந்தாலும், ஏனோ இன்னும் நாச்சியும் தன் அண்ணன்களும் அப்படி ஒன்றும் அவர்களை மதிக்க வில்லை என்ற எண்ணம் தான். அதில் வருத்தமெல்லாம் இல்லை ஆனாலும் அங்கே சகஜமாய் செல்ல மனம் ஒப்பவில்லை.

அவர் எப்படியோ, அன்பழகன் தான் அந்த வீட்டின் முதல் மாப்பிள்ளை. ஆனால் மற்ற சிறிய பெண்களின் மாப்பிள்ளைகளுக்கு கிடைக்கும் மரியாதை அவருக்கு இல்லையோ என்ற நினைப்பு!

“ஊருக்கு போகும்முன்ன அங்கையை வர சொல்லுங்க, நான் இங்கேயே பார்த்துகறேன்” என்று விட்டார்.

அன்பழகன் வந்து நாச்சியிடம் கேட்ட போது “ம்கூம், முடியவே முடியாது, மண்டல பூஜை முடியும் வரை போகக் கூடாது” என்றார் அவர்.

அது அங்கையினுள் போயே ஆக வேண்டும் என்றா பிடிவாதத்தை கொடுக்க, “ஏன் போகக் கூடாது?” என்றாள்

நாச்சியிடம் நேரடியாக.

குரலில் ஒரு இறுக்கம்! அது நாச்சிக்கு புரியவில்லை!

“எப்படி போவ? மண்டல பூஜை முடியும் வரை போகக்கூடாது”

“ஏன் போகக்கூடாது. இப்போ ஊர்ல இருந்து வந்தவங்க எல்லாம் போகலையா? அவங்க இந்த வீட்டு பிள்ளைங்க தானே! அவங்க போகும் போது நான் மட்டும் ஏன் போகக் கூடாது?”

அந்த நேரம் தான் ராஜராஜன் அவளின் பேச்சினை காதில் வாங்கிக் கொண்டே வீட்டின் உள் நுழைந்தான். “எங்கே போகிறாள் இவள்?” என்ற எண்ணம் தான்.

அன்பழகனுக்கு அங்கை ராஜராஜனிடம் சொல்லாதது தெரியவில்லை.

அவர் நாச்சியிடம், “என்னவோ வரணும்னு பிரியப் படறா அடுத்த வாரமே கொண்டு வந்து விட்டுடறேன்” என்றார் அவரும் தன்மையாக.

“இதென்ன சின்ன பிள்ளைங்க விளையாட்டா போகக் கூடாது அவ்வளவு தான்” என்று அன்பழகனிடம் அதட்டலாக நாச்சி பேச,

‘நான் போவேன் அவ்வளவு தான்” என்றாள் அவரை போலவே.

அவள் பேத்தியாய் அவரிடம் பிடிவாதம் பிடித்து கொண்டிருக்க,

அவர் அந்த வீட்டின் தலைவியாய் மாறி இருந்தார்.

“போகக் கூடாது” என்றார்.

அங்கே பேச்சினில் ஒரு உஷ்ணம் உதித்தது.

தில்லை அதனை உணர்ந்தவர், “அவங்க வீட்டு பெரிய மனுஷியா பேசறாங்க, திருப்பி பேசாத அங்கை” என்றார்.

“என்ன பெரிய பெரிய மனுஷி? எனக்கு நியாயமா நடந்துக்கலை, எனக்கு மட்டும் ரூல்ஸ் போடறாங்க!” என்று தில்லையை பார்த்து சொல்ல,

“பேசாத அங்கை” என்று ராஜராஜன் அவளின் அருகில்

வந்தான்.

வீடு மொத்தமும் அங்கே வந்து விட்டது. பெண் மக்கள் இருவரும் கிளம்பியிருக்க, கௌரிஷங்கரும், நந்த குமாரும் அவர்களின் குடும்பமும் அங்கே தான் இருந்தது.

“ஏன் பேசக் கூடாது? அப்படி தான் பேசுவேன்!” என்று அவனிடமும் எகிறியவள்,

“எல்லோருக்கும் எல்லாம் செய்யறீங்க, எங்க அம்மாக்கு மட்டும் நீங்க செய்யலை, எங்க அம்மாவோட பொண்ணுன்னு வேணும்னே என்னை எக்ஸ்ப்லாயிட் பண்றீங்க நீங்க, எல்லோரும் போகும் போது நான் மட்டும் ஏன் போகக் கூடாது. ஏதோ நியாயவாதி மாதிரி வீட்டு பெரிய மனுஷியாய் எனக்கு ஆர்டர் போட வேண்டிய அவசியமில்லை, நான் போவேன்” என்று அங்கை சொல்ல,

“அம்மு” என்று அன்பழகனின் குரல் ஓங்கி ஒலிக்க, அங்கையற்கண்ணி என்ற ராஜராஜனின் குரல் அதனையும் விட ஒலித்தது.

நாச்சிக்கு அந்த “எக்ஸ்ப்லாயிட்” என்ற வார்த்தை கூட

புரியவில்லை. ஏற்கனவே மகளுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம் என்ற குற்றவுணர்சியில் இருந்தவருக்கு அங்கையின் பேச்சு கண்ணீரை கொடுத்து விட்டது.

அந்த வீட்டினர் அவர் அழுது பார்த்தது ராயர் இறந்த போது மட்டுமே, கம்பீரமான பெண்மணி இப்படி கண்ணீர் விடவும்,

அதுவரையும் தலையிட வேண்டாம் என்று நினைத்த சுவாமிநாதன் “என்ன அன்பு? என்ன பேச்சு பேசறா உன் பொண்ணு?” என்று அன்பழகனை பார்த்து சத்தமிட்டார்.

அவ்வளவு தான், “எங்க அப்பாவை எதுக்கு பேசறீங்க, இப்படி தான் உங்க பொண்ணுங்களோட மாப்பிள்ளைங்களை பேசுவீங்களா?” என்று அதற்கும் கோபமாய் அங்கை சொல்லி விட்டாள்.

நாச்சியை தவிர சுவாமிநாதனை அங்கே யாரும் பேச மாட்டார். அதுவும் பேசிய அங்கையின் உடல்மொழியில் சிறிதும் மரியாதை இல்லை. என் அப்பாவை நீ பேசுவாயா என்ற எண்ணம் தான்.

அங்கே மிக மிக உஷ்ணமான சூழ்நிலை!

"என்னடா உன் பொண்டாட்டியை பேச விட்டு வேடிக்கை பார்க்கற" என்று தமிழ்செல்வன் எகிற,

தமிழ்செல்வன் பேசியதும் அப்படி ஒரு கோபம் ராஜராஜனுக்கு வந்து விட்டது.

அவன் பேச ஆரம்பிக்கும் முன்னே அங்கை பேசினாள்.

"நான் ராஜராஜனோட மனைவியா இங்க பேசலை, ராஜலக்ஷ்மி அன்பழகன் பொண்ணா தான் பேசறேன். என் பாட்டி கிட்ட பேசறேன், என் தாய் மாமாங்க கிட்ட பேசறேன், அப்படி தான் பேசுவேன்" என்று சுவாமிநாதனையும் தமிழ்செல்வனையும் பார்த்து நேராய் பேச,

"அம்மாடி! இந்த பெண் மிக புத்திசாலி, அவளாய் நிறுத்தாமல் நிறுத்தவே முடியாது" என்று சுவாமிநாதனுக்கு தெளிவாய் புரிய, அவர் பேச்சை வளர்க்கவில்லை, தமிழ்செல்வனையும் ஒற்றை பார்வையில் அடக்கி விட்டார்.

ஆனால் "பேசக் கூடாது" என்ற ராஜராஜனின் வார்த்தை சீறிப் பாய்ந்து வந்தது.

# அத்தியாயம் 21

ராஜராஜனின் குரலில் வீட்டினர் அனைவரும் பதறி நிற்க, அங்கை சிறிதும் பதறவில்லை.

“நீ இங்க ராஜராஜனோட மனைவி மட்டும் தான். அப்படி தான் இந்த வீட்டுக்குள்ள வந்த, அதுதான் இங்க நீ. என் பாட்டியை கேள்வி கேட்கற உரிமை, பேசற உரிமை எல்லாம் உனக்குன்னு இல்லை, யாருக்கும் கிடையாது. முதல்ல அவங்க கிட்ட மன்னிப்பு கேள்” என்றவனின் முகத்தினில் அப்படி ஒரு கோபம்.

“என்னோட பாட்டி அவங்க, நான் அப்படி தான் பேசுவேன். எங்கே அவங்க என் பாட்டி இல்லைன்னு ஒரு வார்த்தை சொல்லட்டும். அந்த நிமிஷம் உங்க மொத்த குடும்பத்தோட கால்ல விழுந்து நான் மன்னிப்பு கேட்கறேன், சொல்ல சொல்லுங்க” என்று எகிறி தான் நின்றாள்.

அவளுக்கு கோபம் வந்தால் இப்படி தான் இருக்கும், இடம், பொருள், ஏவல் என்றும் எதுவும் தெரியாது. ஆனால் நியாயம் வழுவாது! எதுவாகினும் உறவு வேண்டும் என்று நினைத்தால் சில

சமயம் நியாயம் பேசக் கூடாது.

அன்று அங்கையினுள் ஏதோ ராட்சசி புகுந்து கொண்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

மகளின் பேச்சினில் "அம்மு" என்ற அன்பழகனின் குரல் ஓங்கி ஒலிக்க,

"நீங்க இதுல தலையிடாதீங்கப்பா, ராயர் குடும்பத்து மேல உங்களுக்கு நன்றி இருந்தா, அது உங்க வரை. நானும் அப்படி இருக்கணும்னு அவசியமில்லை" என்று அவரை பார்த்து சொன்னவள்,

"அங்கை, நீ பேசறது சரியில்லை" என்று ராஜராஜன் இயலாமையில் பேச,

"நான் பேத்தி இல்லைன்னு சொல்லச் சொல்லுங்க அவங்களை" என்று அவளின் பிடியில் நின்றாள்.

நாச்சி எதுவுமே பேசவில்லை, "அம்மு" என்று மீண்டும் அன்பழகன் அதட்ட,

"எல்லாம் உங்களால தான் பா. என்னை ஏன் அடக்கறீங்க.

இவர் சொல்றார் நான் ராஜராஜனோட மனைவி மட்டும்ன்னு. ஆனா அது நான் ஆனதே உங்களால. நீங்க சொன்ன வார்த்தையால, உங்களுக்காக மட்டும் தான்” என்றவள்,

“உங்க அப்பா அம்மாவோட பையன் நீங்க, எங்க வீட்டுக்கு வரும் போது நீங்க என் புருஷன் மட்டும் தான் உங்க அப்பா அம்மாவோட பையன் இல்லைன்னு சொன்னா ஒத்துக்குவீங்களா, மாட்டீங்க தானே”

“அப்போ நான் மட்டும் எப்படி என் அப்பா அம்மாவோட பொண்ணு கிடையாதுன்னு சொல்வீங்க, சொல்லக் கூடாது. நான் உங்க மனைவியானது அவர் சொன்னதனால மட்டும் தான்” என்று தெளிவாய் சொல்ல,

ராஜராஜனால் இதனை தாளவே முடியவில்லை. அதுவும் எல்லோர் முன்னும் அப்படி ஒரு அவமானமாய் உணர்ந்தவன், அவளை பின் முகம் கொடுத்து பார்க்கவேயில்லை.

அன்பழகனிடம் திரும்பி “அவ உங்க பொண்ணு தான் இனி. உங்க பொண்ணு மட்டும் தான். நீங்க சொன்னதுனால உங்க பொண்ணு என்னை கல்யாணம் பண்ணியிருக்கலாம். ஆனா

இன்னமும் அதை சொல்றது நாங்க வாழற வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை. இப்படி ஒரு வாழ்க்கையும் எனக்கு தேவையில்லை" என்று சொல்லியவன்,

அங்கையிடம் திரும்பி, "இனி நீ இந்த வீட்ல ராஜராஜனோட மனைவி கிடையாது. ராஜலக்ஷ்மி அம்பழகன் பொண்ணு தான். நீ உங்க பாட்டி கிட்ட பேசு, தாய் மாமாங்க கிட்ட பேசு, யார் கிட்ட வேணா பேசு, அவங்களும் பேசினா கேட்டுக்கோ. எனக்கும் உனக்கும் ஒண்ணுமில்லை"

"நான் சொன்னது நீ உங்க அப்பா அம்மாவோட பொண்ணு கிடையாதுன்னு இல்லை, இந்த வீட்ல நீ ராஜராஜனோட மனைவி மட்டும் தான்னு. இப்போவும் சொல்றேன், நீ இந்த வீட்டுக்குள்ள அப்படி தான் வந்த அதை தான் நான் சொன்னேன்"

"உனக்கு அந்த வார்த்தை தேவையில்லைன்னா எனக்கு உன்னோட உறவும் தேவையில்லை" என்றவன் நிற்காமல் வெளியில் சென்று விட...

அவனின் வார்த்தைகளில் ஸ்தம்பித்து நின்று விட்டாள். அவனின் கோபம் தெரியும் தான். இன்று மொத்தமாய் அவனை

கோபப் படுத்திவிட்டாள் அவளே அறியாமல்.

அவன் சென்ற நொடி வீட்டின் அத்தனை பேரும் அங்கிருந்து அகன்று விட்டனர், தயங்கி அங்கே நின்ற தில்லையை கூட தமிழ்செல்வன் இழுத்து சென்று விட்டார். அதனை கண்டு விட்ட அங்கை கொதி நிலைக்கே சென்று விட்டாள்.

“நான் யார் இவர்களுக்கு?” என்ற கேள்வி சுழற்றி அடித்தது.

அங்கே நின்றது நாச்சி, அன்பழகன், அங்கை மட்டுமே!

பெண் மக்கள் முன்பே அவர்களின் வீடு கிளம்பியிருக்க, சுவாமிநாதன், வாசுகி, தமிழ் செல்வன், தில்லை, கௌரிஷங்கர் அவனின் குடும்பம், நந்தகுமார் அவனின் குடும்பம் என்று நின்றிருந்த மொத்த பேரும் சென்று விட்டனர்.

ராஜராஜன் சென்றது கோபத்தை கொடுத்திருக்க, இவர்கள் சென்றது காயத்தை கொடுத்தது. பல நேரங்களில் உறவுகளின் புரியாமையும் இது தான், கணவன் மனைவி என்றானாலும் சரியாகி விடுவர். இந்த செயல் காலம் முழுமைக்கும் மறக்காது. குடும்ப பிளவுகள் வர இந்த மாதிரி சில செயல்களும் முக்கிய காரணமாகி விடுகின்றது.

இப்போது ஆத்திரம் எல்லாம் பாட்டின் மீது திரும்பியது.

“எல்லாம் உங்களால தான் பாட்டி, இப்படி ஆகும்னு தெரிஞ்சு தானே நான் ஊருக்கு போகக் கேட்டேன். பேசாம சரின்னு சொல்லியிருந்தா இந்த சண்டையே தேவையில்லை. கொஞ்ச நாள் ஊருக்கு போகக் கேட்டா? இப்போ நிரந்தரமா என்னை அனுப்ப வழி பண்ணிட்டீங்க?” என்று பேச,

என்ன முயன்றும் அந்த பெரிய மனுஷியிடம் இருந்து அழுகை வெளிப்பட்டு விட, “அம்மு” என்று கர்ஜித்து மகளை அடிக்க கை ஓங்கி விட்டார் அன்பழகன்.

அங்கிருந்த வந்த சத்தங்களுக்கு என்னவோ ஏதோ என்று வீட்டினர் சிலர் மீண்டும் எட்டி பார்க்க அவர்கள் கண்டது இந்த காட்சியே.

அதற்கு கூட அங்கை அசையவில்லை.

ஆனால் அங்கையின் மகள் அசைந்தாள், உணவு உண்டு அங்கே சோபாவில் நல்ல உறக்கத்தில் இருந்த ரதிக்கு அதுவரையிலும் உறக்கம் கலையவில்லை.

இப்போது கலைந்ததும் அந்த சின்ன சிட்டு பார்த்தது தாத்தா அம்மாவை கை ஓங்குவது தான், பயந்து “வீல்” என்று கத்தி அழ,

அன்பழகன் சுற்றம் உணர்ந்து கை இறக்கினார்.

அங்கை எதுவும் பேசாமல் குழந்தையை சென்று தூக்கியவள், விடு விடு வென்று வாசலை நோக்கி வெளியேற, அவளை நிறுத்துபவர் தான் யாருமில்லை.

இதற்கு பலரும் பார்த்துக் கொண்டு தான் இருந்தனர் அவரவர் அறையில் இருந்து.

அங்கை செல்வதை பார்த்த அன்பழகன், நாச்சியிடம் திரும்பியவர், "அவ சார்பா நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன். சின்ன பொண்ணு செல்லமா வளர்ந்துட்டா, சரியா நாங்க அவளுக்கு கத்துக் குடுக்கலை போல, தப்பு எங்க மேல, அவ மேல கோபப் படாதீங்க" என்று பேசினார்.

"என்ன அன்பு இப்படி பேசற? என் பேத்தி ய்யா அவ, அவ மேல நான் கோபப் படுவேனா? சில விஷயம் அவ சொல்றது நியாயம் தானே! அதுல தான் எனக்கு அழுகை வந்துடுச்சு!"

"மன்னிச்சிடுங்கம்மா" என்று மீண்டும் ஒரு முறை கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்பு கேட்டவர் மகளை தேடி விரைந்து விட்டார்.

அவள் முன்பிருந்த வீட்டில் தான் ராஜலக்ஷ்மியும் அன்பழகனும் வந்தால் தங்குவர். அவள் நேரே அங்கே தான் சென்றாள். சற்று தூரம் கூட, வேகு வேகு என்று மகளை தூக்கி விரைந்து விட்டாள்.

அப்படி ஒரு வேக நடை, அவள் வீடு நெருங்கிய சமயம் தான் அன்பழகனால் அவளை பிடிக்க முடிந்தது.

“அம்மு” என்றவர் அழைக்க, அவர் புறம் திரும்பவேயில்லை, வீட்டின் உள் நுழைந்து தான் நின்றாள்.

வேகமாய் அவளின் கையில் இருந்த குழந்தையை வாங்கினார். சோஃபாவில் சென்று அமர்ந்து கொண்டவள், அவளின் காலை தூக்கி ஒரு சேரில் போட்டுக் கொண்டு “அம்மா தண்ணி” என்று கத்த,

அறையின் உள் பெட்டி கட்டிக் கொண்டிருந்த ராஜலக்ஷ்மி வெளியே வந்தார். அதற்குள் அன்பழகனே அங்கு பாட்டிலில் இருந்த தண்ணீர் கொடுக்க,

அதனை வாங்கி குடிக்க ஆரம்பிக்க, “பட்டு குட்டிக்கு என்ன வேணும் பாரு?” என்று ராஜியிடம் குடுக்க,

சூழ்நிலை சரியில்லை என்று கணித்தவர் “என்ன ஆச்சு?” என்றார் கலவரமாக.

“கொஞ்சம் சண்டையாகிடுச்சு” என்று ராஜியை நோக்கி சொன்னவர்,

“அம்மு, இவ்வளவு கோபம் ஆகாது” என்று மகளிடம் திரும்ப,

கை உயர்த்தி பேச வேண்டாம் என்பது போல தந்தையிடம் சைகையில் சொன்னவள்,

அவரிடம் “நான் பண்ணினது தப்பா இருந்துட்டு போகட்டும் பா, எனக்கு அதுல எந்த வருத்தமும் இல்லை. நான் இப்படி தான். ப்ளீஸ் எனக்கு அட்வைஸ் பண்ணாதீங்க, என்ன விளைவுகளோ அதை நான் பார்த்துக்கறேன். இனி இந்த விஷயமா நீங்களோ அம்மாவோ மனோவோ என்கிட்டே பேசக் கூடாது” என்று கராறாய் சொன்னாள்.

சொல்லும் போது கண்களில் இருந்து நீர் இறங்கிக் கொண்டே இருக்க,

“சரி நான் பேசலை, நீ அழாத” என்று அவர் சொல்ல

“அதை கூட நீங்க சொல்லக் கூடாது” என்று சொல்லி அங்கிருந்த ஒரு அறைக்கு சென்று கட்டிலில் படுத்துக் கொண்டு அழ ஆரம்பிக்க,

ராஜலக்ஷ்மிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. என்ன நடந்தது என்று கேட்க அன்பழகன் நடந்ததை சொன்னார்.

ரதியை அன்பழகனிடம் கொடுக்க முயல, அவர் கையில் இருந்து இறங்கியவள், அம்மாவை நோக்கி வேகனடையிட்டு சென்றவள், அம்மாவின் மேல் ஏறி அணைத்து படுத்துக் கொண்டாள்.

“அம்மு அழாத, ரதி பயப்படுவா” என்று அன்பழகன் சொன்ன போதும் அங்கை முகத்தை நிமிர்த்தவில்லை.

மகள் அழுவதை பார்த்த ராஜிக்கும் கண்கள் கலங்க “ஏன் இப்படி அழறா?” என்றார்.

அதற்குள் இவர்களை திருச்சி ஏர்போர்ட் அழைத்து செல்ல மனோ அனுப்பிய கார் வந்து விட்டது.

“உங்கம்மாவை அழ வெச்சிட்டு வந்து அழறா?” என்று அன்பழகன் சொல்ல,

“என்ன எங்கம்மா அழுதாங்களா?” என்றார் அதிர்ச்சியாய்.

“ம்ம்” என்று தலையாட்ட,

“என்ன அங்கை? என்ன பேசின?” என்று பதறி கேட்க,

அதற்குள் அழுது முடித்திருந்தவள் “பட்டு குட்டி அம்மாவை விட்டு இறங்குடா” என்றாள்.

அது அம்மா அழவும், இறங்குவேனா என்று இறங்காமல் இருக்க, ராஜி தூக்கவும், அப்படி ஒரு கத்து. “வீல்” என்று அவள் கத்திய கத்தலில் பயந்து கீழேயே விட்டுருப்பார். வேகமாய் அன்பழகன் பிடித்துக் கொண்டார்.

அங்கை எழுந்து மகளை கையில் வாங்க, அதன் பிறகே கத்தலை நிறுத்தினாள்.

“அம்மாடி, கண்ல தண்ணியே வராம இந்த கத்து கத்துற நீ” என்று ராஜி சொல்ல,

அப்போதும் மகள் அம்மாவை விடுவேனா என்பது போல கழுத்தை இறுக்கி கட்டிக் கொண்டாள்.

கார் காத்திருக்கவும், மூவரும் கிளம்ப, “பா, என் மொபைல் அங்க இருக்கு வேணும்” என்றாள் அங்கை.

அதனால் அவர்களின் வீட்டிற்கே காரை விட, அங்கே சென்றதும் அன்பழகன் இறங்கப் போக,

“நான் போறேன்” என்று ராஜி இறங்கி உள்ளே செல்ல,

அவர் உள்ளே செல்லவும் எதுவும் பிரச்சனை செய்ய வந்திருப்பாரோ என்று மொத்த வீடும் பார்க்க,

“வாங்க” என்று சொல்பவர் கூட யாருமில்லை,

“அங்கை மொபைல் இங்க இருக்கு, எடுத்துட்டு போக வந்தேன்” என்றவர் “அம்மா எங்கே?” என்றார் தில்லையை பார்த்து.

அவர் ரூமை கை காட்ட, ரூமின் உள் செல்ல, நாச்சி அங்கே படுத்திருந்தார்.

“மா” என்ற ராஜலக்ஷ்மியின் குரல் கேட்டதும் அவர் அரக்க பறக்க எழ,

"மா, ஒன்னுமில்லை" என்று அருகில் வந்தவர்,

"நாங்க ஊருக்கு போறோம், அங்கையும் கூட வர்றா, கூட்டிட்டு போறோம்"

நாச்சி எதுவும் பேசவில்லை.

"எதுவும் பேசிட்டாளாம்மா, வருத்தப்படறீங்களா? அவளுக்கு உங்களை விட வாய் அதிகம், ரெண்டு வருஷம் அவளோட இருந்திருக்கீங்க தானே, உங்களுக்கு தெரியாதா?"

"வருத்தமெல்லாம் இல்லை, மனசுக்கு கஷ்டமா இருக்கு" என்று சொல்லியே விட்டார்.

"எங்களோட ஊருக்கு வர்றீங்களா?"

"நானா?" என்றார்.

"வேற யாரு நீங்கதான் வாங்க, கோவில் பூஜை எல்லாம் இங்க இருக்குறவங்க பார்த்துக்குவாங்க, நீங்க வர்றீங்க"

"அது மண்டல பூஜை" என்று அவர் ஆரம்பிக்க,

“அதெல்லாம் நல்லதாவே நடக்கும், ஒன்னும் பிரச்சனை ஆகாது. நீங்க வாங்க” என்றவர்,

வேகமாய் அவரின் உடைகள் சிலதை பேகில் போட்டு எடுத்துகிட்டு “வாங்க” என்று வெளியே வர

தில்லை அங்கையின் மொபைலை கொடுக்க, வாங்கியவர் “சொல்லிட்டு வாங்கம்மா” என்று நாச்சியை பார்த்து சொல்லியபடி நடக்க,

அங்கிருந்த சுவாமிநாதன் “என்னம்மா?” என்றார்.

“என்னை ஊருக்கு கூப்பிட்டாடா” என்று மகனிடம் சொல்லி நின்று, “அண்ணா கிட்ட சொல்லிட்டு போ” என நாச்சி சொல்ல,

“நான் உள்ள வரும் போது வாங்கன்னு கூட யாரும் சொல்லலை, அப்புறம் நான் எப்படி போயிட்டு வர்றேன்னு சொல்லுவேன்” என்ற ராஜலக்ஷ்மியின் குரலில் ஒரு பேதம்.

இதுவரையிலும் எந்த வித்தியாசத்தையும் காணபித்ததில்லை, முதல் முறை அதனை குரலில் கொண்டு வந்தார்.

நாச்சி "என்ன இது" என்பது போல மகன்களையும் மருமகள்களையும் பார்க்க,

"எதுக்கு அவங்களை பார்க்கறீங்க நீங்க, என் பொண்ணு தப்பே பண்ணியிருந்தாலும், இப்படி தான் வேகாத வெயில்ல ஒத்தையா அனுப்புவாங்களா? அவ வெளில வந்தா நிறுத்த மாட்டீங்களா? இன்னும் ரெண்டு மருமக இருக்காங்களே உங்களுக்கு, அவங்களை இப்படி பண்ணிடுவீங்களா? என் பொண்ணுன்னு அவ்வளவு இளப்பமா போச்சுல்ல"

"நான் சொன்னேன் அவ கிட்ட, அவ கேட்கலை, உன்னால அங்க இருக்க முடியாது, உன்னை சரியாய் நடத்த மாட்டாங்கன்னு, அவங்கப்பா பேச்சை கேட்டு கிட்டு வந்தா, அனுபவிக்கட்டும்" என்றவர் நடந்து விட,

"என்ன நாங்க நல்லா நடத்தலையா அவ பொண்ணை?" என்று சுவாமிநாதன் பொங்க,

"எனக்கு அது தெரியாது? ஆனா நீ என் பொண்ணை சரியா நடத்தலை. நான் கொஞ்சம் நாள் இருந்துட்டு வர்றேன்" என்று

அவரும் கிளம்ப

“என்னடா இது?” என்று வீடே வேடிக்கை பார்க்க செய்தது, மாலை பூஜை முடிந்து வந்து மற்ற இரு மகன்களும் ஊர் கிளம்பிவிட, இரவு வரை ராஜராஜன் வரவில்லை.

இரவு தான் வந்தான், அவன் வந்த போது எல்லோருமே உறங்க போயிருக்க, தில்லை மட்டுமே அமர்ந்திருந்தார்.

சாப்பாடு மேஜை முன் அமர்ந்தவனிடம் ப்ளேட்டை எடுத்து வைக்க, “மா, கிழவி சாப்பிட்டிடுச்சா?” என்றான்.

“யாருக்கு தெரியும்?” என்றார்.

அவன் புரியாமல் பார்க்க, “அவங்க உங்க அத்தையோட ஊருக்கு போயிட்டாங்க” என,

“என்ன?” என்று விழித்தவன், பின் “அவளும் பட்டுக் குட்டியும் ஊருக்கு போயிட்டாங்களா?” என்றான். மனதில் ஓரத்தில் ஒரு ஆசை, வீட்டில் இருப்பார்களோ என்று. வெட்கம் கெட்ட மனது தானே!

“யாருக்கு தெரியும்?” என்றார் அதற்கும்.

"என்னமா?" என்று அவரிடம் எரிந்து விழுந்தவன், "என்ன நடந்தது தெளிவா சொல்லுங்க?" என்று கேட்க,

"நீ போனதும் எல்லோரும் உள்ள போயிட்டோம், அப்புறம் என்னவோ சத்தம், நான் எட்டிப் பார்த்தேன், அப்போ உன் பாட்டி அழுதுட்டு இருந்தாங்க, அவங்கப்பா அங்கையை அடிக்க கை ஓங்கிட்டு போனார், அதுக்குள்ள ரதி அழுதாளா, அவளை தூக்கிட்டு அங்கை வீட்டை விட்டு போயிட்டா!"

"நீ என்ன பண்ணின? ஏன் நிறுத்தலை?"

"நானா? நான் இங்கே நின்னேன், உங்கப்பா என் கையை பிடிச்சு இழுத்துட்டு போயிட்டார். அப்புறம் அவங்கப்பா அவள் பின்னே போனார். பின்ன உங்க பாட்டி போய் தூங்கினாங்க, அப்புறம் உங்க அத்தை வந்தாங்க, உங்க பாட்டியை கூட்டிட்டு போயிட்டாங்க, போகும் போது அவங்க பொண்ணை நாம சரியா பார்த்துக்கலைன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க" என்று கதை படிக்க,

"பின்ன அவங்க பொண்ணு போகும் போது ஒரு பேச்சுக்கு

கூட நீங்க யாரும் நிறுத்தலையா? நாளைக்கு சௌந்தரி அக்காவோ விஜயா அக்காவோ இப்படி வந்தா நீங்க சும்மா இருப்பீங்களா?”

“நீதானே நீ என் மனைவி இல்லைன்னு சொல்லிட்டு போன”

“எனக்கும் அவளுக்கும் தானே சண்டை, உங்களுக்கு என்ன வந்தது, மத்தவங்க எப்படியோ? நீங்க என்ன பண்ணுனீங்க? நீங்க அவளை ஏன் நிறுத்தலை, இல்லை அவ கூட அவ வீடு வரைக்கும் ஏன் போகலை?” என்று அவரை தாளித்து தள்ள,

ஏற்கனவே ஒரு குற்ற உணர்ச்சியில் இருந்த தில்லை, அழவே ஆரம்பித்து விட, பின்னர் அவரை வெகுவாக சமாதானம் செய்து படுக்க அனுப்பினான்.

அவன் உண்ணவுமில்லை. அவனின் அறைக்கு வந்தவனுக்கு உறக்கம் தான் வரவில்லை, உறங்கா இரவாகிப் போனது.

அந்த இரவு மட்டுமல்ல, அதன் பிறகு வந்த பல இரவுகளும்!

# அத்தியாயம் 22

ஒன்றுமில்லை என்று நினைத்தால் ஒன்றுமில்லை, எல்லாம் இருக்கின்றது என்று நினைத்தால் எல்லாம் இருக்கின்றது.

அங்கை ராஜனின் பிணக்கும் அப்படி தான். இவனும் அழைக்கவில்லை, அவளும் பேசவில்லை. “இதை பத்தி யாரும் என்கிட்டே பேசக் கூடாது” என்று அங்கை சொல்லிய பிறகு யாராலும் பேச முடியவில்லை.

இது அங்கையின் இன்னொரு பக்கம்! சொன்னதை எந்த அளவு கேட்பாளோ? அதே அளவு கேட்கவும் மாட்டாள். பிடிவாதம் பிடித்து விட்டால் மாற்றுவது என்பது இயலவே இயலாது, அவளாய் மனது வைத்தால் மட்டுமே.

நாச்சியிடம் யாருமில்லாத போது தெளிவாய் சொல்லி விட்டாள், “பாட்டி இதுக்காக உங்க மனசை கஷ்டப் படுத்திக்காதீங்க, என்ன நடக்குமோ அது தான் நடக்கும். நீங்க எப்பவும் போல இருங்க” என்று

கிட்ட தட்ட ஒன்றரை மாதம் மகள் வீட்டினில் சீராடிவிட்டு அவர் ஊர் வந்தார். அன்பழகனும் சொல்லித் தான் அனுப்பினார்,

“மா, நம்ம கைல ஒன்னுமில்லை, ரெண்டு பேருமே வளர்ந்த பிள்ளைங்க. இதுவரைக்குமே ஒரு கட்டாயம் குடுத்துட்டேன் அங்கைக்கு, இனி அதை குடுக்க மாட்டேன். அவளா வருவா, நாம சொல்லச் சொல்ல அவளுக்கு செய்ய வேண்டாம்னு தான் தோணும்”

“எப்படியும் சரியாகிடும், கவலை வேண்டாம், தானா நடக்கட்டும். நானும் ராஜியும் சொல்ல மாட்டோம். நீங்களும் சொல்லாதீங்க” என்று விட்டார்.

“ம்ம்” என்ற நாச்சியின் தலையசைப்பு இருந்தது. ஆனால் முன்பு போல ஒரு கலகல பேச்சு இல்லை. அதட்டல் உருட்டலும் இல்லை.

மனோ வந்தவன் அவன் தான் நாச்சியை அழைத்து வந்து ஊரில் விட்டான். அவன் கொண்டு வந்து விடும் போது, இரவை நெருங்கி இருந்தது.

மனோ எந்த கோபமும் காண்பிக்கவில்லை, நாச்சியை விட்டவன், பத்து நிமிடம் இருந்து பொதுவாய் சுவாமிநாதனிடமும் தமிழ்செல்வனிடமும் பேசி ஒரு காஃபி அருந்தி விட்டு எழுந்தான்.

தில்லை தான் “ஊர்ல எல்லாம் எப்படி இருக்காங்க” என்றார் அவன் எழுவதை பார்க்கவும்.

“நல்லா இருக்காங்க அத்தை”

“அங்கை எப்போ வருவா?” என்று கேட்டு விட,

“தெரியலையே அத்தை, அவ அதை பத்தி ஒன்னும் பேசலை”

“நீ கேட்கலையா மனோ?” என்றார் ஆதங்கமாக. ஆம்! ஆதங்கமாகத் தான். மனோ ஒரு வார்த்தை கூட ராஜராஜன் எப்படி இருக்கிறான் என்று கேட்கவில்லை.

அவன் கேட்க மாட்டான். எப்படி கேட்பான். அவனுக்குமே மனதினில் கோபம் தான். கரிஷ்மா சின்னதாய் முகம் தூக்கினால் கூட அவளின் பின்னேயே சுற்றி சரி செய்வான்.

அங்கை கோபித்து வந்தால் என்ன இவன் வரமாட்டானாமா என்ற ஆதங்கம் அவனுக்குமே இருந்தது. அதனால் அவன் எப்படி இருக்கிறான் என்று கேட்கவேயில்லை.

தில்லைக்கு மிகவும் வருத்தமாய் போனது. அன்னையாய்

அவருக்கு தானே தெரியும் ராஜராஜனின் உள்ளமும் உடலும் உருகி கொண்டிருந்ததை. இப்படி மகன் இருப்பான் என்று தெரிந்திருந்தால், தமிழ்செல்வனாவது ஒன்றாவது, கணவனிடம் அடி வாங்கியிருந்தால் கூட அங்கையின் பின்னே ஓடி இருப்பாரே.

அந்த நிமிடம் அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. அதன் பின்னும் கூட பெரிதாய் தெரியவில்லை. கணவன் மனைவி சண்டை, வீட்டினரின் செயலுக்கு ராஜராஜன் சரி செய்து விடுவான் என்று. ஆனால் அவனோ எந்த முயற்சியும் செய்யவில்லை.

அங்கை இருப்பது பக்கமாய் இருந்திருந்தால் எல்லோரையும் மீறி கூட சென்றிருக்கலாம். ஆனால் அதுவே தூரம். சில முறை அங்கைக்கு கைபேசியில் அழைத்து பார்த்தார். அவள் எடுக்க வில்லை.

அதுவும் ரதி அவர் வளர்க்கும் குழந்தை, கண்ணுக்குள்ளேயே நின்றாள். அவளின் பிரிவு அவரையும் வாட்டியது என்று தான் சொல்ல வேண்டும்.

தில்லை தன் பதிலுக்காய் காத்திருப்பது புரிய எல்லோர் முன்னும் தான் சொன்னான். “அப்படி எல்லாம் அவ கிட்ட பேசிட முடியாது அத்தை. உன் வேலையை பார்த்துட்டு மூடிட்டு போடான்னு சொல்லிடுவா, நான் கலக்டரா இருக்கலாம்,

கரிஷ்மாக்கு பெரிய பின் புலம் இருக்கலாம், அதுக்காக எல்லாம் நாங்க சொல்றதை அவ கேட்க மாட்டா, அண்ணன்னு, அண்ணின்னு நாங்க சொன்னாலும் கேட்க மாட்டா, அவ சொல்றதை தான் நாங்க பெரும்பாலும் கேட்போம்" என்றவன் நடந்து விட்டான்.

அதுவே சொல்லாமல் சொன்னது இதில் நான் ஒன்றும் செய்ய முடியாது என்று. அவன் காரில் ஏறும் நேரம் ராஜராஜன் பைக் வந்தது.

சரியாய் நாற்பத்தி ஐந்து நாட்கள் இருக்கும் மனோ ராஜராஜனை பார்த்து, பார்த்ததும் "என்னடா இவன்?" என்று அதிர்ந்து விட்டான். இந்த நாட்களில் ஆளே மாறியிருந்தான். ஏதோ நோயில் விழுந்தவன் போல ஒரு தோற்றம். உடல் இளைத்து, கறுத்து.

உண்மையில் ராஜராஜனுக்கு வேலைகள் மிக அதிகம். முன்பு பாதி வேலை அங்கை பார்த்துக் கொள்வாள். இப்போது முழுவதும் அவனே அல்லவா. உணவும் சரியாய் உண்பதில்லை. அது உடலை வாட்டி இருந்தது.

இவனை பார்த்ததும் ராஜராஜனின் மனதிலும் உடலிலும் அப்படி ஒரு பரபரப்பு. கண்கள் வீட்டை நோட்டம் விட,

“பாட்டியை கொண்டு வந்து விட வந்தேன்” என்று விட்டான் உடனே மனோ அவனை புரிந்தவனாக.

“ஓஹ்” என்ற ராஜராஜனின் முகத்தில் ஏமாற்றம் அப்பட்டமாய் தெரிந்தது.

“எப்படி இருக்கீங்க?” என்றான் சம்ப்ரதாயமாக.

“நல்லா இருக்கேன்” என்றவன், “வீட்லயும் எல்லோரும் நல்லா இருக்காங்க” என்றான் கேட்காத தகவலாக.

ராஜராஜன் சிரிக்க முற்பட்டாலும் சிரிப்பு வரவில்லை.

“அங்கை எப்படி இருக்கா? ரதி எப்படி இருக்கா?”

“அதை அவ கிட்ட கேட்க வேண்டியது தானே நீங்க” என்று மனோ உரிமையாய் சொன்னவன், “ஏன் இப்படி உடம்பை கெடுத்து வெச்சிருக்கீங்க, உங்க மனைவி உங்க கிட்ட வராம யார் கிட்ட வரப் போறா” என்றான்.

அதற்கு ராஜராஜன் பதில் எதுவும் சொல்லவில்லை.

"இன்னும் மூணு நாள்ல மண்டல பூஜை முடியப் போகுது, அத்தையும் மாமாவும் தானே பரிவட்டம் கட்டினாங்க, அவங்க கண்டிப்பா வரணும். நானே இன்னைக்கு நைட் உங்களுக்கு ஃபோன் பண்ணலாம்னு இருந்தேன், நீங்களே வந்துட்டீங்க" என்றான்.

"ம்ம் சொல்லிடறேன்" என்ற மனோ அவனின் மொபைலில் இருந்த சில படங்களை காண்பித்தான்.

அவன் ஊருக்கு சென்ற போது எடுத்தது. அங்கையையும் ரதியையும் பார்க்கவும் மனதை ஏதோ செய்தது. அதுவும் ரதி வளர்ந்து விட்ட மாதிரி ஒரு தோற்றம்.

இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த ராஜராஜனின் தோளை சுற்றி கையை போட்டவன், "உடம்பை பார்த்துக்கோங்க, உங்க மேல தானே அங்கையும் ரதியும் தூங்கறாங்க, ஸ்ருஷ்டியும் கூட சேர்ந்துக்கறா, தெம்பு வேண்டாமா?"

என்னவோ கண்கள் கலங்கி விடுமோ என்று தோன்ற, பைக்கில் வருவதால் சில சமயம் கண் கண்ணாடி அணிபவன், அது பாக்கெட்டில் இருக்க அதனை எடுத்து அணிந்து

கொண்டவன், “நீங்க பாருங்க, எனக்கு ஒரு சின்ன வேலை மறந்துட்டேன்” என்று சொல்லி திரும்ப வெளியிலேயே கிளம்பிவிட்டான்.

மனைவி மகளின் பிரிவு என்பதனை விட, வீட்டினரின் செய்கை தான் அவனை முற்றிலும் நிலை குலைய வைத்திருந்தது.

“என் வீட்டினர் என்று தானே எல்லாம் செய்தேன். ஆனால் யாரும் அங்கை சென்ற பிறகு அவளை அழைத்து வருவதை பற்றி பேசவேயில்லை” நாச்சி இருந்தால் பேசியிருப்பாரோ என்னவோ அவரும் இல்லை. தில்லை மட்டுமே பேசுவார். அதுவும் யாரும் இல்லாத போது அவனிடம். “ஏன் அதை அப்பாவிடம் சொல்ல மாட்டாரா?” என்று அவன் நினைப்பான்.

என்ன சொல்ல? அதை தமிழ்செல்வனிடம் தனிமையில் சொல்லி அனேக ஏச்சுக்கள் பேச்சுக்கள் வாங்குவது தில்லைக்கு மட்டும் தானே தெரியும்.

“என்னுடைய வாழ்க்கை இவர்களுக்கு முக்கியமேயில்லையா?” என்பது அவனை வெகுவாக பலமிழக்க செய்திருந்தது. எதுவாகினும் அவர்களை எங்கேயும் விட்டு கொடுக்க மாட்டானே.

அங்கையும் எல்லோர் முன்னும் என் அப்பா சொன்னதற்காக தான் இந்த திருமணம் என்று சொல்லியது இன்னுமே வலித்தது.

அவனும் அவனின் தாத்தா சொன்னதற்காக தானே திருமணம் செய்தான். அதை அவனும் சொல்லியிருக்கிறான் தான் முன்பு.

ஆனால் சேர்ந்த வாழ்ந்து ஒரு பிள்ளை பெற்ற பிறகு, இந்த வார்த்தை வலித்தது. அப்போதும் அவனால் “நானும் என் தாத்தா சொன்னாங்கன்னு தான் கல்யாணம் பண்ணினேன்” என்று சொல்ல முடியவில்லை.

மில்லுக்கே சென்று விட்டான். ஊரே அடங்கி விட இரவும் வெகுவாய் ஏறிவிட,

மகனை காணாமல் தில்லை மட்டுமே அமர்ந்திருந்தார். வெகு நாட்களுக்கு பிறகு வீடு திரும்பியதால் உறக்கம் பிடிக்காமல் இருந்த நாச்சி இன்னும் உணவு கூடத்தில் விளக்கெரிவதை பார்த்து அவரின் அறையில் இருந்து வெளியே வந்தார்.

தில்லை அங்கே அமர்ந்திருப்பதை பார்க்கவும், “என்ன தில்லை, யாரு இன்னும் சாப்பிடலை, ராஜராஜனா?”

ஆம்! என்பது போல தலையசைத்தவர், “இன்னும் வீட்டுக்கு

வரலை அத்தை” என,

“ஃபோன் போடு”

“போட்டேன், சுவிச் ஆப்ன்னு வருது”

“மில்லுக்கு போடு”

“அட, எனக்கு இது தோணலையே”

மில்லுக்கு அழைக்கவும் அங்கிருந்த வேலையாள் எடுக்க, நாச்சியிடம் தில்லை கொடுத்தார்.

“டேய், ஆருடா பேசறது. நாச்சி பேசறேன். என் பேரன் இருந்தா கூப்பிடு” என்றார் அதிகாரமாக.

அதை அவன் ராஜனிடம் சொல்ல, “நாச்சி” என்றதும் வந்தான்.

“என்ன கிழவி?”

“என்ன ராசா? கிழவி ஊருக்கு போனதும் மறந்துட்டியா? நான் வந்துட்டேன்! என்னை பார்க்கணும்னு தோணலையா? வீட்டுக்கு

வர மாட்டியா?" என்று கேள்விகளை அடுக்கினார்.

"நீ என்ன என்கிட்டே சொல்லிட்டா போன, நான் எதுக்கு வரணும்? நான் வரமாட்டேன்!" என்று முறுக்கினான்.

"ஏலே வாய்யா, பாக்கணும் போல இருக்கு, கண்ணுக்குள்ள நிக்கற"

"அட கிழவி, ஊருக்கு போயிட்டு வந்து டைலாக் எல்லாம் விடற நீ" என்று சத்தமாக சிரித்தவன்.

"இப்போ முடியாது, லோட் ஏத்திட்டு இருக்காங்க, வேலைக்கு இருந்தவங்களை நான் பார்த்துக்கறேன்னு அனுப்பிட்டேன். நீ தூங்கு, நான் காலையில வர்றேன்" என்று விட்டான்.

காலையில் அவனை பார்த்ததும் நாச்சிக்கு தானாய் கண்கள் நிறைந்து விட்டது.

தில்லையை பிடித்து வாங்கு வாங்கு என்று வாங்கிவிட்டார்.

"என்ன உன் புருஷன் மட்டும் தான் உன் கண்ணுக்கு தெரிவானா, இந்த வயசுலையும் அவன் எப்படி இருக்கறான்.

அவனுக்கு மட்டும் வடிச்சு கொட்டரையோ? என் பேரனை என்ன நீ இப்படி ஆக்கி வெச்சிருக்க” என்று தமிழ்செல்வன் சுவாமிநாதன் என்று எல்லோர் முன்னும் தான் வாங்கினார்.

“கிழவி எங்கம்மாவை ஏன் பேசற?” என்று ராஜராஜன் சண்டைக்கு கிளம்ப,

“பின்ன பேசாம, நாளைக்கு என் பேத்தி வந்து கேட்க போறா? என் புருஷனை விட்டுட்டு போனா நீங்க எல்லாம் சேர்ந்து அவரை என்ன செஞ்சு வெசிருகீங்கன்னு” என்று குதி குதி என்று குதித்தார்.

நாச்சியின் பேச்சுக்களில் தில்லை அழவே ஆரம்பித்து விட,

“கிழவி பேசாம இரு, என்னை பார்த்துக்க எனக்கு தெரியும். சும்மா எங்கம்மாவை பேசற வேலை எல்லாம் வெச்சிக்காத, உனக்கு பேசணுமா உன்னோட பசங்களை பேசு!” என்று அவனும் கத்த, அதன் பிறகே சற்று அடங்கினார்

ஆனாலும் மனம் ஆறவில்லை. எப்படி இருப்பான், நல்ல ஆரோக்யமான இளைஞன், இப்படி உடல் இளைத்து இருக்க முகமும் பொலிவில்லாமல் ஏதோ நோய்வாய் பட்டவன் போல

இருக்க, மனம் பதைத்து விட்டது அவனை கண்டதும்.

இத்தனை பேச்சிற்கும் சுவாமிநாதன் ஒன்றும் பேசவில்லை, அண்ணன் பேசாததால் தம்பியும் பேசவில்லை.

ஊருக்கு முன் பேசும் சுவாமிநாதன் இதில் மட்டும் எதுவுமே பேசுவதில்லை.

ராஜராஜன் குளித்து பூஜைக்கு என்று கிளம்பிவிட, நாச்சி பின் மக்கள் இருவரையும் பார்த்து பேசினார். “என்னடா பையன் இப்படி இளைச்சு இருக்கான், நீங்க என்னடா பண்ணிட்டு இருக்கீங்க” என்றார் காட்டமாக.

“யார் என்ன பண்றா உன் பேரனை? அந்த புள்ள கோச்சிட்டு போய் உட்கார்ந்துகிச்சு, ஒன்னு அவ வரணும் இல்லை, இவன் போய் கூட்டிட்டு வரணும். நாங்க ஒன்னும் போறவனை வேண்டாம்னு சொல்லலையே” என சுவாமிநாதன் பேச,

“நீ வேண்டாம்னு சொல்லலை, ஆனா போய் கூட்டிட்டு வான்னு சொன்னியா, இதோ உங்க மத்த பையன், பொண்ணுன்னா, இப்படி தான் விட்டிருப்பீங்களா?”

“அப்போ ராஜராஜனை விட்டுட்டோமா?” என்று சுவாமிநாதனும் சண்டைக்கு கிளம்ப,

“ராஜராஜனை விடலை, அங்கையை விட்டுட்டீங்கடா. ஆனா அவ இருந்துக்குவா பொறந்ததுல இருந்து அவங்கப்பா ஊருக்கு போக வர பார்க்கறா, அதனால இப்போ புருஷன் கூட இல்லாதப்போவும் அவளால இருக்க முடியுது. ஆனா உன் பையன் இருக்க மாட்டான்டா, தப்பு பண்றீங்க”

“நாங்க இதுல செய்யறதுக்கு ஒன்னுமில்லை” என்று அவர் பேச,

“அப்போ பழசு எதுவும் நீங்க மறக்கலை, என் பேத்தின்னு தானே இப்படி?”

“பாரும்மா, நாங்க போகச் சொல்லலை, அப்போ நாங்க கூப்பிட முடியாது. இதுல உங்க பொண்ணு வேற சொல்லிட்டு போறா என்னவோ நாங்க அவங்க பொண்ணை நல்லா பார்த்துக்கலைன்னு”

“டேய் சாமி, இதுல நான் சொல்றதுக்கும் ஒன்னுமில்லை, நீங்க

செய்யறது எல்லாமே நம்ம பையனை தான் பாதிக்கும். ஆனா ஒன்னு சொல்லிக்கறேன், என் பொண்ணை இல்லை மாப்பிள்ளையை வெளில விட்டுக் குடுத்தீங்க மரியாதை குடுக்காம, நான் இந்த வீட்டை விட்டு தனியா போயிடுவேன், என் கடைசி காலத்துல என்னை தனியா இருக்க விட்டுடாதீங்க” என்றவரின் குரலில் அசைக்க முடியாத உறுதி இருந்தது.

“ஏன்? நாங்க என்ன புள்ளையை கட்டிக் குடுத்திருக்கோமா தளைஞ்சு போக, பையனை பெத்திருக்கோம்” என்று மீசையை முறுக்க,

“நான் உங்க சம்மந்தியை சொல்லலை, என் பொண்ணை சொன்னேன். நீங்க அவளை சம்மந்தியா பார்க்கலாம். ஆனா அவ எனக்கு பொண்ணு தான். ஏன்டா டேய் நம்ம பையனை பாருங்கடான்னு சொன்னா நீங்க இன்னும் பழசையே பேசிட்டு இருக்கீங்க. பட்டா கூட உனக்கும் உன் தம்பிக்கும் புத்தி வராதுடா. இந்த வீட்டு பொண்ணுடா ராஜி, அவ மனசு கஷ்டப் பட்டா, நம்ம கஷ்டம் தீராதுடா பார்த்து நடந்துக்கங்க” என்று நொடித்தவர் அவரும் சிவனை பார்க்க கிளம்பிவிட்டார்.

ராஜராஜன் வெகுவாய் எதிர்பார்த்தது மண்டல பூஜை நிறைவு

நாள். அன்று எப்படியும் அங்கை வருவாள் என்று நினைத்திருக்க அவள் வரவில்லை. ஊருக்கு வந்திருந்தாள், ஆனால் கோவிலுக்கு வரவில்லை.

அன்பழகனும் வரவில்லை. அவர் பணி நிமித்தம் காஷ்மீர் சென்று விட, ராஜலக்ஷ்மி மட்டுமே வந்தார். உடன் மனோ, கரிஷ்மா, விகாஸ், அவர்களுடன் ரதி.

ஸ்ருஷ்டி வரவில்லை. அத்தைக்கு துணையாய் வீட்டில் அந்த மூன்று வயது வாண்டு இருக்க, இதோ ரதி இவர்களுடன்.

மனோவின் தோளில் நல்ல உறக்கத்தில்.

கோவிலில் ராஜலக்ஷ்மி அமைதியாய் நிற்க, நாச்சி சுவாமிநாதனை பார்த்த பார்வையில், அவர் போய் ராஜலக்ஷ்மியை "வாம்மா" என்றார்.

அதன் பின் தமிழ்செல்வன் செல்ல, அதன் பின் ரயில் பெட்டியாய் நீண்டன அத்தனை உறவுகளும்.

ஆம்! எல்லோரும் வந்திருந்தனர். மற்ற இரு ஆண்மக்கள் அவர்களின் குடும்பத்துடன், பெண் மக்கள் அவர்களின் குடும்பத்துடன்.

இல்லாதது என்று பார்த்தால் அங்கையும் அன்பழகனும்

மட்டுமே!

ராஜலக்ஷ்மியின் கண்கள் ராஜராஜனை தான் தேடியது. அவருமே பிரச்சனைக்கு பின் ராஜராஜனை பார்க்கவும் இல்லை அவனிடம் பேசவுமில்லை.

ஒரு ஓரமாய் ராஜராஜன் நின்றிருக்க, அவனின் பார்வை முழுவதும் மனோ கையில் இருந்த மகளிடம் தான்.

மனோவும் ராஜராஜனை தான் தேடி நின்றான்.

இருவர் கண்ணிலும் ராஜராஜன் பட, ராஜி அவனை பார்த்து அதிர்ந்து நின்று விட, மனோ அவனை நோக்கி வந்தான்.

அவனின் முன் வந்து நின்றவன், “உங்க மகளை கையில வாங்குவீங்களா மாட்டீங்களா? என்ன தான் நினைச்சிட்டு இருக்கீங்க?” என்று சற்று அதட்டலாகவே கேட்டான்.

அதையெல்லாம் உணரும் நிலையிலேயே இல்லை ராஜராஜன், “தூங்கிட்டு இருக்கா, கை மாத்துனா எழுந்துக்குவா, பாதில எழுந்தா ரொம்ப அழுவா? அப்புறம் சமாளிக்க முடியாது. அவங்கம்மா வரணும்” என்று நீண்ட விளக்கம் கொடுக்க,

“நான் பூஜைக்கு நிக்கணும் தானே, நீங்க வாங்கிக்கங்க”

என்றான் தணிவாகவே.

ஒரு பயத்தோடே வாங்கினான், அழுது விடுவாளோ என்று. கை மாறியதும் சிணுங்கினாள் தான். ஆனால் அப்பாவின் அணைப்பை உணர்ந்தாளோ என்னவோ? கையை அவன் கழுத்தை சுற்றி போட்டுக் கொண்டு, வசதியாய் அப்பாவின் கழுத்தின் கீழ் முகத்தை புதைத்து கொள்ள, மகளை அவனின் ஷர்ட் பட்டன் உறுத்துமோ என்று மெதுவாய் முதல் இரண்டு பட்டன்களை விடுவித்து, காலரை பின் தள்ளி விட்டவன், கழுத்தை நன்றாக பின் சாய்த்து வைத்துக் கொண்டான்.

எல்லோரும் பூஜைக்கு உள்ளே போக, “நான் இங்க கொஞ்ச நேரம் இருக்கேன்” என்று வெளியில் நின்று விட்டான்.

அதற்குள் ராஜலக்ஷ்மி மகளை அழைத்தவர், “ராஜனுக்கு உடம்பு சரியில்லை போல, பார்க்கவே என்னவோ போல இருக்கான். எனக்கு மனசுக்கு என்னவோ பண்ணது” என்று சொல்லியிருந்தார்.

அதன் பின் அவளின் கால்கள் அவளின் பேச்சை கேட்கவேயில்லை. அதன் பாட்டிற்கு கோவிலை நோக்கி நடை கட்டியது.

ஸ்ருஷ்டியும் அவளும் நடந்து கோவிலை அடைந்தனர். சற்று தூரம் தான், பாதி அவளை தூக்கி கொண்டு, பாதி நடக்க வைத்து என்று கோவிலை அடைந்தனர்.

உள்ளே நுழைந்ததுமே அவள் கண்டது, அங்கிருந்த கோவில் தூணில் சாய்ந்து கண்மூடி அமர்ந்திருந்த ராஜராஜன் தான். இன்னும் ரதி அவன் மீது உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவன் அமர்ந்திருந்த பாவம் மனதை ஏதோ செய்ய, அதிலும் தோற்றம், ஆள் ஏதோ மருத்தவமனையில் ஒரு பதினைந்து நாள் படுக்கையில் இருந்து எழுந்து வந்தவனது போல இருக்க, மனதே ஆறவில்லை.

அவன் அருகில் சென்று ஸ்ருஷ்டியை இறக்கி விட, “மாமா” என்ற அவளின் குரலில் கண் திறந்தான். ஆனால் குரல் அவனை அடையுமுன்னேயே அவளின் வாசம் அடைந்திருந்தது. கண்கள் திறக்க நினைத்தவனை ஸ்ருஷ்டியின் குரல் கண் திறக்க செய்திருந்தது.

அங்கையை பார்த்ததும் கண்களில் ஒரு பரவசம். நல்ல சிகப்பு நிற சல்வாரில் இருந்தாள். அவளின் நிறம் அதற்கு போட்டியோ என்னும்படி மாறி இருந்தது.

இங்கே அதிக வேலையினால் உடல் இளைத்து கறுத்து

இருக்க, ஒன்றரை மாத ஓய்வு, அம்மாவின் கை உணவு, குளிர் பிரதேச இருப்பு அவளை பளபளப்பாய் மாற்றி இருந்தது.

அப்படி ஒரு ஆகர்ஷிக்கும் அழகோடு இருக்க, மகளை கைகளில் அள்ளி இருக்க, அவளை கண்களில் அள்ளி இருந்தான்.

“உடம்பு சரியில்லையா?” என்றாள் தவிப்போடு.

“இல்லையே, நல்லா இருக்கேனே” என்றான் இலகுவாகவே.

“அப்புறம் ஏன் இப்படி இருக்கீங்க”

“எப்படி?”

“ம்ம், பஞ்சத்துல அடிபட்ட பரதேசி மாதிரி” என்று மனதில் பட்டதை அப்படியே சொல்ல,

“ஹேய், என்ன சண்டை பிடிக்க வந்தியா?” என்றான்.

“ஏன் இப்படி இருக்கீங்க ஏதாவது உடம்புக்கு பண்ணுதா?” என்றாள் கண்களில் கலவரத்தை தேக்கி.

“ஒண்ணும் பண்ணலை, நல்லா இருக்கேன். நேரத்துக்கு சாப்பிடலை, அதான் கொஞ்சம் இளைச்சிட்டேன் போல,

சாப்பிட்டா சரியாகிடும்” என்று அவளை தேற்றுவதற்காக சொல்ல,

அது அங்கையை தணிப்பதற்கு பதில் உசுப்பி விட்டது. அப்படி ஒரு கோபம் அங்கைக்கு பொங்கிவிட “ஏன் நான் இல்லைன்னா ஒழுங்கா சாப்பிட மாட்டியா நீ? என்னை கல்யாணம் பண்ணும் முன்ன என்ன சாப்பிடாமயா இருந்த, ஹெல்த் முக்கியம்னு தெரியாதா?”

“இப்போ மட்டும் நான் என்ன செத்தா போயிட்டேன், இப்படி உடம்பை கெடுத்து வெச்சிருக்க” என்று வார்த்தையை விட்டாள்.

கோவில் உள் சாவு அது இதென்று பேச,

“அங்கை” என்று அவன் கத்திய கத்தல் உள்ளே சந்நிதானதிற்கே கேட்க, “என்னவோ?” என்று வந்து எட்டி பார்த்தனர். அப்போது தான் பூஜைக்கு ஏற்பாடு ஆகிக் கொண்டிருந்தது.

அவன் கத்திய கத்தலில் ரதிக்கு விழிப்பு வந்து விட்டது.

பின்பு அமைதியாவே “வேலை அதிகம், அதுல நேரம் தப்பி

போய்டுது சாப்பிட முடியாம” என்று ராஜராஜன் அங்கைக்கு விளக்கம் கொடுக்க, அதற்கும் கோபம் அதிகமாகியது.

“என்ன பண்றாங்க உங்கப்பாவும் பெரியப்பாவும், உன் தலையில எல்லா வேலையையும் கட்டிட்டு அவங்க சொகுசா இருக்காங்களா? நான் இல்லைன்னா வேலையை பகிர்ந்துக்க மாட்டாங்களா. எப்பவும் போலவே இருப்பாங்களா?” என அவள் கத்த

“அச்சோ, அவர்கள் காதில் விழுந்து விட்டால் என்ன செய்வது? இருக்கும் பிரச்சனைய போதும்” என்று நினைத்த ராஜராஜன்,

“பேசாம போடி, ஏதாவது பேசின தொலைச்சிருவேன்” என்று ஆவேசமாய் பேச,

வந்தவர்களின் காதில் அது மட்டும் தான் விழ,

“நான் கேட்பேன் அவங்களை” என்று அவள் நிற்க,

“அறைஞ்சேன்னா பாரு, போடி முதல்ல” என்று அவன் கை ஓங்க,

இதெல்லாம் பார்த்திருந்த ரதி "வீல்" என்று கத்த,

பார்த்திருந்த அத்தனை பேருக்குமே என்னடா இது என்று ஆகிப் போனது.

அவளோ கண்களில் அப்படி ஒரு சீற்றம் கொண்டு வந்திருந்தவள், "அடிச்சிருவியா நீ அடி பார்க்கலாம்" என்று அடிக்குரலில் அவனுக்கு மட்டும் கேட்குமாறு வார்த்தைகளை கடித்து துப்பினாள்.

அதற்குள் சுவாமிநாதன் "ராஜா என்ன பண்ற?" என்று சத்தமாக அதட்டினார்.

அவர்கள் குடும்பம் மட்டுமில்லை, அங்கே ஊர் மக்களும் தானே இருந்தனர்.

எல்லோரும் பார்த்து நிற்க, கை இறக்கியவன், "போடி, உனக்கு என்ன பண்ணணுமோ பண்ணிக்கோ" என்று விட்டான்.

கோபம் கொப்பளித்து நின்ற போதும், ராஜனின் இந்த பாவனை அவளை பேச விடவில்லை. அவன் கோபத்தை காண்பித்திருந்தால் நிச்சயம் அவனை விட எகிறியிறுப்பாள். இப்படி நிராசையாய் பேசுபவனிடம் என்ன செய்ய?

ரதியும் அழுகையில் கத்து கத்தென்று கத்தினாள்.

“அழக்கூடாது பட்டு” என்று மகளை அவள் கையில் வாங்க அது அப்படியே அழுகையை நிறுத்தி தேம்பியது.

ராஜராஜன் மகளையே பார்த்திருந்தான். அந்த ஏக்கப் பார்வையில் ராஜராஜனிடம் தானாய் மகளை கொடுத்தாள்.

மகளை கையில் வாங்கியவன் “நீ கிளம்பு” என்றவன் அவளின் வண்டி சாவியை நீட்டினான்.

இது எப்படி என்பது போல அவள் பார்க்க,

“நீ இல்லை, அதனால் உன் வண்டியோட சுத்திட்டு இருக்கேன்” என்று சொன்னவன் சாவியை கொடுக்க,

அவள் அசையாமல் நின்றாள். “ப்ளீஸ், பிரச்சனை வேண்டாம், உன்னால இங்க அமைதியா இருக்க முடியும்னா இரு, இல்லை முடியாதுன்னா கிளம்பிடு. எல்லோர் முன்னமும் எப்பவும் சண்டை போடறோம். எனக்கு கேவலமா இருக்கு, எல்லோர் முன்னமும் காட்சி பொருள் ஆகவேண்டாம்” என்றான் ஆழ்ந்த குரலில்.

பத்தி சொல்லாமல் சாவியை வாங்கிக் கொண்டு அவள்

நடக்க, ஸ்ருஷ்டியும் பின்னே போகப் போக,

“நீ இரு பேபி” என்று அவளை கையில் பிடித்துக் கொண்டவன்,

“விகாஸ்” என்று மனோவின் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தவனை அழைக்க, ஒரே குரலில் ஓடி வந்திருந்தான்.

“நீ அத்தையோட போ” என, உடனே அத்தையிடம் ஓடியிருந்தான்.

எதுவும் நடக்காதது போல அவன் சிவனின் சந்நிதியை நோக்கி நடக்க, மொத்த வீடும் அவனை பார்க்க, அங்கிருந்த வேறு சிலரும் அவனை பார்க்க,

மனோ தங்கையை அடிக்க ராஜராஜன் கை ஓங்கியதால் அவனை முறைத்து பார்க்க,

எல்லாம் உணர்ந்தாலும் எதையும் அவன் கண்டு கொள்ளவில்லை, “என் கடன் பணி செய்வதே” என்பது போல சிவனை நோக்கி அவன் நடக்க, ரதி இப்போது அவனின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

# அத்தியாயம் 23

ஆம்! அவன் கடன் பணி செய்வதே என்று ஆக்கிக் கொண்டான்.

கோவில் பூஜை முடிந்ததும் அவரவர் அவரவர் வீடு செல்ல, ரதியை மனோவிடம் கொடுத்தான். அவன் தானே ராஜனிடம் கொடுத்தான்.

மனோ முறைக்கவும் “அட, என்னங்க நீங்க? சும்மா பில்ட் அப் தான் நான், டம்மி பீஸ், அப்படி எல்லாம் உங்க தங்கையை அடிச்சிட மாட்டேன், அவ என்னை அடிக்காம பார்த்துக்கங்க” என்று இலகுவாக சொன்னவன் வேறு பேசாமல் கிளம்ப,

“ஏன் ராஜன், அத்தை எல்லாம் உன் கண்ணுக்கு தெரியலையா?” என்றார் ராஜலக்ஷ்மி.

அதன் பிறகே “எப்படி இருக்கீங்க அத்தை?” என்றான்.

என்னவோ யாரோடும் பேச பிடிக்காமல் போயிற்று. அவன் உடன் பிறப்புகள் எல்லோரோடும் ஒரு தலையசைப்பு இல்லை ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே பேசினான். இப்போது

ராஜியிடம் பேசினால் “தொ பார்றா, மாமியார் கிட்ட மட்டும் பேசறான்” என்று வரும். அதன் பொருட்டே தவிர்த்தான். அவரையும் பார்த்து தலையசைத்தான் தான். ஆனால் அவர் தான் கவனிக்கவில்லை.

“நீயும் என் பொண்ணும் நல்லா இல்லாம, நான் எப்படி நல்லா இருப்பேன்” என்றார் அவர்.

“அதுக்கென்ன அத்தை, கண்டிப்பா நல்லா இருப்போம்”

“உடம்பை ஏன் இப்படி கெடுத்து வெச்சிருக்க பார்த்துக்கோ ராஜன்”

“நிஜம்மா அத்தை எனக்கு தெரியவேயில்லை. இனிமே கவனமா இருக்கேன், உங்க பொண்ணு கிட்ட சொல்லிடுங்க, எனக்கு ஒன்னுமில்லைன்னு” என்றவன்,

“மில்லுல வேலை இருக்கு அத்தை, நான் போகணும்” என்று அவரிடம் சொல்லி சென்று விட்டான்.

பூஜை முடிந்து மீண்டும் உறவுகள் எல்லாம் அவரவர் இடம்

சென்று விட, அங்கை ஊருக்கு செல்லவில்லை. அந்த ஊரில் இருந்த அவர்களின் வீட்டில் தான் இருந்தாள்.

மனோவும் குடும்பத்துடன் கிளம்பிவிட்டான். ராஜலக்ஷ்மி மகளுடன் இருந்தார். அன்பழகன் காஷ்மீர் பார்டர் சென்றிருக்க, அவர் வருவதற்கு மூன்று மாதம் ஆகும் போல இருக்க, இங்கேயே இருந்து கொண்டார்.

மகள் தான் அவளின் வீட்டிற்கு கிளம்புவது போல தெரியவில்லையே. தனியாய் அவளை எப்படி விடுவது. தான் சென்றால் அவளும் உடன் வரும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் மகளுக்காக அங்கேயே தங்கினார்.

ராஜராஜனும் “நீ வீட்டிற்கு வா” என்று அங்கையை கூப்பிடவில்லை. அவளும் வருகிறேன் என்று சொல்லவில்லை.

ராஜனின் மனதினில் என்ன ஓடுகின்றது என்று ஒருவராலும் அனுமானிக்க முடியவில்லை.

ஆனால் ஒரே யோசனை அவளின் முகத்தில், இதோ இரண்டு நாட்கள் ஆகிவிட்டது. “அன்றும் அப்படி தான் கிளம்பு என்றான், இன்றும் அப்படி தான் சொல்லி விட்டான்” எப்படி போவாள், அவளாய் செல்லவும் மனதில்லை, ராஜராஜனை விடவும் முடியாது.

ராஜலக்ஷ்மி கூட கேட்டார் “நான் கொண்டு போய் விடட்டுமா?” என்று, “வேண்டாம்” என்று விட்டாள்.

அவனின் நினைவாகவே இருக்க, இன்று அவனை மில்லில் சென்று பார்க்கலாமா என்ற யோசனையில் இருந்தாள்.

வெளியில் பைக் நிற்கும் சத்தம் கேட்க, அவனின் பைக் சத்தம் அவளிற்கு தெரியாதா என்ன?

வேகமாய் வெளியில் வர, கேட் வெளியே நின்றிருந்தான் ராஜராஜன். தில்லை அவனின் பைக்கில் இருந்து இறங்கினர்.

வெளியில் வந்த அங்கையை சில நொடிகள் பார்த்தவன், பின் அம்மாவிடம் “நான் அப்புறம் வர்றேன் மா” என்று பைக்கை கிளப்ப,

“நீ உள்ள வரமாட்டியா?” என்றார் பரிதாபமாக.

“எனக்கு வேலை இருக்கும்மா”

“நீ ஃப்ரீயா இருக்கும் போது கூட்டிட்டு வந்திருக்கலாம் தானே” என்றார் அவர்.

அவருக்கு தனியாக செல்ல என்னவோ போல இருந்தது.

“மா, போங்கம்மா, உங்களை என்ன கடிச்சா சாப்பிடுவா அவ, போங்க” என்று அவன் சென்று விட்டான்.

அவன் பார்த்தும் பேசாமல் சென்றது அப்படி ஒரு கடுப்பை கிளப்ப,

“நீ எப்படியோ போடா” என்று அவனை மனதிற்குள் சில கெட்ட வார்த்தைகளில் அர்ச்சித்தாள்.

தில்லை தயங்கி நிற்க, “வாங்கத்தை” என்றாள். அவளின் குரலில் வெளியே வந்த ராஜி “வாங்க அண்ணி, வாங்க” என்று உற்சாகமாக வரவேற்க,

அதன் பிறகே உள்ளே சென்றார்.

“என்ன? எங்கம்மா கூப்பிட்டா தான் வருவீங்களா? நான் கூப்பிட்டா வர மாட்டீங்களா?” என்று அவரை கேட்க,

“இல்லையே, அப்படி இல்லையே” என்று அவர் தடுமாறினார்.

“அங்கை பேசாம இரு” என்று ராஜி சொல்ல,

“அப்படி தான் பேசுவேன், கொண்டு வந்து விட்டுட்டு உள்ள கூட வராம போறாங்க இவங்க பையன். என்னை பார்த்தா எப்படி இருக்கு? வாங்க நாம ஊருக்கு போகலாம்” என்று கோபமாய் பேசினாள்.

“அது வேலை இருக்காம்” என்றார் தில்லை தயங்கி.

“என்ன அண்ணி நீங்க? இவங்க பிரச்சனை இவங்களோட, நீங்க உள்ள வாங்க!” என்று அவர் தில்லையை கை பிடித்து அழைத்து செல்ல, அதன் பிறகே தில்லை சற்று தெளிந்தார்.

ரதி உறக்கத்தில் இருக்க, “பட்டு குட்டியை பார்க்க தான் வந்தேன்” என்று அவளைப் பார்த்த படி சொல்ல,

“அப்போ என்னை பார்க்க வரலையா நீங்க” என்றாள் அதற்கும்.

தில்லை பயந்தே விட்டார்.

“அங்கை” என்று அவளை அதட்டிய ராஜி, “உள்ள போ, அத்தைக்கு தண்ணி கொண்டு வா” என்றார்.

அவள் செல்லவும், “ராஜன் வந்துட்டு பார்க்காம போயிட்டான் இல்லையா, அந்த கோபம் அண்ணி, நீங்க மனசுல வெசிக்காதீங்க” என்றவர்,

பின் உள்ளே வந்து அங்கையிடமும் “இன்னும் ரெண்டு வார்த்தை இப்படி பேசின, அவங்க அழுதுடுவாங்க, அப்புறம் உன் புருஷன் அன்னைக்கு கை தான் ஓங்கினான், இன்னக்கு அடிச்சிடுவான். பிரச்சனையை பெருசு பண்ணாத” என்று கோபமாய் சொல்லி,

“போ தண்ணி குடு, நான் சாப்பிட எடுத்துட்டு வர்றேன்” என்று அவளை அனுப்பி,

சப்பாத்தி குருமாவை எடுத்து வர,

“நான் சாப்பிட்டு தான் வர்றேன்” என்றார் அவசரமாக,

“அண்ணி ஒன்னு தான் சாப்பிடுங்க, ராஜன் இளைச்சிட்டான் இல்லையா, சரியா சாப்பிடலைன்னு இவ கிட்ட சொன்னானாம். அது தான் இதுவரை சமையல் பக்கம் எட்டி பார்க்காம இருந்தவ சமைக்க கத்துக்கறாளாம்”

“இந்த கொடுமையை ரெண்டு நாளா அனுபவிக்கறேன், இன்னைக்கு நீங்களும் அனுபவிங்க”

“அதன் பிறகு ஏன் மறுக்கப் போகிறார், உண்டு விட்டு நல்லா இருக்கு அண்ணி” என்றவர் “இன்னும் இருக்கா” என,

“இன்னும் மூணு சப்பாத்தி இருக்கு அண்ணி” என ராஜி சொல்ல,

மில்லில் வேலை செய்யும் ராமுவிற்கு அழைத்தவர் “அண்ணா இங்க வந்து போங்க” என்று சொல்லி அழைத்து, “நாம மட்டும் ஏன் அனுபவிக்கணும், அவனும் அனுபவிக்கட்டும்” என்று அவர் சொல்லும் போதே ரதி உறக்கத்தில் இருந்து விழிக்க,

அதன் பிறகு தில்லையின் நேரம் முழுவதும் அவளிடமே, இடையில் ராமு வந்து உணவு வாங்கி போக,

“நான் குடுத்து விட்டேன், அங்கை செஞ்சதுன்னு சொல்லுங்க” என்று மட்டும் தான் சொல்லிவிட்டார் தில்லை.

ஆனால் ராமு வோ ஒரு படி மேலே, சற்று நேரத்தில்

அழைத்து "குடுத்தேன், தம்பி சாப்பிட்டிடுச்சு" என்று சொல்ல,

அதன் பிறகு தான் அங்கை சற்று சமன் பட்டாள்.

அப்போதும் தில்லையை விட்டால் இல்லை, "ஏன் இப்படி ஆகிட்டார், நீங்க ஏன் அவரை இப்படி விட்டீங்க" என்று கேட்க,

"எங்க அங்கை விட்டேன், என் பையனை நான் விடுவேனா, என்ன அவனை உருக்குதுன்னு தெரியலை, எதுக்கும் அவனை கூட்டிட்டு ஹாஸ்பிடல் போயிட்டு வாயேன்" எனவும் அங்கை பயந்து விட்டாள் என்னவோ என்று.

அதை அவளின் முகமே காட்டிக் கொடுக்க, "மா நான் மில்லு வரை போயிட்டு வர்றேன்" என்று வண்டியில் கிளம்பினாள். அந்த க்ஷண நேர பயமே அவளுக்கு ஒரு தலை பாரத்தை கொடுத்தது.

"இவளை கூட்டிட்டு போ" என்று ரதிக்கு பால் குடிக்க வைத்து கொடுக்க, அவளை முன் புறம் நிற்க வைத்துக் கொண்டு மெதுவாய் ஓட்டினாள்.

மில்லிற்கு செல்ல அங்கே அவன் இல்லை, "இப்போ தான்

வயல் வரைக்கும் போறேன்னு சொல்லிட்டு போறாங்க”

அவளின் இடம் அல்லாவா அது, அதனால் ரதியை தூக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அவர்கள் அமரும் அறைக்கு சென்று கணக்கு வழக்கு நோட்டை பார்க்க, அதில் எதுவுமே ஒழுங்கில்லை, கம்ப்யுட்டரில் பார்த்தால் அதில் எதுவுமே ஏற்றப் படவில்லை.

கையில் இருந்த பில் புக்கில் தான் வியாபாரம் நடந்து இருந்தது. அதிலும் பலது அங்கைக்கு புரியவில்லை. சில இடங்களில் கணக்கு தப்பாக இருந்தது. நிறைய இடங்களில் இன்னும் பணம் வரவில்லை.

அரை மணி நேரம் பார்க்க தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல ஆகிற்று, தலைவலியும் அதிகமாகிற்று. இந்த நேரத்தில் ரதி சிணுங்க ஆரம்பிக்க, அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டாள்.

தில்லை இவள் வந்ததும் ரதியை சிறிது நேரம் கொஞ்சி விட்டு “கிளம்பறேன்” என்றார்.

“எங்க கிளம்புறீங்க, உங்க பையன் வந்து கூட்டிட்டு போனா தான் அனுப்புவேன், அதெல்லாம் போகக் கூடாது” என்றாள்

கறாராக.

ராஜராஜனின் மீது இருந்த கோபத்தை எல்லாம் தில்லையின் மீது காண்பித்தாள். அவளும் தான் என்ன செய்வாள். ஒன்றரை மாதம் அவனை பார்க்கவில்லை. ஒரு அழைப்பு கூட இல்லை. தினமும் அலைபேசியில் இன்று அழைப்பானா இன்று அழைப்பானா என்று நினைக்க அழைக்கவேயில்லை. அதுவே நான் என்ன அவ்வளவு எளிதாக போய்விட்டேனா அவனுக்கு என்ற எண்ணத்தை கொடுத்திருந்தது.

நேரில் அவளாய் சென்று பார்க்கவே கூடாது என்று நினைத்திருக்க ராஜலக்ஷ்மியின் பேச்சில் அவளையும் மீறி போய்விட்டாள். பார்த்த பிறகு அவனை விடவும் முடியவில்லை, அவனை நெருங்கவும் முடியவில்லை. அவனின் அருகாமை வேறு வேண்டும் என்று மனம் ஏங்க, அவனானால் பார்த்து விட்டு பார்க்காமல் போகிறான், அவளாய் சென்றாலும் அவன் இல்லை, அது எல்லாம் அப்படி ஒரு ஆத்திரத்தை கொடுத்து இருந்தது.

“இந்தாங்க உங்க பேத்திக்கு சாப்பாடு குடுத்து தூங்க வைங்க” என்றவள் அவளின் அறைக்கு சென்று படுத்துக் கொண்டாள்.

“என்ன அங்கை?” என்று ராஜி கேட்க,

“தலை வலிக்குதும்மா, அவர் வந்து அத்தையை பார்த்து கூட்டிட்டு போகட்டும். அதுவும் உள்ள வந்து ரதியை பார்த்த பிறகு அனுப்புங்க, எனக்கு தலை வலிக்குது நானா எழுந்துக்கற வரை எழுப்பாதீங்க” என்றவள் நிஜமாகவே தூங்கி போனாள்.

மதியம் வீட்டிற்கு போன ராஜராஜன் தில்லை இன்னும் வராததை பார்த்து “என்ன கிழவி இன்னும் அம்மா வரலை?” என்றான்.

“வரலையே, உங்கப்பன் வேற இன்னும் சாப்பிடாம உட்கார்ந்திருக்கான்”

“எங்கம்மா எனக்கு சாப்பாடு போடுது, நீ உன் பையனுக்கு போடமாட்டியா, ஒரு நாள் போட்டா குறைஞ்சிடுவியா?”

“நான் எதுக்குடா போடணும், ஏன் அவன் போட்டு சாப்பிட மாட்டானாமா? உங்க பெரியம்மா கூப்பிட்டா, இவன் தான் அப்புறம் சாப்பிடறேன்னு உட்கார்ந்து இருக்கான்” என்று அம்மாவும் மகனும் தமிழ்செல்வனை ஏலம் விட்டனர்.

பின் “போ போய், உங்கம்மாவை கூட்டிகிட்டு வா, உன் பொண்டாட்டியை தான் கூட்டிகிட்டு வர மாட்ட”

அதுவரை வாயடித்த ராஜன் எதுவும் பேசவில்லை,

“இதுக்கு மட்டும் வாயை திறக்காதடா, போடா முதல்ல போய் கூட்டிட்டு வா” என்றார் அதிகாரமாக.

அங்கே சென்றான் ராஜராஜன், வெளியில் நின்று ஹாரன் அடிக்க,

அவனின் செல்ல மகள் தான் முதலில் வந்து எட்டி பார்த்தால் கதவை பிடித்து, இவன் கேட்டின் வெளியே அவள் வாயில் கதவை பிடித்துக் கொண்டு கிட்ட தட்ட முப்பதடி தூரம்.

அவனை பார்த்ததும் படியில் இறங்க முற்பட, அதற்குள் தில்லை வெளியில் வந்தவர், அவளை தூக்கியிருந்தார்.

அதற்குள் இவனும் இறங்கியிருந்தான். உள்ளேயும் சென்று மகளை கையில் வாங்கினான். அப்படியே வெளி திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

ராஜியும் வெளியே வந்தவர், “உள்ள வா ராஜன்” என,

எதுவும் பேசாமல் மகளை கொஞ்சிக் கொண்டு இருந்தான்.

ஆனால் பார்வை அங்கையை எதிர்பார்த்து இருக்க,

“அவ தூங்கறா, மில்லுக்கு வந்துட்டு வந்ததுல இருந்து தலைவலின்னு படுத்துட்டா. திரும்ப ரெண்டு பேருக்கும் வாக்குவாதமா?” என்று ராஜி கேட்க,

“மில்லுக்கு வந்தாளா? எப்போ?” என்றான் அவரை நிமிர்ந்து பார்த்து.

“ஒரு பதினோரு மணி போல வந்தா, திரும்ப இங்க வரும்போது பன்னிரண்டு மணிக்கு மேல இருக்குமே”

“நான் வயலுக்கு போயிட்டேன் அத்தை, அவ வந்த போது இல்லையே”

“வந்து தான் தூங்கிட்டா”

சில நொடிகள் யோசனை, முகத்தில் ஒரு தயக்கம், பின்னே ரதியை தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

பெரியவர்கள் இருவரும் வெளியில் அமர்ந்து கொண்டனர்.

உள்ளே சென்றால், அங்கை பாதி உறங்கியும் உறங்காத நிலை, மிக அதிகமான ஒரு தலைவலி இது போல எல்லாம் வந்ததில்லை. வலி அதிகமாகி தூக்கம் கலைந்திருந்தது.

அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டே இருந்தாள், ராஜராஜன் வந்தது கூட தெரியவில்லை.

“அம்மா” என்ற ரதியின் அழைப்பு அவளை தீண்ட,

“பட்டு அம்மாக்கு ரொம்ப தலைவலி, நீ பாட்டி கிட்ட போ” என்று கண் திறக்காமலேயே சொல்ல,

“என்ன பண்ணுது அங்கை?’ என்ற ராஜனின் குரல் செவியை தீண்ட, வேகமாய் எழுந்து அமர்ந்தாள்.

முதலில் சில நொடிகள் அவன் தானா என்று பார்த்தவள், பின்பு ஆங்காரமாய் பேச ஆரம்பித்தாள்.

“எதுக்கு வந்த நீ? வராத போ! உன்னை நான் கூப்பிட்டேனா? போ! உன்னால தான் எனக்கு தலைவலி, இப்படி எல்லாம் எனக்கு வந்ததேயில்லை, போ! நீ போ! எனக்கு உன்னை பார்க்கவே பிடிக்கலை”

“காலையில வந்துட்டு அப்படியே போன தானே, இப்போ மட்டும் ஏன் வந்த? போ, போ, உன் பின்னே சுத்தணும்னு தான் இப்படி பண்ணறியா, நான் சுத்த மாட்டேன், உன்னை தேடி வரமாட்டேன் போ!” என்று அப்படி ஒரு கத்து கத்தினாள். அவளின் மனதின் அழுத்தங்கள் எல்லாம் வார்த்தையாய் வந்தது.

ராஜராஜன் அவளை கண் இமைக்காது பார்த்து நின்றான். கோபத்தை எதிர்பார்த்தான் தான், ஆனால் இத்தனை ஆவேசத்தை எதிர்பார்க்கவில்லை.

“இப்படி பார்க்காதா எதையாவது உன் மேல தூக்கி வீசிடுவேன் போ, நான் ஏன் உன்னை பத்தி கவலைப் படணும், படமாட்டேன்” என்று அப்படி ஒரு சத்தம்.

ராஜலக்ஷ்மியும் தில்லையும் வேகமாய் என்னவோ ஏதோவென்று உள்ளே வர, அங்கையின் சத்தத்தில், ரதி பயந்து அவனின் அப்பாவின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அப்படி ஒரு உணர்ச்சிகளின் பிடியில் அங்கை இருந்தாள்.

# அத்தியாயம் 24

அம்மாவும் அத்தையும் வந்து தன்னை காட்சி பொருளாய் பார்க்கவும், அழுகையோடு முகத்தை புதைத்துக் கொண்டாள்.

“அத்தை தலைவலிக்கு மாத்திரை எதுவும் இருக்கா?”

“இல்லையே ராஜன்” என்றார் அவர்.

“இவளை பிடிங்க” என்று அவரிடம் ரதியை கொடுத்தவன் வெளியில் கிளம்பி சென்றான், மெயின் ரோட்டில் இருக்கும் மெடிக்கலில் மாத்திரை வாங்கி வர.

பத்தே நிமிடத்தில் மாத்திரையுடன் வந்தவன் படுத்திருந்த அவளை எழுப்பி தண்ணீருடன் கொடுக்க,

அந்த வலியிலும் “என்ன மாத்திரை இது? பேரே இல்லை!” என்றாள்

“ஒரு மாத்திரை கட் பண்ணும் போது பேர் எப்படி வரும், வலி நிவாரணி தான்”

அப்போதும் அவள் மாத்திரையை பார்க்க, “என்னை நம்பவே

மாட்டடி நீ, முழுங்கு முதல்ல” என்று அதட்டினான்.

அதன் பின்னரே வேகமாய் விழுங்கினாள்.

பின் கண் மூடி படுக்க, மெதுவாய் எட்டி பார்த்தான், அம்மாவும் அத்தையும் ரதிக்கு உணவு ஊட்டிக் கொண்டிருக்க, அப்படியே சத்தம் வராமல் கதவை சாத்தி தாளிட்டவன், அவளின் அருகில் வந்து, வாங்கி வந்திருந்த தலைவலி தைலத்தை எடுத்து மெதுவாய் தேய்த்தான்.

அவன் நின்று கொண்டே தேய்க்க, அவன் கை எட்டாத தூரம் படுக்கையில் நகர்ந்து படுத்தாள். வேண்டாம் போல என்று நினைத்தவன் நகரப் போக,

“டேய் உட்காருடா” என்றாள் கடுப்பாக.

அவன் அமரவும் அவன் மடியில் தலை வைத்துக் கொண்டு அவனின் கையை எடுத்து அவளின் நெற்றியில் வைக்க, மெதுவாய் பிடித்து விட ஆரம்பித்தான்.

வெகு சில நிமிடங்களில் அவள் உறங்கி விட, மெதுவாய் அவளின் தலையை தலையணைக்கு மாற்றி கதவை திறந்து வெளியில் வந்தான்.

அங்கே அவளின் மகளை இரண்டு பாட்டிகளும் உறங்க

வைத்துக் கொண்டிருந்தனர்.

ஆனாலும் ஒரு கனமான மௌனம் அங்கே, “அம்மா வீட்டுக்கு போவோமா?” என்றான்.

“உன் பொண்டாட்டியை என்ன பண்ண போற ராஜன்” என்றார் ராஜலக்ஷ்மி பளிச்சென்று.

“எனக்கு கொஞ்சம் டைம் குடுங்க அத்தை” என்றான்.

“எதுக்கு?” என்றார் புரியாதவராக.

“வீட்டுக்கு கூட்டிட்டு போக அத்தை”

“ஏன் ராஜன் என்ன ஆச்சு? நான் கொண்டு வந்து விடட்டுமா? அவளை என்னால சமாளிக்க முடியும்னு தோணலை, நீ நல்லா இருந்தா தான் அவ நல்லா இருப்பா, உன்னை இப்படி பார்த்த பிறகு அவளால தள்ளி இருக்க முடியாது ராஜன். அவளை உன்னோட கூட்டிட்டு போயிடு” என்றார் தெளிவாக.

“கொஞ்சம் எனக்கு டைம் குடுங்க அத்தை”

“தாங்க மாட்டா ராஜன் அவ, உன் மேல கோபம் தான் அதிகமாகும், எல்லோர் முன்னமும் சண்டை போடுவா?”

“நான் அவ கிட்ட பேசறேன் அத்தை”

“என்னவோ போ ராஜன், எனக்கு மனசுக்கு சரியா படலை” என்று வெளியில் திண்ணையில் சென்று அமர்ந்து கொண்டார்.

உறங்காது விளையாடிக் கொண்டிருந்த மகளை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுக்க, ஐந்தே நிமிடத்தில் அவளும் உறங்கி விட, ரதியை கொண்டு போய் அங்கையின் பக்கத்தில் படுக்க வைத்து வெளியே வந்தவன்,

“கிளம்பும்மா” என்றான்.

அவர் அமைதியாய் அவனின் பின்னே வந்தார், வேறு என்ன தான் செய்வார்.

ராஜியிடம் இருவரும் சொல்லிக் கொண்டு கிளம்ப அவர் தலையை கூட அசைக்கவில்லை.

“அத்தை ப்ளீஸ், நீங்க இப்படி உட்கார்ந்து இருக்காதீங்க. உங்க முகம் இப்படி இருந்தது தேடி வந்து சண்டை போடுவா,

எங்களுக்குள்ள இன்னும் தான் முட்டிக்கும்” என்று சொல்லி சென்று விட்டான்.

அவன் சொல்வதில் இருந்த உண்மை புரிய, அங்கை கண்விழித்த போது, முயன்று முகத்தை சீர் படுத்தினார்.

நல்ல உறக்கம், கூட மருந்து, மாத்திரை என ஐந்து மணி நேரம் கழித்து அங்கை கண் விழித்த போது மாலை மங்கி இருக்க,

பாட்டியும் பேத்தியும் வீட்டின் முன் இருந்த காலி இடத்தில் பந்தை போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

“மா பசிக்குது” என்று அங்கை வர, அவளுக்கு உணவை எடுத்து வைத்தவர் “தலைவலி பரவாயில்லையா” என்றார்.

“ம்ம், இப்போ இல்லைம்மா” என்றவள், “அத்தை எப்போ போனாங்க” என்றாள்.

“நீ தூங்கின கொஞ்சம் நேரத்துக்கு எல்லாம்”

“ம்ம்” என்றவள், “ராஜன் எதுவும் சொன்னானா?” என்றாள்.

“ஒன்னும் சொல்லலை” என்று அவர் சொல்ல,

அதற்கு பதிலும் சொல்லவில்லை, வேறு எதுவும் கேட்கவுமில்லை.

பின்பு நேரத்தை பார்க்க ஏழு மணி காண்பிக்க, “மா, ராஜன்க்கு ஃபோன் பண்ணி வீட்ல என் லேப்டாப் இருக்கும் எடுத்துட்டு வரச் சொல்லுங்க” என்றாள்.

“நீயே அங்க போயிடுவா, எதுக்கு இப்போ அது?”

“மா, சொன்னதை செய்ங்க. இல்லை, நான் மனோண்ணா கிட்ட சொல்லி புதுசு வாங்கவா?”

மறு பேச்சு பேசாமல் அவர் அதை ராஜனிடம் தெரிவிக்க, “நான் இங்க வேலையா டவுன் வரை வந்தேன் அத்தை, வர லேட் ஆகும். நாளைக்கு காலையில கொண்டு வர்றேன்” என்றான்.

“எவ்வளவு நேரமானாலும் எனக்கு வேணும்னு சொல்லுங்கம்மா?” என்றாள் பதிலுக்கு.

ராஜியை ஸ்பீக்கரில் பேச சொல்லயிருக்க, ராஜன் சொல்லியது

அங்கைக்கு கேட்டிருக்க, அவள் பேசுவதும் ராஜனுக்கு கேட்டது.

“இப்போ எதுக்கு அவ்வளவு அவசரமாம்” என்றான்.

“என்னவோ அவசரம் அதை தெரிஞ்சி இவர் என்ன பண்ண போறாராம்?” என்று பேச,

இவர்கள் சண்டை முடியவே முடியாதா என்று ராஜியின் மனது வெகுவாக விட்டு போனது.

இரவு ராஜன் வந்த போது பதினோரு மணி, அப்படி ஒரு களைப்பு, அவனின் முகத்தில். ராஜியும் ரதியும் உறங்கியிருந்தனர்.

திண்ணையில் அந்த இருட்டில் அங்கை அமர்ந்திருந்தாள்.

“எதுக்கு இப்படி வெளில தனியா உட்கார்ந்திருக்க?”

“பின்ன என்ன பண்ண? என் புருஷன் அவனோட வீட்டுக்கு என்னை கூட்டிட்டுப் போகலை, அப்போ இப்படி தனியா தானே உட்காரணும்” என்று சொல்ல,

“ப்ளீஸ் அங்கை, என்னால சண்டை போட முடியாது. என்னை விட்டுடு” என்றான் சலிப்பாக.

அங்கையின் முகம் அப்படியே மாறி விட,

அதனை உணர்ந்து, “பாரு, நான் இன்னும் சாப்பிடக் கூட இல்லை. அப்படி என்ன பிடிவாதம் உனக்கு, நாளைக்கு காலையில கொண்டு வந்து குடுப்பேன் தானே” என்றான் இருந்த களைப்பில்.

“சாப்பிடறீங்களா?” என்றாள்.

“இல்லை, அம்மா முழிச்சிட்டு இருப்பாங்க”

“சரி, கிளம்புங்க” என்று வாய் வார்த்தையாய் சொல்லாமல் தலை அசைக்க,

“ரதி என்ன பண்றா?” என்றான்.

“தூங்கிட்டா?”

“சரி, நீ உள்ள போ, நான் கிளம்பறேன்”

“கேட் பூட்டணும் நீங்க கிளம்புங்க”

ராஜன் முன்னே செல்ல, அங்கை பின்னே தான் நடந்து

வந்தாள். நடையை மெதுவாக்கினான், அவள் அருகில் வர, அவன் மெதுவாக, அவளும் மெதுவாகினாள்.

அதனை உணர்ந்தவன் திரும்பி அவளை பார்த்தான்…

அந்த இரவில் வனமோகினியோ எனும் தோற்றம். மதியம் அவன் வந்த போது தலைவலியில் துடித்திருந்தவள் போலவே இல்லை.

மதியம் பார்த்த போது சல்வாரில் இருந்தவள், இப்போது எழுமிச்சை நிற புடவையில் இருந்தாள். அது மேனியை பாந்தமாய் தழுவி இருந்தது. அவளின் மேனிக்கும் புடவைக்கும் வித்தியாசமே தெரியவில்லை.

இருவரும் நிற்க, ஊதக் காற்று வீச, அதில் அவளின் மேனி சிலிர்க்க, அதை பார்த்து தான் அவனின் மேனி சிலிர்த்தது. அந்த காற்று அவனை அசைக்கவில்லை.

“தூங்கி எழுந்து குளிச்சியா?” என்றான்.

“ஆம்” என்று அவள் தலையசைக்க, கிளிப்பிற்குள் முடியை தூக்கி கட்டி இருந்தாள்.

அருகில் வந்தவன் “தலைக்கு தண்ணி ஊத்தினியா” என்று சொல்லி அவளின் கிளிப்பை எடுத்து விட,

வேகமாய் அந்த முடி அவளின் முதுகினில் பரவ, தொட்டு பார்த்தான் ஈரமாய் இருக்கிறதா என்று.

ஈரம் இல்லை, பின்பு இன்னும் நெருங்கி, அந்த கூந்தலில் கைகளை அலைய விட்டவன், "கொல்றடி என்னை" என்ற வார்த்தையை அவன் முடித்த நேரம்,

"உன்னை விடவா" என்றவள் அவனை இன்னுமே உரசி நிற்க, அதுவே தப்பாகிப் போனது.

"நீ என்னை முதலில் தொடுவாயா, இல்லை நான் உன்னை முதலில் தொடுவேனா" என்று அவர்களின் வார்த்தைகளை விட உதடுகள் சண்டையிட காத்திருக்க,

"நீயா, நானா?" என்று கண்களும் பார்த்திருக்க,

கூந்தலில் அலைந்திருந்த கைகள் அதை இறுக்க ஆரம்பித்தது. அது ஒரு வலியை கொடுக்க, "கையை எடு வலிக்குது" என்றாள் உதடு துடிக்க,

"அந்த வலியை நீ எனக்கு குடு, கையை எடுக்கிறேன்" என்றான் அவனுமே.

“முடியாது” என்பது போல அவள் நிற்க,

இன்னுமே கூந்தலை இறுக்கி பிடித்தான்.

“ரொம்ப வலிக்குது” என்றவள் அவனின் கையை எடுத்து விடப் போக, ஒரு கையால் அவளின் கூந்தலை பற்றி இருந்தவன், மறு கையால் அவளின் இடையை சுற்றி தன்னோடு இறுக்க, இரு கைகளிலும் அவனின் பிடி இறுகியது.

வேறு வழியில்லாமல் அந்த வலியை அவனின் உதடுகளுக்கு கொடுத்தாள், அவளின் உதடுகளால். அதன் பிறகே அவனின் பிடி தளர, இருவரின் உதடுகளின் இறுக்கமும் கூடியது. வலிக்க வலிக்க ஒரு முத்தம்!

அவளின் உதடுகள் தடித்து ஓயும்வரை ஒரு முத்தம்!

மெதுவாக அவளை விட்டவன், அவளுக்கு முத்தத்தின் கிறக்கம் தீரும் முன்னமே பேச ஆரம்பித்தான், “என்னை ஏண்டி இப்படி கொல்ற. எனக்கு இதெல்லாம் பத்தாது. என்னை சித்திரவதை பண்ற, உன்னை யார் இப்போ என்னை இதை கொண்டு வர கேட்க சொன்னா, கொஞ்சம் கூட என்னை நினைக்கவே மாட்டியா? இவ்வளவு தொந்தரவு பண்ணாத என்னை” என்று சொல்லி அவன் சென்று விட...

அப்படியே நின்று விட்டாள்.

“இவனுக்கு பத்தாதுன்னா எனக்கு மட்டும் பத்துமா? இவனை பத்தி மட்டும் தான் நினைப்பானா, இருடா உன்னை என் பின்னே கதற கதற சுத்த விடறேன்” என்று அவ்வளவு கோபமாய் நினைத்தாள்.

அவன் கிளம்பிய பிறகு கேட்டை பூட்டி உள்ளே வந்தவள், விளக்கை அணைத்து அப்படியே வாசலில் அமர்ந்து கொண்டாள்.

அவன் வீடு போய் சேரும் நேரத்தை கணக்கிட்டு, “உங்களை தொந்தரவு பண்ணனும்னு எனக்கு எண்ணமில்லை. உங்களை பார்க்கணும் போல இருந்தது அது தான் பிடிவாதமா வர சொன்னேன். நான் உங்களுக்காக சாப்பிடாம தான் காத்துட்டு இருந்தேன், சாரி இனி பண்ணவே மாட்டேன், இப்போ இருக்குற கோபத்துக்கு நேர்ல பார்த்தேன், உன் உதடை ரத்தம் வர்ற அளவுக்கு கடிக்காம விடமாட்டேன். என் முன்னே நானே கூப்பிட்டாலும் வந்திடாத” என்று வாட்ஸ் அப்பில் அனுப்பி விட்டு, ராஜராஜன் அதை பார்த்த குறியீடு கிடைத்ததும், மொபைலை அணைத்து விட்டு அப்படியே அமர்ந்து விட்டாள்.

சில நிமிட யோசனைகள் மனதில், “நான் எங்காவது தவறு

செய்கிறேனா?” என்று

அவளுக்கு தெரியவில்லை, புரியவில்லை, அவள் வளர்ந்த விதத்தில் இப்போது அவள் நடந்து கொள்வதே மிக அதிகமான கட்டுப் பெட்டி தனம் தான்.

“யார் இவன்?எதற்காக இத்தனை நாள் நான் இங்கே உட்கார்ந்து இருக்கிறேன், இப்போதும் இவன் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறேன்”

“கணவன் என்றால் அவன் சொல்வதை எல்லாம் கேட்கவேண்டுமா? முடியாது! நான் வேண்டுமென்றால் அவன் வரட்டும் இனி. ஒரு துரும்பை கூட அசைக்க மாட்டேன்” என்று முடிவெடுத்தவள், உள்ளே சென்று படுத்துக் கொண்டாள்.

அங்கோ அவளின் மெசேஜை பார்த்தவன், அவளை அழைக்க, “அதுவோ சுவிச் ஆஃப் என்று வர, “ரத்த காட்டேரி” என்று செல்லமாய் திட்டி கொண்டே வந்தான். அவளை மீண்டும் பார்க்க மனம் பேராவல் கொண்டது.

உள்ளே வந்தவன் தில்லை இன்னும் அமர்ந்திருப்பதை பார்த்து,

“மா, மில்லுக்கு அவசரமா போகணும். நீங்க தூங்குங்க. நான் வந்து சாப்பிட்டுக்குவேன். எதுக்கு உட்கார்ந்து இருக்கீங்க. நான் எவ்வளவு சொன்னாலும் கேட்கறது இல்லை” என்று சொன்னவனிடம்,

“என்னடா சாப்பிடற நீ, இன்னைக்கு அங்கை என்ன நிக்க வெச்சு தான் கேள்வி கேட்டா? என்னால உன்னை பார்த்துக்க முடியாதா? ஏன் உன்னை இப்படி விட்டேன்னு. நான் என்ன சொல்வேன். என்னால அவளுக்கு பதில் சொல்ல முடியலை” என்று சொல்லும் போதே அவரின் கண்கள் கலங்கி விட,

“அம்மா அவளை உனக்கு தெரியாதா? அவ பேசினதுக்கு வருத்தப் படுவியா?” என்றான் சமாதானமாக.

“அவ பேசினதுக்கு வருத்தம் இல்லைடா, அவ சொன்ன மாதிரி உன்னை சரியா கவனிக்கலையோன்னு மனசு தவிக்குது, எப்படி இருப்ப தெரியுமா, இப்போ நீ பார்க்கவே நல்லா இல்லை!” என்றவர் கண்ணீர் உகுத்தார்.

“மா பாரு, இன்னும் ஒரு வாரத்துல எப்படியாகிறேன்னு”

என்று சொல்லி அவரை உறங்க அனுப்பி, மனம் கேளாமல் அங்கையை பார்க்க திரும்பவும் அந்த இரவில் வந்தான்.

அவளோ அப்போது தான் விளக்கணைத்து படுத்தாள்.

வீடு நிஷப்தமாய் இருக்க, பார்த்தே ஆகவேண்டும் என்ற ஆவல். அங்கை அலைபேசியை அணைத்துவிட்டிருக்க, அவனால் தொடர்பு கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் ராஜிக்கு அழைக்கவும் முடியவில்லை. மிகுந்த கோபம், ஏமாற்றம். இட்ட முத்தம் இன்னம் உடலில் தகிக்க, தணியாதவனாய் தான் வீடு திரும்பினான்.

வீடு திரும்பியவனுக்கு உண்ண பிடிக்கவில்லை, இப்படியாக அவளும் உண்ணவில்லை அவனும் உண்ணவில்லை.

இன்னும் சிக்கல்கள் முளைத்து விட்டன!

காலையில் உணவு மேஜை மேல் இரவு வைத்திருந்த உணவு அப்படியே இருக்க, தில்லை அதனை பார்த்ததும், அப்படி ஒரு கோபமாய் ராஜராஜனை பேசி விட்டார்.

“என்னடா செய்யற நீ? நான் வந்து சாப்பிட்டுக்குவேன்னு தானே சொன்ன. இப்போ சாப்பிடவேயில்லை. என்ன தாண்டா உன் பிரச்சனை?” என்று கோபத்தில் கத்தி விட்டார்.

அந்த வீட்டில் சத்தமாய் பேசவே அனுமதி இல்லை. இதில் கத்தினால்… அவரின் மகன் அவன் உடம்பை கெடுத்துக் கொள்கிறான் என்ற ஆதங்கம் கத்தலாய் வெளியில் வந்தது.

நாச்சி, வாசுகி வந்து விட, பூஜையறையில் இருந்த சுவாமிநாதன் வந்து நிற்க, அண்ணனின் பூஜையை தில்லையின் பேச்சு கலைத்த காரணத்தால் அதை பார்த்த தமிழ் செல்வன் தில்லையிடம் பாய்ந்தார்.

“என்ன இவ்வளவு சத்தமா பேசற, வீட்ல பொம்பளைங்க எப்படி பேசணும்னு தெரியாதா, உன் மருமக சாரல் உனக்கும் அடிக்குதோ? என்ன அந்த புள்ள கத்தி பேசின மாதிரி நீயும் பேசறியா? நேத்து அங்க போயிட்டு வந்தல்ல, அதுதான் அந்த ஓதம் அடிக்குதோ” என்று சொன்னார்.

அவர் பேச பேச ராஜராஜனின் முகம் அப்படியே மாறியது.

அதனை உணர்ந்த ஸ்வாமிநாதன், “தமிழ் பேசாத” என்று தம்பியை அடக்க முற்பட்டார். ஆனால் அதை புரிந்து கொள்ளாத தமிழ்செல்வன் இன்னும் பேசினார்.

“என்ன அண்ணா பேசாத சொல்றீங்க? அவ இந்த வீட்டை விட்டுப் போயிட்டா, இவ போய் அவளை பார்த்துட்டு வர்றா?

யார் கிட்ட சொல்லிட்டு போனா?" என்று அவர் பேச...

ராஜராஜன் வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு "எவ" என்று கேட்டு நின்ற தோற்றம் சுவாமிநாதனுக்கு மனதினில் ஒரு அபாய மணியை கொடுக்க,

"விடு ராஜா, அப்பா ஏதோ கோபத்துல பேசறான்" என்று சொல்ல,

"என்ன கோபமா வேணா இருக்கட்டும். அதுக்காக என் பொண்டாட்டியை இவர் அவன்னு பேசுவாரா. எங்கம்மா என் பொண்டாட்டியை பார்க்க போனாங்க நான் கொண்டு போய் விட்டேன் யாரை கேட்கணும் அவங்க என்று நிற்க

தமிழ்செல்வன் அப்போதும் தில்லையை முறைத்து நின்றார்.

"இன்னும் ரெண்டும் அண்ணிங்களை அப்படி பேசிடுவாரா? மாட்டார்! ஏன் இவர் தங்கச்சி மகள்ன்ற இளக்காரமா?"

"எனக்கும் அங்கைக்கும் பிரச்சனையே இது தான், அவ இங்க என்னோட மனைவி மட்டும் தான், மருமகளை அவ இவன்னு எல்லாம் பேசுவீங்களா பெரியப்பா நீங்கள்ளாம்"

“இப்படி எல்லாம் பேசறதால, அவ வேண்டாம்னு நீங்க பண்ணலை பெரியப்பா. நான் வேண்டாம்னு தான் நீங்க பண்றீங்க, ஊருக்குள்ள குடும்பத்துக்கு அசிங்கமா போயிடக் கூடாதே, அங்கை வந்து குடும்பத்தை பிரிச்சிட்டான்னு கெட்ட பேர் அவளுக்கு வந்துடக் கூடாதேன்னு பேசாம இருக்கேன்.

இல்லை தெரியாம தான் கேட்கறேன் மத்த ரெண்டு அண்ணிங்க இப்படி போயிருந்தா விட்டுருப்பீங்களா, பஞ்சாயத்துக்கு போயிருக்க மாட்டீங்க?”

“எனக்கு நல்லா ஞாபகமிருக்கு, சின்ன அண்ணி வந்த புதுசுல இப்படி தான் ஏதோ பிரச்சனை. அண்ணி கோச்சிகிட்டு போயிட்டாங்க. உடனே நீங்க பின்னாடியே போயிட்டீங்க, அவங்களை கூட்டிட்டு வர, இதுக்கு அண்ணன் மேல எந்த தப்புமில்லை. ஆனாலும் குடும்பமே போய் நின்னு கூட்டிட்டு வந்தீங்க!”

“ஆனா இப்போ வரைக்கும் அங்கை ஏன் வரலைன்னு கேட்கலை. என்னையும் போய் கூட்டிட்டு வான்னு சொல்லலை! என் பொண்ணு இருக்கா, அதை கூட நீங்க யோசிக்கலை பெரியப்பா” என்று நிறுத்த, சுவாமிநாதன் பேச வகையில்லாது

நின்றார்.

“அங்கை கிட்ட அவ ஊருக்கு போனதுல இருந்து நான் பேசலை. ஏன் அவளா என்னை பார்த்த பிறகு வர்றேன்னு சொன்னப்போ கூட நான் தான் வேண்டாம்னு சொல்லிட்டேன்”

“மரியாதை இல்லாத இடத்துல அவ இருக்க வேண்டாம் தான் நான் வர விடலை”

“அக்காங்களை அண்ணன்களை எல்லாம் கண்டிப்பா பூஜைக்கு வந்துடணும்னு நீங்க தான் பெரியப்பா சொன்னீங்க. நீங்க போய் அங்கையை கூப்பிடணும்னு கூட நான் சொல்லலை. ஆனா என்னை கூட கூப்பிட சொல்லலையே. வேணும்னா வரட்டும் தானே”

“வருவா பெரியப்பா வருவா கண்டிப்பா வருவா, எந்த வகையிலையும் அவளுக்கு பொறுத்தமே இல்லாத எனக்காக வருவா, என்னோட பொருந்தி போக அவ எவ்வளவோ விட்டுக் கொடுக்கறா, ஆனா நீங்க என் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நினைக்கலையே பெரியப்பா” என்றே விட்டான்.

“என்னடா ராஜா இப்படி எல்லாம் பேசற?” என்று சுவாமிநாதன் பதற

“யோசிச்சு பாருங்க எங்க கல்யாணம் நடந்து ரெண்டு வருஷம் அவ இங்கயே தான் இருந்தா ஆனா நீங்க கூப்பிடலை, ரெண்டு வருஷத்துக்கு பிறகும் அவங்கப்பா தான் கொண்டு வந்து விட்டார். இப்போவும் அப்படி தான் வேணும்னா வரட்டும்னு”

“இன்னும் நீங்க அவளை உங்க தங்கச்சி மகளா தான் பார்க்கறீங்க. அது தான் இத்தனை அலட்சியம். திரும்பவும் சொல்றேன் அவ இங்க என் மனைவி மட்டும் தான்”

“ஆனா ஒன்னு நல்லா தெரிஞ்சிகிட்டேன் பெரியப்பா. என்னோட வாழ்க்கை உங்களுக்கோ அப்பாவுக்கோ முக்கியமில்லைன்னு. ஆனா என்னால அப்படி சொல்ல முடியாது, அதனால தான் எனக்கு நானே தண்டனை குடுத்துக்கறேன்”

“பாருங்களேன் இது எனக்கு மட்டுமில்லை, என் மனைவிக்கும் தண்டனை. என் மகளுக்கும் தண்டனை” என்றவன் நிற்காமல் வெளியேறி விட…

சுவாமிநாதனுக்கு ஐயோ என்றானது.

“எல்லாம் உன்னால தாண்டி” என்று கோபத்தில் தில்லையை தமிழ்செல்வன் யாரும் என்ன ஏதென்று உணரும் முன்பே அடித்து விட்டார்.

“டேய் என்னடா பண்ற?” என்று நாச்சி சத்தமிட, “தமிழ் நீ பண்றது சரியில்லை” என்று சுவாமிநாதன் சத்தமிட,

“எனக்கு அப்பா அம்மா இல்லை, போக இடமில்லைன்னு தானே இப்படி எல்லாம் பண்றீங்க?” என்று அழுத படியே தில்லை சமையலறைக்கு சென்று விட,

வீடு வீடு போலவே இல்லை.

சுவாமிநாதன் அப்படியே நின்று விட, நாச்சி “எல்லாம் உன்னால் தான்” என்ற பார்வையை அவரை பார்த்து செலுத்தி ராஜராஜனுக்கு அழைத்து “டேய், உங்கப்பா உங்க அம்மாவை அடிச்சிட்டார்டா” என்று சொல்ல,

அடுத்த சில நிமடங்களில் வந்து விட்டான்.

வந்தவன் தமிழ்செல்வனை பார்த்து மிகவும் கோபமாக "உங்களுக்கு எங்கம்மாவோட குடும்பம் நடத்த இஷ்டமிருந்தா நடத்துங்க, இல்லை நீங்க பாட்டுக்கு இந்த வீட்ல ஒரு பக்கமா இருந்துக்கங்க" என பேச

சுவாமிநாதன் தான் இடையில் புகுந்து "விடு ராஜா, என்னவோ ஏறுக்குமாறா பண்ணிட்டு இருக்கான் அவன்" என்று சொல்ல,

ராஜராஜன் அவரின் புறம் திரும்பக் கூட இல்லை.

"நீங்க ஒரு நாள் கூட எங்கம்மாவை மரியாதையா நடத்தலை, உங்களுக்கு கீழ அவங்கன்ற எண்ணம் தான் உங்களுக்கு"

"எனக்கும் அங்கைக்கும் பிரச்சனை வந்தா அது ஊருக்குள்ள ஒரு விஷயம் கிடையாது. ஏன்னா நாங்க முன்ன இருந்து அப்படி தான்"

"ஆனா அம்மா அப்படி கிடையாது, குடும்ப மானம் போகக் கூடாதுன்னு தான் அவங்களை இங்க இருக்க விடறேன், நானும் இங்க இருக்கேன். அவங்களை கூட்டிட்டு தனியா போக எனக்கு

ஒரு நிமிஷம் ஆகாது. ஆனா நான் செய்ய மாட்டேன். ஏன்னா ராயரோட மரியாதை எனக்கு ரொம்ப முக்கியம்" என்று சொன்னவன்,

"கிழவி, உன் பையனை நீ பார்த்துக்கோ, எங்கம்மாவை இனி எதுக்கும் கூப்பிடக் கூடாது" என்றவன்,

"மா, நீ என்னோட மில்லுக்கு வந்து இரு கொஞ்சம் நேரம்" என்று அவரையும் அழைத்துக் கொண்டு சென்று விட்டான்.

"அம்மா நீ பண்றது சரியில்லை, அவங்க ரெண்டு பேர் பிரச்சனையில நீ எதுக்கு ராஜாவை இழுத்து விட்ட" என்று சுவாமிநாதன் சொல்லவும்,

"என்னடா நான் பண்றது சரியில்லை. அப்படி தான் பண்ணுவேன், என் பேரனும் பேத்தியும் கஷ்டப்படுவாங்க. நீங்கல்லாம் சொகுசா இருப்பீங்களோ" என்று நாச்சி சொல்லி செல்ல,

ஊருகேல்லாம் பஞ்சாயத்து செய்பவரால் தன் வீட்டில் ஒன்றும் செய்ய முடியவில்லை.

# அத்தியாயம் 25

நினைத்தது போல ராஜராஜனை கதற தான் விட்டால் அங்கை. எப்படியும் தன்னை அன்று காலையிலேயே பார்க்க வருவான் என்று உள்ளுணர்வு சொல்ல அம்மாவை கூட்டிக் கொண்டு மனோவின் வீட்டிற்கு சென்று விட்டாள்.

அதற்கு தக்கார் போல, வீட்டில் இருந்து அம்மாவை கூட்டிக்கொண்டு மில்லுக்கு செல்லும்முன் அங்கே வர அவர்கள் அதற்கு முன்னேயே கிளம்பியிருந்தனர்.

வீடு பூட்டியிருக்க, உடனே அவளை அழைத்தான் இன்னம் அவளின் ஃபோன் சுவிட்ச் ஆஃப் தான். பின் ராஜலக்ஷ்மியை அழைத்தான், அவர் எடுக்கவும் “என்ன அத்தை வீடு பூட்டியிருக்கு” என்றான்.

“இங்க மனோவை பார்க்க வந்தோம்” என்றார் சங்கடமாக.

“ஓஹ்” என்றவன் “என்ன அச்சு அங்கை ஃபோன்க்கு”

“என்னடி ஆச்சு உன் மொபைல்க்கு” என்று அவர் கேட்பது இவன் காதில் விழுந்தது.

“அதுக்கென்ன நல்லா தான் இருக்கு, நான் அதை ஆன் பண்ணலை. எனக்கு யாரோடையும் பேசற மூட் இல்லை” என்று அவள் பதில் சொல்வதும் இவனின் காதில் விழுந்தது.

கேட்டிருந்தவன் ராஜலக்ஷ்மி பேசும்முன்னமே கை பேசியை அணைத்து விட்டான்.

“ஏன் அங்கை இப்படி பண்ற? பாரு அவன் போன் வெச்சிட்டான்”

“ப்ச், விடுங்கம்மா” என்றவள் கண்களை மூடிக் கொண்டாள்.

இதோ இரண்டு நாட்கள் ஆகிற்று, இன்னும் அவர்கள் வரவில்லை. அவளின் கைபேசியும் உயிர்பிக்கப்படவில்லை.

அவனும் விடாமல் அடித்தான், ஒரு நாளைக்கு நூறு முறையாவது அடித்திருப்பான்.

ம்கூம், அது சொன்னது “நீங்கள் அழைக்கும் நபரின் எண்ணானது தற்போது சுவிட்ச் ஆஃப் செய்யப் பட்டுள்ளது” என்று.

ராஜலக்ஷ்மிக்கோ மனோவிற்கோ அழைக்கவில்லை. அவனின்

மனது துவண்டு போனது, அதனை யார் அங்கைக்கு சொல்வது.

தில்லை தமிழ்செல்வனுடன் தேவைக்கு அதிகமாய் ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. பொதுவில் தில்லை நிறைய பேசும் பெண்மணி, இப்போது என்னவோ அமைதியாகி விட்டார்.

மூன்றாவது நாள் காலையில் உணவு உண்ணாமல் அவன் செல்ல, தில்லை "சாப்பிட்டு போடா" என்றார்.

"பசிக்கலைம்மா" என்று சொல்லி அவன் கிளம்ப,

நாச்சி தான் "என்னடா நானும் பார்க்கறேன், நீ சரியா சாப்பிடறதேயில்லை, ஏன் கல்யாணத்துக்கு முன்ன நீ சாப்பிடவேயில்லையா? இப்போ அவ இல்லைன்னா சாப்பிடமாட்டியா?" என்று பேசினார்.

அங்கே தான் சுவாமினாதனும் தமிழ்செல்வனும் இருந்தனர்.

சுவாமினாதனுமே அங்கே ஊரில் ராஜியும் அங்கையும் இருந்தால் சென்று அங்கையை வீட்டிற்கு வா என்று அழைத்து விடலாம் என்று தான் நினைத்தார்.

ராஜராஜன் அவ்வளவு பேசிய பின் அவருக்கு அது சரியோ, தவறோ, அழைத்து வர தான் நினைத்தார்.

ஆனால் அவர்கள் இல்லை.

“ஏன் கிழவி சும்மா சவுண்ட் விடற. என் கல்யாணத்துக்கு அப்புறம் கூட எங்கம்மா தான் எனக்கு சாப்பாடு சமைச்சாங்க, போட்டாங்க. என்னவோ என் பொண்டாட்டி சமைச்சு போட்ட மாதிரி நீ பேசற, அவ பரிமாறினது கூட இல்லை”

“நிஜம்மா எனக்கு பசியில்லை” என்று அவன் சொல்ல,

“ஏன் பசி இல்லை?”

“அதெல்லாம் எனக்கு தெரியாது. சும்மா நை நைங்காத என்னை பார்த்துக்க, எனக்கு தெரியும்” என்று எரிச்சல் மிகுதியில் கத்தினான்.

“உன் நல்லதுக்கு தாண்டா சொல்றேன்” என்று அவர் தணிவாய் பேச,

“என்ன நல்லது? சாகும் போது இப்படி தான் உன் புருஷன் எனக்கு நல்லது பண்றேன்னு ஒரு கல்யாணத்தை பண்ணி வெச்சு என்னை முடிச்சிட்டு போயிட்டார். இனி நீ கிளம்பாத”

“என்னை யாரும் பார்க்க வேண்டாம். என்னை பார்த்துக்க எனக்கு தெரியும்” என்று அப்படி ஒரு கத்து கத்திவிட்டு செல்ல, வீடே அவனை கவலையாய் பார்த்தது.

உண்மையில் அவனுக்கு நிறைய பசித்தது, ஆனால் உண்ண முடியவில்லை மனதில் ஏதோ ஒரு பாரம்.

அங்கை அன்றி அவனை சரி செய்ய யாரால் முடியும்.

சுவாமிநாதன் ராஜலக்ஷ்மிக்கு அழைத்தார், “ஏன் அங்கை இன்னும் வீட்டுக்கு வரலை?” என்று கேட்க,

“தெரியலைண்ணா, அவளை ராஜன் கூப்பிடவேயில்லை. நான் கொண்டு வந்து விடறேன்னு கூட சொல்லிட்டேன் அவன் வேண்டாம்னு சொல்லிட்டான்”

“நானும் வாசுகியும் வந்து கூட்டிட்டு வரவான்னு அங்கை கிட்ட கேளு”

அவளோ “வேண்டாம், ராஜன் வந்தா மட்டும் தான் நான் வருவேன்னு சொல்லிடுங்க” என்று விட்டாள்.

பெரியவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

“மா, நீ போய் அங்கையை கூட்டிட்டு வரச் சொல்லு” என்று நாச்சியிடம் சொல்ல,

“ஏன் நீ சொல்ல மாட்டியா?”

“மா” என்று சுவாமிநாதன் கத்தி விட்டார், “இப்ப நாம வழக்காடறதா முக்கியம், சொல்றதை செய்” என்று அவர் வள்ளென்று விழ,

நாச்சி “சரி” என்பதை போல தலையசைத்து வைத்தார்.

தில்லை வேறு “ரதி என் கண்ணுக்குள்ளயே நிக்கறா அத்தை. என்ன தான் நான் வளர்த்தாலும், பாருங்களேன் என் கண்ல காமிக்காம கொள்ளாம எப்பவும் கூட்டிட்டு போயிடறா” என்று அவரும் கலங்க,

“போய் கூட்டிகிட்டு வாய்யா” என்றார் நாச்சி ராஜனிடம்.

“போ கிழவி, நான் போகலை” என்று விட்டான்.

“ஏன்யா?” என்றவரிடம்,

“போகலை விடு” என்று விட்டான்.

அதை அங்கையிடம் அப்படியே ஒலிபரப்பு செய்யப் பட,

இத்தனை நாட்களாய் அணைத்து வைக்கப்பட்டிருந்த அலைபேசி உயிர்பிக்கப்பட்டு அவனுக்கு அழைப்பை கொடுத்தது.

அழைப்பை பார்த்ததுமே எடுத்தவன் பேசாமல் அமைதியாய் இருக்க,

“என்ன என்னை வந்து கூப்பிடமாட்டீங்களோ?”

“எதுக்கு நீ எல்லார் முன்னமும் என்னை அசிங்கப் படுத்தவா?” என்றான் அப்படி ஒரு அழ்ந்த குரலில்.

“என்ன உன்னை அசிங்கப்படுத்தினேன்?”

“என்கிட்டே பேசாதடான்னு என்கிட்டே சண்டை போடலாம். ஆனா உங்கம்மாக்கிட்ட சொல்வியா நீ, ஃபோனை சுவிச் ஆஃப் பண்ணிட்டு”

இப்படியெல்லாம் அங்கை நினைக்கவில்லை.

“நீதான் என்னை கூப்பிடலை. நான் கூப்பிட்டாலும் கோபப்பட்ட” என்றாள் இறங்கிய குரலில்.

“உன் மனசுல எங்கோ ஒரு மூலையில இருக்கு இல்லையா நான் உனக்கு தோதில்லைன்னு. அப்படி தான் போல” என்றவனின் குரலில் என்ன இருந்தது என்று தெரியவில்லை.

“நான் எப்போ அப்படி சொன்னேன்” என்றாள் இறங்கிய குரலில்.

“நீ சொல்ல வேண்டாம் அங்கை, ஆனா எனக்கு அப்படி தோணுது”

“சரி உனக்கு தோணுது, அதுக்கு என்ன பண்ணலாம்? நீ அங்க நான் இங்கன்னு இருந்துடலாமா? இல்லை பிரிஞ்சிடலாமா? இதுக்கு என்ன தான் சொல்யுஷன்!”

“நான் போக சொல்லலை, நீ தான் போன”

“போனா விட்டுடுவியா நீ, ஏன் போனேன்? இருந்தா சண்டை வரும்னு போனேன். நீ என்னை தேடறன்னு போனேன், உன்

விரதம் கெட்டுடக் கூடாதுன்னு போனேன், கிளம்பும் போது திரும்பவும் உனக்கும் எனக்கும் சண்டை வந்துடுச்சு. இது தான் சாக்குன்னு நீ எனக்கு ஃபோன் கூட பண்ணலை, தொலைஞ்சது சனியன்னு என்னை விட்டுட்டீங்க” என்றாள் ஆவேசமாய்.

“ஏய் சனியன் அது இதுன்ன தொலைச்சிடுவேன்?”

“என்ன ஃபோன்ல மிரட்டுற, தைரியமிருந்தா நேர்ல வா?”

“எனக்கு உன்னை பார்க்க பிடிக்கலை” என்றான் கடுப்பில்.

“அதை நேர்ல வந்து சொல்லிட்டு போடா, சும்மா முகத்தை பார்க்காம டைலாக் அடிக்க கூடாது”

“பார்த்தா சொல்ல மாட்டேன்னு நினைப்போ உனக்கு”

“சும்மா பேசாத நேர்ல வந்து சொல்லிட்டு போ?”

“எங்க வரணும்”

“மனோ வீட்ல இருக்கேன்” என்று அவள் சொல்ல,

“நீ எங்க இருக்கன்னு கேட்கலை, எங்க வரணும்னு

கேட்டேன்”

“ம்ம், திருச்சி கலக்டர் பங்களாக்கு வா” என்றாள் திமிராக.

இவர்கள் பேசியது மதிய நேரம், உடனே செல்ல முடியாதபடி அவனுக்கு நிறைய வேலைகள்.

அவன் கிளம்பும் போது மாலை ஆறு மணி ஆகிவிட, வீடு வந்து குளித்து உடை மாற்றி அவன் கிளம்ப, தில்லை “எங்கே” என்று கேட்காமல், “அங்கையை பார்க்கவா?” என்றார்.

ஆம்! என்பது போல அவன் தலையசைக்க, “ரதி கண்ணுக்குள்ளயே நிக்கறாடா. டெஹ்ராடூன்ல இருந்தா தூரமா இருக்கான்னு விட்டுடறேன். இப்போ இங்க தானே பார்க்கணும் போல இருக்கு” என்றார்.

“நானும் வருகிறேன்” என்று சொல்லாமல், “நானும் வரவா” என்ற ஒன்று.

“சரி வா” என்று அவரை கிளப்பினான். அதை பார்த்திருந்த சுவாமிநாதன், நானும் வாசுகியும் வர்றோம்” என்று விட,

“எதுக்கு?” என்றான்.

“அங்கையை கூப்பிட” என்றார்.

“நீங்க எதுக்கு கூப்பிடணும், வேணும்னா நான் கூப்பிட்டுக்குவேன்”

“அப்புறம் எதுக்குடா சண்டை போட்ட?”

“என்னை கூட நீங்க கூப்பிடுங்கன்னு சொல்லலையே. அதுதான் என் வருத்தம்”

“சும்மா வர்றதுன்னா வாங்க. கூப்பிடவெல்லாம் வேண்டாம். அவளும் சரி நீங்களும் சரி எனக்கு ரொம்ப முக்கியம், உங்க ரெண்டு பேர் மரியாதையும் உங்களை விட எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியம்” என்று நிறுத்தினான்.

அவர் புரியாமல் பார்க்க,

“விடுங்க பெரியப்பா உங்களுக்கு புரியாது, சும்மா வர்றதுன்னா வாங்க, ஆனா அவ சண்டை போடுவா பெரியப்பா. அன்னைக்கு கோவில்ல உங்க கிட்ட சண்டை போட தான் வந்தா.

அதான் கை ஓங்கிட்டேன்” என்றான்.

“எனக்காக என் மகன் கை ஓங்கினானா” அதுவே அப்படி ஒரு பெருமையை கர்வத்தை கொடுக்க, “எதுக்கு சண்டை போடுவா அங்கை” என்றார்.

“அதுவா நான் இளைச்சி போயிட்டேன் இல்லையா? நீங்க என்னை சரியா பார்ததுக்கலைன்னு சண்டை போட வந்தா” இதை அவன் சொன்ன போது அவனுக்கு ஒரு பெருமை, ஒரு கர்வம்.

“பரவாயில்லைடா, சண்டை பிடிச்சிக்கலாம்” என்று அவர் கிளம்ப,

நாச்சி “நானும் வரேன்” என, தமிழ்செல்வன் மட்டும் தனியாய் நிற்க “டேய், நீ தனியா இருந்து என்ன பண்ண போற, வாடா” என்ற அண்ணனின் அழைப்பில் அவரும் கிளம்பினார்.

இப்படியாக அவர்கள் அங்கே போய் சேர்ந்த போதே ஏழரை மணியாகியது.

ராஜன் வருவான் என்று தெரியும், ஆனால் இப்படி மொத்த

குடும்பமும் வரும் என்று அங்கை எதிர்பார்க்கவில்லை.

இவனை தனியாய் எதிர்பார்த்திருக்க எல்லோரும் வரவும், அவளுக்கு வரவேற்க கூடத் தோன்றவில்லை ராஜனை தான் விழிஎடுக்காமல் பார்த்திருந்தாள். அவனோ கவனமாய் தவிர்த்தான்.

ரதி அப்பாவை பார்த்ததும் தளிர் நடையிட்டு வர, அவளை தூக்கி உச்சி முகர, அவளோ அப்பாவின் முகத்தோடு முகம் முட்டினாள். இரண்டு நாள் தாடியிருக்க, அது அவளின் முகத்தை குத்தும் என கவனமாய் தவிர்த்தவன், “பட்டு குட்டி” என்று அவளை சற்று தள்ளி பிடித்து கொஞ்சினான்.

ராஜலக்ஷ்மியும் கரிஷ்மாவும் வரவேற்று “அங்கை” என்று அவளை அழைக்க, நாச்சி அதனை புரிந்தவராக,

“அவ எங்க வீட்டு பொண்ணு, எங்களை எதுக்கு வரவேற்கணும் உங்க வீடு இது” என்று பேசினார்.

“அதானே” என்று அம்மா போலவே சொன்ன ராஜலக்ஷ்மி, “அப்புறம் ஏன் உங்க வீட்டு பொண்ணை இங்க விட்டு வெச்சிருக்கீங்கலாம்” என்றார் பட்டென்று.

அங்கே ஒரு கனமான அமைதி, வந்ததில் இருந்து அங்கையை பார்ப்பதை தவிர்திருந்தான் ராஜன். அவளோ அவனை தவிர யாரையும் பார்க்கவில்லை. கோபமான பார்வை தான்.

எப்படியும் வருவான் என்று தெரிந்ததால் பளிச்சென்று தன்னை அழகு படுத்தி புடவையில் வேறு இருக்க, அவனானால் பார்க்க கூட இல்லை.

ராஜியின் இந்த வார்த்தைக்கு கூட ராஜன் அங்கையை பார்க்க வில்லை.

ஆனால் வீடு மொத்தமும் ராஜராஜனை பார்த்தது. அவனோ மடியில் இருந்த மகளில் லயித்திருந்தான். அவனின் கையில் இருந்த மொபலை மகள் பிடிங்க முயற்சிக்க அவன் ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தான்.

அங்கே இருந்த அமைதி அப்படியே இருக்க, பிறகே நிமிர்ந்தான்.

எல்லோரும் அவனை பார்ப்பதை பார்த்து “என்ன கிழவி?” என்று நாச்சியை பார்த்து கேட்க,

“ஒன்னுமில்லை” என்ற பதில் அங்கையிடமிருந்து வந்தது.

"என்ன ஒன்னுமில்லை?" என்று நாச்சி கேட்க,

"பேசாம இருங்க பாட்டி, என்னை இதை விட யாரும் அசிங்கப் படுத்த முடியாது. நீங்கல்லாம் சொல்லி இவர் என்னை வீட்டுக்கு கூட்டிட்டு வரணுமா?" என்று விட்டாள்.

"அம்மாடி இது என்ன பூதம் வரும் என்று நினைத்தால், பூகம்பம் வருகிறது" என்று நொந்து போன ராஜராஜன்,

அப்படியே பாட்டியிடம் பாய்ந்தான், "என்ன கிழவி? என்ன உன் பிரச்சனை?" என,

"ஏன்டா இன்னம் என் பேத்தியை வீட்டுக்கு கூப்பிடலை"

"என்ன பேசற நீ? அவ வீட்டுக்கு வர்றதுக்கு அவளை யார் கூப்பிடணும். அவ வரலையா அதுக்கு காரணம் இருக்கும். நான் கூப்பிடலையா அதுக்கு காரணம் இருக்கும். அது எங்களுக்குள்ள.

உங்களை யாரு பஞ்சாயத்து பண்ண சொன்னா? அதுக்கு வந்து இருந்தீங்கன்னா, தேவை கிடையாது, நீங்க கிளம்புங்கன்னு என்னால சொல்ல முடியாது. நான் கிளம்புறேன்" என்று மகளை

தூக்கி எழுந்து நின்று விட்டான்.

“ராஜா, என்ன இது? பேசாம உட்காரு!” என்று சுவாமிநாதன் அதட்ட,

“பாட்டி நீங்க பேசவே கூடாது, வாயை மூடிட்டு இருங்க” என்று அங்கையும் அதட்டினாள்.

அதன் பிறகு அங்கே பொதுவான பேச்சுக்கள், மனோ வந்திருக்க வில்லை.

எல்லோருக்கும் என்ன உணவு கொடுப்பது, வீட்டில் செய்யவா? கடையில் சொல்லலாமா? என்று ராஜியும் கரிஷ்மாவும் பேசி நிற்க,

தில்லை ரதியின் மீது பார்வையை வைத்திருந்தார்.

ராஜராஜனோ யாரிடமும் ரதியை விடாமல் அவனே வைத்திருக்க, எப்போதும் போல ஸ்ருஷ்டி அத்தையினிடத்தில், அவளின் முந்தானையை பற்றியபடி செல்லம் கொஞ்சிக் கொண்டிருக்க,

அப்போது தான் ஏதோ வகுப்பிற்கு போய்விட்டு விகாஸ் உள்ளே நுழைந்தான்.

ராஜராஜனை பார்த்தவுடன் பையை எரிந்து விட்டு ஓடி

வந்தவன், “ஏன் இவ்வளவு நாளா வரலை? அத்தையே இங்க தான் இருக்காங்க. நீங்க ஏன் வரலை, டெய்லி நீங்க வருவீங்கன்னு அத்தை சொன்னாங்க, இன்னைக்கு கூட மதியமே வருவீங்கன்னு சொன்னாங்க, ஆனா நீங்க இப்போ தான் வர்றீங்க” என்று கேள்வி கேட்டு நின்றான்.

அங்கை அவனை எதிர்பார்த்திருந்ததை எல்லோர் முன்னும் போட்டுடைத்தான்.

இப்போது அங்கை அவனை பார்க்கவில்லை, அவள் வேறு புறம் திரும்பிக் கொள்ள, ராஜன் அங்கையை பார்த்தான்.

“மாமா, பதில் சொல்லுங்க”

“ஏன்டா உங்க அத்தை கேட்க சொன்னாளா?” என்று ராஜன் கேட்க,

“அவங்களுக்கு கேட்கணும்னா அவங்க கேட்பாங்க. நான் ஏன் கேட்கணும்” என்று விகாஸ் சொல்ல, ராஜன் சத்தமாய் சிரித்து விட்டான்.

“வெச்சு செய்யறீங்க டா என்னை”

“என்ன செய்யறோம்?” என்றான் அதற்கும்.

“டேய், போதும் விடுடா”

“அதெல்லாம் முடியாது, ஏன் வரலை?”

“அதுதான் இப்போ வந்துட்டேன் தானே”

“இப்போ வந்துட்டீங்க, ஆனா முன்ன ஏன் வரலை?”

அவனின் கேள்வியில் எல்லோரும் அசந்து நிற்க,

ராஜன் பதில் சொல்ல முடியாதவனாகி கண்களால் அங்கையை “காப்பாற்றி விடு” என்பது போல வேண்ட,

அதனை எல்லோரும் பார்த்தனர். அங்கை அவனை ஒரு அலட்சிய பார்வை பார்த்தபடி அவனின் அருகில் வந்தவள், ரதியை தூக்கி தில்லையிடம் கொடுத்து,

ஸ்ருஷ்டியை ராஜனிடம் விட்டு, “விக்கி அம்மா நிறைய ஐடம்ஸ் செய்யறாங்க. நீ உன்னோட மெனுவை சொல்லிட்டு வா” என்று அவனை அனுப்பி அவளின் ரூம் உள்ளே சென்று விட்டாள்.

செல்லும் அவளின் முதுகை தான் பார்த்திருந்தான்.

சரியாய் அந்த நேரம் மனோ வந்து விட, அவன் வீட்டினனாய் எல்லோரையும் பார்க்க, ராஜன் மெதுவாய் எழுந்தவன், ஸ்ருஷ்டியை மனோவிடம் கொடுத்து அங்கையின் அறையை நோக்கி சென்றான்.

இவனை எதிர்பார்த்திருந்தவள் போல இருந்தவள் இவன் உள்ளே நுழைந்ததும், "நீங்க மட்டும் வருவீங்கன்னு தான் நினைச்சேன்" என்று சொல்ல,

அவளை முறைத்து நின்றான்.

"நிஜம்மா நீங்க மட்டும் வருவீங்கன்னு தான் நினைச்சேன், பாருங்க முந்தானை சொருகி தான் இருக்கேன், ஒன்னும் தெரியாது" என்று சொல்ல,

அதற்கும் அப்படியே தான் நின்றான்.

"நான் அதுக்கு தான் இருந்த இடம் விட்டு அசையலை" என்றாள் மீண்டும்.

முறைத்தபடி அருகில் வந்தான்.

அவள் அப்படியே நிற்க,

அவளின் எதிரில் நின்றவன், கைகளை அவளின் முதுகின் புறம் சென்று அதனை தொட்டு “எதுக்குடி இவ்வளவு லோ கட்” என்றான்.

“உன்னை யாருடா எல்லோரையும் கூட்டிட்டு வர சொன்னா, சொல்லிட்டு வர மாட்டியா?”

வாய் அவளை கேள்வி கேட்டு கொண்டிருந்தாலும் கைகள் அவளின் லோ கட் ப்ளௌசில் இருந்த கயிற்றை அவிழ்க்க, அவள் ஏதோ பேச நினைத்தாலும் அவளின் வாயில் வெறும் காற்று தான் வந்தது.

அவனுக்கு இப்படி உடை அணிந்தால் பிடிக்காது. அதற்காகவே ரெடி மேட் ப்ளோவ்ஸ் பின் புறம் வெறும் கயிறு மட்டுமே இருக்க அதனை அணிந்திருந்தாள். முந்தானையை முழுவதுமாய் முதுகை மறைத்து சொருகி இருந்தால், மற்றவர்களுக்கு தெரியாது. ஆனால் அவள் திரும்பி நடக்கவுமே ராஜன் கண்டு கொண்டான்.

அவர்களின் சண்டை எல்லாம் பின்னுக்கு போய் இப்போது அவளின் உடை முன் நின்றது.

“சொல்லுடி” என்று உடல் உரசி நிற்க,

அவள் பதில் பேசாமல் கையை எடுத்துவிட முயன்றாள்.

“என் கையை எடுத்து விட்டா என் கையோட உன் ப்ளௌசும் வரும் பரவாயில்லையா?” என்று கேட்.டு நின்றான்.

“என்னை பார்க்க பிடிக்கலைன்னு யாரோ சொன்னாங்க?”

“அதுவா வார்த்தை கொஞ்சம் மாறிப் போச்சு, உன் முகத்தை பார்க்க பிடிக்கலைன்னு சொன்னேன்” என்று அசராமல் பதில் சொல்ல,

அங்கை முறைத்து நிற்க, “முகத்தை தவிர வேற எல்லாம் பார்க்க பிடிக்கும்” என்று வாய் ஜாலம் பேச, கைகள் அவளின் முதுகில் வேறு ஜாலங்கள் செய்ய,

அங்கைக்கு கால்கள் நடுங்க துவங்கியது, கீழே விழாமல் இருக்க அவனை தன் பிடிக்க வேண்டும்.

“என்ன? பேசற என் வாயை கடிக்கணும் போல தோணுதா? கடிச்சிக்கோ!” என்றான் அதற்கும்.

கடிக்கும் முடிவில் இருந்தாளோ என்னவோ அதற்குள் “அத்தை” என்றபடி விகாஸ் உள்ளே நுழைந்து விட்டான்.

வேகமாய் அங்கையை மறைத்து ராஜராஜன் நின்று “என்ன விகாஸ்?” என,

“பாட்டி உங்களுக்கு வெஜ் சமைக்கவா நான் வெஜ் சமைக்கவா கேட்டாங்க” என்று நிற்க,

“முதல்ல உன்னை சாப்பிட விட சொல்லுடி” என்று அங்கைக்கு கேட்குமாறு முனுமுனுத்தவன்,

“டிரெஸ்ஸை மாத்திட்டு வெளில வா” என்று அவளிடம் வார்த்தைகளை கடித்து துப்பி,

“வா நானே சொல்றேன்” என்று விகாஸை கூட்டிக் கொண்டு வெளியே செல்ல,

கட்டுக்குள் வர முயற்சித்து அப்படியே அமர்ந்து விட்டாள் அங்கை.

# அத்தியாயம் 26

எல்லோரும் பேசிக் கொண்டிருக்க அங்கை வெளியில் வந்த பாடாய் காணோம்.

ராஜன் விகாஸிடம் “அத்தையை கூட்டிட்டு வா” என்று சொல்லிக் கூட முடிக்கவில்லை, மனோவிடம் இருந்த ஸ்ருஷ்டி வேகமாய் இறங்கி ஓடினாள் அத்தையை கூப்பிட,

அங்கை இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ஸ்ருஷ்டி ஓடி அத்தையின் கையை பிடித்து இழுத்து “வா” என்றாள்.

“நான் வரலை பேபி, நீ போ” என்று அவளின் கன்னத்தில் முத்தமிட்டு அனுப்பினாள்.

“மாமா, அத்தை வரலை” என்று ராஜனிடம் ஸ்ருஷ்டி ஒலிபரப்ப, “என்ன பண்றாங்க” என்றான்.

“உட்கார்ந்து இருக்காங்க” என்று சொல்ல,

“நான் போறேன்” என்று விகாஸ் எழ,

அவசரமாய் எழுந்த ராஜன் “நான் போறேன்” என்றான். பின்னே உடையை மாற்ற சொல்லி ஆரம்பித்து வைத்து வந்தான். ஒரு வேளை மாற்றாமல் இருந்தால். அவன் பயந்தது போல மாற்றவேயிலை.

“அங்கை” என்று அவளின் முன் நின்றான் இந்த முறை கவனமாய் கதவை தாளிட்ட படி, அவள் அப்படியே அமர்ந்திருக்க,

“எல்லோரும் வெளில இருக்காங்க, உன்னை பார்க்க தான் வந்திருக்காங்க, நீ உள்ள உட்கார்ந்து இருந்தா நல்லா இல்லை”

“கழட்டி விட்டுட்டு வா வான்னா எப்படி வருவேன், எனக்கு இதை கட்ட முடியாது, அம்மா தான் கட்டி விட்டாங்க, இங்க வேற ட்ரெஸ் கிடையாது”

“எப்படி எங்கம்மாவை கூப்பிட்டு என் வீட்டுக்காரர் கழட்டி விட்டுட்டு போயிட்டார், நீ கட்டி விடு சொல்வேனா? இல்லை வேற ட்ரெஸ் குடுன்னு சொல்வேனா?”

“எல்லாம் உங்களுக்கு தான் தெரிஞ்ச மாதிரி பண்ணக்

கூடாது" பொறிய

“இப்போதைக்கு கட்டி விடறேன், அப்புறம் வேற ரூம் போய் மாத்திக்கோ” என்று அருகே வர,

“என்னை தொட்ட பிச்சிடுவேன் போடா நீ”

அவள் பேசப் பேச கண்டுகொள்ளாமல் அருகில் வந்தவன், அவளுக்கு பின் புறம் சென்று அந்த கயிற்றை எடுத்து கட்டிக் கொண்டே, “எப்போடி வாங்கின இதெல்லாம், இனிமே நீ தனியா ட்ரெஸ் எடுக்க போ” என்று மிரட்டலாய் பேசி கட்ட,

“ஓவரா பேசின வெஸ்டர்ன் அவுட் ஃபிட்க்கு மாறிடுவேன்”

அதற்கு பதில் பேசாமல் முடிசுச்களை போடா, அதற்குள் அவளின் வெண்மையான முதுகு அவனுக்கு அழைப்பு விடுத்தது. என்ன முயன்றும் முடியாமல் அதில் இதழ்களை பதித்தான்.

எதிர்பார்க்காதவள் விலக நினைக்க, அசையக் கூட முடியவில்லை.

“விடு என்னை பேச வைக்காதே” என்று அவள் பேசிய விதத்திலேயே உணர்வுகள் குறைய,

“என்ன நான் இப்படி ஆகணும்னு தானே இதை போட்ட, இப்போ கூடாதுன்னா எப்படி?”

“இந்த ட்ரெஸ் போட்டா தான் இப்படியாவியா இல்லை ஆக மாட்டியா, பேசாம போயிடு. சும்மா கிஸ் பண்ணிட்டு விட்டுட்டு போயிடுவ. இப்போ வீடு பூரா ஆளுங்க இருக்காங்க” என்று கடினமான குரலில் பேச,

“எதுக்கு இவ்வளவு கோபம்” என்று தன்மையாய் சொன்னவன், “இனிமே இப்படி போடக் கூடாது” என்றான் அப்போதும் காரியத்தில் கண்ணாய்,

“அப்படி தான் போடுவேன், போ, உன்னால முடிஞ்சதை பண்ணிக்கோ” என்று வெளியில் போகப் போக,

“இருடி இன்னும் ஒன்னு கட்டவேயில்லை” என்று கட்டி விட்டு முந்தானையை எடுத்து அவனே சொருகி விட்டு, அவளை சுற்றி வந்து “ஒன்னும் தெரியலை போ” என்று சொன்னான்.

அவனை முறைத்து வெளியே போகப் போக,

"என்னவோ என்னை பார்த்தவுடனே பேசற என் உதடை கடிக்க போறேன்னு சொன்ன" என்று முன்னே சென்று நிற்க,

"கடிக்க மாட்டேன்னு நினைக்காதே, ஆனா இப்போ முடியாது" என்று சொல்லிச் செல்ல,

"ம்ம்ம், தெளிவா இருக்கா" என்று நொந்தபடி அவன் வெளியில் செல்ல, அதற்குள் வேறொரு அறைக்குள் புகுந்து வேறு ஒரு சுரிதாருக்கு மாறி வந்திருந்தாள்.

இதுதான் அங்கை! என்ன தான் வாயடித்தாலும் உடை விஷயத்தில் ராஜராஜனை திருமணம் செய்த பிறகு அவனுக்கு தக்கபடி மாறிக் கொண்டாள்.

ராஜலக்ஷ்மி அவளின் உடை மாற்றத்தை பார்த்ததும் சிரிக்க, "இப்போ எதுக்கு சிரிக்கறீங்க?" என்று அவரிடம் கத்த, எல்லோரும் என்னவோ என்று திரும்ப பார்த்தனர்.

பின்னே போடும் முன்னமே சொன்னார் "ராஜன் பார்த்தா திட்டுவான், போடாதே" என்று. வேண்டுமென்றே போட, இப்போது மாற்ற, அதில் அம்மா சிரித்ததும் கத்தி விட்டாள்.

உடனே எல்லோரும் வந்து பார்க்க, மனோ வந்து "என்ன அம்மு?" என்றே கேட்க, அவளுக்கு பயம் வந்து விட்டது "எங்கே அம்மா மனோவிடம் சொல்லி விடுவாரோ" என்று.

அது அவர்களின் வீட்டில் ஒரு சாதாரண விஷயம். ஆனால் ராஜனின் வீட்டில் அப்படி அல்லவே, அதையும் விட ராஜராஜன் அவ்வளவு எளிதாய் எடுத்துக் கொள்ள மாட்டான். அதுவே அவளிற்கு ஒரு பதட்டத்தை கொடுத்தது.

"நான் சும்மா பேசினா கூட எல்லோரும் என்னவோன்னு பார்க்கறீங்க" என்ற குரலில் அவ்வளவு சோர்வு.

"ஒன்னுமில்லை மனோ, எனக்கும் அவளுக்கு ஒரு சின்ன விளையாட்டு" என்று ராஜலக்ஷ்மி சொல்ல,

"என்ன விளையாட்டு? அவக்கிட்ட விட்டுக் குடுக்க மாட்டீங்களா? ஏன் அம்மா அவளை டென்ஷன் பண்றீங்க?" என்று மனோ கடிய,

"ஒன்னுமில்லை விடுடா" என்று அவர் அவளை ஆதூரமாய்

பிடித்துக் கொண்டார்.

“நீ போ” என்று அம்மாவிடம் செல்லம் கொஞ்சி வெளியில் வந்து அமர்ந்து கொள்ள,

நாச்சி அவளின் அருகில் வந்து அமர்ந்தவர், அவளிடம் வேறு பேச்சு கொடுக்க, சிறிது மாறினாள்.

என்னவோ அவளின் இலகுவான மனநிலை மாறி விட்டது என்று ராஜனுக்கு புரிய, எல்லோர் முன்னும் பக்கத்தில் வந்து அமர முடியாதவனாக அவளை பார்ப்பதும் வேறு பார்ப்பதுமாய் நேரத்தை கடத்தினான்.

அதற்குள் உணவு தயாராகி விட்டது, பாதி வீட்டில் பாதி வெளியில் வாங்கினர். பின்பு விருந்து அமர்களப்பட, எல்லோரும் உண்டு முடிக்க, நேரம் பத்து மணியை கடந்திருந்தது. எல்லோரும் கிளம்பினர்.

கிளம்பி நின்றவர்கள் அத்தனை பேரும் ராஜனின் முகத்தை பார்த்தனர். அவன் அங்கையற்கண்ணியையும் ரதியையும் அழைத்துக் கொண்டு கிளம்புகிறானா என்று.

அவன் அங்கையை பார்க்க அவள் அவனை பார்க்கக் கூட இல்லை. முகத்தில் போனால் போய்க்கொள் எனக்கொன்றுமில்லை என்ற இறுக்கம்.

ரதியோ பாதி உறங்கியும் உறங்காத நிலையில் ராஜனின் கைகளில் தான் இருந்தாள் இன்னம்.

"பெரியப்பா நான் இருந்துட்டு நாளைக்கு வர்றேன்" என்றுவிட்டான்.

"ஷப்பாடா" என்று எதோ ஒரு ஆசுவாசம் அனைவருக்கும்.

"நாளைக்கு இவங்களை கூட்டிட்டு வர்றியா?" என்று சுவாமிநாதன் கேட்க,

ராஜராஜன் பதில் சொல்லும்முன்னே "நான் வேணும்னா இவன் கூட இருந்து நாளைக்கு இவங்களை கூட்டிட்டு வரட்டுமா?" என்றார் தில்லை.

"அதான் அண்ணன் பேசிட்டு இருக்கார் தானே. உனக்கென்ன நடுவுல பேச்சு" என்று தில்லையிடம் தமிழ்செல்வன் வள்ளென்று விழ,

"இவர் அடங்கவே மாட்டாரா?" என்று ராஜராஜன் நொந்து போனான். எல்லோர் முன்னும் அப்பாவை கடிய முடியவில்லை.

அவன் சுவாமினாதனை பார்த்தான், அதுவே சொன்னது இவரை பேச விடாதீங்க என்று.

ஆனால் அங்கைக்கு அப்படி எதுவும் கிடையாதே!

“பெரிய மாமாவை மறுத்து ஒன்னும் அத்தை பேசலை மாமா, பெரிய மாமா கிட்ட தான் பேசினாங்க. என்ன நடுவுல பேசினாங்க?” என்று விட,

“அங்கை” என்றான் ராஜராஜன் அவளை பார்த்தபடி, அங்கை முகத்தை தூக்கி அமைதியாக,

சுவாமிநாதன் “இருந்துட்டு வாம்மா” என்று தில்லையை பார்த்து சொன்னவர், “நாமா கிளம்பலாமா?” என்று பொதுவாய் கேட்க,

“எல்லோரும் இன்னைக்கு இங்கயே இருங்களேன் மாமா” என்றான் மனோ.

“இல்லை மனோ, வயல்ல வேலை இருக்கு”

“சரி சின்ன மாமாவாவது இருக்கட்டும், அத்தை

இருக்காங்கள்ள” என்றான்.

அவர் தமிழ் செல்வனை பார்க்க, மனோவிடம் “அண்ணன் ஒத்தையா செய்ய கஷ்டப் படுவார்” என்று சொல்ல, இப்படியாக தில்லை ராஜராஜனை தவிர எல்லோரும் கிளம்பினர்.

தமிழ்செல்வனிற்கு தில்லையை விட்டுச் செல்ல மனமே இல்லை, கோபம் கூட. ஆனால் அண்ணனின் கண் பார்வையில் வேறு எதுவும் பேசவில்லை. சண்டை சச்சரவு அடி தடி எது நடந்தாலும், பேசினாலும் பேசாவிட்டாலும், உறங்குவதும் மனைவியின் முகத்தை பார்த்து, விழிப்பதும் அவரின் முகத்தில் தானே. முகத்தை தூக்கி வைத்துக் கொண்டார். தில்லைக்கு அது புரிந்தாலும் அவர் அசையவில்லை. மனோ அவனின் டிரைவரை அனுப்பி விட கிளம்பினர்.

காரில் ஏறி சிறிது தூரம் வந்ததுமே, வாசுகி பேசினார். “எதுக்கு தம்பி தில்லையை பேசிக்ட்டே இருக்கீங்க. அடுத்தவங்க முன்ன நல்லாவா இருக்கு. அவ என்னைக்கும் இவரை எதிர்த்து பேச மாட்டா? நாமலே சும்மா சும்மா இதை கேட்க கூடாது. என்ன ஆச்சு உங்களுக்கு? அன்னைக்கு எல்லோர் முன்னமும் கை நீட்டுறீங்க, இன்னைக்கு பேசறீங்க. சின்னா வயசா அவளுக்கு,

இப்படி பண்ணினா மருமக எல்லாம் அவளை எப்படி மதிப்பாங்க?” என்று குறை பட்டார்.

சுவாமிநாதனும் பேசினார் “டேய், எல்லா புள்ளைங்களுக்கும் கல்யாணம் ஆகிடிச்சு. அவங்களுக்கு அவங்க பெண்டாட்டி புள்ளைங்க தான் முன்ன. நாம எல்லாம் அடுத்தது தான், இனி கடைசி காலத்துல புருஷன் பொஞ்சாதி தானே ஒருத்தருக்கு ஒருத்தர் துணை. எதுக்கு அவளை பேசிட்டே இருக்க, இத்தனை வயசுக்கு அப்புறம் எங்க அப்பா அம்மா இருந்தா அடிப்பீங்களான்னு கேட்கறா? அப்போ நம்மல்லாம் யாருடா தில்லைக்கு?” என்றார்.

இதுவரை எதுவும் பேசாமல் இருந்த நாச்சி,

“எத்தனை புள்ளைங்க இருந்தாலும் காலத்துக்கும் உங்களை பார்த்துக்க போறது ராஜராஜன் தான். நீங்க எப்படி நடந்துக்கிட்டாலும் உங்களை பார்க்கறதுல குறை வைக்க மாட்டான். ஆனா அங்கைக்கிட்ட நல்லா நடந்துகிட்டா சந்தோஷமா பார்த்துக்குவான்”

“மத்த பசங்க பார்த்துக்குவாங்க. ஆனா கூட வெச்சிக்க

மாட்டாங்க. கூட இருக்க மாட்டாங்க, ராஜனும் அங்கையும் தான் இருப்பாங்க. அவங்களை விட்டா நீங்க தனியா தான் இருக்கணும்”

“இதுல நீங்க சரியா நடந்துக்கலை, ராஜன் மட்டும் தான் இருப்பான். அங்கை அவனோட இருக்க மாட்டா. சும்மா சண்டையும் சமாதானமுமா இருப்பாங்க”

“சொல்லப் போனா மத்த மருமகள்களை விட அவ நல்லா நடந்துக்கறா, நல்லா பார்த்துக்கறா. நீங்க அவளை மருமகளா மட்டும் பார்க்கலாம். ஆனா அவ அப்படி மட்டும் பார்க்கலை சொந்தமா தான் பார்க்கறா, அவ வந்ததுக்கு அப்புறம் தான் நம்ம வீடு செல்வாக்கா இருக்கு”

“சொல்ல தான் முடியும், பார்த்து இருந்துக்கங்க. அந்த புள்ளைங்களை நிம்மதியா விடுங்க” என்று நாச்சி பேசும் போதே அழுது விட்டார்.

“மா, என்னமா நீ?” என்று சுவாமிநாதன் சமாதனம் செய்ய,

“டேய், என்ன இருந்தாலும் என் பேத்திடா அவ, கொஞ்சமும் நினைக்க மாட்டேங்கறீங்க. அவங்க கிட்ட பணம் காசு இல்லையா

என்ன? அத்தனை பேருக்கும் புது துணி எடுத்து இருக்கீங்க. ஆனா என் பொண்ணுக்கும் எடுக்கலை, பொண்ணு வீட்டுக்கும் எடுக்கலை”

“என் வீட்டுக்காரர் இருந்தா இப்படி நடந்திருக்குமா?”

“மா, அது ஒரு சம்மந்திக்கு மட்டும் எடுத்து குடுக்க முடியாது. மத்த பசங்க கேட்க மாட்டாங்களா?”

“பார்த்தியா இன்னும் அவங்க உனக்கு சம்மந்தின்னு பேசற. உனக்கு மட்டுமில்லை மத்த பசங்களுக்கும் அவ சொந்தம் தாண்டா. நான் அவ என் பொண்ணுன்னு சொல்றேன், நீ எடுத்து குடுத்தாலும் குடுக்கலைன்னாலும் அவ நல்லா இருப்பா. ஆனா நாம தான் ஒரு துணி கூட எடுத்துக் குடுக்க வக்கில்லாம போயிட்டோம். நீ எடுத்திருக்கவே வேண்டாம். ராஜா கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா அவன் செஞ்சிருப்பானே”

“எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. இனி நான் உங்ககிட்ட இது பத்தி பேச மாட்டேன். என்னவோ பண்ணுங்க?” என்று முடித்து விட்டார்.

அங்கேயோ அங்கை ராஜராஜனை கண்டுகொள்ளவே இல்லை, முழுக்க முழுக்க தில்லையுடன் இருந்தாள் அவரிடம் பேசிக் கொண்டு. ராஜன் ரதியை தூக்கிக் கொண்டு உறங்க அறைக்குள் சென்று விட்டான்.

ராஜலக்ஷ்மியாக “வாங்க அண்ணி தூங்கலாம்” என்று அவரை அழைத்து செல்ல, கரிஷ்மாவை அழைத்த மனோ, விகாஸையும் ஸ்ருஷ்டியையும் தூங்க அனுப்பி விட்டவன்,

“அம்மு ஏன் ராஜன்க்கு ஆட்டம் காமிச்சிட்டு இருக்க, என்ன பிரச்சனை சொல்லு, உனக்கு தெரியாதது ஏதாவது எனக்கு தெரியலாம். ஏன் விஷயங்கள் வளர்ந்துட்டே போகுது? ராஜன் கிட்ட எதுவும் பேசணுமா? அவன் ரொம்ப பண்றானா?” என்னவோ பஞ்சாயத்து ஆஃபிசரின் தோரணையோடு.

அன்பழகன் அவனை பிடித்து வாங்கியிருந்தார், நீ அங்கையை கவனிப்பது இல்லை என்பது போல, அதனால் இந்த பேச்சு. மனோ அப்பாவிற்கு அடங்கின பிள்ளை மட்டுமல்ல, பயந்த பிள்ளையும் தானே!

“சொல்ற மாதிரி எதுவுமில்லை” என்றாள் அலட்சிய பாவனையில்.

“கல்யாணமாகி ரெண்டு வருஷம் தனியா இருந்தீங்க, சேர்ந்து வாழ ஆரம்பிச்ச பிறகும், முட்டிகிட்டு மோதிகிட்டு இருக்கீங்க. இப்போ என்ன பிரச்சனை? அப்பா ரொம்ப கவலைப்படறார். உனக்கு பிடிக்காதுன்னு தெரியும். ஆனாலும் அப்பா சொன்னார்ன்னு தான் பேசறேன்” என்று தெளிவாய் சொல்லி விட்டான்.

ஏனென்றால் அவளின் பாவனையே சொல்லியது “உன் வேலையை பார்த்துட்டு போடா” என்பது போல.

அப்பா என்றதும் தான் பதில் பேசினாள், “என்ன பிரச்சனை வேணா இருக்கட்டும், அதை நான் யார் கிட்டயும் சொல்லணும்னு இல்லை. அப்பாக்கிட்ட சொல்லு. என்னால என் பிரச்னையை தீர்க்க முடிஞ்சா சரி, இல்லை அது பிரச்சனையாவே இருந்துட்டு போகட்டும். மத்தவங்க அதை தீர்க்கணும்னு இல்லை” என்றாள் திமிராய்.

அங்கையின் பதிலில் ஈர்க்கப்பட்டவனாய், “வாவ்” என்று நினைத்து “அம்மாடி, நானெல்லாம் என்ன கலெக்டர்க்கு படிச்சு கிழிச்சேன். இவ பாவமா ராஜன் பாவமான்னு நம்மளால இதுவரை

கண்டு பிடிக்கவே முடியலையே” என்று மனதிற்குள் கௌண்டர் அவனுக்கு அவனே கௌண்டர் கொடுத்துக் கொண்டான்.

“இது தான் அண்ணா லாஸ்ட் உனக்கு, அப்பாக்கு, அம்மாக்கு, எல்லோருக்கும். எனக்கு அட்வைசும் பண்ணக்கூடாது, எப்படி நடக்கணும்னு டைரக்ஷன்ஸ்சும் குடுக்க கூடாது”

“நான் வந்து சொன்னேனா எங்களுக்கு சண்டைன்னு இல்லை ராஜன் சொன்னானா. அவங்க அவங்க வேலையை அவங்க அவங்க பார்த்தா போதும்”

அப்போதும் மனோ விட்டேனா என்று “உனக்கு அங்க எதுவும் அட்ஜஸ்ட் பண்ண முடியலையா, அந்த சூழ்நிலை, வில்லேஜ் லைஃப் எதுவும் பிடிக்கலையா, உன்னால அங்க இருக்க முடியலையா சொல்லு” என்றான் கனிவாய்.

அவனை சிறிது நேரம் பார்த்தவள் “பிடிக்கலைன்னா என்ன பண்ணுவ?” என்றாள்.

“தெரியலை, இனிமே தான் யோசிக்கணும். ஆனா ஏதாவது

பண்ணுவேன்” என்றான் இதுவரை இருந்த இலகுத்தன்மை மறைந்து.

அவளுமே தீவிரமான குரலில் பேச ஆரம்பித்தாள். “எனக்கு பிடிக்கலைன்னா ரெண்டு சாய்ஸ் தான் இருக்கு. ஒன்னு ராஜனை நான் பிரியணும் இல்லை ராஜன் அங்க இருந்து வீட்டை விட்டு வெளிய வரணும், இது எதுவுமே நடக்காது. அதனால் இனி நீ இந்த கேள்வியை கேட்க கூடாது”

“இப்படி இன்னொரு தடவை பேசினா, நான் இங்க வர்றதை பத்தி யோசிக்க வேண்டி இருக்கும். நீயும் தெரிஞ்சிக்கோ அப்பா கிட்டயும் சொல்லு” என்று கடினமான குரலில் சொல்ல,

“ஹேய், என்ன இது, எதுக்கு இவ்வளவு கோபம்?” என்று வெகுவாக அங்கையை மனோ சமாதானம் செய்தான்.

“நீ கலக்டரா இருக்கலாம், கரிஷ்மாவோட புருஷனா இருக்கலாம், உங்கப்பாவோட பையனா இருக்கலாம், ஆனா எனக்கு நீ அண்ணன் மட்டும் தான். இனி என்னை பத்தி ராஜன் பத்தி நீ யோசிக்கக் கூடாது. ஏன்னா நாங்க எங்க சண்டை தொடர தான் செய்வோம், அவனும் ஷார்ப் நானும் ஷார்ப் அப்போ

இப்படி தான் இருப்போம்”

“நாங்க ஒருத்தரை ஒருத்தர் எங்களை ப்ளீஸ் பண்ணிக்கணும்னு நினைச்சதே இல்லை. விட்டு குடுத்து வாழற வாழ்க்கையெல்லாம் எங்களுக்கு வேண்டாம். நாங்க நாங்களா இருக்குற வாழ்க்கை தான் வேணும்”

“நீ அண்ணி பின்ன சுத்துற மாதிரியோ, இல்லை அண்ணி உன் ஒரு ஒரு பார்வையில எல்லா வேலையும் செய்யற மாதிரியோ, நானும் ராஜனும் கிடையாது. அவன் என் பின்ன சுத்த மாட்டான், அவன் கழுத்து சுளுக்கற அளவுக்கு என்னை பார்த்தாலும் எனக்கு செய்ய தோணினா தான் அந்த வேலையை செய்வேன்”

“அதே மாதிரி தான் அப்பாவும், நம்ம முன்னே இல்லைன்னாலும் அம்மா பின்ன தான் சுத்துவார். அம்மாவும் அப்பா பேச்சை மீறவே மாட்டாங்க, தனியா இருக்கும் போது கூடராஜன் லவர் பாய் எல்லாம் கிடையாது”

“சின்ன வயசுல இருந்தே அவனுக்கு நிறைய நிறைய

ரெஸ்பான்சிபிலிடீஸ். பொறுப்பாவே இருந்துட்டான், அவனுக்கு அவனோட வீடு, அவனோட ஆளுங்க, அவனோட பழக்க வழக்கம், பாரம்பர்யம் எல்லாம் முக்கியம். எனக்கு அது என்னன்னு கூட தெரியாது”

“அவனை சுத்தி ஒரு வேலி போட்டுட்டு இருக்கான். அதுல இருந்து வெளில வர மாட்டான். சில நேரம் நான் அந்த வேலிக்கு உள்ள இருப்பேன் பல நேரம் நான் வெளில இருப்பேன்”

“எப்போ எப்படி இருப்பேன்னு சொல்ல முடியாது. ஆனா எப்படி இருந்தாலும் அவனோட தான் இருப்பேன்”

“இவ்வளவு பேசற நீ, எதுக்கு மாசக் கணக்குல டெஹ்ராடூன் போன ராஜனை விட்டு”

“அண்ணா டேய், அவன் விரதம் இருந்தான் டா, நீ பார்த்த தானே அவன் மேல நான் எப்படி தூங்கினேன்னு. அவனை விரதம் முடியற வரை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு போனேன் போதுமா” என்று சொல்லிவிட, மனோவின் முகம் கவலைகள் எல்லாம் போய் மலர்ந்து விட்டது.

“கூட சில பிரச்சனை வந்தாலும் அதை கூட இருந்து பார்த்திருப்பேன். அண்ணா டேய், இந்த கம்பனி ரகசியத்தை வெளில சொன்ன தொலைச்சிடுவேன்”

“சொல்லுவேனே” என்று குதூகலமாய் மனோ சொல்ல,

“யார் கிட்ட வேணா சொல்லிக்கோ, எனக்கு ஒன்னுமில்லை. ஆனா ராஜன்கு தெரியக் கூடாது. அவனுக்கு இந்த பேச்செல்லாம் வெளில பேசறது ஈஸியா எடுக்க மாட்டான். முகத்தை தூக்கி வெச்சிக்குவான். நாம இப்படி, அப்படி, நம்ம மரபு இது நம்ம பண்பாடு இது நம்ம கலாசாரம் இது அதுன்னு என்னை கொன்னு எடுப்பான்”

“உனக்கு தெரியுமா நான் அவனை மிரட்ட என்ன செய்வேன்னு? ரொம்ப பேசின பப்ளிக்ல உன்னை கிஸ் பண்ணிடுவேன்னு சொல்லுவேன்” என சொல்ல,

மனோ அப்படி சிரித்து விட்டான்.

“அதனால இனி யாரும் எங்க வாழ்க்கையை பத்தி பேசக் கூடாது. போ, போய் புள்ள குட்டியை தூங்க வை, கிளம்பு

முதல்ல நீ” என்றாள் அதிகாரமாக.

“ம்ம், டைலாக் தூள் பறக்குது” என்று சிரித்தபடியே மனோ எழ,

“நீ இப்போ போகலை, அடுத்தது என் கைல இருந்து ஏதாவது உன்னை பார்த்து பறக்கும், அப்புறம் அண்ணி வந்து என் புருஷனை அடிக்காதன்னு கண்ணை கசக்கிட்டு நிற்க போறாங்க, பார்த்துக்கோ!”

மனோவிற்கு அப்படி ஒரு சிரிப்பு பொங்கி பொங்கி.

ராஜராஜனிற்கு மனோவின் சிரிப்பு சத்தம் நன்கு கேட்டது. ஏனென்றால் எல்லோர் அரை கதவும் மூடி இருக்க அவன் இருந்தது மட்டுமே திறந்து இருந்தது.

“சரி, நீ போ. நான் கதவை எல்லாம் லாக் பண்ணி செக் பண்ணனும்”

“என்ன? என்கிட்டே பேசினதை அப்பா கிட்ட ஒப்பிக்கணுமா?”

“சே, சே, தேவையில்லை, ரெகார்ட் பண்ணிட்டேன். அனுப்பிடுவேன், நான் சொன்னா அப்பா நம்பறதேயில்லை. நான் உன்னை சரியா கவனிக்கலை சொல்றாங்க”

“அண்ணா டேய்” என்று அவனை அடிக்க வர,

“ராஜன், இவ என்னை அடிக்க வர்றா” என்று மனோ கத்தினான்.

“டேய் லூசு அண்ணா, வாயை மூடு” என்று அவள் சொல்லும் போதே அரை வாயிலிற்கு ராஜன் வந்து விட்டான்.

“ராஜன் இவ என்னை அடிக்க வர்றா?” என்றான் அவனை பார்த்து மீண்டும்.

ரதி உறங்கியிருக்க, பதில் சொல்லாமல் அவன் வாயிலில் வந்து கதவில் சாய்ந்து கை கட்டி அவர்களை பார்த்து நின்றான் தோரணையாய்.

அவனின் தோரணையில் ஈர்க்கப் பட்டவள் அதனை காண்பிக்காமல் “என்ன? என்ன லுக்கு? இங்க என்ன அடி தடி ஷோ காமிக்கறோமா, போங்க உள்ளே. எங்கண்ணா இமேஜ்

டேமேஜ் ஆகறதை நீங்க பார்க்க வேண்டாம்” என்றாள். பதில் சொல்லாமல் அவன் அப்படியே நிற்க,

“அண்ணா டேய், நாளைக்கு அடி வாங்கிக்கோ, இப்போ போ” என்று பெரிய மனது கொண்டு சொல்வது போல சொல்ல,

“நாளைக்கு ஃபுல் டைம் இவளோடவே இருங்க, தனியா விடாதீங்க” என்று ராஜனை பார்த்து மனோ சொல்ல,

“அதெல்லாம் நீ பேசக் கூடாது” என்றாள் அங்கை.

“ஏன்? ஏன் பேசக் கூடாது?” என்று மனோ நிற்க,

“ம்ம், வருஷத்துக்கு ரெண்டு ஹனி மூன் போறல்ல. என்னை அனுப்பினியா நீ, எங்கயும் அனுப்பலை, அதனால் அவர் என்னை தனியா விடாம என்னோடவே இருக்குறதை பத்தி நீ பேசக் கூடாது”

“ம்ம், இதை நீ என்னை பார்த்து கேட்க கூடாது. உன் வீட்டுக்காரரை பார்த்து கேளு” என்று மனோ போட்டுக் கொடுக்க,

“அச்சோ” என்று மானசீகமாக தலையில் கை வைத்தான் ராஜன்.

“அவரை ஏன் கேட்கணும்?” என்றான் புரியாமல்.

“பலமுறை சொல்லிட்டேன், ஒரு முறை டிக்கட் கூட போட்டுட்டேன். அப்போ கூட அசையலை. எப்பவும் ஏதாவது ஒரு காரணம் அந்த வேலை இந்த வேலைன்னு”

“உனக்கு சர்பரைஸ் கொடுக்கன்னு சில முறை சொன்னேன். அப்புறம் இவர் ஒத்துக்காம உன்கிட்ட சொல்லிட்டு, இவர் வரலைன்னா நீ அப்செட் ஆகிடுவன்னு சொல்லலை” என்று முழுவதும் சொல்லிவிட,

“பத்த வெச்சிட்டியே பரட்டை” என்று மனதிற்குள் மனோவை ராஜன் வசைபாடினான். ஆனாலும், அப்போதும், ராஜன் அசையவில்லை, பேசவில்லை, எதுவும் செய்யவில்லை, நின்றது நின்றபடி நின்றான்.

அங்கை நின்று அவனையே பார்க்க,

எதையும் எதிர்கொள்ளும் பாவனையில் நின்றான்!

# அத்தியாயம் 27

“போ, என்னை விட்டு அவனை அடி” என்று சொல்ல,

“சோ, இதை என்கிட்டே சொன்னா நான் போகணும்னு இஷ்டப் படுவேன்னு நினைச்சு சொல்லலை ரைட்” என்று ராஜனை பார்த்து கேட்க,

அவளின் கனமான குரலில் மனோ “அச்சோ” என்று நின்றான்.

“ராஜனோ அப்படியும் சொல்லலாம்” என்றான் தெனாவெட்டாய்.

“அப்படியும் சொல்லலாம் இல்லை அப்படிதான்” என்றாள் விடாமல்.

“சரி அப்படிதான், இப்போ அதுக்கு என்ன?” என்று அவன் பேச,

“சோ, உங்களுக்கு என் மேல நம்பிக்கையேயில்லை, அப்படி எந்த விஷயத்துல உங்ககிட்ட நான் பிடிவாதம் பிடிச்சிட்டேன்”

“நான் சொல்லலை, நீ சொன்ன, நான் ஆமாம் சொன்னேன்

அவ்வளவு தான்”

அவன் அலட்சியமாய் நிற்க, இவள் முறைத்து நிற்க,

மனோ கடுப்பாகி “ரெண்டு பேரும் கத்தி எடுத்து குத்திக்கறது ஒன்னு தான் பாக்கி. அம்மா, இதெல்லாம் பார்த்தா எனக்கு டென்ஷன் ஆகுது. என்னவோ பண்ணுங்க” என்று சொல்லிச் செல்ல,

மனோவின் அருகில் வேகமாக சென்றவள் “அண்ணா நான் பேசினது யாருக்கும் அனுப்பக் கூடாது. ராஜன்க்கு அவனை நான் கெட்ட வார்த்தையில தனியா இருக்கும் போது பேசினா ஒன்னுமில்லை ஆனா யார் முன்னையும் அவன் இவன்ன்னு பேசினா கூட பிடிக்காது”

“நீ அப்பா கிட்ட அனுப்பிடாத”

“டென்ஷன் ஆகாத அனுப்ப மாட்டேன்” என்று சொல்லி சென்று விட்டான்.

அங்கை படுக்கையறையை நோக்கி வரவும், அவளை சீண்டும் விதமாய் “ஹனிமூன்க்கு எதுக்கு ஊருக்கு போகணும், போகாமையே எப்படி என்ஜாய் பண்றதுன்னு நான் கத்துக்

கொடுக்கறேன்” என்று பேசினான்.

“நீ கத்துக் குடுக்கற அளவுக்கு நான் இல்லை” என்று முறுக்கி கொள்ள,

“ஓஹ், எனக்கும் அதிகமா உனக்கு தெரியுமா? சரி, நீ கத்துக் குடு!” என்றான் அதற்கும்.

“நீயும் எனக்கு கத்துக் குடுக்க வேண்டாம். நானும் உனக்கு கத்துக் குடுக்க மாட்டேன், மூடிட்டு போடா,

உன்னால அத்தனை பேரும் என்னை பரிதாபமா பார்க்கறாங்க. சமயம் கிடைச்சா அட்வைஸ்ன்ற பேர்ல என்னை கொல்றாங்க”

“என்னடா எனக்கு குறை? என்ன உன்னோட எனக்கு குப்பை கொட்ட தெரியலை? என்ன பண்றாங்க உன்னை? பக்கத்துல வந்த தொலைச்சிடுவேன், ஓடி போய்டு!” என்றாள்.

டிபிக்கல் ராஜராஜனின் தமிழ் அவள் பேசியது. சில வருடங்களாக நாச்சியுடனும் ராஜனுடனும் இருந்த ஒரு பாதிப்பு!

“ரொம்ப பேசறடி நீ”

“அப்படி தான் பேசுவேன், என்னடா பண்ணுவ?”

“வெளில நின்னுகிட்டு என்ன பண்ணுவ? என்ன பண்ணுவன்னா? ரூம்குள்ள வந்து நில்லு, என்ன பண்ணுவேன்னு காண்பிக்கறேன்”

அவள் முறைத்து நிற்க,

“சும்மா முறைக்காத வா, காஞ்சி போய் கிடக்கிறேன். கொஞ்சம் கருணை காட்டு” என்று சற்று இறங்கி பேசியவன், அவளின் கையை பிடித்து எதிர்பாராமல் இழுத்து விட, அப்படியே அவன் மேல் மோதி நின்றாள்.

“அம்மா” என்று அவன் மேல் மோதிய வலியில் சத்தம் செய்ய,

“பேசற என் உதடை கடிச்சு வெக்கறேன்னு உசுப்பேத்திட்டு, நைட் நைட்டா உன்னை தேடி ஓடி வந்தா, என் கண்ல படாம என்னை தவிக்க விட ஓடி ஒளிஞ்சள்ள, இரு, நைட் முழுசும் உன்னை கதற விடறேன். ரொம்ப பேசற நீ” என்று அவளை உள்ளே இழுத்து ரூமின் கதவை தாளிட்டான்.

“அப்படி தான் பேசுவேன், இன்னும் பேசுவேன், நிறைய பேசுவேன்” என்ற அவளின் குரல் கேட்க,

“எவ்வளவு வேணா பேசு, என்கிட்டே மட்டும் பேசு. நான் என்ன கேட்கமாட்டேன்னா சொல்றேன்” என்ற அவனின் குரலும் கேட்டது.

ஆனால் அதில் திமிரோ தெனாவெட்டோ இல்லை. அவளை கொஞ்சும் பாவனை மட்டுமே! கெஞ்சும் பாவனை மட்டுமே!

இப்படி ஓயாமல் அவர்களின் குரல் கேட்டுக் கொண்டே இருக்கும் என்று நினைக்க, ஒரு நிமிடம் கூட இல்லை வழக்காடல்கள் நின்று விட்டன.

“எதுக்குடி கொலுசும் கண்ணாடி வளையலும் போட்ட, சத்தத்துல ரதி எழுந்துட்டா என்ன பண்ணறது?”.

“புடவை கட்டினேன்னு போட்டேன்” என்றவளின் குரல் மெல்லியதாய் கேட்க,

“என்னடி ப்ளவ்ஸ் அது, கொஞ்சம் நேரத்துல என்னை என்ன என்னவோ பண்ணிடுச்சு” என்றவனின் குரல் கேட்க,

“அத கழட்டி விடறேன்ற சாக்குல கண்ட இடத்துல தொட்டுட்டு, என்னை அப்படியே விட்டுட்டு போயிட்டீங்க. அன்னைக்கு கிஸ் பண்ணிட்டு விட்டுட்ட போயிட்டீங்க. இப்ப எதுக்கு என் பக்கத்துல வர்றீங்க, வராதீங்க போங்க”

“சாரி” என்ற வார்த்தை முடித்து விடும். ஆனால் “அவனோ அப்படி தான் பண்ணுவேன். என்ன பண்ணுவ நீ?” என்று எகிறினான்.

அவளும் விட்டேனா என்று பதில் பேசினாள்.

இப்படியாக ஆர்க்யுமென்ட் கண்டினியுஸ்...

வார்த்தை சண்டைகள்...

வாய் சண்டையாக...

இதழ் சண்டையாக...

உடலும் உடலும் உரச...

மனமும் மனமும் உரச...

உணர்வுகள் பற்றி எரிய...

இப்படி எல்லாம் கண்டினியு ஆகியது.

விடியும் வரை, ரதி எழுந்து விட்டாள்.

அவளை தூக்கிக் கொண்டு வந்து தில்லையிடம் விட்டு, அங்கை உறங்க செல்ல, ராஜராஜனோ குளித்து தயாராகி நின்றிருந்தான்.

“இவள் என்ன?” என்று பார்க்க,

“கிழவியோட அண்ணன் தவறிட்டாராம். நான் போகணும். அந்த ஆத்மன் ஊர் தான், ரொம்ப நாளா பிரச்சனையினால கிழவி அங்க போகலை. இப்போ தான் போக வர இருந்தது. நான் போகணும், போகலைன்னா நல்லா இருக்காது. போயிட்டு கிழவி கிட்ட கேட்கறேன், நீயும் அம்மாவும் வரணும்னா சொன்னா வாங்க” என்று சொல்லி கிளம்பிவிட்டான்.

“தூங்கவேயில்லை நீங்க”

அவளை அணைத்து பிடித்தவன், “பல நாளா தூங்கலை, சில சமயம் ரெண்டு நாள் தொடர்ந்து தூங்கலை. இதொன்னுமில்லை சமாளிச்சிக்குவேன். நீ என்னை தூங்க விடாம அவ்வளவு தொந்தரவு பண்ணின. இப்போவும் தொந்தரவு தான் பண்ணின” என்று ரசனையாய் சொல்ல,

செல்லமாய் அவனின் தோளில் தட்டியவள் “எப்படி

போவீங்க?” என்றாள்.

“பஸ்ல தான் போகணும். அதான் பெரியப்பா கார் எடுத்துட்டு போயிட்டார் தானே”

“அய்யா சாமி, பஸ்ல எல்லாம் போகக் கூடாது. காசு வெச்சு என்ன பண்ண போறீங்க, புதுசு இன்னொன்னு வாங்குங்கன்னாலும் கேட்கலை, அந்த அம்பாசிடர்ல தான் வலம் வர்றது”

“அது என் தாத்தா கார் அங்கை மாத்த மாட்டேன்”

“உங்களை யார் மாத்த சொன்னா? புரிஞ்சிக்கங்க, இன்னொன்னு புதுசு தான் வாங்க சொன்னேன். சரி அதை அப்புறம் பார்க்கலாம், அண்ணி கார் எடுத்துட்டுப் போங்க”

“அம்மாடி, அது ரொம்ப காஸ்ட்லி, கோடி ரூபாய்க்கு மேல. நான் பாட்டுக்கு எடுத்துட்டு போயிட்டு, எங்கேயாவது வண்டில கோடு போட்டுட்டேன்னா, எனக்கு அடிபட்டுடுமான்னு ஓட்டாம, வண்டிக்கு அடி பட்டுடுமான்னு எல்லாம் ஓட்ட முடியாது” என்று சொல்ல,

“இப்படி ஒரு விளக்கம் காஸ்ட்லி கார்க்கு ஊருக்குள்ள யாரும்

குடுத்திருக்க மாட்டாங்க” என்று நொடித்து பேசியவள்,

“போடா” என்ற பார்வை பார்த்து வெளியில் சென்றாள்.

கரிஷ்மா அப்போது தான் எழுந்து வர,

“அண்ணி இவருக்கு ஊருக்கு போகணும் அவசரமா, ஒரு கண்டோலன்ஸ்க்கு. பஸ்ல போறாராம், உங்க கார் எடுத்துட்டு போக சொன்னா, அது காஸ்ட்லின்னு யோசிக்கறார்” என்று ஹிந்தியில் சொல்ல,

ராஜராஜன் புரிந்தும் புரியாமலும் நின்றான்.

அதற்குள் தில்லை வர அவரிடம் விஷயத்தை சொல்ல, “நானும் வர்றேண்டா” என்று அவரும் கிளம்பினார்.

“ராஜன் பாய்” என்று அவனின் அருகில் வந்த கரிஷ்மா,

“உங்களை விட எங்களுக்கு எதுவும் காஸ்ட்லி இல்லை. அதுவுமில்லாம அது என்கிட்டே இருக்கறதுலயே விலை குறைவான கார். பாயி ப்ளீஸ், எடுத்துட்டு போங்க. நான் பல முறை அங்கை கிட்ட புது கார் வாங்கி தர்றேன்னு சொன்னேன், அவ ஒதுக்கலை”

“நீங்க புதுசு வாங்கற வரை இதை எடுத்துட்டு போங்க, இங்க அப்பா எனக்கு பர்த்டேக்கு வாங்கி கொடுத்தது சும்மா தான் நிக்குது. அதை எடுத்துக்குவேன்” என்று அவளின் கொஞ்சு தமிழில் பலவாறாக சொல்லி அவனையும் தில்லையையும் அந்த காரில் அனுப்பி வைத்தாள்.

நாச்சியின் அண்ணனுக்கு இரண்டு பெண் மக்களே! அவர்களுக்கு பிறந்ததும் பெண்களே! இப்போது யார் அவருக்கு கடைசி காரியம் செய்வது? நீ செய், நான் செய் என்று பஞ்சாயத்து ஓடியது!

“சொத்து இருந்தால் அதற்காகவாவது கொள்ளி வைப்பர். இங்கோ அவர் முன்னமே பெண்களுக்கு சொத்து கொடுத்து இருந்தார். மனைவியும் உயிருடன் இல்லை. தனியாய் தான் இருந்தார்.

திடகாத்திரமாக இருந்ததால் அவரின் பெண்கள் துணையும் இன்றி, மகள்கள் வீட்டிற்கு செல்லாமல் இருந்து கொண்டார்.

பங்காளி முறையில் இருப்பவன், கொள்ளி வைக்க முன் வரவில்லை. “அதான் பொண்ணுங்க சொத்தை வாங்கினாங்க தானே, இதை கூட செய்ய மாட்டாங்களா” என்று நின்று விட்டான்.

பெண்களின் கணவன்மார்களும் “எங்களுக்கு சரி வராது” என்று நின்றனர்.

நாச்சியின் அண்ணன் என்ற காரணத்தினால் ஆத்மன் வேறு பின்னால் இருந்து பிரச்னையை தீவிரமாக்கி கொண்டிருந்தார், உண்மையில் பிரச்சனையை அவர் கிளப்பவில்லை. ஆனால் கிளம்பிய பிரச்னையை முடிக்க விடாமல் ஊதி பெரிதாக்கி கொண்டிருந்தார்.

ஆன மட்டும் சுவாமிநாதனும் தமிழ்செல்வனும் உறவுகளிடம் பேசிக் கொண்டிருக்க, அவர்கள் கேட்பதாய் தெரியவில்லை. வெகு நாட்கள் இல்லாமல் இருந்த உறவுகள், இப்போது புதுப்பிக்கப் பட்டு விட்டாலும் அவர்கள் இவர்களின் பேச்சை எடுத்துக் கொள்ளவில்லை.

ராஜராஜன் இதில் வெறும் பார்வையாளன் மட்டுமே. அவன் என்ன பேச முடியும், இல்லை செய்ய முடியும்?

மதியம் வரை இதே பேச்சுகள் ஓடிக் கொண்டிருந்தது. உறவுகள் எல்லோரும் வந்து விட்டனர், இனி காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

அவரின் மகள்கள் ஒரு புறம் அழுது நின்றனர். எதுவும் செய்ய வகையில்லாது.

அப்போது தான் ராஜலக்ஷ்மியும் அங்கையர்கண்ணியும் மனோவும் வந்தனர். மனோ கலக்டர் ஹோதாவிலேயே வந்திருந்தான், அவனின் வாகனத்தில். அங்கையும் ராஜலக்ஷ்மியும் வேறு காரில் வந்தனர், கரிஷ்மா பிள்ளைகளை பார்க்க வீட்டில் இருந்து கொண்டாள்.

“நீயேன் வந்த ராஜி” என்று சுவாமிநாதன் முதல் முறை சற்று உரிமையாய் கடிந்தார்.

ஆத்மனின் ஊர் அல்லவா? ஆதமனும் அங்கே தான் அமர்ந்திருந்தார், ஊர்க்காரர், ஊர் தலைவர் என்ற முறையில்.

கார் வந்து நின்று ராஜலக்ஷ்மி இறங்கியதில் இருந்து ஆத்மன் அவரை பார்த்திருந்தார்.

மனோ “ஏன் மாமா, வந்தா என்ன?” என்று வந்து கேட்டு நிற்க, என்ன சொல்லுவார்.

“அண்ணா, எனக்கு தாய் மாமா தானே, வரணும் தானே, அது தானே முறை” என்றார் ராஜலக்ஷ்மி.

“அப்பா தான் கூட்டிட்டுப் போக சொன்னார் மாமா” என்று மனோ சொல்ல, இனி சுவாமிநாதனுக்கு சொல்ல என்ன

இருக்கிறது.

யார் கொள்ளி வைப்பது என்று எல்லோரும் பேசிப் பேசி நிற்க ராஜராஜனுக்கு கடுப்பாக இருந்தது.

பார்த்து பார்த்து சலித்த நாச்சி "எங்கண்ணனுக்கு நான் கொள்ளி போடறேன்" என்று கிளம்பிவிட்டார்.

"ஒரு மனிஷனை நேத்து ராத்திரி இருந்து இங்க படுக்க வெச்சிருக்கோம், யார் செய்யறதுன்னு இவ்வளவு பஞ்சாயத்தா, ஊருக்குள்ள பசங்க பெத்துக்கணும்னு சொல்றதை உண்மை ஆக்குறீங்க நீங்க, உங்க மாதிரி சில பொண்ணுங்களால தான் பையன் வேணும் வேணும்ன்னு நிக்கறாங்க. பொண்ணுங்கன்னா செய்யக் கூடாதா, நீங்களும் பொண்ணுங்களை தான் பெத்து வெச்சிருக்கீங்க, அந்த அறிவு கூட இல்லை" என்று அவர்களின் பெண்களை திட்டி,

"யாரும் தேவையில்லை எங்கண்ணனுக்கு நான் செய்யறேன்" என நின்றார்.

"பொண்ணுங்க செய்யக் கூடாது, அது இந்த ஊர் கட்டுப் பாடு" என்ற ஆத்மனின் குரல் ஓங்கி ஒலித்தது.

அப்போதுதான் அண்ணன் இதற்காக தான் தன்னை ஏன் வந்தாய் என்று கேட்டிருக்கிறார் என்று புரிந்த ராஜலக்ஷ்மி நிற்க,

அப்போது தான் அதனை உணர்ந்த அங்கை, எப்போதும் போல கிளம்பிவிட்டாள். அவளை நிறுத்துபவன் ராஜராஜன் தான், ஆனால் இன்று அவனும் எதுவும் செய்யவில்லை, அவளின் சொல் கேட்டான்.

“பொண்ணுங்க தானே செய்யக் கூடாது, பசங்க செய்யலாம் தானே” என்றவள் ராஜராஜனை ஒரு பார்வை பார்க்க, யாரும் சொல்வதற்காக காத்திருந்தவன் போல முன் வந்து நின்று விட்டான்.

பெரியப்பாவை, அப்பாவை யாரையும் பார்க்கவில்லை, அவர்களின் சம்மதமும் கேட்கவில்லை.

சுவாமிநாதன் இதற்கு விடுவாரா என்பது சந்தேகமே அதற்காவே அவரை பார்க்கவில்லை ராஜராஜன்.

அதன் பொருட்டே நாச்சி தன் மகன்களிடம் கூட கேட்கவில்லை.

ராஜராஜன் வந்து நின்றதும் நாச்சிக்கு கண்களில் நீர் வந்து விட்டது.

“உங்க பேரன் இருக்கும் போது நீங்கயேன் பாட்டி போறீங்க, கத்துறீங்க. வாடா நீ முன்னன்னு சத்தம் குடுக்க மாட்டீங்க” என்று நாச்சியை அங்கை அணைத்துக் கொண்டாள்.

ராஜராஜன் அவனின் சட்டையை கழட்டியதும், அருகில் சென்று கலெக்டர் என்ற பந்தா சிறிதும் இன்றி அதனை கையில் வாங்கிக் கொண்டான் மனோ.

ராஜராஜன் மௌனமாய் அமர, அவனின் மேல் தண்ணீர் ஊற்றி மொட்டை அடித்து மீசை வழித்தனர். ஊரே வியந்து உணர்ச்சிமயமாய் பார்த்திருந்தது.

அங்கையற்கண்ணி கம்பீரமாய் நின்று கணவனை பார்த்திருந்தாள்.

# அத்தியாயம் 28

“பாருடா, இந்த பொண்ணு சொன்னா புருஷனும் அண்ணனும் எப்படி செய்யறாங்க” என்று ஊரே பார்த்தது.

“ராஜலக்ஷ்மியை கல்யாணம் பண்ணியிருந்தா, இவளை மாதிரி தானே எனக்கும் பொண்ணு பிறந்திருக்கும்” என்று எப்போதும் எழும் நினைவை ஆத்மனால் தவிர்க்க முடியவில்லை.

அவர் எதுவும் பிரச்சனை செய்வாரோ என்று எல்லோரும் பார்க்க அவர் எதுவும் பேசவில்லை.

பின்பு மளமளவென்று காரியங்கள் நடந்தன.

அவர்கள் வீட்டின் ஆண்மகனாய் முன்னின்று காரியங்களை செய்தான் ராஜராஜன்.

சுவாமிநாதனுக்கு ராஜராஜனை விட மனதில்லை, ஊருக்கு முன் சொல்லி விட்டதால் பின் வாங்க முடியாது அமைதியாய் நின்றார். அப்போதும் சிவன் கோவில் பூசாரிக்கு அழைத்து, செய்யலாமா என்று கேட்டு, அவர் சுவாமிநாதனின் குடும்பத்திற்கு ஒன்றும் தீட்டில்லை என்று சொன்ன பிறகு தான் ஆசுவாசமானார்.

கொள்ளி போடுவது என்பது சாதாரண விஷயம் கிடையாதே நாச்சியின் அண்ணன் என்ற ஒரே காரணத்திற்க்காக எதை பற்றியும் யோசிக்காமல் அங்கை சொல்ல ராஜன் செய்திருந்தான்.

“ரொம்ப வாய் பேசினாலும் அங்கை நிறைய வளர்ந்துட்டாம்மா” என்றான் மனோ ராஜலக்ஷ்மியிடம்.

“ம்ம்” என்றார் அவரும் பெருமையாய்.

யாரும் எதற்கிந்த வேண்டாத வேலை என்பது போல நினைக்கவில்லை.

“நான் அவனின் வேலிக்குள் இல்லை, இல்லை” என்று அங்கையற்கண்ணி சொன்னாலும் அவளும் அதற்குள் தான் இருந்தாள்.

காரியம் செய்ததால் மூன்று நாட்களுக்கு அந்த வீட்டில் தான் ராஜராஜன் இருக்க வேண்டும் என்பது போல சொல்லப்பட்டு விட, சுவாமிநாதனும் நாச்சியும் அவனுடன் தங்கிக் கொண்டனர்.

நாச்சிக்கு பேத்தியை நினைத்து அவ்வளவு பெருமை “அவ சொன்னான்னு தானே வந்த, உனக்கா தோணிச்சா” என்று ராஜராஜனிடம் வழக்காடினார்.

“எனக்கெப்படி தோணும் கிழவி. எனக்கு அவர் யாருமே கிடையாது. நீ சொல்லியிருந்தா செஞ்சிருப்பேன். நானா எப்படி வந்து சொல்ல முடியும்? பெரியப்பா என்னை பிச்சு எடுத்துடுவார். இப்போவே முறைச்சு முறைச்சு பார்க்கறார். உன் பேத்திக்கு என்னை கூப்பிட தோணிச்சு, உனக்கு தோணிச்சா?”என்று அவரை வாரினான்

இப்படியாக மூன்று நாட்கள் அங்கிருந்து எல்லாம் முடித்து வீடு வந்து இரண்டு நாட்கள் கழித்து மனைவியையும் மகளையும் வீடு அழைத்துக் கொண்டு வந்தான்.

அங்கை எதுவுமே வம்பு வளர்க்கவில்லை, அமைதியாக அவன் அழைத்ததும் வந்து விட்டாள், மில்லுக்கும் செல்ல ஆரம்பித்து விட்டாள்.

மில்லில் யாருமில்லாத போது “டேய், யப்பா, ராசா, இராசராச, உனக்கு கணக்கு வருமா வராதா” என்று ஏக கடுப்பில் அவனை பார்த்து சீரியசாய் கேட்க,

“எனக்கு கணக்கும் வராது, கணக்கு பண்ணவும் வராது” என்றான் இலகுவாய்.

“அய்யே, கேவலமான ஜோக்” என்றவள்,

“அதாகப்பட்டது, யாராவது முறைகேடு பண்ணி, பணம் அடிச்சு, தப்பு கணக்கு எழுதினா கூடப் பரவாயில்லை. ஆனா எல்லாம் சரியா இருக்க, சரியா நடக்க, நீ எழுதி வெச்சிருக்குற கணக்கு இருக்கே, அம்மாடி இதெல்லாம் சரி பண்ண யாரலையும் முடியாது”

“நீ அறிவாளி இல்லைன்னா போகுது, அறிவாளி மாதிரி காமிக்கவாவது செய்யலாம் தானே” என்று வெகுவாய் நக்கலடிக்க,

அவளை முறைத்து பார்த்தான்.

“சும்மா முறைக்க கூடாது, நாளும் ரெண்டும் ப்ளஸ் பண்ணினா எட்டுன்னு போட்டிருக்குற”

“அது மல்டிப்ளை பண்ணிட்டேன் போல” என்றான் அசால்டாய்.

“இனிமே நீ கணக்கு எழுது உன்னை தொலைக்கறேன்”

“என்னடி ஓவரா மிரட்டுற?”

“அப்படி தான் மிரட்டுவேன், என்னை கூட்டிட்டு வராம எல்லோர் முன்னமும் என்னை கீழ இறக்குன தானே”

“நான் உன்னை தூக்கவேயில்லையே இறக்கி விட”

“அய்யே காமெடி” என்றவள் அப்போதைக்கு பேச்சை விட்டு விட்டாள்.

பின் இரவின் தனிமையில் பிடித்துக் கொண்டாள்.

“என்ன கோபம் என் மேல?” என்று.

“கோபம் எதுவுமில்லையே” என்றான்.

“இல்லை கோபம் இன்னும் இருக்கு. அப்படியில்லைன்னா முன்னம் இருந்திருக்கும். அது தான் நீங்க எனக்கு ஊருக்கு போன பிறகு ஃபோன் பண்ணவேயில்லை”

“அது நீ ஃபோன் பண்ணலை, நான் பண்ணலை. நீ ஏன் பண்ணலை?”

“நான் கோபிச்சிட்டு போனா, ஒரு ஃபோன் செஞ்சு கூட

சமாதானம் பண்ண மாட்டீங்களா?” என்று சலுகையாய் குறை பட,

அதற்கு பதில் சொல்லாமல் அங்கையை அணைத்து முத்தமிட ஆரம்பித்தான்.

ராஜராஜன் தவிர்கிறான் என்று புரிந்தது. அவனை தள்ளி “பதில் சொல்லு முதல்ல” என்று கேட்க தோன்றினாலும், கேட்கவில்லை, இசைந்து தான் கொடுத்தாள். அவனை எந்த விதத்திலும் கோபப்படுத்தவும் விரும்பவில்லை, காயப்படுத்தவும் விரும்பவில்லை.

வெகு நேரம் கழித்து ராஜராஜன் உறங்கி விட,

அங்கைக்கு உறக்கமில்லை. அவன் மனதில் என்ன இருக்கிறது? பெரிதாய் எதுவும் இருக்குமோ என்ற சஞ்சலம். உறங்காமல் புரண்டு கொண்டே இருந்தவள், கவனியாமல் அவனை இடித்து விட, அதில் உறக்கம் கலைந்து விட்டான்.

“என்ன அங்கை? தூங்கலையா நீ”

“தூக்கம் வரலை”

“தூங்கு” என்று அணைத்து பிடித்துக் கொள்ள, சில நிமிடங்களில் அவனுக்கு தூக்கம் தள்ளிய போதும், அவனின்

நெஞ்சில் முகம் புதைத்திருந்தவள் விடும் மூச்சினில் அவள் உறங்க வில்லை என்று புரிந்தது.

"என்ன அங்கை?" என்று அவளின் முகம் நிமிர்த்தி பார்த்தான்.

"நீங்க என் கேள்விக்கு பதில் சொல்லலை"

"என்ன கேள்வி?" என்றான், உண்மையில் அதனை மறந்திருந்தான். அங்கையின் அருகாமை மறக்கச் செய்திருந்தது.

"என்னை ஏன் ஃபோன்ல கூட கூப்பிடலை"

"இப்போ எனக்கு எந்த கோபமும் இல்லை"

"ஓஹ், அப்போ இருந்திருக்கு. என்ன கோபம்னாலும் ஃபோன்ல கூப்பிட்டு சண்டை போடணும். அதை விட்டு பேசாமயே இருந்தா?"

"என்ன கோபம்? எனக்கு தெரியணும்"

"கோபம்னு சொல்ல முடியாது. ஒரு வருத்தம், நான் உன் பின்ன ரொம்ப சுத்தறதால, நீ என்னை அட்வான்டேஜ் எடுத்துட்டு,

எல்லோர் முன்னையும் எப்பவும் என்னை கீழ இறக்கரையோன்னு” என்று சொல்ல, அவனை ஒரே தள்ளாய் தள்ளி எழுந்து அமர்ந்து முறைத்தாள்.

“ஒரு மனசாட்சி வேண்டாம், நீங்க என் பின்ன சுத்தறீங்களா?” என்று கேள்வி கேட்டு பார்த்திருந்தாள்.

“இல்லையா பின்னே, எப்பவும் உன் பின்னே தான் சுத்தறேன்”

“எங்கே என் பின்னே சுத்தற முகத்தை காண்பிங்க, அப்படியே ஒரு குத்து விடறேன்” என்று பாக்சிங் போவது போல அக்ஷன் செய்ய

“உனக்கு பாக்சிங் தெரியுமா?”

“பாரு, கல்யாணமாகி நாலு வருஷம் ஆச்சு. எனக்கு என்ன தெரியும்னு கூட உங்களுக்கு தெரியாது, நீங்க என் பின்னே சுத்துறீங்களா. மிலிட்டரிகாரரர் பொண்ணாக்கும் நான்” என்றாள்.

“நான் சுத்தறேனா தெரியாது. ஆனா என் மனசு உன் கழுத்துல தாலி கட்டுன நாள்ல இருந்து உன்னையே தான்

நினைக்குது. பல சமயம் உன் பின்னே வந்திருக்கேன், நாம சேர்ந்து வாழ ஆரம்பிக்கும் முன்னே. நீ என்னை மனுஷனா மதிச்சு கூட பேசினது கிடையாது தெரியுமா?”

“அதுக்கு இப்போ பழிவாங்கறீங்களா”

“உளறாத” என்று அவளை கடிந்தவன்.

“இவ்வளவு அழகான பொண்ணை சைட் அடிக்க கூட எனக்கு தைரியம் கிடையாது. இதெல்லாம் எங்க நம்மை பார்க்கும்ன்ற நினைப்பு தான். அப்படியிருக்கும் போது நம்ம கல்யாணம் நடக்குது. ஆனாலும் நீ இங்க வரலை”

“நானா என்னன்னு பேச வந்தாலும் என்னை மதிக்கலை. ஊருக்குள்ள இதெல்லாம் பெரிய விஷயம் தெரியுமா. அத்தை விட்டுட்டு போயிட்டதால எங்க பெரியப்பா இதை ஒத்துக்கலைன்னு நானே சுத்த விட்டேன், அதுல நிஜம் இருக்கு. ஆனா நாம சேரணும்னு நினைச்சிருந்தா யாரும் தடுத்திருக்க முடியாது”

“ஒரு நாள் நீயா வந்த, எங்க வாழ்க்கையே மாறி போச்சு.

இதுல பெண்டாட்டி வசதி அதான் அவளை தாங்கறான்னு பேச்சு”

“உண்மையா நீ இவ்வளவு அழகா, அறிவா, வசதியா இல்லாமா சாதாரணமா இருந்திருந்தா, எனக்கு எந்த பிரச்சனையுமில்லை. ஆனா இப்படி இருக்குற நீ பேசற சின்ன சின்ன வார்த்தையும் ரொம்ப பெருசு”

“அது உனக்கு புரியறதேயில்லை. எல்லோர் முன்னமும் எப்பவும் ஏதாவது பேசி வைக்கற. அது எனக்கு உன் அடி மனசுல எங்கயோ நான் உனக்கு பொருத்தமில்லைன்னு இருக்குற நினைப்போட வெளிப்பாடுன்னு எனக்கு தோண ஆரம்பிச்சிடுது”

“அதுல இருந்து என்னால வெளில வர முடியலை. இதுல உங்க அப்பா அம்மாக்காக சண்டை வேற”

“நீ இந்த வீட்ல ராஜராஜனோட மனைவின்னு சொன்னா, இல்லை எங்க அப்பா அம்மாவோட பொண்ணு சொல்ற”

“எதுவா வேணா இருக்கட்டும். அது நிஜமாவே இருக்கட்டும். அதை வெளில எல்லோர் முன்னமும் சொல்லணும்னு என்ன?”

“நான் சொன்னதோட அர்த்தம், இந்த வீட்ல நீ அவங்களோட பொண்ணு இல்லைன்னு கிடையாது. ராஜராஜனோட மனைவியா நீ இங்க இருக்கும் போது உங்க அப்பா அம்மாவை சரியா பார்க்கலைன்னா நான் கேட்க முடியும். ஆனா நீ உங்க அப்பா அம்மாவோட பொண்ணா கேள்வி கேட்டா நான் எப்படி உன் கூட நிக்க முடியும்”

“இது என் வீடு, என் வீட்டு ஆளுங்களை நான் விட்டு குடுக்க முடியாது”

“ஒரு விஷயம் நீ நல்லா புரிஞ்சிக்கணும். நமக்கு பிடிச்ச ஒரு விஷயத்தை நாம செய்யறோம். அதுக்கு அடுத்தவங்க அங்கீகாரம் குடுத்தே ஆகணும்னா எப்படி?”

“அவங்களுக்கு பிடிச்சது, சந்தர்ப்ப சூழ்நிலைகள் சரியா அமையலை. வெளில போய் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. ஆனா அதை அடுத்தவங்க அங்கீகரிக்கணும்னா எப்படி?”

“அவங்களுக்கு பிடிச்சா தானே ஒத்துக்குவாங்க”

“அவங்களை ஏதாவது தொந்தரவு பண்ணினாங்களா இல்லையே, ஏத்துக்கலை, அவ்வளவு தானே! இவங்களே பார்த்து

பார்த்து கல்யாணம் செஞ்சு வெச்ச பொண்ணுங்க மாதிரி அவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கணும் கவனிக்கணும்னா எப்படி?”

“சொல்லப் போனா இதை பாட்டி பண்ணியிருக்கணும், ஆனா அவங்க அவங்க பசங்களை மீறி பண்ணலை”

“இது உனக்கு பிடிச்சாலும் பிடிக்கலைன்னாலும் ஒத்துக்கணும்”

“மாமா இதை பெரிய விஷயமா எடுக்கலை, மனோக்கு இது ஒரு விஷயமே கிடையாது. ஆனா அத்தை ஃபீல் பண்ணறாங்க, தூக்கி போடும்மா இதைன்னு உங்கம்மாவை சமாதானம் செய்யாம, நீ எங்களை கேள்வி கேட்கற”

“கேள்வி கேட்டு மட்டும் என்ன பண்ண முடியும்? கேட்டு வாங்கறதில்லை மரியாதை”

“எப்பவும் எல்லோர் முன்னமும் என்னை எதிர்த்து எதிர்த்து பேசற, நான் என்ன பண்ணட்டும்? ஒரு வார்த்தை கூட சொல்லாம ஊருக்கு கிளம்பி நிக்கற”

“அதுவும் எல்லோர் முன்னமும் நீங்க தான் விகாஸ்க்கு

சொல்லிக் குடுத்தீங்களா கேட்டப்போ, எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? உன்னை உங்கப்பா கட்டாயப்படுத்தி எனக்கு கல்யாணம் செஞ்சு வெச்சதை எல்லோர் முன்னமும் காமிச்சு குடுக்கற"

"அந்த நிமிஷம் உன்னை கல்யாணம் பண்ணாம வேற யாரையாவது கல்யாணம் பண்ணியிருக்கலாம் தான் தோணினது. நான் உன் பின்னே சுத்துறதால தான் என்னை நீ ரொம்ப அசால்டா எடுத்துகிட்டயோன்னு தோணினது. அப்புறம் நீ சண்டை போட்டுக்கிட்டு போயிட்ட"

என்று நிறுத்தாமல் பேசினான். அவன் மனதில் இருப்பது எல்லாம் வரட்டும் என்று அவளும் அதுவரை பேசவில்லை.

"உங்க விரததுக்காக தான் போக முடிவெடுத்தேன், கூட சண்டையும் சேர்ந்துகிச்சு" என்று அவள் சொல்ல.

"எனக்கு அது எப்படி தெரியும்? நான் எல்லோர் முன்னமும் எப்பவும் கீழ போறானோன்னு தோண ஆரம்பிச்சிடுச்சு"

"எங்க வீட்ல எல்லோரும் நிறைய படிச்சிருக்காங்க. நான்

தான் ப்ளஸ் டூ, நீயும் என்னை விட படிச்சிருக்க. நான் உனக்கு எங்கேயும் பொருத்தமில்லை, அப்போ நான் என்ன நினைப்பேன்?" என முடிக்க,

நிஜமாக இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை அவளுக்கு.

அவள் அமைதியாகிவிட,

படுத்துக் கொண்டவன் கை விரித்தான் அவளுக்காய். அமைதியாக அவனின் விரிந்த கைகளுக்குள் சரண் புகுந்தாள்.

"எனக்கு இதுக்கு பதில் சொல்லத் தெரியலை. ஆனா ஒரு நொடி கூட உங்களை கீழ இறக்கணும்னு நினைக்கலை. என் மனசுக்குள்ள எங்காவது ஒரு மூலையில நீங்க எனக்கு பொருத்தமில்லைன்னு நினைப்பு இருக்கோ என்னவோ தெரியலை. ஆனா நானும் தேடித் பார்த்துட்டேன் சமீபமா எனக்கு அது கிடைக்கவேயில்லை" என்றாள் உண்மையாய் உணர்ந்து.

அவளின் பதிலில் உல்லாசமாய் மனம் விட்டு சிரித்தான். அப்படி ஒரு பொங்கிய சிரிப்பு.

# அத்தியாயம் 29

“என்ன சிரிப்பு?” என்று ரோஷமாய் அங்கையற்கண்ணி கேட்கவும், “இதென்ன, சிரிப்பு வந்தது சிரிச்சேன்”

“ம்ம், என் பின்னே சுத்தினவன் எவனையும் கண்டுகிட்டது இல்லை. அதுல எவனாவது ரொம்ப எனக்கு சாபம் விட்டிருப்பான் போல, நீ பார் உன் புருஷன் பின்ன சுத்துவன்னு. அது தான் பளிச்சிடுச்சு போல” என்று கடுப்பாக சொன்னாள்.

“உன் பின்னே சுத்தினாங்களா யார் எல்லாம்?” என்று கதை கேட்கும் பாவனையில் ஆரம்பிக்க,

“நான் உங்க கிட்ட சொன்னதில்லையா” என்று அவள் சந்தேகமாய் கேட்டாள்.

“சொன்னதில்லை” என்றான் சின்சியராய்.

“அதெல்லாம் நிறைய, ஸ்கூல்ல, காலேஜ்ல, அதையும் விட அண்ணன் ஐஏஎஸ் பேட்ச் மேட் ஒருத்தன், ஷப்பா, பைத்தியம் மாதிரி சுத்தினான். மனோக்கு அப்பாக்கு அம்மாக்கு எல்லாம்

தெரியும், பொண்ணு கேட்டு வந்தான்”

“எனக்கு பிடிக்கலை சொன்னா, ஏன் பிடிக்கலைன்னு நிக்கறான்”

“அம்மாடி அவனை சாமாளிக்கறதுக்குள்ள. மனோ கூட ரொம்ப நல்லவன்னு சர்டிபிகேட் கொடுத்தான். சொல்லிட்டு மனோ அடி வாங்கினான் என்கிட்ட”

“சரி ஏன் பிடிக்கலை?”

“அவனைன்னு இல்லை, எனக்கு யாரையும் பிடிச்சது இல்லை. இவனை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்ணனும்னு எனக்கு தோணினதேயில்லை”

“எனக்கு அப்படி யார் மேலயாவது இன்ட்ரஸ்ட் இருக்கு, இல்லை இப்படி தான் ஹஸ்பன்ட் வேணும்னு ட்ரீம் இருக்குன்னு இருந்திருந்தா, எங்கப்பா என் வாழ்க்கைக்கு அவர் முடிவெடுத்து இருக்க மாட்டார்”

“எங்கப்பா மாதிரி எல்லாம் யாரையும் பார்க்க முடியாது. ஐ லவ் ஹிம் சோ மச். அவர் சொன்னாருன்னு தான் உங்களை

கல்யாணம் பண்ணினேன்” என்று விட்டாள்.

பிறகு வேகமாய் நிமிர்ந்து அவன் தப்பாக எடுத்துக் கொள்வானோ என்று பார்க்க,

“அது தானே நிஜம், எனக்கு கோபமில்லை” என்றவன் “நிறைய பேர் கல்யாணம் அப்படி தான் நடக்கும்” என்றான் சிரித்துக் கொண்டே.

“நீங்க இல்லை நான் யாரை கல்யாணம் பண்ணியிருந்தாலும் பேச தான் செய்வேன். அது என்னோட இயல்பு. எனக்கு தெரியும் உங்களுக்கு எல்லோர் முன்னமும் பேசினா கோபம் வந்துடும்னு, ஆனாலும் அது வந்துடுது”

“நீங்க கண்டுக்காதீங்க” என பெரிய மனதாய் சொல்ல,

“இது வேறையா” என்றான் சிரித்துக் கொண்டே.

“ம்ம், அது தானா வருது. நான் என்ன பண்ணட்டும், உங்களை கீழ இறக்கன்னு பேசலை” என்றாள் பரிதபமாய்.

“சரி விடு, நீ பேசும் போது எனக்கு கோபம் வந்தா, தனியா இருக்கும் போது இப்படி என்னை சமாதானாம் பண்ணிக்கோ”

“அதெல்லாம் முடியாது, நீங்க என்னை பண்ணலை, அதனால நானும் உங்களை பண்ணலை” என்று பேச,

“அம்மா தாயே, உங்கப்பா பெரிய புத்திசாலி. என்னை தவிர எவனும் உன்னை சமாளிக்க முடியாதுன்னு தெரிஞ்சு வெச்சு என் தலையில உன்னை கட்டிட்டார்”

“என்னது” என சண்டையை அங்கை ஆரம்பிக்க,

“வாயை மூடுடி” என்று அதற்கான வேலைகளை செய்தான், வேறு வழியே இல்லாமல்.

அவன் விடவும், திரும்ப பேச ஆரம்பிக்க. திரும்ப ஒரு இதழ் முற்றுகை.

விடவும், திரும்ப பேச ஆரம்பிக்க, அவளை தடுக்காமல் பார்க்க ஆரம்பித்தான். அவனின் பார்வையில் தடுமாறியவள் நிறுத்த,

“கிஸ் வேணும்னா கேளு இல்லை நீயே பண்ணிக்கோ. அதை விட்டுட்டு எதுக்கு இப்படி?” என புருவம் உயர்த்தினான்.

“அய்யே பெரிய கண்டுபிடிப்பு” என்று அவனின் நெஞ்சினில்

முகம் புதைத்து கொள்ள,

“இன்னும் வேணுமா? போதுமா!” என்றவனின் ரகசிய கேள்விக்கு,

“எனக்கு தூக்கம் வரலை” என்றாள் அவளும் ரகசிய பதிலாய்.

இப்படியாக அவர்களின் காதல் வாழ்க்கையும் சண்டை வாழ்க்கையும் அமோகமாய் சென்றது.

அது வரை ராஜராஜனுக்கு உதவுவதற்காய் மில்லை பார்த்தவள், இப்போது அவளுமே இன்னும் கருத்தாய் பார்க்க ஆரம்பித்தாள்.

அதாகப் பட்டது அவளுடைய வேலையாக்கிக் கொண்டாள்.

ஆம்! ராஜன் யோசனையை அவனால் செயல் வடிவம் கொடுக்க பல சமயம் இயலாத போது அங்கையற்கண்ணி அதற்கு வடிவம் கொடுத்தாள்.

சில சமயம் உள்ளுக்குள் பயம் வரும், அவனின் ஈகோவை சீண்டி விடுவேனோ இல்லை தன்னை கீழாய் நினைத்துக் கொள்வானோ என்று.

இல்லை, இல்லை, இல்லவே இல்லை! ராஜராஜனுக்கு வியப்பு அவளின் திறன் கண்டு. அவனுக்கு பெருமையே!

“நீ இங்க இருக்க வேண்டியவளே இல்லை” என்பான் பல சமயம். மற்றவர்கள் முன் அதிக கவனத்துடன் இருக்க கற்றுக் கொண்டாள் அங்கையற்கண்ணி.

இதோ இன்று அவர்களின் வயலில் அறுவடை, ஆண்கள் மட்டுமல்ல பெண்கள் எல்லோரும் கூட அங்கே தன் இருந்தனர்.

ஒரு சின்ன திருவிழா போல தான் இருந்தது.

ஊரிலிருந்து ஆண்மக்கள், பெண்மக்கள் எல்லோரும் வந்திருக்க அன்பழகனும் ராஜலக்ஷ்மியும் கூட வந்திருந்தனர். மனோவும் கரிஷ்மாவும் ஒரு சுற்றுபயணத்தில் இருக்க, இதோ விகாஸும் ஸ்ருஷ்டியும் அத்தை வீட்டில்.

யானை கட்டிப் போரடிக்கும் விளைச்சல் இல்லையென்றாலும் நல்ல விளைச்சல், எல்லோரும் மேற்பார்வையில் இருக்க, இறங்கி வேலை செய்தது தமிழ்செல்வனும் ராஜராஜனும் தான்.

வயலில் இறங்கி வேலை செய்தனர். சுவாமிநாதன் நிற்க, அவரின் வயதை கருத்தில் கொண்டு தமிழ்செல்வன்னும் ராஜராஜனும் விடவில்லை.

தமிழ்செல்வனும் சிறிது சோர்வை காண்பிக்க, அங்கை அவரின் அருகில் வந்தவள் “நீங்க உட்காருங்க மாமா, அப்பா

பார்த்துக்குவார்” என்றாள்.

பின்னே அன்பழகனின் கண்கள் அந்த வயலில் தான். அவரின் தோழன் அது. அதையே பார்த்திருந்தார். பின்னே அரை டவுசர் காலத்தில் இருந்து இந்த மண்ணில் தானே புரண்டு கொண்டிருப்பார்.

அங்கையற்கண்ணி சரியாக அவரின் உணர்வை படித்து விட்டவள், தமிழ்செல்வன் பதில் சொல்லும் முன்னமே “பா, நீங்க பாருங்க மாமா உட்காரட்டும்” என்று விட்டாள்.

அன்பழகன், அவரின் முகத்தினில் அப்படி ஒரு பரவசம்!

மற்ற ஆண்மக்கள் எல்லாம் வேடிக்கையே. அவர்கள் வயலில் எல்லாம் இறங்கவில்லை. ஆனால் அவர்களின் மக்களை ராஜராஜன் விடவில்லை. “வாங்கடா பசங்களா” என்று அவர்களை இறக்கி இருந்தான்.

நாச்சியும் வாசுகியும் தில்லையும் உணவை மேற்பார்வை பார்த்தனர். எல்லோரையும் மேற்பார்வை பார்த்தது அங்கையற்கண்ணி.

ஆம்! ராஜராஜனின் உழைப்பின் சின்ன இனுக்கும் வீணாக

விடுவதில்லை.

சின்ன ஓய்வில் வயலில் இருந்து மேலே ஏறினான். உடனே அவனின் அருகில் சென்றவள் “எதுவும் வேணுமா?” என்றாள்.

“ஒன்றும் வேண்டாம்” என்பது போல தலையசைத்தவன், “எதுக்கு மாமாவை வயல்ல இறக்கி விட்ட” என்றான்.

“அய்யோடா, எங்கப்பா கண்ணு பூராவும் இங்க வேலைல தான். யாரும் கூப்பிட மாட்டாங்களான்னு ஏதோ பொண்ணை சைட் அடிக்கிற மாதிரி ஏங்கி ஏங்கி பார்கறார். அது தான் அனுப்பி விட்டேன்”

“அந்த பக்கம் போய் பார்த்துட்டு வர்றேன்” என்று அவன் வேறு பக்கம் கிளம்ப,

“பொறுமையா வாங்க, இங்க நானும் அப்பாவும் இருக்கோம்” என்று சொல்லியனுப்பினாள்.

அங்கிருந்த பைக் எடுத்தவன் அண்ணன்களின் பார்வையில் இருந்த வேறு பக்கம் பார்க்க சென்றான்.

சென்ற முறை வீட்டினர் அனைவரும் பூஜைக்கு வந்த போது

பரிதாபமான தோற்றத்தில் இருந்த ராஜராஜன் இப்போது இருக்குமே தோற்றமே வேறு.

ராஜராஜசோழனின் தோற்றத்தில் இருந்தான். செல்வம் கொடுத்த பொலிவா, இல்லை அங்கை கொடுத்ததா, வகையறுக்க முடியாது. இரண்டுமே சேர்ந்திருந்தது.

மூன்றே மாதத்தில் ஆளே மாறியிருந்தான்!

இப்படியாக வேலைகள் முடிய, தலையில் கட்டிய தலைப்பாகையை அவிழ்த்து இடுப்பில் கட்ட போனான் பூஜைக்காக.

“இருங்க” என்ற அன்பழகன், “நான் பண்றேன்” என்று அவரின் துண்டை இடுப்பில் கட்ட,

ராஜராஜன் மீண்டும் தலைப்பாகையை கட்டிக் கொள்ள “எனக்கு” என்று விகாஸ் வந்து நிற்க, அவனிற்கும் கட்டி விட்டான். அதனை பார்த்த அவனின் அண்ணன் மக்களும் “சித்தப்பா எங்களுக்கு” என்று வந்து நிற்க அவர்களுக்கும் கட்டி விட்டான்.

இப்படியாக குடும்ப சகிதமாக பூஜைக்கு நிற்க அன்பழகன் பூஜை செய்தார்.

அவர் தான் இங்கிருந்து போகும் வரை செய்வார், அதன் பொருட்டே இப்போது வாங்கிக் கொண்டார்.

“உங்கப்பா இன்னைக்கு தான் அங்கை நிம்மதியா தூங்குவார்” என்று ராஜலக்ஷ்மி சொல்ல அங்கையின் முகத்தில் புன்னகை.

இப்போது ராஜராஜனின்றி அவளுக்கு வாழ்க்கை கிடையாது என்றாலும் இந்த திருமணமே அவருக்காக தானே!

அவளுடைய பிடித்தம் பார்த்திருந்தாள் இன்னும் கூட அவளுக்கு திருமணம் நடந்திருக்காது என்பது வேறு விஷயம்.

அங்கை யோசனையில் இருக்க எல்லோரும் முன் சென்று கண் ஒற்றிக் கொள்ள, அவள் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை.

அருகில் வந்த ராஜராஜன் அவன் கைகளால் ஆரத்தி தொட்டு அவளின் கண்களில் ஒற்றினான். அதன் பின்னே திடுக்கிட்டு சுற்றம் பார்த்தாள். எல்லோரும் அவளையே பார்க்க “என்ன யோசனை அப்படி?” என்றான்.

“அப்பாவை பார்த்தேன், ஏதோ யோசனை ஓடிச்சு” என்று அவனுக்கு மட்டும் கேட்குமாறு சொல்ல,

“என்ன அவருக்காக தான் இந்த கல்யாணம்ன்னு யோசிச்சியா?” என்றான் இலகுவாகவே அவளுக்கு மட்டும் கேட்குமாறு.

“ம்ம்” என்று தலையசைத்தாள் திடமாகவே. பின் “கூட இன்னொன்னும் தோணிச்சு. அதை உங்களால சொல்ல முடியுமா?” என்றாள்.

“ம்ம், இப்படி கல்யாணம் பண்ணலைன்னா, என்னை யாருக்காவது பிடிக்குமான்னு யோசிச்சிருப்ப” என்றான் அவளை வம்பிழுக்கும் விதமாக.

அவளோ அது புரியாமல் “அப்படி யோசிக்கலை, எனக்கு யாரையும் பிடிச்சிருக்குமான்னு யோசிச்சேன்” என்று சொல்ல,

அவளை பார்த்து குறும்பாய் புன்னகைத்தான்.

“ஏய், நீங்க போட்டு வாங்கினீங்களா, உங்களை…” என்று அவளையும் மீறி அவனின் புஜத்தில் அடிப்பது போல முகத்தை தூக்கி வைத்து குத்த, பின் சுற்றம் உணர்ந்து வேகமாய் கை எடுத்தாள்.

குறும்பாய் சிரித்து கொண்டே அவன் நகர்ந்து விட, “ஸ்ருஷ்டி வந்து என்ன அத்தை?” என்று நின்றாள்.

“மாமாவை போய் அடி” என்று சொல்லிக் கொடுக்க,

அது சமத்தாய் மாமாவிடம் சென்று “தூக்கு” என்று சொல்ல, அவன் தூக்கியதும் கன்னத்தில் அவளின் தளிர் கைகளால் அடித்தாள்.

அதை வாங்கிக் கொண்டவன் “உங்க அத்தைக்கு இப்போ நான் உனக்கு குடுக்கறதை போய் குடு” என்று சொல்லி ஸ்ருஷ்டியின் கன்னத்தில் முத்தமிட்டு அவன் வேலையை பார்க்க சென்று விட,

அவளும் அத்தையிடம் போய் “தூக்கு” என்று அதனை கொடுக்க, அந்த காட்சியே பார்க்க கவிதையாய் இருந்தது. எல்லோரும் இல்லையென்றாலும் பலர் பார்த்தனர்.

“டேய், என்ன படம் ஓட்டராண்டா இவன்” என்று கௌரிஷங்கரும் நந்தகுமாரும் பேசி சிரித்துக் கொண்டனர்.

அதன் உணர்வு சிறிதுமின்றி ராஜராஜன் வேலையை பார்த்துக் கொண்டிருந்தான்.

# அத்தியாயம் 30

அதற்குள் விகாஸ் வந்தவன், "அத்தை எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கணுமாம். மாமா உங்களை கூப்பிட்டாங்க" என்றான்.

நடக்க ஆரம்பித்தவள் "மாமா, நீங்களும் வாங்க" என்று கௌரிஷங்கரையும் நந்தகுமாரையும் அழைத்தாள். அவர்கள் எப்படியோ அங்கை அவர்களிடம் வித்தியாசம் பாராட்டவில்லை.

அவர்கள் தயங்க "அவரை தனியா சம்பளம் குடுக்க விட்டோம், ஒரு வருஷமானாலும் நம்மளால அந்த கணக்கை நேர் பண்ண முடியாது. குடுத்வங்களுக்கே சம்பளம் குடுத்துட்டே இருப்பார், குடுக்காதவங்களுக்கு குடுக்க மாட்டார், வாங்க" என்று இருவரையும் கூட அழைத்துக் கொண்டாள்.

ஆம்! எப்படி அவளின் கணவன் உறவுகளை அரவணைத்து செல்கிறானோ அதை அவளும் பழகிக் கொண்டாள்.

அங்கே சென்றதும் கௌரிஷங்கர், அங்கை சொன்னதை வைத்து கிண்டலடிக்க, ராஜராஜன் அங்கையை பார்த்த போது அவளும் குறும்பாய் அவனை பார்த்திருக்க,

“மைக் குடுக்கட்டுமா?” என்றான் நக்கலாய்.

“எதுக்கு மைக்கு? அதுதான் எல்லோருக்கும் தெரியுமே!” என்று அவள் அதற்கும் கிண்டல் செய்ய,

“அடிங்க” என்று அவன் அடிக்க வருவது போல பாவனை செய்ய,

அங்கே வேலை செய்த அத்தனை பேரும் சிரிக்க, அந்த இடமே அவ்வளவு கலகலப்பாய் இருந்தது.

இன்னும் அவர்களுள் வார்த்தையாடல்கள், வழக்காடல்கள் என்று எல்லாம் அப்படியே தான் இருக்கின்றன, சண்டைகள் தூள் பறக்கின்றன. ஆனாலும் ஒரு உன்னதமான வாழ்க்கை தான் அவர்களது.

இரவு படுக்கையில் விகாஸ், ஸ்ருஷ்டி, ரதி இருக்க, ஒரு பக்கம் ராஜராஜன் இன்னொரு பக்கம் அங்கையர்க்கண்ணி படுத்திருந்தனர். எட்டி கணவனை பார்த்தவள் “எனக்கு தூக்கம் வரலை” என்று சைகையால் சொல்ல,

“ஷ், பேசாம படு, சும்மா என்னை உசுப்பேத்த கூடாது” என்ற பார்வை பார்த்தான்.

"இவங்க தூங்கின பிறகு நான் அங்க வர்றேன்" என்று சைகை காண்பிக்க,

"ஒழுங்கா அங்கயே படு" என்று மிரட்டி படுக்க வைத்தான்.

இதையேல்லாம் பாராமல் பார்த்திருந்த விகாஸ், "அத்தை நீங்க மாமா பக்கத்துல படுக்கணுமா?" என்று கேட்டான்.

"இல்லை, இல்லை" என்று அசடு வழிந்தவளுக்கு, "என்ன சொல்ல?" என்று தெரியவில்லை.

"அத்தை, இந்த பக்கம் படுப்பாங்க, நான் அந்த பக்கம் படுப்பேன். அதான் இடம் மாத்த கேட்கறாங்க" என்று நம்பும்படியாய் ராஜராஜன் சொல்ல…

"ஓகே, மாமா மாத்திக்கங்க" என்று அவன் சொல்ல…

ஒரு இட மாற்று படலம், "பேசாம படு அங்கை" என்று மிரட்டி படுக்க வைத்து அவனும் உறங்கி விட்டான்.

நடு இரவில் அவன் மேல் ஏதோ பாரமாய் உணர்ந்தான், அது அங்கை என்று புரிய, கண்விழித்து குழந்தைகளை பார்க்க

எல்லோரும் உறக்கத்தில்.

“தூங்கறாங்க” என்று அங்கை சொல்ல,

“உனக்கு ஏன் தூக்கம் வரலை”

“தெரியலை” என்றவள் அப்படியே படுத்திருக்க,

“என்ன விஷயம் சொல்லுடா?”

“இன்னைக்கு நாளே முடிஞ்சு போச்சு”

“அதுக்கு”

“இன்னைக்கு நம்ம கல்யாண நாள்”

“அம்மாடி” என்று இறுக அணைத்துக் கொண்டான்.

“உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்கா”

“இருந்தது, கூடவே அப்பா சொன்னாங்க, இன்னைக்கு தாத்தா இறந்த நாள்ன்னு. அப்போ இன்னைக்கு தானே நம்ம கல்யாண நாள், தாத்தா இறந்த நாள்ன்றதால நான் காலையில சொல்லலை. பின்ன யாரும் சொல்லலை. அவங்க அவங்க வேலையை பார்த்தாங்க, விட்டுட்டேன்”

“அது திதி பார்ப்பாங்க பாட்டி, நாள் பார்க்க மாட்டாங்க,

அப்படி பார்த்தா அவரோட திதி அடுத்த வாரம் தான் வருது. அதனால் இன்னைக்கு நம்ம கல்யாண நாள் மட்டும் தான்”

“உங்களுக்கு ஞாபகமே இல்லை”

“பிறந்த நாள், கல்யாண நாள், எல்லாம் சிறப்பா என்ன? வாழற நாள் எல்லாம் சிறப்பு தான்!”

“அப்படியா வாழற நாள் எல்லாம் நீங்க எனக்கு கிஃப்ட் குடுக்கறீங்களா என்ன?”

“என்னையே உனக்கு குடுத்துட்டேன், அப்புறம் எதுக்கு கிஃப்ட்”

“ம்ம், பெரிய மொக்க கி ஃப்ட் இது, இது எனக்கு வேண்டாம்”

“கிஃப்ட் எல்லாம் குடுத்தா குடுத்தது தான், வேண்டாம்னு எல்லாம் சொல்லக் கூடாது. நீ என்ன வாங்கின எனக்கு”

“வாங்கினேன், ஆனா குடுக்க மாட்டேன்”

“ஏண்டி?”

“நீ குடுக்கலை, அதனால நானும் குடுக்கலை” என்று

சண்டையை ஆரம்பிக்க,

“அங்கை காலையில அஞ்சு மணிக்கு நான் தோட்டத்துக்கு தண்ணி பாய்ச்ச போகணும்”

“ஒரு ஆள் போட வேண்டியது தானே”

“ஏன் நான் என்ன வெட்டி முறிக்கரேன்”

“போடா, நீ என்னத்தையோ முறி” என்று அவள் சலித்துக் கொள்ள,

“தூங்கலாம் அங்கை” என்றான் கெஞ்சுதலாய்.

இவன் மாற மாட்டான் என்று நினைத்தவள் பதில் சொல்லாமல் கண்களை மூட அடுத்த சில நிமிடங்களில் சீரான மூச்சு அவனிடம். உறங்கிவிட்டான் என்று புரிய, அவளும் உறங்க முற்பட்டு வெற்றியும் கண்டாள்.

விடியலில் ராஜராஜன் மேல் அங்கை, அவளின் மேல் ஒரு பக்கம் ரதி உறங்க, இன்னொரு பக்கம் அவளை அணைத்து ஸ்ருஷ்டி உறங்கினாள்.

ராஜராஜனின் அழகான வேலியை விட்டு வெளியே வராத கன்னி அவனின் அங்கையற்கண்ணி.

ராஜராஜனுக்கு அதிகாலையில் விழிப்பு வந்து விட்டது.

இன்று நேராய் படுத்திருந்ததால் மெதுவாக தன் மீது இருந்த ஸ்ருஷ்டியையும் ரதியையும் மெல்ல விலக்கினான்.

பின்பு அங்கையை விலக்க, அவளின் அணைப்பு இறுகியது. “அங்கை நான் போகணும் என்னை விடு”

எரிச்சல் ஆனவள் “இனிமே இங்கே வராத, காட்டுல மரத்தை பிடிச்சிட்டு தூங்கு” என்றாள் கடுப்பாக.

“என்கிட்டே சண்டை போடாத, உன் தூக்கம் போயிடும்” என்றான். கப்பென்று கண்களை மூடிக் கொண்டாள். சிரித்தவாறு எழுந்து அந்த நேரத்திலும் குளித்து தான் தோட்டத்திற்கு வந்தான்.

வந்து பார்த்தால் அன்பழகன் அங்கே நின்றிருந்தார்.

“நீங்க என்ன பண்றீங்க இங்க மாமா?” என்று ராஜராஜன் கேட்க,

“பார்த்துட்டு இருக்கேன், என் அய்யாவோட நான் தான் காலையில தண்ணி பாய்ச்ச வருவேன், சில வருஷமா எவ்வளவு காஞ்சு போய் இருந்தது. இப்போ தான் எனக்கு நிம்மதியா

இருக்கு"

"உங்க அய்யாவோட தான் வருவீங்களா? என்னோட வரமாட்டீங்களா? இங்க இருக்குற வரை வாங்க" என்று ராஜராஜன் சொல்ல,

"அதை நீங்க சொல்லணுமா என்ன? நேத்தே முடிவு பண்ணிட்டேன். என் அய்யா அப்புறம் என்னை கேட்பார், ஏன்டா நீ என் வீட்டோட இருக்கணும் தானே உன் பொண்ணை என் பேரனுக்கு நீ கட்டிக் குடுக்கறேன்னு சொன்ன, நானும் ஒத்துக்கிடேன். நீ இந்த வேலையை கூட செய்ய மாட்டியான்னு கேட்பார். நான் என்னைக்கும் இந்த வீட்டுக்கு வேலைக்காரன் தான்" என்றார் புன்னகையுடன்.

பின் "என்னோட கடைசி காலத்துல நான் இங்க வந்து இருக்கணும்னு தான் என் ஆசை" என்றார்.

"பக்கத்துல ஒரு நிலம் வருது, பாசனமுள்ள இடம், வாங்கிப் போடலாமா" என்றான்.

“என்ன இது?” என்று அவனை கடிந்தவர், “நான் இங்க என் ராயர் அய்யாவோட நிலத்துல வேலை செய்யணும் அதை சொன்னேன். நான் விவசாயம் பண்ணனும்னு சொல்லலை” என்றார் உணர்ச்சிகரமாக.

இப்படி ஆட்களை பார்ப்பது அபூர்வம் தானே!

அவரை பார்த்து புன்னகைத்து “நீங்க தான் கல்யாணத்துக்கு கேட்டீங்களா?” என்று கேட்டான்.

“ம்ம்” என்றவர், “இது தான் நான் வளர்ந்த இடம். என்னை உயிரோட வெச்சிருந்த இடம். என் ராஜியை எனக்கு குடுத்த இடம், என் பொண்ணு இங்க இருக்கணும்னு எனக்கு ஆசை. ராயர் இல்லைன்னா நான் இல்லை”

“நான் சின்ன வயசுல…” என்று ஆரம்பித்து அவருக்கும் ராயருக்குமான உறவை நிகழ்வை பேச ஆரம்பித்தார்.

“நான் காஷ்மீர் பார்டர்ல இருந்தாலும், என் உயிர் அங்க இருக்கும். ஆனா என் உணர்வு இங்க தான் இருக்கும். இங்க தான் என்னோட வேர் இருக்கு, என்னோட மரபு இருக்கு. அங்கை

இங்க பொருந்த மாட்டளோ, தப்பு பண்ணிட்டமோன்னு நினைச்சேன். பொருந்திட்டா” என்றவர் அவனை தோளோடு அணைத்து “தேங்க்ஸ்” என்றார்.

“இதை இவர் எத்தனை தரம் தாண்டா சொல்வார், நாம என்ன இவர் பொண்ணை அவ்வளவு நல்லாவா பார்த்துக்கறோம், இல்லையே!” என்று மனதிற்குள் அங்கையர்கண்ணியை நினைத்தபடி அமைதியாய் நின்றான் ராஜராஜன்.

பின் மெதுவாய் “எனக்காக அவ நிறைய விட்டுக் கொடுக்கறா. அட்ஜஸ்ட் செஞ்சுக்கறா, ட்ரெஸ் எல்லாம் கூட எனக்கு பிடிக்காதுன்னு மாத்திக்கிட்டா, ரொம்ப புத்திசாலி. நீங்க இன்னும் கூட அவளுக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்திருக்கலாம். என்கிட்டே சிக்க வெச்சிட்டீங்க” என்றான் சலுகையாய்.

“என்ன விட்டுக் குடுக்கறா? என்ன அட்ஜஸ்ட் பண்றா? அதெல்லாம் இல்லை. இது தான் நாம, நம்ம இயல்புல இருந்து சில சமயம் மாறிடறோம். என் பொண்ணு இந்த இயல்போட இருக்கான்றது, எனக்கு பெருமை”

“உறவுகளை அரவணைச்சு இருக்கா, இது வேலின்னு நினைச்சா வேலி, இது தான் நம்மன்னு நினைச்சா நம்ம” என்ற விளக்கம் கொடுக்க, இருவர் முகத்திலும் புன்னகை.

“ராயரோட பேரன்னு தான், உங்களுக்கு பொண்ணு கொடுத்தேன். ஆனா ஏதோ ஒரு வகையில உங்களுக்கு குடுக்கலாம்னு எனக்கு தோணினது இல்லைன்னா குடுத்திருப்பேனா. உங்ககிட்ட தான் அவ சிக்கணும்னு இருந்திருந்தா நான் சிக்க வைக்கலைன்னாலும் சிக்கியிருப்பா” என்று அன்பழகன் சொல்ல,

ராஜராஜன் முகத்தில் விரிந்த புன்னகை!

காற்றும் அதை ஆமோதிப்பது போல அவர்களின் உடலை பாந்தமாய் உரச, கதிரவன் உதிக்க, விடியல் மிக அழகாய் இருந்தது.

# முற்றும்